


சமயக்களஞ்சியம்

குருவே துணை

சமயக் களஞ்சியம்

சமய, இலக்கிய, ஆயிரம் வினா விடைகளின் தொகுப்பு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்
அவர்களின் அருளாணைப்படித் தொகுத்து வெளியிடப் பெற்றது.

தொகுப்பாசிரியர் :
செஞ்சொல்மணி, புலவர்,
பு.மா. ஜயசெந்தில்நாதன் எம்.ஏ.,
ஆஸ்தானத் தமிழ்ப் புலவர்ஸ்ரீ சங்கர மடம்காஞ்சிபுரம்

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ்
141, உஸ்மான் சாலை, தி.நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 825 7995

இரண்டாம் பதிப்பு : 1997

விலை ரூ.85.00

அச்சிடல் தயாரிப்பு: வர்த்தமானன் பிரிண்டர்ஸ்,சென்னை-17.

25-3

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமடம், சமஸ்தானம்.
காஞ்சீபுரம் — 631 502.

யாத்ரா ஸ்தானம் : காஞ்சிபுரம். நாள் : 20—8—91

ஸ்ரீ முகம்

உலகில் உள்ள சமயங்களுள் இந்து சமயம் மிகப்பழமை யானது. இந்து சமயத்தின் தத்துவங்களை மூன்று வகையாக அறிந்துகொள்ள வேண்டும். அவை (1) பக்தி (2) ஞானம் (3) கர்மா என்பன. நம் இந்து சமயத்தின் மூல நூலான வேதங்களுள் கர்மாவைப் பற்றி நிறையச் சொல்லப் பட்டிருக்கின்றன. வேதத்தின் முடிவான உபநிஷதங்களுள் ஞானத்தைப் பற்றி நிரம்பச் சொல்லப்பட்டுள்ளன. பக்தியைப் பற்றிப் புராண இதிகாசங்கள் வாயிலாக நன்கு விளக்கப்பட் டுள்ளன.

ஒரு மனிதன், தன் வாழ்நாளில் வேறு வேலையில்லாமல் முழு நேரத்தையும் செலவிட்டு இந்து சமயத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றாலுங்கூட, அப்போதும் ஒரு பகுதியைத்தான் அறிந்துகொள்ள முடியும்.

நம்முடைய புராணங்களிலும், தத்துவ உபதேசங்கள் கேள்வி பதில் மூலமாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதிசங்கரரும்; கேள்வி பதில் என்ற தலைப்பிலேயே

'பிரச்னோத்ர மாலிகா' என்று எழுதியுள்ளார். ஒரு விஷயத்தை வசனத்தில் சொல்வதைக் காட்டிலும் கவிதையில் நயத்துடன் சொல்ல முடியும். அதையே கேள்வி பதில் ரூபமாகக் குழந்தைகளுக்கும் புரியும் படியாக இன்னும் எளிமையாகத் தெளிவாகச் சொல்ல முடியும். இந்த வகையில், இந்து சமயத்தின் பல்வேறு விஷயங்களைச் 'சமயக் களஞ்சியம்' என்னும் தலைப்பில் நம் ஸ்ரீ மடத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர் பு. மா. ஜயசெந்தில்நாதன் தொகுத்து எழுதியுள்ள நூல் அருமையான ஆயிரம் செய்திகளைக் கொண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவருவது அறிந்து மிகவும் சந்தோஷமடைகின்றோம். அன்றாட வாழ்க்கையில் அமையக் கூடிய செய்திகளிலிருந்து ஆன்மீக வாழ்க்கையில் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் வரை, பயனுள்ள பல செய்திகள், கேள்வி பதில் ரூபமாக இந்நூலில் தரப்பட்டிருப்பது தற்கால மக்களுக்கு எளிமையாகச் சமயச் செய்திகளைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் உபயோகமாக உள்ளது.

மிகவும் முயன்று சேகரித்து, எளிய நடையில் வினாவிடைகளாக அழகுற அமைத்துத் தந்துள்ள புலவரின் உழைப்பைப் பாராட்டி; எல்லா அன்பர்களும் இச்சிறந்த நூலைப் பெற்றுப் படித்தும் அதன்படி கடைப்பிடித்தும் மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுமாறும், இதுபோன்று மேலும் பல நல்ல நூல்கள் அவர் மூலமாக வெளிவரவும் ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயண ஸ்மிருதி.

உ

சிவமயம்

காஞ்சிபுரம், தொண்டை மண்டலாதீன குருமகா சந்நிதானம் 'கயிலைப் புனிதர்' ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் அருளிய

ஆசியுரை:

மாதவம் செய்த தென்திசை எனத் தெய்வச் சேக்கிழார் பெருமானுரால் போற்றப் பெற்ற தென்னுட்டில் பாலாறு வளஞ்சுரப்பப் பண்பாடு தலை சிறக்கும் தொண்டை நாட்டில் தொன்மை வரலாற்றுச் சிறப்பும், அரசியல் சிறப்பும் பெற்றதும்' இந்திய நாட்டில் தோன்றிய அனைத்துச் சமய தத்துவ மேதைகளின் சிந்தனை மேடையாகத் திகழ்ந்ததும் ஆகிய பல சிறப்புக்களை உடையது காஞ்சிமா நகர் என்ருலும் இன்றும் இங்கு நின்று நிலவுவது இந்து சமயத் தனிச் சிறப்பேயாகும். இத்தகைய இந்து சமயச் சிறப்புக்களுள் ஒன்று ஸ்ரீ மடம் ஆகும்.

இதன்அதிபராக இதுபோது விளங்கிவரும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளப் பாங்கின் வண்ணம் அரிய நூல்களுள் உள்ள சமய, சமுதாயக் கருத்துக்களை மிக எளிய முறையில் யாவரும் அறியும்படி ஆயிரம் வினுவிடைகளைக் கொண்ட தொகுப்பாக இந்நூல்

உருவாகி உள்ளது. எதையும் எளிய முறையில் விரைவில் அறிந்து கொள்ளவும் செயல் புரியவும், நுகரவும் இக்கால மக்கள் விழைவதை கருத்திற் கொண்டு ஸ்ரீ மடத்து ஆஸ்தானத் தமிழ்ப் புலவர் செஞ்சொல்மணி, புலவர் திரு. பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள் ஆயிரம் வினு-விடை வடிவில் இந்நூலை உருவாக்கியுள்ளது. மிகவும் பாராட்டுக்குரியது.

இந்நூல் சைவம், வைணவம் பற்றிய பற்பல செய்திகள், தெய்வப்படிமங்கள், தத்துவங்கள், அருள் நூல்கள், வழிபாட்டு வகைகள், ஆலய அமைப்பு முறைகள், அம்முறையில் அமைந்துள்ள ஆலயங்கள் முதலிய இந்து சமயத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும், பெற்றுள்ளது.

பன்னிரு தொகுதி நிகண்டுகளை மனனம் செய்த பிறகே தமிழ்ப்புலவர் புகுமுக வகுப்பில் சேரும் பண்டைய முறையை, அகராதி தோன்றி மாற்றியமைத்தது போல். தொன்மையான எண்ணற்ற சமய நூல்களைக் கற்ற பின்னரே சமய உணர்வைப் பெற முடியும் என்ற நிலையை இந்நூல் மாற்றி அமைக்கிறது.

இந்நூலை அரிதின் முயன்று தொகுத்துள்ள இந் நூலாசிரியரது புதுமைகாணும் உளமும், எதனையும் தெளிவாக கூறும் மதிநுட்பமும், ஆசார்ய சுவாமிகளின் திருவுள்ளமறிந்து செய்திகளைத் தொகுத்துக் கூறும் திறனும், முயற்சியும் உழைப்பும் கண்டு பெரிதும் மகிழ்கின்றோம்.

இத்தகையதொரு சிறந்த — காலத்துக்குகந்த நூலை அனைவரும் பெற்றுப் பயனடையவும், திரு. பு. மா. ஜ. அவர்கள் இது போன்ற பல நூல்களை மேன்மேலும் வெளி யிட்டுத் திருவருளும், குருவருளும், புகழும் பெற்றுச் சிறக்கவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்

சிவம்.

நூலைப் பற்றி

இந்து சமயம் தொன்மையும் மேன்மையும் வாய்ந்த சமயமாகும். நம் முன்னோர்கள் அருளிச் செய்துள்ள நம் சமயச் செய்திகள் ஏராளமாகவுள்ளன. அவற்றை உணர்ந் தோமானால் நம் உள்ளத்திற்கு அமைதியும் சமயத் தெளிவும் கிட்டும்.

தற்கால உலகம் மிக வேகமானது. எதையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தால்தான்—எளிமைப் படுத்தித் தந்தால்தான ஏற்றுக்கொள்ளும் இயல்பு வேகமாகப் பரவி வருகிறது

ஆதலின் நம் இந்து சமயம் மற்றும் இலக்கியத் தொடர் பான செய்திகளை எளிய முறையில், எல்லோரும், படித்துத் தெரிந்துகொள்ளத் தக்க வகையில் வினா விடை வடிவில் தொகுத்து நூலாகத் தரவேண்டும் என்னும் எண்ணம் என் குருநாதர் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் திருவுள்ளத்தில் எழுந்ததன் பயனே இந்நூல். இந்நூலில் அரிய பல செய்திகளும் விளக்கங்களும் அடங்கிய 1000 வினா விடைகள் இடம் பெற்றுள்ளன. இச்செய்திகளை உணரின் சமயத் தெளிவு கிட்டும் என்பது திண்ணம்.

வினாவிடைகளைப் பல தலைப்புக்களில் பிரித்து வெளி யிட்டுள்ள முறையும், வாழ்வியற் செய்திகளையும் வினா விடை களாகத் தந்துள்ள பாங்கும் பெற்றுள்ள இத்தொகுப்பு நூலை அழகுற அச்சிட்டுத் தந்துள்ள "கமலம் பிரஸ்" அச்சகத்தார்க்கும், பணியாளர்கட்கும், என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

எளியேனை இம்முயற்சியில் ஈடுபடுத்திய குருவருட் கருணையை நெஞ்சார நினைந்து, என் குருநாதருடைய திருவடிகளைத் திசைநோக்கித் தொழுது போற்றுகின்றேன்.

சமய, இலக்கிய உலகம் இம் முயற்சியை வரவேற்கும் என்று நம்புகிறேன்.

இறைபணியில்,

பு. மா. ஜயசெந்தில்நாதன்

பாராட்டுப் பா

—ஃ—

அளப்பரிய ஆழ்கடலில் ஆழ்ந்து நல்ல
ஆணிமுத்து எடுத்துப்பயன் படுத்தல் போலத்
துளக்கரிய நற்கருத்து பலவுங் கொண்ட
சொல்லரிய இச்''சமயக் களஞ்சிய''த்தை
விளக்கமுடன் ஜயேந்திரரின் அருளி ஞலே
வெளியிட்டுத் தருகின்ற ஸ்ரீ மடத்து
விள்ளரிய தமிழ்ப்புலவன் மேன்மை கொண்ட
வித்தகனும் ஜயசெந்தில் நாதன் வாழ்க!

புலவர், **சி. கயிலாயம்,**
ஒய்வுபெற்ற தமிழாசிரியர்
காஞ்சிபுரம்.

1. பிரார்த்தனை 1.

த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ.

தேவ தேவனாகிய நீயே எனக்குத் தாய், தந்தை உறவினன், தோழன், கல்வி, செல்வம், எல்லாமும் ஆவாய்.

2. பிரார்த்தனை 2.

"த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்"

(தைத்ரீயோபநிஷத்)

முக்கண்ணனை சிவபெருமானை வணங்குவோம். நறுமணமுள்ளவரும், சகல ஜீவர்களையும் போஷிப்பவருமான அப்பெருமான், வெள்ளரிப்பழம் கொடியின் பிடியிலிருந்து எவ்வாறு விடுபடுகிறதோ அவ்வாறு நம்மை மரணத்தினின்றும் விடுவித்து மரணமிலாப் பெருவாழ்வில் சேர்ப்பாராக.

3. பிரார்த்தனை 3.

"ஸமர விஜய கோடி ஸாதகாநந்ததாடி
மிருதுகுண பரிபாடி முக்யதா கதம்பவாடி
முனிஹிருத பரிபாடி மோகிதாச அந்தகோடி
பரமசிவ வதூடி பாதுமாம் காமகோடி".

போர்க்களத்தில் வெற்றி பெற்று வெற்றிக்கொடியையுடையவளும், தியானம் செய்பவர்களுக்கு ஆனந்தத்தைத் தருபவளும், மேலான குணங்களையுடைய

வளும், கதம்பவனத்தில் சஞ்சரிப்பவளும், முனிவர் களுக்குப் பக்குவத்தை அருளுபவளும், எல்லா அண்டங் களையும் மோகிக்க வைப்பவளும், பரமேசுவரரின் உயர்ந்த மனைவியாக இருப்பவளுமாகிய மேலான காமகோடித்தாயே என்னைக் காப்பாற்றியருள்வாயாக.

4. பிரார்த்தனை 4.

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாயேன மார்கேண மஹீம் மஹீசா:।
கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா ஸுகினோ பவந்து॥

—ஸ்ரீ ஸங்க்ஷேப சுந்தர காண்டம்

மக்களுக்கு மங்களம் உண்டாகட்டும். அரசர்கள் பூமியை நியாய மார்க்கத்தல் பரிபாலிக்கட்டும். பசுக் களுக்கும், அந்தணர்களுக்கும் எப்பொழுதும் நன்மை நிலைத்திருக்கட்டும். உலகில் எல்லோரும் சுகமாக வாழட்டும்.

5. பிரார்த்தனை 5.

சாந்தி மந்திரம்

" ஸர்வே பவந்து ஸுகின;
ஸர்வே ஸந்து நிராமயா;
ஸர்வே பத்ராணி பச்யந்து
மா கஸ்சித் துக்கபாக் பவே

எல்லோரும் சுகத்தை அடையட்டும்
எல்லோரும் வியாதியின்றி இருக்கட்டும்
எல்லோரும் மங்களத்தை ஏற்கட்டும்
எவருமே துன்பத்தை அடையாமல்
எல்லாரும் இன்பமாய் விளங்கட்டும்.

விநாயகர்

6. விநாயகர் - என்பதன் பொருள் யாது? விளக்குக

நாயகர் = தலைவர்.

விநாயகர் = மேலான தலைவர். தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவர்; என்று பொருள். "ஓம் அநீஸ்வராய நமః" என்னும் மந்திரத்திற்கு—தனக்குமேல் ஒரு ஈசுவரன் இல்லாதவர் என்பதே பொருள். ஸ்ரீ ஆதிசங்கரர் தாம் அருளிய கணேச பஞ்சரத்தினத்துள் "அநாயகைக நாயகம்" என்று கணபதியைப் போற்றுகின்றார். அநாயக–ஏக–நாயகம் = அஃதாவது தனக்கு மேலொரு நாயகரில்லாமல் தானே ஏகநாயகனாக இருப்பவர் என்பது இதன் பொருள். வழிபடுவோரின் விக்கினங்களை (இடையூறுகளை)ப் போக்குபவராதலின் விக்னேசுவரர் என்றும், கணங்களுக்குத் தலைவராயிருப்பதால் கணபதி என்றும் இவர் வணங்கப்படுகிறார்.

7. விநாயகர் வடிவத்தின் தத்துவம் யாது?

விநாயகருடைய வடிவம் விந்தையான வடிவம். யானைத்தலையும், பெருவயிறும், மனித உடலும், ஐந்து திருக்கைகளும் கூடிய வடிவம். விநாயகருக்கு இடையின் கீழே மனித உடம்பு இடைக்குமேல் கழுத்துவரை தேவ உடம்பு. மேலே விலங்கின் தலை (யானைத் தலை) பூதப் பெருவயிறு. ஒரு பக்கம் கொம்பு–ஆண் தன்மை. மற்றொரு பக்கம் பெண் தன்மை.

அஃறிணை, உயர்திணை அம்சங்கள் பொருந்திய இந்நிலையை உற்று நோக்கின் விநாயகப் பெருமான்—தேவராய், மனிதராய், பூதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், எல்லாமாய்த் திகழ்கிறார் என்பது புலனாகும்.

8. விநாயகரின் ஐந்துகரங்களில் உள்ளவை யாவை?

விநாயகருக்கு ஐந்து கரங்கள் உள்ளன.

1. துதிக்கையில் நீர்க்குடம். 2 பின் இரண்டு கைகளில் பாசம், அங்குசம் 3 முன் கைகளில் வலக் கையில் ஒடிந்த கொம்பு (தந்தம்), இடக் கையில் மோதகம் (அமுத கலசம் என்றும் கூறப்படும்)

9. பிள்ளையார் சுழியின் பொருள் யாது?

பிள்ளையார் சுழி என்பது அகரம், உகரம், மகரம் [அ, உ, ம்.] ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாதப் பிரமமாகிய 'ஓம்' என்னும் பிரணவத்தின் ஆரம்ப வடிவம். அதில் உள்ள வட்ட வடிவம் சிவசக்தி பீடம், கோடு சிவலிங்கம் என்றும் சொல்லப்படும் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழியை எழுதுவது, எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய, கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்றதாகும்

10. விநாயகர், பஞ்சபூதத் தொடர்புடைய இருக்கையுடையவராகத் திகழ்கிறார் என்பதை எவ்வாறு அறிகிறோம்?

விநாயகர் இருக்குமிடங்கள் :—

(1) அரச மரம் — ஆகாயம்

(2) வாதராயண மரம் — வாயு

(3) வன்னி மரம் — தேயு (அக்கினி)

(4) நெல்லி மரம் — அப்பு (நீர்)

(5) ஆலமரம் — பிருதிவி (மண்)

தொடர்புடையவை.

11. விநாயகருக்கு உகந்த பத்திரங்கள் (இலைகள்) எவை?

1) முல்லைப் பத்திரம் 2) கரிசிலாங்கண்ணி
3) வில்வபத்திரம் 4) ஊமத்தை இலை
5) இலந்தை இலை 6) வெள்ளறுகம்புல் வேருடன்
7) வன்னி இலை 8) நாயுருவி பத்திரம்
9) கண்டங்கத்தரி இலை 10) அரளி இலை
11) எருக்கிலை 12 மருதை இலை
13) விஷ்ணுகிரந்தி இலை 14) மாதுள இலை
15) தேவதாரு இலை 16) மருவு பத்திரம்
17) அரசு இலை 18) ஜாதிமல்லிகை இலை
19) தாழை இலை 20) அகத்திக்கீரை முதலியன

12. விநாயகருக்கு அறுகம்புல் அருச்சனை மிகவும் உகந்தாகச் சொல்லப்படுவதற்குரிய வரலாற்றை எழுதுக.

ஒரு நாள் கைலாய மலையில் பார்வதி பரமசிவனுடன் பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருந்தார் அப்பொழுது நந்தியம் பெருமான் திடீரென்று உள்ளே வந்து, “பிரபோ தேவேந்திரனும், பிரம்மனும், முப்பத்துமுக்கோடி தேவர் களையும் அழைத்துக்கொண்டு, தங்களை அவசரமாய்ப் பார்க்க வந்திருக்கிறார்கள்” என்றார். பிள்ளையார் அனை வரையும் உள்ளே வரச்சொன்னார். அனைவரும் அமர்ந் ததும், “என்ன சமாசாரம்” என்று பிரமனைக் கேட்டார். பிரம்மா சொன்னார் “யானைமுகப் பெருமானே, அன லாசுரன் என்ற அசுரன் எல்லோரையும் துன்புறுத்து கிறான். அவன் கிட்டேயே போக முடியவில்லை யார் போனாலும் நெருப்பாகத் தகித்து விடுகிறான். அவனை நீங்கள் தான் சம்ஹாரம் செய்யவேண்டும். தேவேந்தி ரனும், நானும் அவன் பக்கத்தில் போகமுடியாமல் ஓடி வந்துவிட்டோம்’ என்றான். பிள்ளையார் உடனேஎழுந்தார். அவருடன் கணங்களும் கிளம்பின. அனலாசுரன்

இருக்கும் இடம் வந்தார். பிள்ளையாருக்கும் அனலாசுரனுக்கும் பெரும் போர் மூண்டது. சண்டையில் அனலாசுரன் தன் வாயிலிருந்து நெருப்பாகக் கக்கி பிள்ளையாரின் படைகளைப் பொசுக்கினன், ஏனென்றால் நெருப்பாக எரியும்படி அவன் வரம் பெற்றிருந்தான். அதைகண்ட பிள்ளையாருக்கு அசாத்தியக்கோபம் வந்துவிட்டது. எத்தனை நேரம் சண்டை செய்தும் அசுரனை ஜெயிக்க முடியாமல் போகவே அவர் அனலாசுரனைத் தூக்கி அப்படியே விழுங்கிவிட்டார்

வயிற்றுக்குள் போன அனலாசுரன் சும்மா இருக்கவில்லை பிள்ளையாரையும் தகிக்க ஆரம்பித்தான். பிள்ளையார் ''எரிகிறதே, எரிகிறதே'' என்று குதிக்கத் தொடங்கிவிட்டார். அதைக்கண்ட தேவர்கள் குடம் குடமாகக் கங்கைநீரினல் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். ஆனல் எரிச்சல் அதிகம் ஆயிற்றே தவிர குறையவில்லை பனிக்கட்டியைக் கொண்டுவந்து தலைமீது வைத்தார்கள். அப்பொழுதும் அடங்கவில்லை. சந்திரனுடைய நிலவைப் பொழிந்தார்கள். அப்பொழுதும் அடங்கவில்லை. அப்பொழுது ஒருரிஷி கைநிறைய அறுகம்புல்லைக் கொண்டுவந்து, பிள்ளையாரின் தலைமீது வைத்தார். உடனே எரிச்சல கப்பென்று அடங்கிவிட்டது. அனலாசுரன் பிள்ளையாரின் வயிற்றிலேயே ஜீர்ணம் ஆகிவிட்டான்

பிள்ளையாருக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை, ''இன்றுமுதல், என்அருள் வேண்டுமென்பவர்கள் அறுகம் புல்லினல்தான் என்னை அர்ச்சிக்கவேண்டும் அதுவும் இரண்டு அறுகம்புல்லாக எடுத்துப்போடவேண்டும்'' என்றுசொன்னர். அன்றுமுதல் பிள்ளையாருக்கு அறுகம்புல் அர்ச்சனை தொடங்கியது. பிள்ளையாருக்கு அறுகம்புல்லினல் அர்ச்சனை செய்தால், நல்ல கல்வியும், செல்வமும், நீண்டஆயுளும் பிள்ளையார் அருள் செய்வார்.

13. 'தோப்புக்கரணம்' போடுவதால் உடம்பில் ஏற்படும் நன்மையாக அறிவியல் கூறுவது யாது?

விநாயகரின் சந்நிதியில் தோப்புக்கரணம் போடுவதும் நெற்றியில் குட்டிக்கொள்வதும் செய்து வழிபடுவதால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி, தட்டி எழுப்பப்பட்டு அதனுல் சுஷும்னு நாடி திறந்து கொள்கிறது. நெற்றியில் குட்டிக்கொள்வதால் அங்கே உள்ளடங்கியுள்ள அமிர்தகலசம் மேலெழும்பி, அதனுல் அமிர்தம் உடல் முழுவதும் பரவுகிறது. இதனுல் உடம்பில் சுறுசுறுப்பும், உள் எழுச்சியும் உண்டாகிறது. தியானிப்பதற்கேற்ப மன ஒருமைப்பாடும் இதனுல் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது.

14. விநாயகரை வணங்கும் முறையையும் தேங்காய் (சிதறு காய்) உடைப்பதன் கருத்தையும் கூறுக.

முதலில் வலக்கையால் முகத்துக்கு மேலாக இடப் பக்கத்திலும், இடக்கையால் வலப்பக்கத்திலும் தலையில் மூன்று முறை குட்டி, காதுகளைப் பிடித்துத் தோப்புக் கரணம் இட்டுக் கணபதியை வணங்க வேண்டும். உருண்டு திரண்ட நம் பாவங்கள் விநாயகர் அருளால் உடைந்து சிதறுவதாக நினைத்து தேங்காயை ஓங்கி அடித்துச் சிதறவிட்டு நம் தீவினைகள் தொலைந்ததாக எண்ணவேண்டும்.

15. வலம்புரி இடம்புரி விநாயகர் என்றழைப்பது எதனுல்?

விநாயகருடைய துதிக்கை வலப்புறமாக வளைந் திருப்பின் வலம்புரி விநாயகர் என்றும், இடப்புறமாக் வளைந்திருப்பின் இடம்புரி விநாயகர் என்றும் அழைக் கிறோம். [வலம்புரியை விசேஷமாகக் கொள்வர்].

16. விநாயகருடைய பதினாறு வகையான பெயர்களையும்—வடிவங்களையும். அவற்றின் அமைப்புக்களையும் விவரித்துக் கூறுக.

(1) பால கணபதி

கரஸ்த-கதளீ சூத-பநஸேக்ஷுக-மோதகம்
பால ஸூர்ய நிபம் வந்தே தேவம் பால கணாதிபம்.

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு, ஐந்தாவது கையான துதிக்கையில் மோதகத்தை வைத்துக் கொண்டிருப்பவரும், இளம் பரிதிக்கு நிகரான திருமேனியை யுடையவரும், எங்கும் ஒளியுடன் விளங்குபவருமான பால கணபதியை நான் வணங்குகிறேன்.

(2) தருண கணபதி

பாசாங்குசபூப-கபித்த-ஜம்பு ஸ்வதந்த
சாலீக்ஷும்பிஸ்வ ஹஸ்தை:
தத்தே சதாயஸ் தருணாருணாப!
பாயாத் ஸயுஷ்மாந் தருணோ கணேச:

கயிறு, மாவெட்டி, அபூபம், விளாம்பழம், நாவற்பழம், தம்முடைய ஒற்றைக்கொம்பு, நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைத் தமது எட்டுக்கைகளிலும் எப்பொழுதும் தரித்துக்கொண்டு, தருண சூரியனை நிகர்த்த காந்தியோடு விளங்கும் ஒப்பற்ற பெருமை வாய்ந்த தருண கணபதி காப்பாற்றுவாராக.

(3) பக்த கணபதி

நாளி கேராம்ர-கதளீ குடபாயஸ-தாரிணம்
சரச் சந்த்ராம்-வபுஷம் பஜே பக்த கணாதிபம்

தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வெல்லத்தா லான பாயஸம் நிறைந்த பாத்திரம், ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டுள்ளவரும், சரத் காலத்தில் தோன்றும் நிறைமதியைப் போன்ற திருமேனியை உடையவருமான பக்த கணபதியை நான் வணங்குகிறேன்.

(4) வீர கணபதி

வேதாள சக்தி-சர-கார்முக-சக்ர-கட்க
கட்வாங்க முத்கர கதாங்குச நாகபாசாந்
சூலம் சகுந்த-பரசு த்வஜ்முத்வ ஹந்தம்
வீரம் கணேச மருணம் ஸததம் ஸ்மராமி

வேதாளம், வேல், பாணம், வில், சக்ராயுதம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, மாவெட்டி, நாகம், கயிறு ஆகியவற்றையும், சூலத்தையும், குந்தம், கோடரி கொடி, என்பவற்றையும் தமது பதினாறு கைகளில் தரித்துக்கொண்டவரும் செந்நிறப் பொலிவுடன் விளங்குபவருமான வீர கணபதியை நான் எப்பொழுதும் தியானம் செய்கிறேன்.

(5) சக்தி கணபதி

ஆலிங்க்ய தேவிம் ஹரிதாங்க யஷ்டிம்
பரஸ்பராச் லிஷ்ட-கடிப்ரதேசம்
ஸந்த்யாருணம் பாசஸ்ருணி வஹந்தம்
பயாபஹம் சக்தி கணேச மீடே.

பச்சை நிறம் தோய்ந்த திருமேனியையுடைய தேவியைத் தழுவிய வண்ணம் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டுள்ள இருப்பையுடையவரும், ஸந்தியா காலம் போன்ற செந்நிறம் தோயப் பெற்றவரும், கயிறு, மாவெட்டி என்ற இரண்டையும் தம் கைகளில் தரித்துள்ளவரும், அச்சத்தை நீக்குகிறவருமான சக்தி கணேசரை நான் துதிக்கிறேன்.

(6) த்விஜ கணபதி

யः புஸ்தகாக்ஷகுண-தண்ட-கமண்டலுஸ்ரீ
வித்யோதமாந-கரபூஷணமிந்து வர்ணம்
ஸ்தம் பேரமாநந-சதுஷ்டய-சோபமாநம்
த்வாம் ஸம்ஸ்மரேத் த்விஜகணுதிபதே ஸ தந்ய:

புத்தகம், ருத்ராக்ஷமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவற்றின் சோபையினுல் ஒளிருகின்ற கைகளின் அலங்காரத்தை யுடையவராகவும், நான்கு யானை முகம் கொண்டவராகவம் உள்ள உம்மை எவர்சிந்தனை செய்கிருரோ அவர் மஹா புண்யவானுவான்.

(7) ஸித்தி கணபதி

பக்வசூத-பல புஷ்ப-மஞ்ஜரீ :
இக்ஷு தண்ட திலமோதகை:ஸஹ
உத்வஹந் பரசுமஸ்து தேநம:
ஸ்ரீ ஸம்ருத்தியுத ஹேமபிங்கள

நன்கு பழுத்த மாம்பழம், பூங்கொத்துக்கள், கருப்பங்கழி, எள்ளாலான மோதகம் ஆகியவற்றுடன் பரசுவையும் முறையே தமது நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டு, ஸ்ரீஸம்ருத்தி என்ற தேவியுடன் வீற்றிருக்கும் விநாயகரே! பொன் கலந்த பசுமை நிறமுடையவரே! உமக்கு என் நமஸ்காரம்.

(8) உச்சிஷ்ட கணபதி

நீலாப்ஜ-தாடியீ-வீணு-சாலி-பாசாக்ஷஸூத்கரம்
தததுச் சிஷ்ட-நாமாயம் கணேச பாது மேசக:

குவளை மலர், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், கயிறு, ருத்ராக்ஷ மாலை, ஆகியவற்றைத் தம்முடைய ஆறு கைகளிலும் முறையே தரித்துக்கொண்டு கரும்பச்சை நிறமுடைய திருமேனியுடன் விளங்குகிற உச்சிஷ்டர் என்ற பெயருடைய கணேசர் காப்பாராக.

(9) விக்ன கணபதி

சங்கேக்ஷு-சாப-குஸு மேஷு-குடரா-பரச-
சக்ர ஸ்வதந்த ஸ்ருணி மஜ் சரிகா சராத்யை
ப்ாணிச்ரிதை பரிஸமீஹித பூஷணஸ்ரீ
விக்நேச்வரோ விஜயதே தபநீய கௌர!

சங்கு, கரும்பு, வில், மலர், பாணம், கோடரி, கயிறு, சக்கரம், தமது கொம்பு, மாவெட்டி, நெற்கதிர், சரம் முதலியவற்றினாலும் பன்னிரண்டு கைகளிலும் ஆச்ரயித்துள்ள ஆயுதங்களினாலும், சுற்றிலும் விரும்பப் பெற்ற அலங்காரங்களினாலும், மிக்க சோபையோடு விளங்குகிறவரும், ஸ்வர்ண நிறம் பொருந்திய திருமேனி கொண்டவருமான விநாயகரை வணங்குகிறேன்.

(10) க்ஷிப்ர கணபதி

தந்த-சல்பலதா-பாசரத்ன கும்பாங்கு சோஜ்வலம்
பந்தூக-கமநீயாபம் த்யாயேத்க்ஷிப்ர-கணாதிபம்

கொம்பு, கற்பகக் கொடி, கயிறு, மாவெட்டி, ஆகிய வற்றை முறையே தமது நான்கு கைகளிலும், ஐந்தாவதான துதிக்கையில் இரத்தினமிழைத்த தங்கக் குடத்தையும் வைத்துக்கொண்டு விளங்குபவராய், செம்பருத்தி மலரென மனத்தைக் கவரும் காந்தியுடையவருமான க்ஷிப்ர கணபதியைச் சிந்தனை செய்கிறேன்.

(1) ஹேரம்ப கணபதி

அபய-வரத ஹஸ்த பாச தந்தாக்ஷ மாலா-
ஸ்ருணி பரசு ததாநோ முத்கரம் மோதகம் ச
பலமதிகத-ஸிம்ஹ பஞ்ச மாதங்க-வக்த்ரே
கணபதி ரதிகௌர பாதுஹேரம்ப-நாமா

இரண்டு கைகளிலும் அபய முத்திரையையும் வரத முத்திரையையும், மற்ற எட்டு கைகளில் முறையே

கயிறு, தந்தம், அக்ஷமாலே, மாவெட்டி, கோடரி, இரும்பாலான உலக்கை, மோதகம், பழம் ஆகியவற்றை யும் தரித்துக் கொண்டுள்ளவரும், சிங்கத்தின்மீது அமர்ந்துள்ளவரும், ஐந்து யானை முகங்களுடையவரும் ஹேரம்பர் என்ற பெயருள்ளவருமான கணபதி நம்மைக் காப்பாராக.

(12) லக்ஷ்மி கணபதி

பிப்ராண சுக பிஜபூரக மிலந்
மாணிக்ய கும்பாங்குசா ந்
பாசம் க பலதாம் ச கட்க வில
ஸஜ்ஜயோதி ஸுதா நிர்ஜர :
ச்யாமே நாத்த ஸரோருஹேண
ஸஹிதம் தேவீத்வயம் சாந்திகே
கௌராங்கோ வரதாந ஹஸ்த
ஸஹிதோ லக்ஷ்மி கணேசோவதாத்.

கிளி, மாதுளம்பழம், இணைந்த மாணிக்கமான குடம் மாவெட்டி, கயிறு, கற்பகக் கொடி, கத்தி ஆகியவற்றினல் ஒளிமயமாகி வெண்ணிறப் பெருக்கை யுடையவரும், நீலவர்ண ஆம்பல் மலர்களைக் கையில் கொண்ட இரு தேவியரை அருகில் அமர்த்திக் கொண்டுள்ளவரும், வரம் தரும் கையையுடையவரு மான லக்ஷ்மி கணேசர் நம்மைக் காப்பாராக

(13) மஹா கணபதி

ஹஸ்தீந்த்ரா நநமிந்து சூடமருணச்
சாயம் த்ரி நேத்ரம் ரஸாத்
ஆச்லிஷ்டப ப்ரியயா ஸரோ
ஜகாயா ஸ்வாங்கஸ்தயா ஸந்ததம்
பீஜபூர கதேக்ஷு கார்முக
லஸக்-சக்ராப்ஜ பாசாத்பல-
வ்ரீஹ்யக்ர ஸ்வவிஷாண ரத்நகல
சாந் ஹஸ்தைர் வஹந்தம் பஜே.

சிறந்த யானையின் முகத்தையுடையவரும், சென்னியில் பிறையைச் சூடியவரும், சென்னிறம் தோய்ந்தவரும் முக்கண்ணரும், தமது மடியில் கையில் தாமரை மலருடன் அமர்ந்துள்ள அன்புக்குரிய நாயகியினால் தழுவப் பெற்றவரும், மாதுளை, கதை, கரும்பு, வில் ஒளிதரும் சக்கரம், தாமரை மலர், கயிறு, நெய்தல் நெற்கதிர், தமது கொம்பு ஆகியவற்றை முறையே தமது பத்துத் திருக்கரங்களிலும், பதினோராவது துதிக்கையில் ரத்தின கலசத்தைத் தரித்துக்கொண்டுள்ளவருமான மஹாகணபதியை நான் சேவிக்கிறேன்.

(14) விஜய கணபதி

பாசாங்குச ஸ்வதந் தாம்ர பல வா நாகு வாஹந।
விக்நம் நிஹந்து ந: ஸர்வம் ரக்தவர்ணோ விநாயக।

கயிறு, மாவெட்டி, தன் கொம்பு, மாம்பழம் ஆகியவற்றையுடையவரும், மூஷிக வாகனத்தையுடையவரும் செந்நிறம் கொண்டவருமான விஜய விநாயகர் நம்முடைய இடையூறுகள் யாவற்றையும் அழிப்பாராக.

(15) ந்ருத்த கணபதி

பாசாங்குசா பூப-குடார-தந்த
சஞ்சத்-கராக்லுப்த-வராங்குலீநம்
பீதப்ரபம் கல்பதரோ ரத ஸ்தம்
பஜாமி ந்ருத்தோப பதம் கணேசம்.

பாசம், அங்குசம், அப்பம், உலக்கை, தந்தம் ஆகியவற்றைத் தமது ஐந்து கைகளிலும் தரித்துக்கொண்டு ஆடுவதாக அசைகிற துதிக்கையினால் செய்யப்பெற்ற சிறந்த மோதிரம்போல் வளைந்துள்ள நிலையையுடையவரும், மஞ்சள் நிறப் பொலிவுடன் இலங்கும் திருமேனியுடையவரும், ந்ருத்த என்ற பதத்தைத் துணையாகக் கொண்டவருமான கணபதியை நான் சேவிக்கிறேன்.

(16) ஊர்த்வ கணபதி

கல்ஹார-சாலி-கமலேக்ஷுக-சாப-பாண-
தந்தப்ரரோஹக-கதீகந கோஜ்வ லாங்க
ஆலிங்க நோத்யத கரோ ஹரிதாங்க யஷ்ட்யா
தேவ்யா கரோது சுபமூர்த்வ கணுதிபோ ந:

நீலோத்பலம், நெற்கதிர், தாமரை மலர், கரும்பு, வில், பாணம், நீண்ட தந்தம், கதை ஆகியவற்றை முறையே தமது எட்டுக் கைகளிலும் தரித்துக்கொண்டு பொன்னிறப் பொலிவுடன் இயங்கும் திருமேனியுடைய வரும், பச்சை நிறத் திருமேனியுடன் விளங்கும் தேவி யோடு தழுவப் பெறுவதற்கு விழைவுடன் உயர்த்திய கையையுடையவருமான ஊர்த்வ கணபதி நமக்கு நலம் அனைத்தையும் அளிப்பாராக.

17. 'கம்'மென்று இரு - காரியம் ஆகும்- இதன் பொருள் யாது?

இது உலக வழக்கில் உள்ள ஒரு பழமொழி. சும்மா இருந்தால் காரியமாகிவிடும் என்பது பொருளன்று. 'கம்' என்பது கணபதி மந்திரத்தின் மூல மந்திரமாகும். கணபதியைப் பற்றிக் கொள் - காரியம் கைகூடும் என்பதே இதன் பொருள்.

18. 'சங்கடஹர சதுர்த்தி' பற்றி எழுதுக.

ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி கழிந்த நான்காம் நாள் சங்கட ஹரசதுர்த்தி எனப்படும். இந்த நாளில் விநாயகரை வழிபடின் எல்லாச் சங்கடங்களும் நிவிர்த்தியாகும். இந்நாளில் இரவில் 9 மணிக்குமேல் சந்திரனைப் பார்த்த பிறகே விநாயகர் வழிபாடு நடைபெறும்.

மாசி மாதத்தில் வருவது மஹாசங்கடஹர சதுர்த்தி எனப்படும். அதுவும் செவ்வாய்க்கிழமையில் பொருந்தி வருமாயின் மிகவும் விசேஷமாகும்.

19. அரசமரமும் வேம்பும் உள்ள இடத்தில் விநாயகர் ஆலயமுள்ளது. அதை பிரதக்ஷிணம் செய்வதற்கு விதிமுறைகள் உள்ளதா? அதை எப்படிச் செய்வது? யார் செய்வது?

இந்துக்கள் யார் வேண்டுமானலும் பிரதக்ஷிணம் செய்யலாம். ஸ்நானம் செய்து மடியாக, ஆண்கள் விபூதியிட்டு, பெண்கள் குங்குமமிட்டு காலே எட்டு மணிக்குள் ஏழு பிரதக்ஷிணமாவது செய்ய வேண்டும். எள், வெல்லம் நிவேதனம் செய்யலாம். சனிக்கிழமைகளில் மட்டும் அவசியம் பிரதக்ஷிணம் செய்வது நல்லது. காலே எட்டு மணிக்குப்பிறகு அரசமரத்தடிக்குப் போகக்கூடாது.

20. விநாயகருக்குரிய விரத நாள்கள் எவை?

வெள்ளிக்கிழமை, விநாயக சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி என்பன.



முருகன்

21. முருகனுக்குரிய பல்வகைப் பெயர்களையும் எழுதி அவற்றின் பொருளையும் தருக.

1. முருகன் — அழகுடையவன் (முருகு: அழகு)
2. குமரன் — இளையவனாய் எழுந்தருளியிருப்பவன்
3. குகன் — அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன்.
4. காங்கேயன் — கங்கையால் தாங்கப்பட்டவன்
5. சரவணபவன் -- சரவணப்பொய்கையில் உதித்தவன்
6. சேனாபதி — தேவர்களின் துன்பம் போக்கச் சேனைகளைத் திரட்டி அவற்றிற்குத் தலைமை தாங்கிச்சென்றவன்.
7. சுவாமிநாதன் — தந்தைக்கு உபதேசித்தவன்
8. வேலன் — வேலினை ஏந்தியவன்
9. கந்தன் — ஒன்று சேர்க்கப்பட்டவன் (ஆறு உருவங்களையும் உமாதேவி ஒன்று சேர்க்க ஒருருவமாயினவன்)
10. கார்த்திகேயன் — கார்த்திகைப்பெண்களால் வளர்க்கப் பட்டவன்.
11. சண்முகன்
12. ஆறுமுகன் } — ஆறுமுகங்களையுடயவன்
13. தண்டபாணி — தண்டாயுதத்தைக் கரத்தில் ஏந்தியவன்.

14. சுப்பிரமணியன் — மேலான பிரம்மத்தின் பொருளாக இருப்பவன்

15. வடிவேலன் — அழகுடைய வேலை ஏந்தியவன்

16. குருநாதன் — தந்தைக்கு குருவாக இருந்து உப தேசித்தவன்.

22. சோடச [16] சுப்பிரமணிய மூர்த்தங்களைப் பற்றி எழுதுக.

1] சத்திதரர்:- ஒருமுகம்-இருபுஜங்கள்-இடக்கரத்தில் வச்சிரம்-மற்றதில் வேல் - அசுர வதைக்காக எழுந்த வடிவம்.

2] ஸ்கந்தன்:- (கந்தன்) ஒருமுகம் - இருபுஜங்கள் - இடுப்பில் கோவணம் தரித்து - தண்டாயுதம் ஏந்திய மூர்த்தி.

3] சேனாபதி:- 6 முகங்கள் - 12 கரங்கள் - கேடகம், வேல், கொடி ஆகியவை ஏந்தி - தேவர் துன்பம் தீர்த்த பெருமான்.

4] கஜவாகனர்:- ஒருமுகம் - நான்கு கரங்கள்-வேல், கொடி, ஏந்தி அபய வரத கரங்கள் - யானை வாகனத்திலிருந்து தேவர்க்கருள் செய்தவர்.

5] சரவணபவன்:- ஆறு முகங்கள் - பன்னிரண்டு கைகள் - வேல், கொடி, பாசம், தண்டம், டங்கம், பாணம், வரத, அபயம், வில் உடையவராய் தேவர் பிரார்த்தனையால் சரவணத்தில் அவதரித்தவர்.

6] கார்த்திகேயர்:- ஆறு முகங்கள் - வரத அபயம், குலிசம், கேடகம், வேல், கட்கம் (6 கரங்களில்) ஏந்தி, சாதுக்களால் பூசிக்கப்படும் வடிவம்.

7] சுப்பிரமணியர்:- ஒருமுகம் - நான்கு புஜங்கள்- கேயூரம் முதலிய ஆபரணங்களை அணிந்தவர் - அபயவரத கரங்களுடன் வேல், சேவற்கொடி தாங்கிய உருவம்.

8] குமாரசாமி:- ஒருமுகம் - நான்கு கரங்கள் - வேல், வாள், கொடி, கேடகம் ஏந்திய வடிவம்.

9] ஷண்முகர்:- ஆறு முகங்கள் - தெய்வயானையுடன் கூடி - மயில்வாகனர்-வேல், பாணம், கொடி, கதை, அபயம், வில், வச்சிரம், தாமரை, கேடகம், வரதம், சூலம், உடையவராய்த் தியானிக்கப்படுபவர்

10] தாரகாரி:- ஆறுமுகங்கள் - பன்னிரண்டு கைகள் - வரதம், அங்குசம், கொடி, கட்கம், வில், வச்சிரம், அபயம், பாசம், சக்கரம், முசலம், சக்தி, கட்கம் முதலியவைகளை ஏந்திய நிலை- தாரகாசூரனைச் சம்ஹரித்தவர்.

11] சேநாநி.- ஆறுமுகம் - பன்னிரண்டு கரங்கள் மேற் சொல்லியவாறு ஆயுதமேந்தி தேவர் இடுக்கண் தீர்த்தபிரான்.

12] பிரமசாஸ்தாமூர்த்தி:- ஒருமுகம் - நான்கு கரங்கள் - உருத்திராக்க மாலை, கமண்டலம், அபய, வரதத்துடன் பிரமனின் படைப்பைச் செய்த திருக்கோலம்.

13] வள்ளிகல்யாணசுந்தரர்:- உருத்திராக்கம், அபய, வரதம், கமண்டலம் கொண்டு-வள்ளியுடன்- மகாவிஷ்ணு நீர்வார்க்க - ஹோமம் செய்யப் பட்டவராய் - தேவர்களால் சேவிக்கப் படுபவர்.

14] பாலசுப்பிரமணியர்:- குழந்தை உருவம் - மேல் நோக்கிய கரங்கள் - தாமரைமலர்கள் ஏந்தி- அம்மையப்பருக்கு இடையில் அமர்ந் திருப்பவர்.

15] கிரௌஞ்ச பேதனர்:- ஆறு முகங்கள் - எட்டு புஜங்கள் - அபய வரதம், பாணம், வேல், அம்பு, குலிசம், வில், கேடகம் ஏந்தி— கிரௌஞ்ச மலையை அழித்தவர்.

16] மயூரவாகனர்:- ஒருமுகம் - நான்கு கரங்கள் - வச்சிரம், வேல், அபயவரதம்-மயில்வாகனர்- தேவர் இடுக்கண் தீர்த்த வடிவம்.

23, முருகப்பெருமானின் பன்னிரண்டு திருக்கைகளிலும் உள்ள ஆயுதங்களின் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதுக.

முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில்,

(1) அபயகரம் (2) கோழிக்கொடி
(3) வச்சிரம் (4) அங்குசம்
(5) அம்பு (6) வேல் முதலியனவும்;

இடப்புறம் உள்ள ஆறு கரங்களில்

(1) வரத கரம் (வரமளிக்கும் கை)
(2) தாமரை (3) மணி
(4) மழு (5) தண்டாயுதம்
(6) வில் முதலியனவும் உள்ளன.

24. முருகப்பெருமானின் ஆறு முகங்களும், பன்னிரண்டு கைகளும் செய்யும் தொழில்கள் யாவை?

[1] ஆறுமுகங்கள்:—

1) உலகுக்கு ஒளிதருவது ஒருமுகம்

2) வேள்வி காப்பது ஒருமுகம்
3) அடியார் குறைநீக்கி வரம் அருள்வது ஒருமுகம்
4) வேத ஆகமப் பொருளை விளக்குவது ஒருமுகம்.
5) பகைவரை, தீயோரை அழித்து நன்மை செய்வது ஒருமுகம்
6) வள்ளிக்கு மகிழ்வைத் தருவது ஒருமுகம்

[2] பன்னிரண்டு கைகள் :

1 2, கைகள் தேவர்களையும் முனிவர்களையும் காக்கின்றன.
3 ஆவது கை அங்குசம் செலுத்துகிறது.
4 ஆவது கை தொடையில் அமர்த்தி உள்ளது.
5, 6-ஆவது கைகள் வேலைச் சுழற்றுகின்றன.
7 ஆவதுகை முனிவர்க்குப் பொருளை விளக்குகிறது.
8 ஆவது கை மார்பில் உள்ள மாலையோடு சேர்ந்துள்ளது.
9 ஆவது கை வேள்வியை ஏற்கிறது.
10 ஆவது கை மணியை ஒலிக்கின்றது.
11 ஆவது கை மழையை அருளுகின்றது.
12 ஆவது கை மணமாலை சூட்டுகிறது.

(திருமுருகாற்றுப்படையில் வரும் கருத்து)

25 முருகப்பெருமானின் தலையில் உள்ள கிரீடத்தில் உள்ள ஐவகை உறுப்புக்கள் எவை?

1) கிம்புரி 2) கோடகம் 3) பதுமம் 4) மகுடம் 5) தாமம்

26. வள்ளி, தெய்வயானை, வேல் ஆகியோர் எவ்வெச்சக்தியின் அம்சமாவர்?

வள்ளி — இச்சாசக்தி, தெய்வயானை — கிரியாசக்தி, வேல்—ஞானசக்தி.

(முருகனுக்கு வலப்புறத்தில் வள்ளியும் இடப்புறத்தில் தெய்வயானையும் உள்ளனர்.)

27. ஆறுபடை வீடுகள் எவை?

1. திருப்பரங்குன்றம் (மதுரைக்கு அருகில்)
2. திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)
3. திருவாவினன்குடி (பழநி)
4. திருஏரகம் (சுவாமிமலை)
5. குன்றுதோருடல் (திருத்தணிகை முதலியவை)
6. பழமுதிர்சோலை (மதுரைக்கு அருகில்) என்பன.

28. முருகப்பெருமானுக்குத் துணையாக வந்துதித்த நவ வீரர்கள் யாவர்?

1) வீரவாகு தேவர் 6) வீரராக்கதர்
2) வீரகேசரி 7) வீரமார்த்தாண்டர்
3) வீரமகேந்திரர் 8) வீராந்தகர்
4) வீரமகேஸ்வரர் 9) வீரதீரர்
5) வீரபுரந்தரர் ஆகியோர்.

29. சூர சம்ஹாரத்தின் தத்துவம் யாது?

ஆணவம் மலம் நிறைந்த உயிரே சூரன். ஆணவம் முதிர்ந்தபோது உயிர் இறைவனை ஒருபோதும் காணாது. ஆணவத்தை ஒழித்தால்தான் அஃது இறைவனோடு ஒன்ற இயலும். ஆணவத்தைப் போக்க வல்லவரான இறைவன், உயிர்களின்மீது கொண்ட கருணையால் உயிர்களின் ஆணவமாகிய சூரனின் ஸ்தூல உடம்பைப் போக்கி (ஆணவ மலம் நீங்கின அச்சூரனின்) ஆத்மாவைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளுகிறார் என்பதே சூரசம்ஹாரத்தின் உட்கருத்தாகும்.

30. முருகனுக்கு வழிபாடு செய்யக் கூடிய முக்கிய நாள்கள் எவை?

சஷ்டி திதி; விசாகம், கிருத்திகை நட்சத்திரங்கள்; செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகியவை.

31. பிணிமுகம் என்று எதற்கு பெயர்?

முருகப்பெருமானுக்கு வாகனமாகவுள்ள யானைக்குப் 'பிணிமுகம்' என்று பெயர்

32. வெள்ளிக்கிழமை விரதத்தின் சிறப்பை எழுதுக.

வெள்ளிக்கிழமை விரதம் முருகனுக்கு மிகவும் சிறப்பாக உரியது. இவ்விரதத்தால் நினைத்தபயன் கைகூடும். இதன் சிறப்பை,

"வெள்ளிநாள் விரதந்தானே விண்ணவர் உலகைக் காத்த
வள்ளல்தன் விரதமாகும், மற்றது புரிந்த பேலோர்
உள்ளமேல் நினைந்தவெல்லாம் ஒல்லையின் முடியுமன்றே",

என்று கந்தபுராணம் உயர்வாகச் சொல்கிறது.



சக்தி

33. 51 சக்தி பீடத் தலங்கள் எவை?

1. காமரூபம் [அஸ்ஸாம்] 2. காசி, 3. நேபாளம்.
4. ரௌத்ரபர்வதம், 5. காஷ்மீரம்,
6. கான்யகுப்ஜம் [உத்திரப்பிரதேசம்]
7. பூர்ணகிரி [இமாலயம்]
8. அற்புஜாஜலம், [அம்பாஜி, ராஜஸ்தான்]
9. ஆம்ராதகேச்வரம், 10 ஏகாம்பரம் [காஞ்சிபுரம்]
11. த்ரிஸ்ரோத: [காஞ்சிபுரம்-முக்கூடல்]
12. காமகோடி [காஞ்சிபுரம்]
13. கைலாசம் [இமாலயம்] 14. ப்ருகுபீடம்
15. கேதாரம் [இமாலயம்] 16. சந்த்ரபுரம்
17. ஸ்ரீபீடம் 18. ஓங்காரம் [மத்தியப்பிரதேசம்]
19. ஜாலந்தரம் [பஞ்சாப்]
20. மாளவம் [சௌராஷ்டிரம்] 21. குலாந்தகம்
22. கொட்டகம் [தேவகோடம்]
23. கோகர்ணம்—[கர்நாடகம்] 24. மாருதேச்வரம்
25. அட்டஹாஸம், 26 விரஜ, 27. ராஜக்ருஹம்
28. மஹாபதம், 29. கொல்லகிரி [கொல்லாபுரம்]
30. ஏலாபுரம், 31. காலேச்வரம், 32. ஜயந்தி
33. உஜ்ஜயினி [மத்தியப்பிரதேசம்] 34. யோகினீ
35. க்ஷீரிகா, 36 ஹஸ்தினாபுரம் [டில்லி]

37. உட்டீசம், 38. ப்ரயாகம் [அலஹாபாத்]
39. ஷஷ்டீசம், 40. மாயாபுரம் [ஹரித்வார்]
41. மலயம் [திபெத்] 42 ஸ்ரீசைலம்,
43, மேரு [இமாலயம்] 44. கிரிபீடம் (ஜூனகாட்)
45. மாஹேந்திரம், 46. வாமனம்,
47. ஹிரண்யபுரம், 48. மஹாலட்சுமிபுரம்
49. அத்ரிஸ்தானம், 50. சாயாபீடம், 51, சத்ரடம்.

34. ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பை விவரி.

ஸ்ரீ சக்ரத்திற்கு 43 முக்கோணம், அவை முறையே சிவகோணம் 3, சக்தி கோணம் 5, அஷ்டதளம், ஷோடச தளம், மூன்று வலயங்கள், 4 சக்ரங்கள், பிந்துநாதம் கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவது ஆகும் இந்த ஸ்ரீ சக்ரத்திலே யோக சாஸ்திரங்களிலே விளக்கி உள்ள மூலாதாரம். சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களும் அடங்கியுள்ளன.

அதாவது முக்கோணம் மூலாதாரமாகவும், அஷ்டாரம் சுவாதிஷ்டானமாகவும், தசாரம் மணிபூரகமாகவும், பஹிர் தசாரம் அனாஹதமாகவும், மன்வச்ரம் விசுத்தியாகவும், பிந்து ஆக்ஞையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. அண்டத்திலே சுவாதிஷ்டான க்ஷேத்ரமாக திருஆனைக்கா விளங்குகின்றது.

சரீரத்திலே மூலாதாரத்திற்கு மேலே இரண்டு அங்குலத்தில் ரெத்னம் போன்ற ஒலியுடன் விளங்குகின்ற நான்கு தளங்களைக் கொண்டு சுவாதிஷ்டானம் என்னும் சக்ரமானது, விளங்குவதாகும். ஆறு இதழ்களோடு ஆறு அக்ஷரங்களோடு செந்நிறப் பொலிவுடன் விளங்கும் அத் தாமரையை அறிஞர்கள் சுவாதிஷ்டானம் என அழைப்பார்கள். அவ்விடத்தில் பாலன் என்ற சித்தனும், ராகினி என்ற தேவியும் வசிக்கின்றனர். ஆறு இதழ்களிலும்

பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, யசஸ்வினி, ரமா, சம் பேஷ்டி என ஆறு தேவிகளும் வசிக்கின்றனர். இந்த ஆதாரமானது தனக்கு மேலான அக்னி தத்துவத்துடன் இணைந்து இலங்குவது ஆகும். இவ்விடத்திலேதான் குண்டலினி தானே அதிஷ்டானமாகி கிரந்திகளைச் செய்து கொண்டிருக்கும், எனச் சாத்திரங்கள் கூறுவதால் அந்த ஆதாரத்திற்குச் சுவாதிஷ்டானம் எனப் பெயர். யோகி யானவன் தனது இடையருத பயிற்சியினுல் இந்த ஆதா ரத்திலுள்ள அக்னியைப் பிரகாசிக்கச் செய்யும்போது குண்டலினி சக்தியானது பெருவெளியில் சிவனேடு உறைவதாகும்.

சித்தாந்த சாத்திரமானது சரஸ்வதியோடு கூடிய பிரமாவை, அபயம், வரதம், கபண்டலு, அக்ஷமாலை இவைகளை நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு அக்ஷரங்களோடு கற்பனை செய்யப்பெற்ற பத்மத்திலே காந்தியுடன் சிந்தனை செய்யவேண்டும் எனக் கூறப்பட் டிருக்கின்றது. சக்தி உபாசகர்கள் மேதஸ் என்ற தாதுவைத் தனது இருப்பிடமாகக் கொண்ட காசினி என்ற தேவதையைத் தியானம் செய்கின்ருர்கள். இதே போன்று மற்ற ஆதாரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சக்ரத்தைப் பூஜிக்கும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் குருவினுடைய பரம்பரை வழிவந்த உபதேசம் பெற்று ஒவ்வொன்றையும் நன்கு கவனித்துச் செய்யவேண்டும். குருவினுடைய முன்னிலையில் பூஜைகள் செய்து, அவ ருடைய அனுமதியைப் பெற்றுத் தனிமையில் பூஜையைச் செய்யவேண்டும் என்பதும் நமது முன்னேர்களுடைய மரபாகும்.

35. நவாவரண பூஜையின் சிறப்பையும், நவா வரண அமைப்பையும் கூறுக.

அம்பிகையை ஸ்ரீ சக்ரம் அல்லது ஸ்ரீ சக்ர மேருவில் நவாவரண பூஜை செய்வது சிறப்பு. நவ ஆவரணம் என்ருல் ஒன்பது சுற்றுக்கள் — என்பது பொருள்.

ஆவரணம் என்றால் சுற்று அல்லது அடைப்பு என்று பொருள் கொள்ளலாம். ஸ்ரீசக்ரத்தில் முதல் சதுர வடிவாய் உள்ள மூன்று கோடுகள் த்ரைலோக்ய மோகன சக்ரம் எனப்படும். இது முதலாவது ஆவரணம், இதில் உள்ள சக்திகள் பிரகடயோகினிகள் எனப்பெறுவர். இரண்டாவது ஆவரணம் ஸர்வாசாபரிபூரக சக்ரம் ஆகும். இதில் உள்ள சக்திகள் குப்தயோகினி ஆவர். மூன்றாவது ஆவரணம் எட்டுத்தளம் உடைய ஸர்வஸம்க்ஷோபண சக்ரம் இதில் உள்ள சக்திகள் குப்ததர யோகினிகளாவர் நான்காவது ஆவரணமான பதினான்கு கோணம் உடைய ஸர்வஸௌபாக்ய சக்ரத்தில் ஸம்ப்ரதாய யோகினிகள் வசிக்கின்றனர். ஐந்தாவது ஆவரணம் வெளிப்பத்துக்கோணம் ஸர்வரக்ஷாகரசக்ரம், இதில் உள்ள சக்திகள் குலோத்தீர்ணயோகினிகளாவர். ஆறாவது ஆவரணம் உள்ள பத்துக் கோணமுடைய ஸர்வார்த்தஸாதகசக்ரம் ஆகும். இதில் உள்ள தேவதைகள் நிகர்ப்பயோகினிகள். ஏழாவது ஆவரணம் எட்டுக்கோணமுடைய ஸர்வரோகஹர சக்ரமாம். இதில் உள்ள சக்திகள் ரஹஸ்யயோகினிகளாவர். எட்டாவது ஆவரணம் முக்கோண வடிவமுடையதான ஸர்வ ஸித்திப்ரத சக்ரமாகும். தேவதைகள் அதிரஹஸ்ய யோகினிகளாவர். ஒன்பதாவது ஆவரணம் ஸர்வானந்த மய சக்ரம். இது பிந்து வடிவமானது இதில்தான் பரமேச்வரனும் பரமேச்வரியும் இருந்து உலகை ரக்ஷிக்கின்றனர்.

36. சக்தி வடிவாகிய ஐவகைக் கலைகளை விளக்குக.

1. மண், பெண், பொன் முதலிய உலகப்பற்றுக்களிலிருந்து ஆன்மாக்களை நிவிர்த்திசெய்வது **நிவிர்த்திகலை**
2. அங்ஙனம் நிவிர்த்தி செய்யப் பெற்ற ஆன்மாக்களை வாசனைபற்றி மீண்டும் உலகைப் பாராதபடி பிரதிட்டை (நிறுத்தல்) செய்வது **பிரதிஷ்டாகலை.**

3. அங்ஙனம் பிரதிட்டை செய்யப்பெற்ற ஆன்மாக்களுக்குச் சிவானுபூதி ஞானத்தைத்தருவது **வித்யாகலை.**

4. அனுபூதிஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்பு முதலிய அனைத்தையும் சாந்தமாகச் செய்வது **சாந்திகலை**

5. அவ்வாறு சாந்தமாக நின்றதையும் ஒரு நிலையில் நீங்கச்செய்வதும் **சாந்தி அதீதகலை** எனப்படும்.

37. 'லலிதா திரிசதி'யின் சிறப்பை எழுதுக.

இஃது ஸ்ரீ லலிதாம்பிகையின் 300 நாமாக்களைக் கொண்டது—த்ரிசதி. இதில் பரமேசுவரனால் சொல்லப் பட்டதும், பரமேஸ்வரியினால் சொல்லப்பட்டதுமாகிய நாமாக்களும், இருவருக்கும் சேர்ந்துள்ள நாமாக்களும் அடங்கியுள்ளன, இது மிகவுயர்ந்த துதியாகும். இத் துதிக்கு இணையேதுமில்லை என்று அகத்தியருக்கு, ஹயக்ரீவரே சொன்னதாகச் சொல்லப்படுகின்றது.

'க' என்னும் அட்சரங்களை முன்னதாகக் கொண்டு 60,
'ஹ' என்னும் அட்சரங்களை முன்னதாகக் கொண்டு 40,

ஆகிய இவை பரமேசுவரனால் கூறப்பட்ட பாகமென்றும்;

ஹ்ரீம்' என்றும் அட்சரத்துடன் ஆரம்பிக்கும் 60 நாமாக்கள் இருவரும் சேர்ந்த பாகங்கள் என்றும்; ஏனைய 140 நாமாக்களும் தேவி பாகமாகவும் சொல்லப்படு கின்றன.

இத்துதியைப் பாராயணம் செய்தால் அறியாமை நீங்கி, குறைகள் அகன்று, மன அமைதி கிடைக்கும். தம்பதிகள் ஒற்றுமை வலுப்படும், ஆயுள், நல்ல சரீரம், நல்ல சந்ததி, படிப்பு, புகழ், கவித்துவம் முதலியன அமையும் என்று பலன்கள் சொல்லப்படுகின்றன.

38. சஹஸ்ர சண்டி ஹோமத்திஞல் விளேயும நன்மைகள் யாவை?

மக்களுக்கு உண்டாகும் கிரகபீடைகள், இயற்கைச் சீற்றங்கள் வெள்ளம் முதலியவற்ருல் ஏற்படும் சேதங்கள் பகைமை, சத்ருக்கள் பயம், ஆயுதங்களால் உண்டாகும் அழிவுகள், கொடிய தீமைகள் முதலான துன்பங்கள் எல்லாம் விலகும். எல்லாவித மங்கலங்களேயும் நோயற்ற வாழ்வையும் அளிக்கும்.

39. அஷ்ட சக்திகளின் பெயர்களேயும் அவர்கள் சக்தியாகும் ஈசுவர சொரூபத்தின் பெயர் களேயும் எழுதுக.

1	வாமை	—	பிருதிவிதத்துவ ரூபமாகவுள்ள சருவர்
2.	சியேட்டை	—	எல்லாவற்றையும் தோற்று விக்கும் சக்தியாயிருப்பவர்
3.	ரௌத்ரி	—	சங்காரகர்த்தராகிய அக்னிரூப ராகிய பசுபதி
4.	காளி	—	வாயு ரூபராகிய ஈசானர்
5.	கலவிகரணி	—	ஆகாச தத்வரூபராகிய பீமர்
6.	பலவிகரணி	—	சந்திரமூர்த்தியாகிய மகாதேவர்
7.	பலப்ரதமனி	—	ருத்ரமூர்த்தி
8.	சர்வபூத தமனி	—	உக்ரமூர்த்தி

40. ஆடி, தை மாதத்திய வெள்ளிக்கிழமைகள் அம்பாளுக்கு விசேஷமாகச் சொல்லப்படு வதற்கு உரிய காரணம் யாது?

தக்ஷிணயனம், உத்தராயணம் இன்னும் இவ்விரு அயனங்களுமே புண்ணியகாலங்கள் எனக் கொள்ளப் படுகின்றன.

தக்ஷிணாயனத்தின் ஆரம்பம் ஆடிமாதம்
உத்தராயணத்தின் ஆரம்பம் தைமாதம்.

அயன ஆரம்ப காலமாகவுள்ள இவ்விரு மாதங்களும் சிறப்புடையவை பொதுவாக வெள்ளிக்கிழமை அம்பாளுக்குரிய சிறந்த நாள். இதனோடு அயனத்தின் ஆரம்பம் என்னும் சிறப்பும் சேருகின்றதால் இவ்விரு மாதங்களிலும் வரும் வெள்ளிக்கிழமைகள் அம்பாளுக்கு மிகவும் விசேஷமுடையனவாகக் கருதப்படுகின்றன.

இம்முறை பற்றியே இவ்விரு மாதங்களிலும் வரும் அமாவாசை, கிருத்திகை நாள்களும் மிகவும் விசேஷமுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. (தை அமாவாசை, தை கிருத்திகை, ஆடி அமாவாசை ஆடி கிருத்திகை)

41. அம்பாளுக்குரிய விரத நாள்கள் எவை?

வெள்ளிக்கிழமை விரதம், நவராத்திரி விரதம், என்பன.



மகாவிஷ்ணு - வைஷ்ணவம்
திவ்யபிரபந்தம்

42. விஷ்ணு—சொல்லின் பொருள் யாது?

எங்கும் பரவியிருப்பவர்-வியாபித்திருப்பவர் என்பது பொருள்.

43. திருமாலின் மூவித நிலைகள் யாவை?

1) நின்ற திருக்கோலம்
2) இருந்த திருக்கோலம்
3) கிடந்த திருக்கோலம் என்பன.

[108 திவ்விய தேசங்களுள்; 60 தலங்களில் நின்ற திருக்கோலத்திலுப், 21 தலங்களில் வீற்றிருந்த திருக்கோலத்திலும், 27 தலங்களில் கிடந்த (பள்ளிகொண்ட) திருக்கோலத்திலும் மஹாவிஷ்ணு எழுந்தருளியுள்ளார்.]

44. திருமாலின் ஐவகை நிலைகளை எழுதுக.

1] **பரம்:-** வைகுந்தத்தில், முக்தர்கள், கருடன். அனந்தன் முதலிய நித்யர்கள் சூழ எழுந்துள்ள நிலை,

2] **வியூகம்:-** முத்தொழில் புரியவும், உலக மக்களுக்கு நன்மை தந்து, தீமை போக்கிப் பாதுகாத்தருளவும்; வாசுதேவனாகத் திருப்பாற்கடலில் விளங்கும் நிலை.

3] **விபவம்:-** அவதாரங்கள்.

4] **அந்தர்யாமித்துவம்:-** எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் உட்கலந்து நின்று இயக்கி நிற்பவனாகத் திகழும் நிலை.

5] **அர்ச்சாவதாரம்:-** திருமேனி, திருநாமம், கொண்டு ஆலயத்தும், இல்லங்களிலும் அன்பர்கள் விருப்பத் திற்கேற்ப எழுந்தருளியிருக்கும் நிலை.

45. திருமாலினுடைய மங்கள (கல்யாண) குணங்கள் எவை? விளக்கமாகக்கூறு.

(1) வாத்ஸல்யம் (2) செளலப்பியம்
(3) செளசீல்யம் (4) சுவாமித்வம்

வாத்ஸல்யமாவது குற்றத்தையும் குணமாகக் கொள்ளும் அளவற்ற அன்பு.

செளலப்பியமாவது, எல்லாரும் தன்னைப் பற்றுமாறு எளியனாயிருத்தல்.

செளசீல்யமாவது, உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு கலக்குங்கால் தன் உயர்வையும், அவன் தாழ்வையும் நெஞ்சிற் சிறிதேனும் கொள்ளாமல் புரையறக் கலக்கும் பண்பு.

சுவாமித்துவமாவது தனக்கு மேற்பட்டதலைவன் எவனும் இல்லாமல் தானே எல்லாப் பொருள்களுக்கும் தலைவனாயிருத்தல்.

46. திருமாலுக்குச் சொல்லப்படும் மூவகைச் சயனங்கள் எவை?

1] **ஜலசயனம்:-** திருப்பாற்கடலில் பள்ளிகொண் டிருப்பது.

2] **தலசயனம்:-** மாமல்லபுரத்தில் பள்ளிகொண் டிருக்கும் கோலம்.

3] **சேஷசயனம்:-** பரமபதத்தில் (வைகுந்தத்தில்) ஆதிசேஷனாகிய படுக்கையில் பள்ளிகொண் டிருக்கும் கோலம்.

47. திருமாலின் திருக்கைகளில் உள்ள ஐந்து ஆயுதங்கள் எவை?

ஆயுதங்கள்:		பெயர்கள்:
1. சங்கு	—	பாஞ்சசன்னியம்
2. சக்கரம்	—	சுதர்சனம்
3. வாள்	—	நந்தகி
4. கதை	—	கௌமோதகி
5. வில்.	—	சார்ங்கம்

காக்கும் கடவுளான திருமாலின் இந்த ஐந்து ஆயுதங்களை அணிகலனாகச் செய்து குழந்தைகளுக்கு ஐந்தாவது மாதத்தில் அணிவிக்கும் வழக்கம் (பாதுகாப்புக்காக) பண்டை நாளில் இருந்தது. இந்த அணிகலனுக்கு **ஐம்படைத் தாலி** என்று பெயரிட்டனர்.

48. திருமாலின் தேவிமார்கள் எவர்?

1) திருமகள் (இலக்குமி) என்ற பெரிய பிராட்டியார்.
2) மண்மகள் (பூமிதேவி).
3) ஆயர்மகள் (நீளாதேவி) முதலியோர் திருமாலின் தேவிமார்களாவர்.

இவர்களுள் இலக்குமியை — ஞானப்பாலூட்டி வளர்க்கும் தாய் என்றும்,

பூமிதேவியை — குற்றம் கண்டவிடத்தும் பொறுத்தருளச் செய்பவள் என்றும்,

நீளாதேவியை — நம் குற்றங்களைப் பெருமாளின் கண்ணிற்படாமல் செய்பவள் என்றும் கூறுவர்.

49. திருமாலின் பத்து அவதாரங்கள் எவை?

அவதாரம் என்பது 'இறங்கி வருதல்' எனப் பொருள் படும். மனிதர்களின்மீது கொண்ட கருணையால் பரம்

பொருள் இவ்வுலகில் வந்து பிறந்து அற்புதங்களைச் செய்வதே அவதாரம் எனப்படும்

1. மச்சாவதாரம்
2. கூர்மாவதாரம்
3. வராகவதாரம்
4. நரசிம்மாவதாரம்
5. வாமனவதாரம்
6. பரசுராமாவதாரம்
7. இராமாவதாரம்
8. கிருஷ்ணவதாரம்
9 பலராமாவதாரம்
10. கல்கி அவதாரம்

50. திருமால் பள்ளி கொண்டுள்ள சயனத்திருக் கோலங்களையும், உரிய தலங்களையும் எழுதுக.

1. வடபத்ர சயனம் —ஸ்ரீ வில்லிபுத்தூர்
2. வீர சயனம் —இந்தளூர்
3. ஸ்தல சயனம் —மாமல்லபுரம்
4. உத்தான சயனம்—கும்பகோணம்
5. தர்ப்ப சயனம் —திருப்புல்லாணி
6. புஜங்க சயனம் —திருவரங்கம், திருவள்ளூர், திருக்கோட்டியூர் முதலிய 20 திவ்ய தேசங்கள்
7. யோக சயனம் —தில்லை திருச்சித்ரகூடம்
8 மாணிக்க சயனம்—திரு நீர்மலை

51. அஷ்டலட்சுமி பெயர்களையும், திருவுருவ அமைப்பையும் எழுதுக.

1. **தனலட்சுமி:-** நான்கு கரங்கள். இரு கரங்களில் தாமரை. ஒன்றில் செல்வப்பெட்டி. ஒன்று அபய அமைப்பில்.

2. **தான்யலட்சுமி:-** நான்கு கரங்கள். இரண்டில் தான்ய கதிர்கள். மற்றவை இரண்டும் வரத அபய அமைப்பில்.

3. **தைர்யலட்சுமி:-** நான்கு கரங்கள். வேல், வில், பலகை அம்பு ஆகியவை ஏந்தியவாறு.

4. **விஜயலட்சுமி:-** நான்கு கரங்கள். மூன்றில் தாமரை மலர்கள் - மற்றொன்று லமபிதமாக.

5. **வீரலட்சுமி:-** நான்கு கரங்கள் - இரண்டில் தாமரை மலர்கள். மற்ற இரண்டில் வாள், பல்கை ஏந்தியவாறு.

6. **சந்தானலட்சுமி:-** நான்கு கரங்கள் - இரண்டில் தாமரை. மற்ற இரு கரங்களில் குழந்தையை ஏந்தி.

7. **கஜலட்சுமி:-** நான்கு கரங்கள் - இரண்டில் தாமரை மலர்கள். இவைகளை இருபுறமும் யானைகள் துதிக்கையால் அபிஷேகிப்பது போன்று அமைப்பு - மற்ற இரு கரங்கள் அபய வரத அமைப்பு.

8. **வித்யாலட்சுமி:-** நான்கு கரங்கள். இரண்டில் தாமரை. மற்ற இரண்டில் ஒன்று அபய கரம். மற்றது புத்தகத்தை ஏந்தியது.

[***சிலர் தைர்யலட்சுமிக்குப் பதிலாக யோகலட்சுமியைச் சேர்த்துக் கூறுவர்.*** யோகலட்சுமியின் நான்கு கரங்களில் இரண்டில் தாமரைகளிருப்ப, ஒன்று அபயமாகவும் மற்றது சின் முத்திரையுடன் விளங்கும்]

52. 'ஹயக்ரீவரி'ன் சிறப்பு யாது?

ஹயம்-குதிரை.

கிரீவம்-கழுத்து. குதிரைக்கழுத்தோடு கூடியவர் என்பது பொருள். அம்பாளை வழிபட்டுப் பேறு பெற்றவர். அம்பாள் வழிபாட்டில் குருபரம்பரையில் வருபவர். இவர் மஹாவிஷ்ணுவின் அவதாரமாவார்.

ஆதலின் இவர் சாக்தம், வைஷ்ணவம், துவைதம் (மாத்வர்) ஆகிய முப்பிரிவினருக்கும் முக்கியமானவர்.

ஹயக்ரீவர் வாக்குக்குத்தேவதையாவார். இவரை வழிபட்டால் வாக்கு சித்திக்கும், சொற்பலன் கிட்டும்-விரைந்து கிட்டும்.

53. 'புருஷகாரம்'என்றால் என்ன?

உலகியலில் இச்சொல்லுக்கு 'ஆளாக்கி நிறுத்துதல்' அல்லது 'சிபாரிசு செய்தல்' என்று பொருளாகும். திருமகளை வழிபட்டுத் திருமாலை அடைந்தால்தான், அவள் நம்மை ஆளாக்கிவைக்க, திருமாலின் அருள் கிட்டும் என்பர். ஆகவே திருமாலின் அருளைப் பெறத் திருமகளைப் புருஷகாரமாகக் கொண்டு அவரைச் சரண் புகுவதே நம் கடமையாகும்.

54. ஸ்ரீ சடாரியின் மகிமையை எழுது.

விஷ்ணு ஆலயங்களுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் எல்லாச் சந்நிதிகளிலும் தீர்த்தம், திருத்துழாய், மஞ்சள் காப்பு, குங்குமம் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதுடன் ஸ்ரீ சடாரியைச் சிரசில் சாதித்துக்கொண்டால்தான் அந்தந்தச் சந்நிதிகளில் வழிபாடு பூர்த்தியானதாகக் கருதுவர்

பாதுகையே ஸ்ரீ சடாரி
ஸ்ரீ சடாரியே ஆழ்வார்
பாதுகை, ஸ்ரீ சடாரி, ஆழ்வார் எல்லாம் ஒன்றே.

சடகோபன் என்னும் பாதுகை அதாவது ஸ்ரீ சடாரி மூலமேதான் ஸ்ரீய: பதியான பகவான் திருவடிகளில் நம் தலையைச் சமர்ப்பிப்பது சாத்யம் ஆகும்.

55. 'சாளக்கிராமம்' என்பது யாது?

நேபாளத்தில் உள்ள கண்டகி' என்னும் புண்ணிய நதியில் விஷ்ணு ~ாந்நித்யத்துடன் கிடைக்கின்ற 2,4,

14 என்னும் உள்சக்கரங்களுடன் கூடிய ஒருவகை வஜ்ர கிரீடம் என்ற நீர்இன ஜந்துவின் கூடு என்பர். சாளக்கிராமத்தில் திருமாலே வழிபடுதல் மிகவும் சிறந்ததாகும்.

[சாளக்கிராமத்தைத் தொட்டுப் பெண்கள் பூஜை செய்தல் கூடாது என்பர்.]

56. வைஷ்ணவம் என்பதன் பொருள் யாது?

விஷ்ணுவை முதலாக உடையது – பரம்பொருளாக வழிபடுவது வைஷ்ணவம் எனப்படும்.

57. வைணவத்தின் இரு ஆகமப் பிரிவுகள் யாவை?

1. **வைகானஸம் :-** திருமாலின் திருமார்பிலிருந்து தோன்றிய விகனஸர் என்ற முனிவரால் தமது சீடர்களான மரீசி, அத்ரி, பிருகு, கஸ்யபர் என்னும் நால்வருக்கும் உபதேசிக்கப்பெற்ற ஆகமம். இதைப் பின்பற்றுவது வைகானஸம் எனப்படும்

2 **பாஞ்சராத்ரம் :-** நாராயணனால் நாரதருக்கு ஐந்து இரவுகளில் அருளப்பட்டது பாஞ்சராத்ரம் ஆகும்.

58. வைணவத்தில் சொல்லப்படும் மூன்று திவ்வியங்கள் யாவை?

1) திவ்வியசூரிகள் — ஆழ்வார்கள்
2) திவ்வியப் பிரபந்தம் — ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்)
3) திவ்வியதேசம்—108 திருமால் திருப்பதிகள்.

59. வைணவத் திருக்கோயில்களில் செய்யப்படும் ஷோடச (16) உபசாரங்கள் எவை?

1) கை அலம்ப நீர் அளித்தல்
2) திருவடி அலம்ப நீர் அளித்தல்

3) மும்முறை மந்திர நீர் அருந்த அளித்தல்
4) ஆசனம் அளித்தல்
5) நீராட்டம்
6) பரிவட்டம் சமர்ப்பித்தல்
7) நறுமணப் பொருள் இடுதல்
8) மலர் சூட்டுதல்
9) நறு மணப் புகைவாடை சமர்ப்பித்தல்
10) திருவிளக்கு ஆட்டுதல்
11) தளிகை கண்டருளப் பண்ணுதல்
12) கற்பூர ஆரத்தி எடுத்தல்
13) கவரி வீசுதல்
4) விசிறி வீசுதல்
15) மரியாதை குடை சமர்ப்பித்தல்
16) தட்டொளி (கண்ணடி) காட்டுதல்—என்பன.

60. வைணவத் தலங்களுள் அபிமான தலங்களாகச் சொல்லப்படுபவை எவை?

1) குணசேகரம்
2) நாமக்கல்
3) தான்தோன்றிமலை
4) பெரும்புலியூர்
5) திருமண்டங்குடி
6) சிக்கில்
7) வடுவூர்
8) ஆதிரங்கம்
9) கோடிக்கரை
10) தில்லைவிளாகம்
11) காட்டுமன்னார்குடி
12) ஸ்ரீபெரும்புதூர்
13, திருமழிசை
14) சிங்கப்பெருமாள்கோயில்
15) மதுராந்தகம்
16) மங்களகிரி
17) விஷ்ணுப்ரயாகை
18) பாண்டுகேச்வரம்
19) பச்சைவண்ணர் (காஞ்சிபுரம்)
20) கள்வர்பெருமாள் (காமக்கோட்டம்—காஞ்சிபுரம்)
21) சித்தூர்
22) மந்த்ராலயம்

23) ஸ்ரீரங்கபட்டினம் 24) தொண்டனூர்
25) சிவசமுத்திரம் 26) நரசிம்மபுரம்
27) உடுப்பி 28) குருவாயூர்
29) நவபாஷாணம் (தேவிபட்டணம்)

61. வைணவப் புராணத் தலங்கள் எத்தனை? அவை யாவை?

1) ராஜமன்னார்குடி 2) ஸ்ரீ முஷ்ணம்
3) சிம்மாசலம் 4) ஸ்ரீ கூர்பம்
5) பூரி ஜகந்நாதம் 6) கயா
7) காசி 8) பிரயாகை
9) ஜோஷிமடம் 10) ஹரித்வார்
11) குருக்ஷேத்ரம் 12) புஷ்கரம்
13) அவந்தி 14) புண்டரீபுரம்
15) பத்ராசலம் 16) திருநாராயணபுரம்
17) வர்க்கலை 18) சேதுக்கரை
19) தனுஷ்கோடி 20) இராமேஸ்வரம்.

62. வைணவத்தில் சொல்லப்படும் பஞ்ச சம்ஸ்காரங்கள் எவை?

1. அடையாளம் —[சங்கு, சக்கரம் தரித்துக்கொள்வது]
2. திருமண்காப்பைத் தரித்துக் கொள்வது
3 ஆண்டவன் திருநாமத்தைச் சொல்வது
4. மந்திரங்களை அனுசந்திப்பது
5. ஆராதனம் செய்வது—முதலியன.

63. பாஞ்சராத்ர ஆகமத்தின்படி பூஜைகள் நடைபெறும் வைணவத் தலங்கள் எவை?

1. திருநாராயணபுரம் [மேலக்கோட்டை]
2 ஸ்ரீரங்கம்
3. காஞ்சிபுரம் முதலியன.

[திருப்பதியில் வைகானஸ ஆகமம் பின்பற்றப்பட்டு வருகின்றது.]

64. வைணவ பரிபாஷைகள் சிலவற்றை எழுது.

தரிசித்தல்—சேவித்தல்
அபிஷேகம்—திருமஞ்சனம்
துளசி—திருத்துழாய்
நைவேத்யம்—அமுது செய்தல்
பாயஸம்—திருக்கண்ணமுது
தயிர் சாதம்—ததியோதனம்
சடாரி சாதித்தல் முதலியன.

65. ஸ்ரீ வைணவர்களைப் "பரமை காந்திகள்" என ஏன் அழைக்கிறார்கள்?

ஏகாந்திகள் என்றால் ஒன்றையே விரும்புகிறவர்கள் எனப் பொருள் அதாவது மோக்ஷத்தையே விரும்புகிறவர்கள் எனப் பொருள். பரம — அதாவது அம்மோக்ஷத்தையும் ஸ்ரீ மந்நாராயணனையே வழிபட்டு அடைய விரும்புகிறார்கள். ஆதலால் 'பரமை காந்திகள்' என இவர்களை அழைக்கிறார்கள்.

66. வைஷ்ணவ ஆசார்ய பரம்பரை என்று கூறும் மரபை எழுது.

ஆழ்வார்களுக்குப் பிறகு விசிஷ்டாத்வைதக் கொள்கையைப் பரப்பியவர்கள் ஸ்ரீமந்நாதமுனிகள் உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஸ்ரீ ஆளவந்தார், இராமாநுஜர் ஆகியோர். இவர்களைக் குருபரம்பரை என்றும் வைஷ்ணவ ஆசார்ய பரம்பரை என்றும் கூறுவர்.

67. வைணவ ஆசாரியர்கள் சிலரின் பெயர்களை எழுதுக.

1. நாதமுனிகள் 2, உய்யக்கொண்டார்
3. மணக்கால்நம்பி 4. ஆளவந்தார்

5. பெரியநம்பிகள் 6. இராமாநுஜர் 7 எம்பார்
8. பட்டர் [பராசரபட்டர்] 9. நஞ்சீயர் 10 நம்பிள்ளை
11. பெரியவாச்சான்பிள்ளை
12. வடக்குத்திருவீதிப்பிள்ளை
13. பிள்ளைலோகாசாரியர் 14. எங்களாழ்வான்
15. நடாதூர் அம்மாள் 16. கிடாம்பி அப்புள்ளார்
17. நிகமாந்த மகாதேசிகன்
18. திருவாய்மொழிப்பிள்ளை
19. மணவாளமாமுனிகள் 20. இராமாநுஜர் அனுகிப் பொருள் கேட்டறிந்த பெரியநம்பிகள் முதலான 5 ஆசாரியர்கள் முதலானோர்.

68. உபயவேதாந்திகள் என்றால் என்ன?

ஸ்ரீ வைணவர்களின் பெயர்களின் முன் ஸ்ரீ, உ. வே. என்ற எழுத்துக்களைச் சேர்த்து வழங்கி வருவதைக் காண்கிறோம். ஸ்ரீ என்றால் திருமாலுக்கு அடிமை செய்யும் அழகு, அதைப்படைத்தவர்கள் என்று பொருள். உபய வேதாந்தி என்றால் தமிழ் மறையாகக் கருதப்படும் திருவாய்மொழி முதலிய நூல்களையும் சம்ஸ்கிருத வேதாந்த நூல்களையும் ஆக இரண்டையுமே சமயப் பெரு நூல்களாகக் கொண்டவர்கள் எனப் பொருள். உபய என்றால் இருவகைப்பட்டதென்பது பொருள்.

69. 'திவ்விய தேசங்கள்' என்பவை யாவை?

பன்னிரு ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற-மங்களா சாசனம் செய்யப்பட்ட, வைணவத்தலங்களே "திவ்விய தேசங்கள்" எனப்படும். இத்தலங்கள் மொத்தம் 108 ஆகும்.

சோழ நாட்டுத் தலங்கள்		40
பாண்டிய	,,	18
மலை [சேர]	,,	13

நடு நாட்டுத் தலங்கள்		2
தொண்டை	,,	22
வட	,,	12
திருநாடு [வைகுந்தம்]		1
		108

70. அர்த்த பஞ்சகம் என்றால் என்ன?

இது வைணவர்களிடையே வழங்கி வரும் ஒரு பரிபாஷையாகும். ஐந்து பொருள்கள் என்ற கருத்தில் 'அர்த்த பஞ்சகம்' என்ற சொல் வழக்கத்தில் இருக்கிறது. அவை வருமாறு—1. கடவுள் [இறைநிலை] 2. ஜீவன். [உயிர்நிலை] 3. கடவுளை அடைவதற்கு உரிய வழி முறை [உபாயம், உபாயநிலை] 4 கடவுளை அடையத் தடையாக இருப்பவை [பிரதிபந்தகம் — பகைநிலை] 5 கடவுளை அடைந்து அனுபவிக்கும் பயன் [உபேய நிலை] ஆகிய இந்த ஐந்தைப்பற்றிய அறிவையும் ஒருவன் பெற்றிருக்க வேண்டும் என்று வைணவம் கூறுகிறது. இவை பற்றிய அறிவு அர்த்த பஞ்சக ஞானமாகும்.

71. அஷ்டாதச ரகசியங்கள் என்பன யாவை?

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை விளக்கும் பிற்கால நூல்கள் 18 ஆகும் இவையே அஷ்டாதச ரகசியங்கள் எனப்படும். இவையனைத்தும் மணிப்பிரவாள நடையில் உள்ளன. இவற்றுள் முமுக்ஷுப்படி, ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம் என்பவை மிகச் சிறந்தவை.

72. வைஷ்ணவர்களை 'ஐயங்கார்' என்று அழைப்பது ஏன்?

ஐந்து அங்கங்களை உடையவர்கள்-ஐயங்கார். அங்கங்கள் - சம்ஸ்காரங்கள் [செயல்கள்] இந்த

ஐந்தினையும் குருவினிடத்திலிருந்து பெறுதல் வேண்டும்.

1. சங்கு சக்கர முத்திரைகளைத் தோள்களில் பெறுதல்.

2. உடம்பில் 12 இடங்களில் திருமண் காப்பு அணிதல்.

3. புதியதாக 'தாஸ்யநாமம்' என்ற பெயரிட்டுக் கொள்ளுதல் [தாசன்]

4. மந்திர உபதேசம் பெறுதல்

5. பூசை செய்து வழிபடல்

[இவற்றைத் தாபம், புண்டரம், நாமம், மந்திரம், யாகம், என்பர்]

73. 'அரையர் சேவை, என்பதை விளக்குக.

இது வைணவ ஆலயங்களில் இறைவன் (உற்சவர்) முன்பு நடைபெறும் ஒருகலை. ஆழ்வாரின் பாசுரங்களை இசையுடன் பாடி அபிநயித்து அவற்றின் வியாக்யானங்களைக் கூறும் இக்கலைஞர் அரையர் எனப்படுவர். ஆழ்வார்களின் பிரதிநிதிகளாக இருந்து இவர்கள் இப்பணிகளைச் செய்கின்றனர். இவர்கள் இப்பாசுரங்களுக்கு அரசர் ஆவர். அரையர் என்பது அரசர், அரைசர் என்று பொருள்படும். இவர்கள் பாசுரங்களைச் சொல்வதால் (அறைதல்=சொல்லுதல்) அரையர் (அறையர்) என்று, அழைக்கப்பட்டனர். இவர்களை 'விண்ணப்பம் செய்வார்,' 'நம் பாடுவான்' என்று கல்வெட்டுக்களும் குரு பரம்பரையும் கூறுகின்றன.

பாசுரத்தை இசையுடன் பாடுதல், ஏற்ற அபிநயம் செய்தல், வியாக்யானம் செய்தல், கொண்டாட்டம் என்பனவாக இக்கலை அமையும். அரையர் கூறும் வியாக்யானம் 'தம்பிரான்படி' என்றழைக்கப் பெறும்.

74. திருமண் காப்பின் சிறப்பு யாது?

திருநாராயணபுரத்தில் கிடைக்கும் ஒருவகை வெள்ளை மண்ணில் செய்யப்படுவதே நாமக்கட்டியாம். இதனை இட்டுக்கொள்வதே திருமண்காப்பு எனச் சொல்லப்படுகிறது

பரந்தாமனின் பாதாரவிந்தமே உயிர்க்குக் கதி என்பதை உணர்த்தும் பொருட்டு திருவடி போன்று இடப்படுகிறது மத்தியில் இடப்படும் செந்தூரம் இலக்குமியின் அம்சம்.

சம்ஸ்கிருத வேத சாஸ்திரங்களுக்குப் பிரதானம் கொடுக்கும் வடகலையாளர் பாதம் வைக்காமல் இடுவர். ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு ஏற்றம் கொடுக்கும் தென் கலையாளர் திருமண்காப்பின் கீழ் பாதம் வைத்து இடுவர்.

75. நவ திருப்பதிகள் என்று அழைக்கப்படுபவை எவை?

1) ஸ்ரீவைகுண்டம் 2) ஆழ்வார் திருநகரி
3) தென் திருப்பேரை 4) தொலைவில்லிமங்கலம்
5) திருக்குளந்தை 6) புளியங்குடி
7) திருக்கோளூர் 8) வரகுணமங்கை

9) தொலைவில்லி மங்கலத்தில் உள்ள அரவிந்த லோசனன் சந்நிதி ஒரு தனி திருப்பதியாகக் கொள்ளப் படுகிறது.

[இவை அனைத்தும் நெல்லைமாவட்டத்தில் உள்ளன]

76. நவநரசிம்மமூர்த்திகளின் பெயர்கள் யாவை?

1) இலட்சுமி நரசிம்மர் 2) யோக நரசிம்மர்
3) சத்திராந்த நரசிம்மர் 4) உக்கிர நரசிம்மர்
5) வராக நரசிம்மர் 6) பர்முலிதி நரசிம்மர்

7) பிரகலாத நரசிம்மர் 8) பார்க்கவ நரசிம்மர்
9) காரங்கி நரசிம்மர்

இம்மூர்த்திகள் எழுந்தருளி விளங்கும் தலம் **அஹோபிலம்** ஆகும். இது **சிங்கவேள் குன்றம்** என்று தமிழில் வழங்குகிறது.

77. விசிஷ்டாத்வைத மடங்கள் எவை எவை?

1] அஹோபில மடம்
2] வானமாமலை மடம்

78. பூலோக வைகுந்தம் என்று எதற்குப் பெயர்? அதன் சிறப்பு யாது?

பூலோக வைகுந்தம் என்பது திருவரங்கமே. இதுவே ஸ்ரீ இராமானுஜர் பெரும் பதம் எய்திய பதியாம்.

79. பெருமாள் கோயிலில் சொர்க்கவாசல் திறக்கப்படும் நாள் எது?

வைகுண்ட ஏகாதசித் திருநாள்.

80. திருமாமணி மண்டபம் — என்பது யாது?

ஸ்ரீமந் நாராயணர் தன்னுடைய தேவிமார்களுடனும் நித்திய சூரிகளுடனும் எழுந்தருளியிருக்கும் மணி மண்டபத்தைத் திருமாமணி மண்டபம் என்று சொல்வர்.

81. 'சரணாகதி' என்பது யாது?

(பிரபத்தி) சரணாகதி என்பது "களைவாய் துன்பம், களையா தொழிவாய் களைகண் (ஆதாரம்) மற்றில்லேன்" என அவன் திருவடிகளை அடைவதே.

82. 'பஞ்சாசார்ய பதாச்ரிதர்' என்ற பெயர் யாருக்குண்டாயிற்று. விவரி?

இப்பெயர் — பஞ்ச ஆசார்ய பத ஆச்ரிதர் — என்பது இராமாநுஜ நக்கு வழங்கியதாகும். அவர் ஐந்து ஆசாரியர்களை விரும்பி அவர்களிடம் சென்று அடிபணிந்து அரும்பொருள்களைக் கேட்டறிந்ததால் இப்பெயர் வழங்கலாயிற்று. அதாவது இராமாநுஜர்:

1. பெரிய நம்பிகளிடம்— வைஷ்ணவதீட்சையையும்
2. திருக்கோட்டியூர் நம்பிகளிடம்-ரகசிய அர்த்தத்தையும்
3. திருமலையாண்டானிடம்— திருவாய்மொழிப் பொருளையும்
4 திருமலை நம்பிகளிடம்—இராமாயணப்பொருளையும்
5. திருவரங்கப்பெருமாள் அரையரிடம் — திவ்ய பிரபந்தங்கள், தோத்திரங்கள் முதலான நல்லுரைகளையும் பெற்ருர் என்பது வரலாறு

83. ஸ்ரீ ராமாநுஜரின் குருவின் பெயரையும், சீடர்களின் பெயர்களையும் எழுதுக.

குருவின் பெயர் யாதவப்பிரகாசர் சீடர்கள்
1) கூரத்தாழ்வார் 2) எம்பார் 3) முதலியாண்டான்
4) அருளாளப்பெருமான் 5) எம்பெருமானுர்.

84. 'ஸ்ரீமத் பாகவதம்' என்பது யாது?

கண்ணபிரானின் திவ்விய வரலாற்றையும், அற்புதச் செயல்களையும் எடுத்துரைக்கும் தெய்வீக நூலே **ஸ்ரீமத் பாகவதம்** ஆகும். இது சுக முனிவரால் "பரீட்சித்து" என்னும் மன்னனுக்குச் சொல்லப்பட்டது.

85. கண்ணபிரானுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

1. வாசுதேவன் 2. கோவிந்தன் 3. கோபாலன்
4 கேசவன் 5. பார்த்தசாரதி 6. ஜனர்த்தனன்

7. ரிஷிகேசன் 8 புண்டரீகாக்ஷன் 9 மதுசூதனன் 10 மாதவன் 11 நாராயணன் 12. அச்சுதன் முதலியன.

86. பகவானுக்குக் கீதையில் அமைந்துள்ள பெயர்களும் அவற்றின் பொருள்களும் கூறு.

1) ஹ்ருஷிகேசன்—இந்திரியங்களுக்கு ஈசன்

2) அச்சுதன்—தன் நிலையிலிருந்து வழுவாதவன்

3) கிருஷ்ணன்—கறுப்பு நிறமானவன், அழுக்கைப் போக்குபவன், மும்மூர்த்தி சொரூபம், பிரம்ம சொரூபம், அடியார் படும் துயரம் துடைப்பவன்.

4) கேசவன்—அழகிய முடியுடையவன், மும்மூர்த்திகளை வசமாய் வைத்திருப்பவன், கேசின் என்ற அசுரனைக் கொன்றவன்.

5) கோவிந்தன்—ஜீவர்களை அறிபவன், பசுக்களைக் காப்பவன்.

6) மதுசூதனன்—மது என்ற அசுரனை அழித்தவன்

7) ஜனார்த்தனன்—மக்களால் துதிக்கப்படுபவன்

8) மாதவன்—திருமகளுக்குத் தலைவன்

9) வார்ஷ்ணேயன்—வ்ருஷ்ணி குலத்தில் பிறந்தவன்

10) அரிசூதன்—எதிரிகளை அழிப்பவன்

11) கேசிநிஷூதனன்—
கேசின் என்ற அசுரனை அழித்தவன்.

12) வாசுதேவன்—வாசுதேவன் மைந்தன், எல்லா உயிர்களிடத்தும் வசிப்பவன்.

13) புருஷோத்தமன்-புருஷர்களுள் உத்தமமானவன்.

14) பகவான்—சற்குண சம்பன்னன்.

15) யோகேச்வரன் — யோகத்துக்குத்தலைவன்.

16) விஷ்ணு—எங்கும் வியாபகமாயிருப்பவன்.

17) ஜகந்நிவாசன்—உலகுக்கு இருப்பிடமானவன்.

18) யாதவன்—யதுகுலத்தில் தோன்றியவன்.

87. பகவத்கீதை யாரால் யாருக்கு எப்போது உபதேசிக்கப்பட்டது?

துவாபரயுகத்தில் குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற பாரதப் போரின்போது கண்ணபிரானால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது.

88. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்பது யாது?

பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின்மீது துதித்துப் பாடியுள்ள பாடல்கள் அடங்கிய தொகுப்பு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனப்படும்.

89. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தை உலகிற்கு அறிவித்தவர் யார்?

ஸ்ரீமந் நாதமுனிகள் அவர்களே கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் இதனை வெளிப்படுத்தித் தொகுத்துத் தேவகானம் என்னும் இசை வகுத்துத் தந்தார்.

90. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் வைப்பு முறையை எழுதுக.

திவ்வியப் பிரபந்தத்தில் முதலில் வைக்கப்பட்டிருப்பது.

1. *பெரியாழ்வார் திருமொழி :-* இது திருப்பல்லாண்டு முதலாகச் "சென்னியோங்கு" என்னும் பதிகம் ஈறாக 473 பாசுரங்களைக் கொண்டது. கி. பி. 8 - ஆம் நூற்றாண்டு.

2. **நாச்சியார் திருமொழி :-** திருப்பாவை - இயற்றியவர் ஸ்ரீ ஆண்டாள் பாடிய பாசுரங்கள் 173. இவர் காலமும் பெரியாழ்வார் காலமே.

3: **பெருமாள் திருமொழி :-** குலசேகராழ்வார்--சேர மன்னர். இராமன்பால் மிக்க அன்பு கொண்டவர். அரசரேயாயினும் சமயப்பற்றுமிக்கு நாட்டைத் துறந்தவர், கி. பி. 7-ஆம் நூற்றுண்டினர். பாடியவை 104 பாசுரங்கள்.

4. **திருச்சந்த விருத்தம்:-** திருமழிசையாழ்வார், முதலாழ்வார் காலத்தினர். கி. பி. 6-ஆம் நூற்றுண்டு. பரம வைணவர் மறந்தும் புறந்தொழா இயல்பினர். பாடிய பாசுரங்கள் அனைத்தும் சந்தப்பாக்களே. அவற்றின் தொகை 120—நான்முகன் திருவந்தாதி —96, (இயற்பா).

5. **திருமாலை .-** தொண்டரடிப்பொடியாழ்வார், காலம் கி. பி 7–ஆம் நூற்றுண்டு அரங்கனைத் தவிர வேறு ஒருவரையும் பாடவில்லை பாடிய பாசுரங்கள் 45. திருப்பள்ளி எழுச்சியும் இவர் பாடியதே, பாசுரம் 10.

6. **அமலன் ஆதிபிரான் :-** திருப்பாணாழ்வார்—காலம் தொண்டரடிப்பொடியாழ்வார் காலமே. பாணர் மரபினர். அரங்கனைப்பற்றி அமலனாதிபிரான் என்று தொடங்கும் பத்துப்பாசுரங்களைப் பாடியருளினர்.

7. **கண்ணிநுண் சிறுத்தாம்பு :-** மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரின் சீடர். நம்மாழ்வாரையே எல்லாத் தேவுமாகக் கருதிப் பாடியவர். பாடியவை 11-பாசுரங்கள். பெரிய திருமொழி திருமங்கையாழ்வார்-காலம் 9-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி இவர் இயற்றியவை.

8. **பெரிய திருமொழி:-** 1084 பாசுரங்கள்
திருக்குறுந்தாண்டகம் — 20 பாசுரங்கள்

திருநெடுந்தாண்டகம் — 30 பாசுரங்கள்
சிறிய திருமடல் — 1 வரிகள் 80
பெரிய திருமடல் — 1 வரிகள் 152

9. **இயற்பா:-**

1. முதல் திருவந்தாதி—பொய்கையாழ்வார்—காலம் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு. பாடியவை 100 வெண்பாக்கள்.

2. இரண்டாம் திருவந்தாதி — பூதத்தாழ்வார். பொய்கையாழ்வார் காலமே. பாடியவை — 100 வெண்பாக்கள்.

3. மூன்றாம் திருவந்தாதி — பேயாழ்வார் பாடியவை — 100 வெண்பாக்கள்.

4. நான்முகன் திருவந்தாதி — திருமழிசையாழ்வார் பாடியவை. 96 வெண்பாக்கள்.

5. பெரிய திருவந்தாதி — நம்மாழ்வார் பாடல்கள்— 87 வெண்பாக்கள்.

6. சிறிய திருமடல் — திருமங்கை மன்னன்.

7. பெரிய திருமடல்—திருமங்கை மன்னன். (இவை முன்னமே கூறப்பட்டன, இயற்பா வகையாதலின் இங்கும் கூறப்படுகின்றன.

8. திருவெழுகூற்றிருக்கை — திருமங்கையாழ்வார்— காலம் முன்னரே கூறப்பட்டது—ஆசிரியப்பா— 46 வரிகள்.

9. திருவிருத்தம் — நம்மாழ்வார் — அகப்பொருட் பாசுரம் 101 கட்டளைக் கலித்துறைகள்.

10. திருவாசிரியம்-நம்மாழ்வார்—7ஆசிரியப்பாக்கள்.

திருவாய்மொழி :- நம்மாழ்வார் — காலம் கி. பி. 8-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி-பாடிய பாசுரங்கள் 1102 இவை ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்களும் **அந்தாதித் தொடையில்** அமைந்தவை. இவை தமிழ் நூலில் அமைந்த புதுமுறையாகும். இவ்ஆழ்வாரை வைணவர்களுள் சிறந்த குலபதி என்பார்கள். **இவர் சாம வேதத்தில் உள்ள கருத்துக்களைத் தமிழில் அருளியவர். இவரை அங்கியாகவும், திருமங்கையாழ்வாரை அங்கமாகவும், பிற ஆழ்வார்களையும் அங்கமாகவும் கூறுவர்.** திருமங்கைமன்னன் வேதத்தின் ஆறங்கங்களையும் பெரிய திருமொழி முதலியவற்றுள் அமைத்திருத்தலால் அங்கங்களுள் சிறந்தவர் என்ப. திருவாய்மொழிக்குப் பகவத் விஷயம் என்னும் பெயரும் உண்டு.

91. ஈடு என்றால் என்ன ?

திருவாய்மொழியின் முப்பத்தாறுயிரப்படி உரைக்கும், மற்றைய திவ்வியப்பிரபந்தங்களின் உரைகளுக்கும் 'ஈடு' என்று பெயர்.

92. 'படி' என்றால் என்ன?

வைணவர்கள் திவ்வியப் பிரபந்த உரைகளுக்குப் பெயரிடும்போது 'படி' என்ற சொல்லைக் கையாளுவார்கள்.

93. ஈடு வியாக்யானங்களை எழுதியுள்ளவர்கள் யாவர் ?

1) ஆறுயிரப்படி—திருக்குருகைப்பிரான்பிள்ளான்
2) ஒன்பதாயிரப்படி—நஞ்சீயர்
3) பன்னீராயிரப்படி — நம்பிள்ளை அருளால் திருவிதிப் பிள்ளை அருளியது
4) இருபத்துநாலாயிரப்படி—பெரியவாச்சான் பிள்ளை

5) முப்பத்தாறுயிரப்படி—வடக்கு திருவீதிப்பிள்ளை
6) பிரமாணத் திரட்டு—மணவாள மாமுனிகள்
7) திரமிடோபநிஷத்—வேதாந்த தேசிகர்

94. பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களை எழுதுக.

1) பொய்கையாழ்வார் 2) பூதத்தாழ்வார்
3) பேயாழ்வார் 4) திருமழிசையாழ்வார்
5) நம்மாழ்வார் 6) குலசேகராழ்வார்
7) பெரியாழ்வார் 8) தொண்டரடிப்பொடியாழ்வார்
9) திருப்பாணாழ்வார் 10) திருமங்கையாழ்வார்
11) ஆண்டாள் 12) மதுரகவியாழ்வார்.

"பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ் மழிசை
அய்யனருள் மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் கலியன்
ஈதிவர் தோற்றத் தடைவா மிங்கு"

—உபதேசரத்தினமாலை

95. ஆழ்வார்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

1. திவ்வியசூரிகள் 2. மால்உகந்த மகநீயர்
3. ஆதிபக்தர்கள் முதலியன,

96. முதலாழ்வார்கள் யாவர்?

1) பொய்கையாழ்வார் 2) பூதத்தாழ்வார்
3) பேயாழ்வார் ஆகிய மூவர்.

97. ஆழ்வார்களின் அவதாரத் தலங்களையும் அவதரித்த நட்சத்திரங்களையும் எழுது.

1. பொய்கையாழ்வார்—கச்சி, ஐப்பசி, திருவோணம்
2. பூதத்தாழ்வார்—கடல்மல்லை, ஐப்பசி, அவிட்டம்

3. பேயாழ்வார்—மயிலை, ஐப்பசி, சதயம்
4 திருமழிசையாழ்வார்—திருமழிசை. தை, மகம்
5. தொண்டரடிப்பொடியாழ்வார்—
மண்டங்குடி, மார்கழி, கேட்டை
6. திருப்பாணாழ்வார்—
உறையூர், கார்த்திகை, ரோகிணி
7. திருமங்கையாழ்வார்—
திருக்குறையலூர், கார்த்திகை, கார்த்திகை
8. பெரியாழ்வார்—ஸ்ரீவில்லிபுத்தூர், ஆனி, சுவாதி
9. ஸ்ரீ ஆண்டாள்—ஸ்ரீவில்லிபுத்தூர், ஆடி, பூரம்
10. நம்மாழ்வார்—ஆழ்வார்திருநகரி, வைகாசி, விசாகம்
11. மதுரகவி—திருக்கோளூர், சித்திரை, சித்திரை
12. குலசேகரர்—திருவஞ்சைக்களம், மாசி, புனர்பூசம்

98. ஆழ்வார்கள் திருமாலின் எந்தெந்த அம்சங்களாகத் திகழ்கிறார்கள் என்பதைக் கூறுக.

1. பொய்கையாழ்வார் — பாஞ்சசன்னியம் என்னும் திருமாலின் சங்கின் அம்சம்.

2. பூதத்தாழ்வார் — கௌமோதகீ என்னும் திருமாலின் கதையின் அம்சம்.

3. பேயாழ்வார் — நந்தகம் என்னும் திருமாலின் வாளின் அம்சம்.

4. திருமழிசையாழ்வார் — சுதர்சனம் என்னும் திருமாலின் சக்கரத்தின் அம்சம்.

5. நம்மாழ்வார் — விஷ்வக்சேனர் என்ற சேனை முதலியார் அம்சம்.

6 மதுரகவியாழ்வார் — குமுதர் என்ற வைகுந்தத்தவர் அம்சம்.

7. குலசேகராழ்வார் — கௌஸ்துபம் என்னும் திருமால் மார்பு மணியின் அம்சம்

8 பெரியாழ்வார் — கருடனின் அம்சம்.

9 ஆண்டாள் — பூமிதேவியின் அம்சம்.

10 தொண்டரடிப்பொடியாழ்வார் — திருமாலின் மாலை (வனமாலை) யின் அம்சம்.

11. திருப்பாணாழ்வார் — திருமால் மார்பிலுள்ள மச்சத்தின் (ஸ்ரீ வத்ஸம்) அம்சம்.

12. திருமங்கையாழ்வார் — திருமாலின் வில்லின் (சார்ங்கம்) அம்சம்.

99. நம்மாழ்வாரின் பாடல்களுள் வேதசாரமாக விளங்குபவை எவை?

1) ரிக்வேத சாரம்—திருவிருத்தம்

2) யஜுர்வேத சாரம்—திருவாசிரியம்

3) சாமவேத சாரம்—திருவாய்மொழி

4) அதர்வணவேத சாரம்—பெரிய திருவந்தாதி.

100. நம்மாழ்வாருக்குச் 'சடகோபன்' என்னும் பெயர் வரக் காரணம் யாது?

'சடம்' என்பது ஒருவகைக் காற்று. இதன் ஸ்பரிசத்தால் ஞானம் மங்கி அஞ்ஞானம் நம்மை மூடிக் கொள்ளும். இக்காற்றைத் தன்மேல் படாமல் தடுத்து உத்தம ஞானியாய் விளங்கியவர் நம்மாழ்வார்—[சடத்தைக் கோபித்தவர் = சடகோபன். அரி = சத்ரு, பகை. சடத்தைப் பகைத்தவர். அதனால் சடாரி என்றும் அவருக்குப் பெயர்]

101. திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்— இவர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

1. திருமழிசையாழ்வார்—பக்திசாரர், மழிசைவந்த சோதி,
2. நம்மாழ்வார்—மாறன், சடகோபன், காரிமாறன், பராங்குசன், வகுளபூஷணர், பிரபன்ன சந்தான கூடஸ்தர்.
3. குலசேகராழ்வார்—கூடலர்கோன், கொல்லிகாவலன்
4. பெரியாழ்வார்—பட்டர்பிரான், விஷ்ணுசித்தர்,
5. ஆண்டாள்—கோதை, சூடிக்கொடுத்தாள், திருப்பாவை நாச்சியார்,
6. தொண்டரடிப்பொடியாழ்வார்— அன்பர்தாள் தூளி பக்தாங்க்ரி ரேணு
7. திருப்பாணாழ்வார்—முனிவாகனர், பாண நாதன்.
8. திருமங்கையாழ்வார்—பரகாலன், கலியன், மங்கைமன்னன், அடையார்சீயம், நாலுகவிப் பெருமாள் முதலியன.

102. பெரியாழ்வார் கண்ணனுக்கு மாலை கட்டிச் சூட்டிய மலர்கள் எவை எவை?

1. சண்பகம் 2. மல்லிகை 3. பாதிரி 4. செங்கழுநீர் 5. புன்னை 6. குருக்கத்தி 7, இருவாட்சி 8. கருமுகை என்பன,

103. 'மங்களாசாசனம்' என்றால் என்ன?

ஆழ்வார்களுடைய பாடல்களுக்கு மங்களாசாசனம் என்று பெயர். ஆழ்வார்கள் புகழ்ந்து பாடியுள்ள

வைணவத் தலங்களை மங்களாசாசனம் பெற்ற திவ்விய தேசங்கள் என்பர்.

104. உபதேச ரத்தினமாலையை இயற்றியவர் யார்?

மணவாள மாமுனிகள் ஆவர்.

105. இராமானுஜர் அருளிச் செய்துள்ள திவ்விய கிரந்தங்கள் எவை?

1. கீதாபாஷ்யம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. வேதாந்த தீபம்
4. வேதாந்த சாரம்
5. வேதாந்த சங்க்ரஹம்
6. சரணாகதிகத்யம்
7. ஸ்ரீரங்ககத்யம்
8 ஸ்ரீவைகுண்டகத்யம்
9. நித்யம் என்பன.

106. அஷ்டப் பிரபந்தங்கள் யாவை? அவைகளை இயற்றியவர் யாவர்?

1 திருவரங்கக்கலம்பகம்
2. திருவரங்கத்துமாலை
3. திருவரங்கத்தந்தாதி
4. ஸ்ரீரங்கநாயகர்ஊசல்
5. திருவேங்கடமாலை
6, திருவேங்கடத்தந்தாதி
7. அழகர் அந்தாதி
8. நூற்றெட்டு திருப்பதி

அந்தாதி, இயற்றியவர் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்கிற அழகிய மணவாள தாசர் ஆவர்.

107. சுப்ரபாதம் என்றால் என்ன? ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் யாரால் பாடப்பட்டது?

பொதுவாக நல்லதைப் பிரார்த்தனை செய்வது சுப்ரபாதம் எனப்படும். இவ்வாறு செய்யும் வழக்கம்

கடவுளுக்கு உள்ளதுபோல நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் வழக்கமும் உண்டு.

வைஷ்ணவத்தில் சுப்ரபாதம் ஆதி நாளில் மூவரால் பாடப்பட்டது அவை – (1) விசுவாமித்திரர் இராமருக்குப் பாடியது. (2) பெரியாழ்வார் கண்ணபிரானுக்குப் பாடியது (3) தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கப் பெருமானுக்குப் பாடியது.

நாம் இன்று பக்தியுடன் பாடும் ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், பிற்காலத்தில் ஸ்ரீ மணவாள மாமுனியின் வேண்டுகோளுக்கிணங்க அவருடைய சீடர் "பிரதிவாதி பயங்கரம் அண்ணன்" என்பவர் பாடியதாகும்.

108. திருப்பதி திருமலையில் சந்நிதியில் ஆராதனைக் காலங்களில் கண்டாமணி ஒலிப்பதில்லை ஏன்?

திருமலை சந்நிதியிலிருந்த கண்டாமணியே ஸ்ரீவேதாந்த தேசிகராக அவதரித்து விட்டதாகச் சொல்லப்படுவது மரபாதலின், சந்நிதியில் ஆராதனை சமயத்தில் கண்டாமணி ஒலிப்பதில்லையாம்.

109. திருப்பதி (திருமலை) பெருமாளுக்கு உகந்த நிவேதனம் யாது?

பெருமாளுக்கு உகந்த நைவேத்தியம், புதுப் பானையில் சமைத்த தயிர் அன்னம்தான். விசேஷ காலங்களில் பொங்கலும் புளியோதரையும் தோசையும் நிவேதனம் செய்வார்கள்.

இப்போது பிரபலமாகவுள்ள லட்டு, வடை, அப்பம் முதலியவையெல்லம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வழக்கத்தில் ஏற்பட்டவையே.



சிவபெருமான்- சைவம்- திருமுறைகள்- சமயச்சின்னங்கள்.

110. லிங்கம் என்பதன் பொருள்கள் யாவை?

1. லிங் — லயம்.
   கம் — தோற்றம். உலகு தோன்றி ஒடுங்கும் இடம்-லிங்கம்.

2. லிங்கம்-பிரகாசம். அதாவது படைத்தல் முதலிய ஐந்தொழில்களால் உலகைப் பிரகாசம் செய்வது.

3. இலிங்கம் என்பது அடையாளம். அதாவது பரம் பொருளுக்குரிய அடையாளம்—எனப்பல பொருள் படும்.

111. சிவலிங்கத்தின் சிறப்பு யாது?

சிவலிங்கம் — சிவபெருமானை — இறைவனைக் காணு வதற்குரிய அடையாளம். லிம் + கம்-லிங்கம். லிம்-உலக முடிவில் எல்லா சராசரங்களும் லயிப்பதற்குரிய இடம். கம்-அவ்வாறு லயித்த பொருள்கள் அனைத்தும் அதிலிருந்தே வெளிப்படுவது

இலிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாயிருக்கும் அது பிரமபாகம். நடுப்பாகம் எண்கோணமாயிருக்கும். இது ஆவுடை என்ற பீடத்துள் அமைந்திருக்கும். இது விஷ்ணுபாகம். மேற்பாகம் ருத்ரபாகம். எனவே மும் மூர்த்திகளின் உள் அடக்கமே இலிங்கமாகும்.

112. இலிங்கத்தின் மூவகை அமைப்புக்கள் எவை?

1 வியக்த லிங்கம்—அவயவங்களுடன் கூடிய விக்ரகங்கள்.

2. அவ்யக்த லிங்கம்—அவயவமில்லாது பீடமும் லிங்கமும் உள்ளது.

3. வியக்தா வியக்த லிங்கம்—முகமும் தோள்களும் உள்ள விக்ரகம்.

113. எவ்வெப் பொருள்களால் லிங்கம் அமைக்கப்படும்?

1. சைலஜம் (கல்)
2. ரத்னஜம் (மாணிக்கம், மரகதம் முதலியவற்ருல்.)
3. லோகஜம் (பொன், வெள்ளி முதலியவற்ருல்)
4. க்ஷணிகம் (அரிசி, மணல், விபூதி, சந்தனம் முதலியவற்ருல்)

(க்ஷணிகம்: சிறிது நேரம். க்ஷணிக லிங்கத்தை பூஜை முடிந்ததும் அழித்துவிடுவதால் இது இப்பெயர் பெற்றது)

114. எவ்வெவற்ருல் க்ஷணிக லிங்கத்தை அமைத்து வழிபடலாம்?

1. மன், 2. அரிசி 3. ஆற்றுமணல் 4. வெண்ணெய் 5. ருத்ராக்ஷம் 6, சந்தனம் 7 மாவு 8. மஞ்சள்பொடி 9. புஷ்பம் 10. சர்க்கரை முதலிய பொருள்களால் க்ஷணிகலிங்கம் அமைத்து வழிபடலாம்.

115. ஆன்மார்த்த லிங்கம் (அ) இஷ்டலிங்கம் என்பது யாது?

குருவானவர் முறையாகத் தர, அவர் அநுமதி யுடன் அவரிடமிருந்து வாங்கப் பெற்றது இஷ்டலிங்கம்

(அ) ஆன்மார்த்த லிங்கம் எனப்படும்.

இது சல லிங்கம், க்ஷணிகலிங்கம் என்று இருவகைப் படும். சல லிங்கம் என்பது ஸ்படிகம், ரத்தினம் சிலை, உலோகம் இவைகளினால் ஆனதாகும்.

க்ஷணிகலிங்கம் என்பது மணல், அரிசி, அன்னம், பசுஞ்சாணம், வெண்ணெய், ருத்ராக்ஷம், மாவு, சந்தனம், வெல்லம் இவைகளினால் ஆனது.

சல லிங்கத்தைக் கடைசிவரை வைத்துப் பூசை செய்யலாம். க்ஷணிக லிங்கத்தை அன்றுடம் பூசை முடிந்தவுடனே விடுதல் வேண்டும்.

116. 'பரார்த்த லிங்கம்' என்பது யாது?

உலகிலுள்ள உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டுத் தேவர்களாலும், மகரிஷிகளாலும் மானுடர்களாலும் கிராமங்களிலும் நகரங்களிலும் விதிப்படி ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் பரார்த்த லிங்கம் எனப்படும்

117. பரார்த்த லிங்கம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

1. சுயம்புலிங்கம் — தானாக உண்டானதும், கரடு முரடாக உள்ளதாயும் ரேகையற்றதாயும் இருப்பது.

2. தேவிகலிங்கம்—அம்பிகையினால் வழிபடப்பட்டது.

3. திவ்யலிங்கம்—தேவர்களால் அருச்சிக்கப்பட்டது.

4. மானுடலிங்கம் — இராமர் போன்ற மானுடர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

5. ஆர்ஷலிங்கம் — மகரிஷிகளால் பூசிக்கப்பெற்றது

6. பாணலிங்கம்—கங்கை, யமுனை, நர்மதை, சிந்து நதிகளின் மத்தியிலிருந்தும், நேபாளம், கேதாரம் முதலிய இடங்களிலிருந்தும் கிடைப்பதாகிய, பாணாசுரனால் பூசிக்கப்பெற்ற லிங்கங்கள்.

7. இராக்ஷஸலிங்கம் — அசுரர்களால் பூசிக்கப் பெற்றது.

118. எழுவகை இலிங்கங்கள் யாவை?

1. தைவிக லிங்கம் — தேவர்கள் வழிபட்டவை
2. தேவிக " — அம்பிகை "
3. சுயம்பு " — ஒருவரால் உண்டாக்கப்படாது தானே உருவானவை
4. ஆரிஷ " — மகரிஷிகள் வழிபட்டவை
5. மானுட " — மனிதர்கள் "
6. திவ்ய " — அவதார புருஷர்கள் "
7. ஆசுர " — அசுரர்கள் "
(பாணலிங்கம்—பாணாசூரன் வழிபட்டவை)
8. திவ்ய லிங்கம் - ஜோதிர் லிங்கங்கள்

119. பாணலிங்கம் பற்றி எழுதுக.

2000 கைகளைப் பெற்றிருந்த பாணாசூரன் ஒரு சமயம் நாடோறும் 2000 சிவலிங்கங்களைப் பூசித்து அவற்றை நர்மதை நதியில் விடுத்தான். இவ்வாறு பலகாலும் விடப்பட்ட அச் சிவலிங்கங்களே இன்று பாணலிங்கங்களாகக் கிடைக்கின்றன. இன்றும் நர்மதையில் மூழ்கி இவற்றை எடுத்து வழிபடுகின்றனர். இவை சிவ வழிபாட்டுக்குச் சிறந்தவை. நர்மதை நதிக் கரையில்தான் ஜோதிர் லிங்கத்தலமான ஓங்காரேஸ்வரம் உள்ளது.

120. இறைவனின் மூவகை நிலைகள் யாவை?

1) உருவம் — (விக்கிரகத்திருமேனி)
2) அருவுருவம் — உருவமும் உருவமற்ற நிலையும் (சிவலிங்கத் திருமேனி)
3) அருவம் — உருவமற்ற நிலை.

121. இறைவனின் ஐந்து முகங்களுக்குரிய பெயர்களையும் அவற்றின் நிறங்களையும் கூறுக.

1) ஈசானம் — நடுவில் இருக்கும் முகம் — பளிங்குநிறம்

2) தத்புருஷம் — கிழக்கில் இருக்கும் முகம்— பொன்நிறம்.

3) அகோரம் — தெற்கில் இருக்கும் முகம்— கருமைநிறம்

4) வாமதேவம் — வடக்கில் இருக்கும் முகம்— சிவப்புநிறம்

5) சத்யோஜாதம் — மேற்கில் இருக்கும் முகம்— வெண்மை நிறம்.

இந்த ஐந்து முகங்களாலும் இறைவன் 28 ஆகமங்களையும் அருளிச் செய்தார்.

122. சிவபெருமானின் ஐம்முகங்களுக்கும் உரிய சிறப்பான நிவேதனங்கள் எவை?

ஈசான முகத்திற்கு — சுத்த அன்னமும்
தத்புருஷ முகத்திற்கு — தயிரன்னமும்
அகோர முகத்திற்கு — எள்ளன்னமும்
வாமதேவ முகத்திற்கு — சர்க்கரையன்னமும்
சத்யோஜாத முகத்திற்கு — பாலன்னமும், சிறப்பு.

123. இறைவனின் ஐவகை நடனங்களும் அவற்றுக்குரிய தலங்களும் எவை?

1. ஆனந்த நடனம் — தில்லை, பேரூர்
2. அஜபா நடனம் — திருவாரூர்

3. சுந்தர நடனம் — திருவாலவாய் (மதுரை)
4. ஊர்த்துவ நடனம் — திருவாலங்காடு, அவிநாசி
5. பிரம நடனம் — திருமுருகன்பூண்டி

124. சிவத்தினது ஐம்முகங்களின் அமைப்பை விளக்கி எழுது.

1. ஈசானமுகம் — சிறுபிள்ளை முகம்போல பளிங்கு நிறமாய் ஈசான திசையைப் பார்த்து மேல்நோக்கியிருக்கும்.
2. தத்புருஷம் — யௌவன பருவமுடையதாய், கோங்கம்பூ நிறமாய், கிழக்கு நோக்கியிருக்கும்.
3. அகோரம் — தொங்கிய தாடியுடையதாய், வெளிப்பட்ட பற்களையுடையதாகி, கண்டோர்க்கு அச்சமாய், கரிய நிறமாகி, வயதான முகம்போல, வலத்தோளின்மேல் தெற்கு நோக்கி யிருக்கும்.
4. வாமதேவம் — மாதர் முகம்போல, ஆபரண மணிந்து, வெட்சிப்பூ நிறமாய், இடத்தோளின் மீது வடக்குநோக்கி யிருக்கும்.
5. சத்யோஜாதம்— அரசர்முகம்போல, வெண்மை நிறமாய், பிடரியில் மேற்கு நோக்கி யிருக்கும்.

125. இறைவனின் எவ்வெம் முகங்களிலிருந்து எவ்வெவ் வேதங்கள் தோன்றின ?

தத்புருஷ	முகத்தினின்று	ரிக்	வேதமும்	
அகோர	”	யஜுர்	”	
வாமதேவ	”	சாம	”	
சத்யோஜாத	”	அதர்வண	”	தோன்றின.

126. சிவபெருமானை வழிபடுவதற்குரிய முக்கிய விரதங்கள் எவை ?

1. வைகாசி அஷ்டமி
2. கேதார கௌரி விரதம்
3. கார்த்திகைச் சோமவாரங்கள்
4. கார்த்திகை தீபம்
5. மார்கழித் திருவாதிரை
6. தைப் பூசம்
7. மஹாசிவராத்திரி
8. பங்குனி உத்தரம் முதலியன.

127. சிவபெருமானின் திருமேனியில் உள்ள அங்கங்களின் பெயர்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் எழுதுக.

1. **திருமுடி :** திருவருளை அநுபவிக்கும் போது தற்செயல் தோன்றுமல் பரவசப்படுவதே சிவனது திருமுடியாம்,

2. **திருமுகம் :-** உலகில் காணும் அனைத்தையும் இறைவனின் அநுக்ரஹமாகவே கண்டு அநுபவிப்பது அவரது திருமுகமாம்,

3. **இருதயம்:-** முத்திபெறுவதற்குரிய பக்குவ ஆன்மாக்களுக்கு மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் திருவருட்சக்தி இருதயமாம்.

4. **திருவடி :-** யான் எனது என்னும் அகங்கார மமகாரமாய் நிற்கும பொய்யறிவு நீங்கத் திருவருள் ஞானம் பிரகாசித்து நிற்றலையே சிவனுடைய திருவடிஎன்பர்.

5. **(வித்யா) தேகம் :-** ஆன்மாக்கள் செய்யும் கன்மத்திற்கு ஈடாக ரட்சிக்கும் குணமாகிய

சதாசிவமூர்த்தியினுடைய திருமேனி மந்திரம் ஆகையால் மந்திரரூபமாகிய ஞானசத்தியே வித்யா தேகம் எனப்படும்

6. **திரிநேத்ரம்:-** சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் அடக்கியாள்பவர் தாமே என்பதையும்; ஆகவநீயம், காருகபத்யம், தக்கிணாக்கினியம் என்னும் மூன்று வேள்விகளும் தம்மிடத்தே பொருந்தியுள்ளன என்பதையும்; எல்லாச் செயல்களையும் அறிந்து செய்யும் இச்சை, ஞானம், கிரியா சத்திகளையுடையவர்தாம் என்பதையும் இம்மூன்று கண்களும் குறிக்கின்றன.

7. **திரிசூலம் :-** ஆரணி, செனனி, ரோதயித்திரி என்னும் முச்சத்திவடிவினதாகிய சூலப்படையானது; முத்தொழிலையுடையவர், மும்மலங்களை நீக்குபவர் தாமே என்பதைக் குறிப்பது,

8. **மழு :-** லய சிவமாக இருப்பவர் தாம் என்பதைக் குறிக்க லயஸ்தானமாகவுள்ள மழுவை ஏந்தியுள்ளார்.

9. **வாள் :-** பிறவி வேரின் கொடியை அறுப்பவர்தாமே என்பதை அறிவிப்பதற்காக ஞான வடிவாகிய வாளை ஏந்தியுள்ளார்.

10. **குலிசம் :-** ஒருவராலும் கெடுத்தற்கு இயலாத சுத்தமாயையை ஆளும் பேத குணத்தை யுடையவர் தாம் என்பதை அறிவித்தற்காக, துஷ்டர்களைப் பேதிக்கின்ற குணமாகிய குலிசத்தை ஏந்தினர்.

11. **அபயகரம் :-** உலக துன்பத்திற்குப் பயப்பட வேண்டாம் என்று அனுக்ரஹம் செய்யும் குணத்தைக் குறிக்கிறது

12. வரத கரம் :- ஆன்மாக்களின் கன்மத்துக்கு ஈடாகப் போக முத்திகளைக் கொடுப்பவர் (வரமளிப்பவர்) தாம் என்பதை அறிவித்தற்காகக் கொண்டது வரத கரம்.

13. அக்கினி :- ஆன்மாக்களின் பாசங்களை நீக்குபவர் தாம் என்பதை உணர்த்தும் பொருட்டுச் சம்ஹார வடிவாகிய அக்கினியைத்தாங்கியுள்ளார்.

14. அங்குசம் :- மறைப்பினை (திரோபவம்) ச்செய்பவர் என்பதை அறிவிப்பது.

15. மணி :- நாதத் தத்துவத்திற்குத் தாமே தலைவர் என்பதைக் குறிப்பது.

16. ஸர்ப்பம் (பாம்பு):- பாம்பினுடைய விரிவு, சுருக்கம் போல உலகின் தோற்றம் ஒடுக்கம் இருத்தலால், உலகிற்கு நிமித்த காரணர் தாம் என்பதை அறிவித்ததற்காகக் குண்டலினி சத்திருபமாகிய பாம்பை ஏந்தியுள்ளார்.

17. பாசம்:- ஆன்மாக்களுக்கு பலத்தை ஊட்டுபவர் தாம் என்பதை அறிவித்ததற்காக மாயாரூபமாகிய பாசத்தை திருக்கரத்தில் ஏந்தியுள்ளார்.

18. மான்:- மானினது நான்கு கால்களும் நான்கு வேதங்களாகையால் வேதப் பொருளாக உள்ளவர்தாம் என்பதை உணர்த்துவதற்காக மானை ஏந்தினர்.

19. புன்முறுவல்:- சஞ்சிதம் முதலான மூவகைத் துயரத்தையும் போக்கி அருளுவதற்காக இளமையான புன்சிரிப்பைக் கொண்டுள்ளார்.

20. உபவீதம் (பூணூல்) :- சிவஞானப் பொருளாக இருப்பவரும் அதைத் தருபவரும் தாமே என்பதை உணர்த்துவது.

21. சிகை (தலைக் குடுமி) :- ஞான வடிவமாக உள்ளவர் தாமே என்பதை அறிவிக்கவே ஞான அடையாளமாகிய சிகையைக் கொண்டுள்ளார்.

22 சிலம்பு :- பக்குவ ஆன்மாக்களைப் பேரின்பத்தின் அழுத்துதற்குச் சாதனமாக அருட்சிலம்பு விளங்குகிறது.

23 வீரக்கழல் :- ஆன்மாக்களை வசப்படுத்தும் மூன் வினையை வென்று, பிறவித்துன்பத்தைப் போக்கும் காரணர் தாம் என்பதை உணர்த்துவது

24. கங்கை :- உலகை யழிக்குமாறு வந்த கங்கையை அதன் வேகத்தைக் குறைத்து அடக்கி உலகைக்காத்து இன்பத்தைத் தந்ததால், ஆன்மாக்களைக் ஆனந்தக்கடலில் திளைக்கச் செய்தற்கு அடையாளமாகக் கங்கையைத் தரித்துள்ளார்.

128. யோக வடிவம் எது?

தக்ஷிணாமூர்த்தி உருவமே யோக வடிவமாகும்.

129. போக வடிவங்கள் எவை எவை?

உமாமகேசுவரர், சோமாஸ்கந்தர், கல்யாணசுந்தரர் முதலிய மூர்த்தங்கள் போக வடிவங்கள் எனப்படும்.

130. வேக வடிவங்கள் எவை எவை?

காலசம்ஹாரர், கஜசம்ஹாரர் முதலிய மூர்த்தங்கள் வேக வடிவங்களாகும்.

131. சட்டநாதர் (சட்டை நாதர்) திருமேனி பற்றி எழுது

இரணியனை அழித்த பின்னர் நரசிங்கம் இரத்தவெறி பிடித்து அழிவு செய்ய முற்பட்டது அப்போது இறைவன் தோன்றி, நரசிங்கத்தை அழித்து, அதன் தோலைத் தன் உடம்பில் (சட்டையாகப்) போர்த்திக் கொண்டார். அவ் வடிவமே சட்டைநாதர் வடிவமாகும். சட்டநாதர் என்றழைக்கப்படுவதும் இதுவே. இவ்வுருவத்தைப் பைரவரின் அம்சமாகவும் சொல்வர்.

இவ்வுருவம் ஆலயத்தில் சற்று உயரத்திலேயே படியேறித்தரிசிக்கும் முறையில் அமைந்திருக்கும். இம் மூர்த்திக்குப் புனுகுச் சட்டம் மட்டுமே சார்த்தப்பெறும் வேறு அபிஷேகம் ஏதுமில்லை. மேலாடை மட்டும் இருக்கும். கீழ்ப்புறம் நிர்வாணம், சிங்கத்தின் தோலை ஆடையாகப் போர்த்தி, எலும்பையே கதையாகக் கொண்டு காட்சிதரும் இம்மூர்த்தி மிகவும் பிரசித்தி பெற்றது.

வெள்ளிக்கிழமைகளில் இரவு 11 மணிக்கு இம் மூர்த்தியின் எதிரில் உள்ள பலி பீடத்திற்கு அபிஷேகம் நடைபெறும். நெய்யில் தயாரித்த வடை இம்மூர்த்திக்குச் சிறப்பான நிவேதனமாகும். தெற்கு நோக்கிய வடிவம். சீகாழி முதலிய பல தலங்களில் சட்டைநாதர் திருமேனியைத் தரிசிக்கலாம்.

திருஞானசம்பந்தர் இரண்டாந் திருமுறையில் பிரமபுரத் திருப்பதிகத்துள் இம்மூர்த்தியை "உரித்த அரித் தோலுடையான்" என்று புகழ்ந்து பாடுகின்றார்.

132. சிவபெருமானுக்கு "அஷ்ட மூர்த்தி" என்ற பெயர் சொல்லப்படுவது ஏன்?

நம் உடம்பு பஞ்சபூதச் சேர்க்கையாலாகியது. சூரியன் சந்திரன் ஆன்மா ஆகிய இம் மூன்றையும் சேர்த்து என்

வகைப் பொருள்களையும் இறைவன் இடமாகக்கொண்டு இயக்குவதனால் அஷ்டமூர்த்தி என்ற பெயர் சிவ பெருமானுக்குச் சொல்லப்படுகிறது

133. அட்டமூர்த்த வணக்கமாவது யாது?

(1) பிருதிவிவடிவமாகிய விக்ரக வணக்கம் (2) கங்கை முதலிய தீர்த்த வணக்கம் (3) யாகம் முதலியவற்றில் செய்யும் அக்கினி வணக்கம் (4) சிவபூசை முதலியவற்றில் செய்யும் சூரிய (5) சந்திர வணக்கம் (6) அடியார்கள் (7) குரு முதலியோர்களை வணங்கும் குரு வணக்கம் (8) பஞ்சபூதத் தலங்களில் வணங்கப்படும் பஞ்சபூதலிங்க வணக்கம் ஆகிய இவை சிவபெருமானின் அட்டமூர்த்த வணக்கமாகக் கருதப்படும்.

134. இறைவனின் சிறப்புடைய 25 மூர்த்தங்கள் யாவை? (மகேஸ்வர மூர்த்தங்கள்)

1. உமாமகேஸ்வரர்
2. ரிஷபாருடர்
3. நடராசர்
4. கல்யாணசுந்தரர்
5. பிக்ஷாடனர்
6, காமாரி
7. காலாரி
8. திரிபுராரி
9. சலந்தராரி
10. கஜாரி
11. வீரபத்திரர்
12. அரியர்த்தமூர்த்தி
13. அர்த்தநாரீஸ்வரர்
14 கிராதமூர்த்தி
15. கங்காளர்
16. சண்டேசுவர அனுக்ரஹர்
17. சக்ரப்ரதர்
18. விக்னப்பிரசாதர்
19. சோமாஸ்கந்தர்
20 ஏகபாதமூர்த்தி
21. சுகாசனர்
22. தக்ஷிணாமூர்த்தி
23. லிங்கோற்பவர்
24. நீலகண்டர்
25. சந்திரசேகரர்

135. தெற்கு நோக்கி இருக்கும் தெய்வங்கள் எவை?

1. நடராசர் 2. தட்சிணாமூர்த்தி 3 பைரவர்.

136. தக்ஷிணாமூர்த்தியின் வடிவச் சிறப்பை எழுது

கல்லால மரத்தினடியில் யோக ஆசனத்தில் சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் உபதேசிக்கும் முறையில் வீற்றிருக்கிறார். அவருடைய ஒரு திருவடி முயலகனை மிதித்துக் கொண்டிருக்கிறது. மற்றொன்று வீராசனமாக வீற்றிருக்கிறது. நான்கு கைகளில் வலப்பக்கம் ஒருகை சின்முத்திரை தாங்கியும் ஒருகை உருத்திராக்க மணிவடம் தாங்கியும் உள்ளது. இடப்புறம் உள்ள ஒரு கையில் அமுதகலசமும் மற்றொன்றில் வேதமும் உள்ளன.

இவரை யோக தக்ஷிணாமூர்த்தி என்பர்.

[தும்புரு, நாரதருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்திய திருமேனி வீணாதர தக்ஷிணாமூர்த்தி எனப்படும்.]

137. சின் முத்திரையாவது யாது?

சித் + முத்திரை. ஞானத்தைக் காட்டும் அடையாளம் சுட்டு விரலால் பெருவிரலின் அடியைச் சேர்த்து மற்ற 3 விரல்களையும் வேறாக ஒதுக்கிக் காட்டும் முத்திரை.

பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் ஆன்மாவையும் மற்ற மூன்று விரல்களுள் நடுவிரல் ஆணவத்தையும், மோதிரவிரல் கன்மத்தையும் சுண்டுவிரல் மாயையையும் குறிக்கும். ஆன்மா மும்மலங்களினின்றும் நீங்கி

இறைவனை அடைந்து இன்புறுவதே இம்முத்திரையின் பொருளாகும்.

138. 'நவபேதம்' என்றால் என்ன?

சிவபெருமான் ஒன்பது வகையாக விளங்குகிறார். சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் அருவம் நான்கும்; மஹேஸ்வரன், உருத்திரன், திருமால், பிரமன் என உருவம் நான்கும், சதாசிவம் என்னும் அருவுருவம் ஒன்றும் ஆகிய இவை நவபேதம் எனப்படும்.

139. 'கால பைரவர்' சிறப்பு யாது?

காலனின் பயத்தைப் போக்குபவர்; எமவானின் பயத்திலிருந்து நம்மைக் காப்பவர் — காலபைரவர் ஆவார்.

இவர் பரமேஸ்வரனின் அம்சமாவார்.

140. இறைவனின் திருக்கரத்தில் உள்ள முத்தலைச் சூலத்தில் உள்ள முச்சுடர்களின் பெயர்கள்யாவை?

1. ஆரணி 2. சென்னி 3. ரோதயித்ரி என்னும் முச்சக்திகளின் வடிவினவேஅம் முச்சுடர்கள்.

141. சிவபெருமான் ஆடியருளிய பல்வகை நடனங்கள் யாவை?

(1) பாண்டரங்க நடனம்:—

முப்புரம் எரிக்க எழுந்தருளியபோது பிரமன் தேர்ச் சாரதியாக இருக்க, அதைக் கண்டு கலைமகள் கலங்க, அவளைத் தேற்றுதற் பொருட்டுச் செய்தருளியது

(2) கொடுகொட்டி நடனம்:—

திரிபுரத்தை எரித்தபின்பு தேவி தாளமிட பரமசிவனார் தம் கரங்களைக்கொட்டி ஆடியருளியது.

(3) சந்தியா நிருத்தம்:—

ஆலகால விஷத்தையுண்டு, தேவர்களைக் காத்து, அறிதுயில் கொள்ள, தேவர்கள் பூசித்த பின்னர், மறுநாள் திரயோதசியில் (பிரதோஷத்தில்) உமாதேவியார் முன்னிலையில் திருக்கரத்தில் 'டமகரும்' ஏந்தி, சூலத்தைச் சுழற்றி, ஒருஜாமநேரம் ஆடியருளியது.

(4) சண்ட தாண்டவம்:—

திருஆலங்காட்டில் காளியின் செருக்கை அடக்க, பைரவ மூர்த்தங் கொண்டு ஆடியருளியது

(5) கௌரி தாண்டவம்:—

தாருகாவனத்தில் மோகினி வடிவெடுத்த திருமாலுடன் ஆடியது போன்று கௌரிக்குக் கயிலையில் ஆடிக்காட்டி அருளியது

(6) வீரட்டகாச நடனம்:—

குமரக்கடவுள் பிர்ணவப் பொருளையுணர்த்தியபோது 'யானும் குமரனும் ஒன்றே' என்று வீரங்கொண்டு ஆடியருளியது.

(7) ஆனந்தத் தாண்டவம்:—

பதஞ்சலி, வியாக்ரபாதர்காண, சிவகாமியம்மை உள்ம் மகிழ, முயலகன் முதுகு மிதித்துச் சிதம்பரத்தில் 'ஆடியருளியது.

(8) அனவரத நடனம்:—

ஆன்மாக்களுக்குப் போக முத்திகளையளிக்கும் பொருட்டு படைப்பு முதலான செயல்களைச் செய்து அனவரதமும்– அதாவது எப்போதும் ஆடுகின்ற நடனம்.

(9) மஹா சங்கார நடனம் —

மஹாபிரளய காலத்தில் உலகனைத்தும் பராசக்தியில் ஒடுங்க, பராசக்தியும் பரமசிவத்தில் ஒடுங்க பரமசிவன் தான் ஒருவனேயாய் இருந்த போது, ஆடியருளியது.

142. சிவபெருமானுக்கு விருப்பமான செயல் களாகச் சொல்லப்படுபவை எவை?

1. விபூதி பூசிக்கொள்ளுதல்
2. உருத்திராக்கம் அணிதல்
3. பஞ்சாட்சர ஜபம் செய்தல்
4. வில்வத்தால் இறைவனை அர்ச்சித்தல்
5. சிவத் தியானம் செய்தல் என்பன

143. அஷ்டமூர்த்திகள் எவை?

1) பவன் 2) சர்வன் 3) ஈசன் 4) பசுபதி 5) வீமன் 6) உக்கிரன் 7) மாதேவன் 8) உருத்திரன்

144. சைவம் என்பதன் பொருள் யாது?

சிவத்துடன் தொடர்புடையது — சிவபெருமானைப் பரம்பொருளாகக்கொண்டு வழிபடுவது சைவம் ஆகும்.

145. அகச்சந்தானம், புறச்சந்தானம் எனப்படு வோர் யாவர்?

கயிலையில் உள்ள,

1) நந்திதேவர் 2) சனற்குமாரர்
3) சத்திய ஞான தரிசினி 4) பரஞ்சோதி முனிவர்

ஆகிய நால்வரும் அகச்சந்தான குரவர்கள் எனப்படுவர்.

நிலவுலகில் வாழ்ந்த,

1) மெய்கண்டார் 2) அருணந்திசிவம்
3) மறைஞானசம்பந்தர் 4) உமாபதிசிவம்

ஆகிய நால்வரும் புறச்சந்தான குரவர்கள் எனப்படுவர்.

146. சைவ சந்தானுசாரியர்கள் யாவர்?

1) மெய்கண்டார் 2) அருணந்தி சிவாசாரியார்
3) மறைஞானசம்பந்தர்
4) உமாபதி சிவாசாரியார் முதலானோர்.

147. சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவை?

1) பதி 2) பசு 3) பாசம் என்பன.
பதி-இறைவன் பசு-ஆன்மா உயிர்) பாசம்-தளை.

பசு, பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைதலே சைவ சித்தாந்த அடிப்படையாகும்

148. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் எவை?

நூல்	ஆசிரியர்
1) திருவுந்தியார்	—திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்
2) திருக்களிற்றுப்படியார்	—திருக்கடவூர் ,,
3) சிவஞான போதம்	—மெய்கண்டார்
4) சிவஞான சித்தியார்	—அருணந்தி சிவாசாரியார்
5) இருபா இருபஃது	— ,,
6) உண்மை விளக்கம்	—திருவதிகை மனவாசகங் கடந்தார்
7) சிவப்பிரகாசம்	—உமாபதி சிவாசாரியார்
8) திருவருட்பயன்	,,
9) வினாவெண்பா	,,
10) போற்றிப்பஃறொடை	,,
11) கொடிக்கவி	,,
12) நெஞ்சுவிடு தூது	,,
13) உண்மைநெறி விளக்கம்	,,
14) சங்கற்ப நிராகரணம்	,,

149. சித்தாந்த அஷ்டகம் என்பவை யாவை?

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் 14-ல் 8 நூல்கள் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அவர்களால் பாடப்பட்டவை. இந்த எட்டு நூல்களுக்குத்தான்

'சித்தாந்த அஷ்டகம்' என்று பெயர். அவை:-

1) சிவப்பிரகாசம் 2) திருவருட்பயன்
3) வினாவெண்பா 4) போற்றிப்பஃறொடை
5) கொடிக்கவி 6) நெஞ்சுவிடுதூது
7) உண்மைநெறி விளக்கம் 8) சங்கற்பநிராகரணம் என்பன.

150. சைவத்தில் கூறப்படும் அகச் சமயங்கள் ஆறு எவை?

1. பாஷாணவாத சைவம் 2. பேதவாத சைவம்
3 சிவசமவாதசைவம் 4 சிவசங்கிராந்தவாத சைவம்
5. ஈசுவர அவிகாரவாத சைவம்
6. சிவாத்துவித சைவம் என்பன.

151. அகப்புறச் சமயங்களாகச் சைவத்தில் கூறப்படுபவை எவை?

1. பாசுபதம் 2 மாவிரதம் 3. காளாமுகம்
4. வாமம் 5. வயிரவம் 6. ஐக்கிய வாதம் என்பன.

152. மூவகை ஆன்மாக்கள் யாவர்?

1. விஞ்ஞானகலர் — ஆணவ மலம் ஒன்றுமட்டுமே உடையோர்.

2. பிரளயா கலர் — ஆணவம், கன்மம் ஆகிய இரு மலமுடையோர்.

3. சகலர் — ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் உடையோர்.

153. முக்குணங்கள் யாவை?

1. சத்துவ குணம் 2. ரஜோ குணம்
3. தமோ [தாமச] குணம்

154. மும்மலங்கள் எவை ?

ஆணவம், கன்மம், மாயை என்பன.

155 மூவகை வினைகள் யாவை ?

1) சஞ்சிதம் :- இப்பிறவிக்கு முன், பல பிறவிகளிலும் செய்த நல்வினை தீவினைகளின் மொத்தத்தொகுப்பு.
2) பிராரப்தம் :- சஞ்சிதத் தொகுப்பிலிருந்து சிறு சிறு பாகங்களாக, வினைகளை இப்பிறவியில் அநுபவிப்பது.
3) ஆகாமி (ஆகாமியம்):- இந்தப் பிறவியில் நாம் செய்யும் செயல்களின் மூலம் பிற்காலத்தில் நம்மை வந்தடையும் நல்வினை, தீவினைகள்.

156. பாசத்தின் வகைகளை - இயல்புகளை எழுது.

பாசம் என்பது பசுவாகிய உயிர்களைக் கட்டி நின்று கடவுளை அடைய ஒட்டாது தடுப்பது. இதற்குத் தடை என்றும் பெயர்.

இப்பாசம்: ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்த மாயை, அசுத்தமாயை என ஐந்து வகைப்படும்.

சுத்தமாயை; விஞ்ஞான, பிரளயாகலருக்கும் அசுத்தமாயை சகலருக்கும், தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்கும்.

157. தனு, கரணம், புவனம், போகம்—இவற்றை விளக்குக.

தனு = உடம்பு, கரணம் = உடம்புக்கேற்ற இந்திரியம் முதலானவை. புவனம் = உலகம், போகம் = உடம்பால்

அநுபவிக்கப்படும் இன்பம்—இவைகளை ஒரு மலமுடைய விஞ்ஞானகலருக்கும் இரு மலமுடைய பிரளயாகல ருக்கும் சுத்தமாயை கொடுக்கிறது. மூன்று மலமுடைய சகலருக்கு இவைகளை அசுத்தமாயை தருகின்றது.

158. 'மாயை' யாவது யாது?

உலகம் அழியும் பொழுது அணுவாகி, அணு பரமாணுவாகி, பின் ஒரு நுண் பொருளாகின்றது. இந்த நுண் பொருள் பருப் பொருள்கள் மாய்வதற்கு இடமாக இருப்பதால் "மாய்" என்றும்; அதிலிருந்தே அனைத்தையும் அக்கப்படுவ தால் 'ஆ' என்றும் ஆகி "மாயா" என்ருகின்றது.

159. சத்காரிய வாதம் என்ருல் என்ன?

இதற்கு "உள்ளது போகாது; இல்லது வாராது" என்பது பொருள். இறைவன் மாயையை முதற் காரண மாகக் கொண்டு பராசக்தியின் துணையாகிய துணைக் காரணத்தொடு தான் நிமித்த காரணனுயிருந்து அனைத்தையும் படைக்கின்ருன் என்று இது கூறுகிறது

160. உயிருக்கு "சதசத்து" என்ற பெயர் வழங்கக் காரணம் யாது?

உயிரில் பாசம் என்பது, களிம்புபோல இயல்பாகவே உள்ளது. சார்ந்ததன் வண்ணமாக ஆகும் தன்மை உயிருக்குரியது. உயிர், உலகத்தைச் சார்ந்து நின்ருல் இப்பாசம் அதைப் பற்றிக் கொண்டு நிற்கும். உயிர் கடவுளைச் சார்ந்து நின்ருல் அப்பாசம் விலகிப்போகும். இத்தகைய இருதன்மைகளும் உயிருக்கு இருப்பதால், உயிருக்கு, "சதசத்து" என்று பெயர் வந்தது.

161. சரியை - கிரியை - யோகம்-ஞானம்-விளக்கம் தருக.

1) *சரியை* :- தொண்டுகளைச் செய்து இறைவன் அருளைப் பெறுவதற்கான பேற்றினை அடைதல்.

எஜமானனுக்கு வேலைக்காரன் உண்மையானபணி செய்து அவன் அன்பைப் பெறுவதுபோல. ஆண்டவனுக்கு உண்மையான தொண்டுகளைச் செய்து அவன் அருளுக்குப் பாத்திரமாக ஆதல். இதனைத் 'தாச மார்க்கம்' என்பர்.

2) **கிரியை :-** இறைவனை அகத்தும் புறத்தும் பூசித்து வழிபடும் செயலாகும். இது 'சற்புத்திர மார்க்கம். எனப்படும்.

3) **யோகம் :-** வெளிநிலைகளைத் துறந்து, உள்ளடங்கி இறைவனோடு ஒன்றி இன்பம் அநுபவித்தல் யோகம் ஆகும். இதனைச் 'சகமார்க்கம்' என்பர்'

4) **ஞானம் :-** குருவினிடம் உபதேசம் பெற்று, சிந்தித்து, தெளிந்து, ஞானம்பெற்று, சச்சிதாநந்த சொரூபமாக விளங்கும் பரம்பொருளை நிர்விகற்ப ஞானத்தால் செய்யும் ஆராதனையாகும். இதைச் 'சன்மார்க்கம்' என்பர்.

162. சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம்
கிரியையிற் ,, ,, ,, ,,
யோகத்திற் ,, ,, ,, ,,
என்பவற்றுள் அடங்கும் செயல்கள் யாவை ?

சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடல் மெழுகுதல், சாத்துதல், நந்தவனம் வைப்பித்தல், தல தீர்த்த யாத்திரை செய்தல் முதலியன. **சரியையிற் கிரியையாவது** இடபாரூடர், கல்யாணசுந்தரர், பிச்சாடனர் உமா மகேசர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகள் ; விநாயகர், கந்தன் முதலிய ஆவரண மூர்த்திகள் என்பவற்றுள் ஒன்றை வழிபடுதல். **சரியையில் யோகமாவது** நெஞ்சின்கண் சீகண்டவுருத்திர மூர்த்தியை தியானித்தல் **சரியையில் ஞானமாவது** அத்தியான பாவனையின் உறைப்பினுல் மெய்யநுபவ உணர்வு நிகழ்த்தலாம்.

கிரியையிற் சரியை - சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களையெல்லாஞ் செய்துகொள்ளுதல். கிரியையில் கிரியை - ஐவகைச்சுத்தி முன்னாகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை. கிரியையில் யோகம் - அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யும் அந்தரியாகம். கிரியையில் ஞானம் - அவ்வந்தரியாக வுறைப்பின்கண் நிகழும் ஓரநுபவ வுணர்வு.

இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம் என்க. இவற்றை யோககாரிகையினும், திராவிட மாபாடியத்திலும் தத்துவப் பிரகாசத்தினுங் காண்க.

163. நந்தி தேவரின் தோற்றம், சிறப்பைக் கூறு.

நந்திதேவர் எப்போதும் சிவலிங்கத்தின் முன் அதையே பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் இருப்பார். எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர் என்பது நந்தி என்பதற்குப் பொருளாகும் இறைவனிடத்திருந்து சிவகாமங்களைத் தெளிந்து நமக்கு அருளிய பெருமான் இவரே.

இவர் நெற்றிக்கண்ணும், நான்கு புயங்களும் கையில் பிரம்பும் உடைவாளும், இரு புஜங்களில் மான் மழுவும் பெற்றுத் தோற்றமளிக்கிறார். சிவசந்நிதியில் காவல் பூண்டுள்ள இவருடைய அநுமதி பெற்றே உள்சென்று சிவபெருமானைத் தரிசித்தல் வேண்டும்.

164 'நந்தி மரபு' என்பது யாது?

நந்தி மரபாவது — தக்ஷிணாமூர்த்தி சிவஞான போதத்தைத் திருநந்தி தேவர்க்கு உபதேசிக்க, அவர் சனற்குமார முனிவர்க்கும், அவர் சத்தியஞான தரிசினிகளுக்கும், அவர் பரஞ்சோதி முனிவர்க்கும், அவர்

மெய்கண்ட தேவர்க்கும், அவர் அருணந்தி சிவாசாரியர் முதலாயினோர்க்கும், அவர் மறைஞான சம்பந்த நாயனார்க்கும், அவர் உமாபதி சிவாசாரியர்க்கும், அவர் அருள்நமச்சிவாயர்க்கும் உபதேசித்த வரன் முறை வழியாம்.

165. சிவனிடம் நந்திதேவர் வேண்டிய பதினாறு பேறுகள் எவை?

1. மறைகள் நிந்தனை பொறு மனம்
2. சைவநிந்தனை பொறு மனம்
3. ஐம்புலன்களுக்கு ஏவல் செய்யாத்திறன்
4. பிறவி தீதெனப் பேதையர் தம்மோடு பிணக்கு
5. உறுதி நல்லறம் செய்வோ ரொடு உறவு
6. நல்லன்பர் யாது கேட்கினும் உதவும் இயல்பு
7. மாதவத்தினர் ஒறுப்பினும் வணங்குதல்
8. ஓதும் நல்லுபதேசம் மெய்யுறுதியுடைய அன்பர் தீது செயினும் சிவச்செயல் எனக் கொளும் தெளிவு
9. மனமும் வாக்கும் நின்னன்பர் பால் ஒருப்படும் செயல்.
10. கனவிலும் உனதன்பர்கட்கு அடிமையாம் கருத்து
11. நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலை
12. புனித நின் புகழ் நாள்தொறும் உரைத்திடும் பொலிவு.
13. தீமையாம் புறச்சமயங்கள் ஒழித்திடுந் திறன்
14. வாய்மையால் பிறர் பொருள் விழைவுறு வளன்
15. பாதாரம் நச்சும் நன்னோன்பு
16. தூய்மை நெஞ்சினன் யான் எனும் செறுக்குறுத் துறவு.

166. 'திருக்கயிலாய பரம்பரை' என்பது யாது?

சிவபெருமானிடத்திலிருந்து நந்தி உபதேசம் பெற்றார். இவரிடத்திலிருந்து சநற்குமாரரும், அவரிட

மிருந்து சத்தியஞான தரிசினிகளும், அவரிடமிருந்து பரஞ்சோதியாரும் அவரிடமிருந்து மெய்கண்டாரும் உபதேசம் பெற்றனர் இதுவே குருபரம்பரை அல்லது திருக்கயிலாய பரம்பரை எனப்படுகிறது.

இந்த வழிமுறையை யொட்டியே சைவத் திரு மடங்களில் திருக்கயிலாய பரம்பரை என்று வழங்கப் படும் வழக்கம் உள்ளது.

167. முக்கியமான சைவ, கௌமார ஆதீனங்கள் எவை எவை?

1) திருவாவடுதுறை ஆதீனம்
2) தருமபுர ஆதீனம்
3) திருப்பனந்தாள் ஸ்ரீ காசியடம்
4) காஞ்சிபுரம், தொண்டை மண்டலாதீனம்
5) குன்றக்குடி (திருவண்ணமலை) ஆதீனம்
6) மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம்
7) கௌமார மடாலயம், கோவை

168. வீர சைவம் யாரால் தோற்றுவிக்கப் பட்டதாகச் சொல்லப் படுகிறது?

சதாசிவ மூர்த்தியின் சத்யோஜாதம் முதலான ஐந்து முகங்களிலிருந்தும் வெளிப்பட்ட தேவஞாத்ரியர், மருளராத்ரியர் பண்டிதராத்ரியர், ஏகோராத்ரியர், விஸ்வராத்ரியர் என்னும் ஐவகை ஆசாரியர்களால் கிருதயுகத்தில் தோற்றுவிக்கப்பட்டது வீரசைவம் என்பது சுப்ரபேதாகமம் முதலிய நூல்களால் தெரிய வருகிறது.

169. வீர சைவத்தின் இரு பிரிவுகள் யாவை?

1) பஞ்சாசாரியம்
2) பசவாசாாம் என்பன

170. வீரசைவத்தில் சொல்லப்படும் பஞ்ச ஆசாரங்கள் (பஞ்சாசாரம்) எவை?

1. **இலிங்காசாரம்:-** இஷ்டலிங்கத்தையே உயர்வாக மதித்தல்.

2. **சதாசாரம்:-** அறவாழ்க்கையில் வழுவாது நிற்றல் அறவழியில் உழைத்துப் பொருளீட்டுதல்.

3. **சிவாசாரம்.-** பிறரிடத்தும் சிவத்தைக் காணுதலும், சிவத்தொண்டில் ஈடுபடுதலும், லிங்காதாரணம் செய்தோர்களுடன் உயர்வு கருதாமையும்.

4. **பிருத்யாசாரம்:-** எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதலும், அவற்றின் துன்பத்தைக் கண்டபோதெல்லாம் மனம் கலங்குதலும்.

5. **கணாசாரம்:-** சிவம் என்னும் செம்பொருளின் விளக்கத்திற்குத் தடையாகவுள்ள அனைத்தையும் நீக்குதல்.

171 வீரசைவத்தில் சொல்லப்படும் அட்டாவரணம் எவை?

1. குரு 2. இலிங்கம், 3. சங்கமம். 4. விபூதி. 5. அக்கமணி. 6. மந்திரம். 7. பாதோதகம் (குரு முதலியோரின் திருவடி அபிஷேகித்த நீர்) 8. பிரசாதம் என்பன.

172. வீர சைவம் பின்பற்றும் கொள்கையாது?

உலகம் அனைத்தும் தோன்றவும், தோன்றியவாறே ஒடுங்கவும் மூலமாகவுள்ள சிவபரம் பொருளைத்தவிர வேறெதையும் வணங்காத வீரத்தை அடிப்படையாகக் கொண்டது. மேலும் சதாசிவ முகங்களில் ஞானம்

ஒன்றையேதரவல்ல சத்யோ ஜாத முக வழிபாட்டை மட்டுமே இவர்கள் மேற்கொள்வர். இலிங்கத்தோடு ஐக்கியமாகும் ஞானத்தைத்தவிர பிற எதையும் இவர்கள் விரும்பார். தம் உடம்பிலேயே சிவலிங்கத்தையே தரித்து வாழ்வர்-அதனால் லிங்காயத்தார் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவர்கள்.

(வீர சைவத்தில் பெண்களுக்கும் லிங்கதாரணம் உண்டு)

173. தமிழ்நாட்டில் உள்ள வீர சைவத் திருமடங்கள் எவை?

1. பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் மடம்.
2. மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் மடம்
3. நல்லாற்றூர் சிவப்பிரகாச தேசிகர் மடம்.
4. பேரூர் சாந்தலிங்கர் மடம்
5. விருத்தாசலம் குமாரதேவர் மடம்
6. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம்
7. திருவண்ணாமலை குகைநமசிவாயர் குரு நமசிவாயர் மடங்கள்.
8. திருக்கோவிலூர் ஞானியார் மடம்
9. கும்பகோணம் சாரங்கதேவர் மடம்
10. திருத்தணிகை கந்தப்பையர் மடம்
11. சிதம்பரம் மவுன தேசிகர் மடம்
12. சிதம்பரம் ஈசானிய மடம்
13. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடம்

174. பஞ்ச கிருத்திய நடனம் என்று எதற்குப் பெயர்? விவரி.

பஞ்சம்—ஐந்து. கிருத்தியம்—தொழில்கள். நடராசப் பெருமானின் நடனமே ஐந்தொழில் நடன

மாகும். ஐந்தொழில்களாவன:- படைத்தல், காத்தல் ஒடுக்குதல், மறைத்தல். அருளல் முதலியன.

இந்நடனத்தில்;
1) உடுக்கை ஒலி—படைத்தல்
2) வலக்கை (அபயம்)—காத்தல்
3) இடக்கை (தீ)—ஒடுக்குதல்
4) வலக்கால் (முயலகனை மிதித்தல்)—மறைத்தல்
5) இடக்கால் (தூக்கிய திருவடி)—அருளுதல் ஆகும்.

[தூக்கிய திருவடியே குஞ்சிதபாதம் எனப்படும். வலக்கால் "அபஸ்மாரம்" என்னும் முயலகனை மிதித்துள்ளது.

175. பஞ்சகிருத்தியம் (ஐந்தொழில்கள்) யாவை?

1) படைத்தல் 2) காத்தல்
3) ஒடுக்குதல் (அழித்தல்) 4) மறைத்தல்
5) அருளுதல்.

176. திருமுறைகள் என்பவை யாவை? எத்தனை?

இவை 12 ஆகும். இவை முதலாம் திருமுறை முதல் பன்னிரண்டாம் திருமுறைவரை பெயர் சொல்லி வழங்கப்படும். சிவபெருமானின் புகழைப் போற்றித் துதித்து நாயன்மார்களும் அடியார்கள் பலரும் பாடியுள்ள பாடல்கள் திருமுறைகள் எனப்படும்.

177. பன்னிரு திருமுறைகளின் வகைகளையும் அவற்றைப் பாடியோர் பெயர்களையும் எழுதுக

1-3 திருமுறைகள்—திருஞானசம்பந்தர் அருளியவை
4-6 திருமுறைகள்—திருநாவுக்கரசர் அருளியவை
7-ஆம் திருமுறை—சுந்தரர் அருளியது
—தேவாரம்

8-ஆம் திருமுறை—மாணிக்கவாசகர் அருளியது
—திருவாசகம், திருக்கோவையார்
9-ஆம் திருமுறை—திருமாளிகைத்தேவர்
முதலான 9 பேர் அருளியவை
—திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
10-ஆம் திருமுறை—திருமூலர் அருளியது-திருமந்திரம்
11-ஆம் திருமுறை—திருவாலவாயுடையார் முதலான
11 பேர் அருளியவை
12-ஆம் திருமுறை—சேக்கிழார் அருளியது
—பெரியபுராணம்,
(திருத்தொண்டர் புராணம்)

178. பன்னிரு திருமுறைகளை அருளிச் செய்துள்ள அருளாளர்கள் யாவர்?

1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரர் 4) திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)
5) திருமாளிகைத்தேவர் 6) சேந்தனார்
7) கருவூர்த்தேவர் 8) பூந்துருத்தி நம்பிகள்
9) கண்டராதித்தர் 10) வேணாட்டடிகள்
11) திருவாலிஅமுதனார் 12) புருஷேத்தமர்
13) சேதிராயர் 14) திருமூலர் 15) திருஆலவாயர்
16) காரைக்காலம்மையார்
17) ஐயடிகள்காடவர்கோன்
18) சேரமான்பெருமாள் நாயனார் 19) நக்கீரர்
20) கல்லாடனார் 21) கபிலர் 22) பரணர்
23) இளம்பெருமானடிகள் 24) அதிராஅடிகள்
25) பட்டினத்தடிகள் 26) நம்பியாண்டார் நம்பி
27) சேக்கிழார்.

179. திருமுறைத் தலங்கள் (பாடல் பெற்ற தலங்கள்) என்பன எவை?

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய முப்பெரும் சமயாசாரியர்களால் துதித்துப் பாடப்பெற்ற

சிவத்தலங்கள் 'திருமுறைத் தலங்கள்' எனப் பெயர் பெறும். இத்தலங்களின் மொத்த எண்ணிக்கை 274 ஆகும்.

180. சைவ சமயாசாரியர்கள் யாவர்?

1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

181. தேவாரம் பாடிய மூவர் யாவர்? அவர்களின் பாடல்களுக்கு வழங்கும் சிறப்புப் பெயர்கள் யாவை?

1) திருஞானசம்பந்தர்—திருக்கடைக் காப்பு
2) திருநாவுக்கரசர்—தேவாரம்
3) சுந்தரமூர்த்தி சுவாமிகள்—திருப்பாட்டு.

வழக்கில் இம்மூவர் பாடல்களையும் பொதுவில் தேவாரம் என்றே வழங்குகிறோம்.

182. நமக்குக் கிடைத்துள்ள மொத்ததிருமுறைப் பதிகங்கள் எத்தனை? விளக்கமாக எழுதுக.

	சம்பந்தர்	அப்பர்	சுந்தரர்	மொத்தம்
பாண்டிய நாட்டுத் திருமுறைகள்	24	5	5	34
கொங்கு நாட்டுத் திருமுறைகள்	4	1	4	9
மலை நாட்டுத் திருமுறைகள்			1	1
தொண்டை நாட்டுத் திருமுறைகள்	31	24	13	68
நடுநாட்டுத் திருமுறைகள் :	23	27	12	62

சோழ நாட்டுத் திருமுறைகள் :

(i) காவிரியின் வடகரைத் தலங்கள்	137	79	23	239
(ii) காவிரியின் தென்கரைத்தலங்கள்	148	133	35	316
ஈழநாட்டுத் திருமுறைகள்	2	—	1	3
துளுவநாட்டுத் திருமுறைகள்	1	1	—	2
வடநாட்டுத் திருமுறைகள்	6	5	3	14
பொதுப் பதிகங்கள்	7	37	4	48
ஆக மொத்த் திருப்பதிகங்கள்	383	312	101	796

183. நால்வர் பெருமக்கள் நிகழ்த்திய அற்புதங்களைக் கூறும் பாடல்களை எழுதுக.

புனலில் ஏடு எதிர் செல்எனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடு இடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்பு பொற்பாவையது ஆகுமே
சின அராவிடம் தீர்எனத் தீருமே
சிறந்த **சம்பந்தர்** செந்தமிழ்ப் பாடலே. (1)

தலைகொள் நஞ்சு அமுதாக விளையுமே
தழலின்நீறு தடாகமது ஆகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கூர் அரா விடம் தீர்எனத் தீருமே
கலைகொள் வேதவனப்பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே. (2)

வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே
. வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கமது ஆகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துலங்கு சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே. (3)

பெருகும் வையை தனை அழைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துமே
நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண் சுமப்பிக்குமே
பரமன் ஏடெழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாதவூரர் வண்தமிழ்ப் பாடலே. (4)

184. வைப்புத்தலம் என்பது யாது?

தனக்கெனப் பதிகம் தனியே பெறுமல் வேருெரு தலப் பதிகத்தில் இஃது. குறித்துப் பாடப்பட்டிருக்குமாயின் அத்தலமே வைப்புத்தலம் எனப்படும்.

கச்சிமயானம், மூவலூர் முதலியன வைப்புத் தலங்களாம்.

185. பண்டைய தேவாரப் பண்களுக்குத் தற்போது வழங்கும் பெயர்கள் யாவை?

1) செவ்வழி—யதுகுலகாம்போதி
2) தக்கராகம்—காம்போதி
3) புறநீர்மை—பூபாளம்
4) பஞ்சமம்—ஆகிரி
5) நட்டபாடை—நாட்டை

6) ஆந்தாளிக்குறிஞ்சி—சாமா
7) காந்தாரம் - நவரோஸ்
8) பழம்பஞ்சுரம்—சங்கராபரணம்
9) மேகராகக்குறிஞ்சி—நீலாம்பரி
10) கொல்லிக்கௌவாணம்—நவரோஸ்
11) பழந்தக்கராகம்—சுத்தசாவேரி
12) குறிஞ்சி—குறிஞ்சி
13) நாட்டராகம்—பந்துவராளி
14) வியாழக்குறிஞ்சி—சௌராஷ்டிரம்
15) செந்துருத்தி—மத்யமாவதி
16) தக்கேசி—காம்போதி
17) கொல்லி—நவரோஸ்
18) இந்தளம்— நாதநாமக்கிரியை
19) காந்தாரபஞ்சமம்—கேதாரகௌளம்
20) கௌசிகம்—பைரவி
21) பியந்தைக்காந்தாரம்—நவரோஸ்
22) சீகாமரம்—நாதநாமக்கிரியை
23) சாந்தாரி—பந்துவராளி
24) திருக்குறுந்தொகை—மாயாமாளவகௌளம்
25) திருத்தாண்டகம்—ஹரிகாம்போதி
26) திருநேரிசை—குந்தளவராளி
27) திருவிருத்தம்—ரகமாலிகை
28) திருவிசைப்பா—ஆனந்தபைரவி

186. 'தாண்டகம்' என்னும் செய்யுள் (பா) அமைப்பை எழுது.

தொல்காப்பிய இலக்கணப்படி தாண்டகம் என்பது "எண்சீரான் வந்த கொச்சக ஒரு போகு" என்னும் செய்யுளாகும். அடிதோறும் நான்காம் சீரும் எட்டாம் சீரும் தேமாவாக நிற்ப; மூன்றும் சீரும் ஏழாம் சீரும் பெரும்பாலும் தேமாவாகவும் சிறுபான்மை புளிமா வாகவும் அமைய, ஏனைய ஒன்று இரண்டு ஐந்து

ஆறும்சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும் சிறுபான்மை மாச்சீர்விளச்சீர்களாகவும் வருவதாகும்.

தாண்டகவேந்தர் என்று திருநாவுக்கரசருக்குப் (அப்பருக்கு) பெயர். அவர் பாடியுள்ள தாண்டகங்கள் ஆறும் திருமுறையாகப் போற்றப்படுகின்றன.

187. தாண்டக வேந்தர் என்று யாருக்குப் பெயர்? அவருடைய வேறு பெயர்கள் யாவை? அவர் பாடியுள்ள பகுதிகளேயும் எழுது?

திருநாவுக்கரசருக்குத் தாண்டகவேந்தர் என்று பெயர். அவருக்கு வாகீசர், மருள்நீக்கியார், அப்பர், உழவாரப் படையாளி, என்னும் வேறு பெயர்களுண்டு,

இவர் பாடியுள்ள பகுதிகள் திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம் என்பன.

188 மேகராகக் குறிஞ்சி எனப்படுவது யாது?

மேகத்தை வரவழைக்கப் பாடப்படும் ராகம். மழையின்றி வறண்டுபோகும் காலத்தில் இந்த ராகத்தைப் பாடினல் மழை வரும்.

189. கோளறு பதிகம் எப்போது யாரால் அருளிச் செய்யப்பட்டது?

பாண்டிய நாட்டிற்குச் செல்லத் திருஞானசம்பந்தர் புறப்பட்டபோது உடனிருந்த அப்பர், நாளும் கோளும் தீய எனக் கூறித் தடுக்க, அவை இறையடியார்க்கு நல்லனவே என்று சொல்லி இப்பதிகத்தைத் திருஞான சம்பந்தர் பாடியவாறே பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்டார்.

190. யாழ் மூரிப்பதிகம் என்பது யாது?

யாழிசையில் அடக்கி வாசிக்க முடியாதபடி விடப் பட்ட பதிகம் யாழ்முரிப் பதிகம் ஆகும்.

191. நொடித்தான் மலை என்று எதற்குப் பெயர்? சுந்தரர் கயிலை சென்று சேர்ந்த விதத்தை எழுது.

திருக்கயிலாயத்திற்கு 'நொடித்தான் மலை' என்று பெயர். இறைவன் அருளால் வெள்ளை யானை வர, அதன் மீதேறி, ஆடி சுவாதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்,

192, சிவ சின்னங்கள் எவை?

1. திருநீறு
2. உருத்திராக்கம்
3. வில்வம்
4. ஸ்படிகலிங்கம்
5. பஞ்சாட்சரம் — ஆகிய ஐந்தும் சிவ சின்னங்களாம்'

193. திருநீற்றின் வேறு பெயர்கள் யாவை?

1. விபூதி—(மேலான செல்வம்)
2. திருநீறு (பஸ்மம்) — அணிபவரது வினைகளை நீருக்குவது
3. காப்பு (ரக்ஷை) — அணிபவரைக் காப்பது
4. பசிதம் — அணிபவரை ஒளிபெறச் செய்வது.
5. க்ஷாரம்—அணிபவரின் இன்னல்களைக் களைவது.

194. திரிபுண்டரம், உத்தூளனம் என்பன யாவை?

திருநீற்றை நீரில் குழைத்து மூன்று பட்டையாக அணிந்து கொள்வது திரிபுண்டரம் எனப்படும். தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழங்கால்கள் இரண்டு, இரு புயங்கள், முழங்கைகள் இரண்டு, இரண்டு

மணிக்கட்டுகள், இரு விலாப்புறங்கள், முதுகு, கழுத்து ஆகிய 16 இடங்களிலும் இவ்வறு அணிந்து கொள்ளலாம்.

திருநீற்றை நீரில் குழைக்காமல் அப்படியே (தூளாக) உடம்பில் அணிந்து கொள்வது உத்தூளனம் எனப்படும்.

195. விபூதியை எப்படிப் பெற்று அணிதல் வேண்டும்?

வணங்கி, இருகைகளையும் நீட்டி. வலக்கையை மேலாக வைத்து, பணிவாகப் பெற்று; சற்று முகத்தைத் திருப்பி, விபூதி சிறிதும் கீழே சிந்தாதபடி அண்ணாந்து, இறைவனின் திருப்பெயரைச் சொல்லியவாறே, நெற்றியில் (வலக்கையின் நடுவிரல் மூன்றினால் எடுத்து) முழுமையாக அணிதல் வேண்டும்.

196. விபூதி அணியும் முறையைக் கூறும் சதகப் பாடலை எழுது.

பத்தியொடு சிவசிவா என்று திரு நீற்றைப்
பரிந்து கையால் எடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியோடு
பருத்த புயமீதில் ஒழுக

நித்தமு விரல்களால் நெற்றியில் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடு வினை அணுகாது தேக பரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே

சித்தியொடு நித்தம் விளையாடுவன் முகத்திலே
தாண்டவம் செய்யும் திரு
சஞ்சலம் வராது பரகதி உதவும் இவரையே
சத்தியம் சிவம் என்னலாம்.

மத்தினிய மேருஎன வைத்து அமுதினைக் கடையு(ம்)
மால்மருகனுன முருகா
மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடு
மலைமேவு குமரேசனே.

197. எவ்வெக் காலங்களில் அவசியமாக விபூதி அணிய வேண்டும்?

உறங்கச் செல்லும் போதும், எழுந்தவுடனும், பற்களைச் சுத்தி செய்தவுடனும், நீராடியவுடனும், உண்பதற்குமுன்னும், உண்ட பின்பும் விபூதி அணியவேண்டும்

198. விபூதி தயாரிக்கும் முறையை விவரி.

தூய்மையான பசுஞ் சாணத்தை எடுத்து, வில்லை யாகத்தட்டி, சூரிய ஒளியில் உலர்த்து. நன்கு உலர்ந்த பிறகு, கும்பலாகக் குவித்து, 100 வில்லைகளுக்கு 8 படி பதர் நெல்லைக்கீழே பரப்பி, மேலேயும் கொட்டி, காற்று புகாதபடி மூடிப் பஸ்மம் செய்யவும். மூன்று நாள் களுக்குப்பிறகு, வெள்ளை விபூதி கிடைக்கும். அதை எடுத்துக்கொள். ஓரத்தில் இருக்கும் கருமைநிற விபூதி யைத் தள்ளிவிடு. பிறகு வெள்ளை விபூதியை நான்கு நாள்களுக்குப் பனியில் வைத்திரு. மிகவும் வெளுப்பான, தூய, விபூதி கிடைக்கும்

விபூதியை வளர்பிறை அஷ்டமியில் அல்லது திரயோ தசியில் தயாரிக்க வேண்டும்.

199. ருத்ராக்ஷம்—(உருத்திராக்கம்) சிறப்பை எழுது.

திரிபுர சம்ஹார காலத்தில் இறைவனின் கண்களி லிருந்து ஆனந்த அமிர்த விந்து பூமியில் விழ அதினின்றும் உண்டானது ருத்ராக்ஷம் ஆகும். சிறந்த சிவக்கோலம். இதனை அணிவதால் பாவந் தீரும்.

ஜபத்திற்கு இது ஏற்றது ஏகமுக ருத்ராக்ஷம் மிகவும் சிறந்தது இதற்குத் திருக்கண்மணி, அக்கமாலை என்றும் பெயர். 27, 54, 108 என்ற எண்ணிக்கையுடைய மணிகளைக் கோத்து அணிதல் நல்லது. சிவ சின்னங்கள் களுள் இதுவும் ஒன்று

200. ருத்ராக்ஷம் கிடைக்கும் இடங்கள் எவை?

நேபாளம், ஜாவா தீவுகள், பாலி தீவுகள் (இந்தோனேஷியா) முதலிய இடங்களில் ருத்ராக்ஷ மரங்கள் வளருகின்றன. இம்மரத்தின் கொட்டைகளே ருத்ராக்ஷ மணிகள்.

[ஜாவா தீவில் ஏராளமான சிவாலயங்கள் உள்ளன. பாலி என்னும் சிறிய தீவிலும் இப்பொழுதும் சிவ ஆராதனை நடைபெறுகிறது]

201. பஞ்சாட்சரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

1) ஸ்தூல பஞ்சாட்சரம்—நமசிவாய
2) சூக்ஷ்ம பஞ்சாட்சரம்—சிவாயநம
3) காரண பஞ்சாட்சரம்—சிவயசிவ
4) மகாகாரண பஞ்சாட்சரம்—சிவ
5) மகாமனு—சி.

202. பஞ்சாட்சர மந்திரங்களில் 'ஒரு தலை மாணிக்கம்' என்றும், 'இரு தலை மாணிக்கம்' என்றும் சொல்லப்படுவன யாவை?

சிவாயநம—என்னும் சூக்ஷ்ம பஞ்சாட்சரம்—ஒருதலை மாணிக்கம்.

சிவயசிவ—என்னும் காரண பஞ்சாட்சரம்—இருதலை மாணிக்கம்.

203. தீக்ஷை (தீட்சை) என்பதன் பொருள் யாது?

குரு, தன் சீடனுக்குச் செய்யும் அருள் உபகாரம் தீக்ஷை. இது தமிழில் 'தீக்கை' எனப்படும்.

தீ + க்ஷா = தீக்ஷா = ஞானத்தை அருளிப் பாசத்தைப் போக்குவது, என்பது இதன் பொருள்.

(1) சமய தீக்ஷை:- சரியை மார்க்கம் தொடங்குமுன் செய்யப் பெறுவது. (2) விசேஷ தீக்ஷை:- கிரியா மார்க்கத்திற்கு உரியது. (3) நிர்வாண தீக்ஷை:- யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரியது,

204. தீக்ஷை செய்யும் முறைகளை எழுதுக.

1) ஸ்பரிச தீக்ஷை:- குரு, தன் திருக்கரங்களால் சீடனைத் தொடுவது.

2) நயன தீக்ஷை:- குரு, தன் அருட்பார்வையால் சீடனை நோக்குவது.

3) மானச தீக்ஷை:- குரு, தன் மனத்தால் சீடனது மனத்தைத் தன்வயப் படுத்துவது.

4) வாசக தீக்ஷை:- வாசகம் என்பது உபதேசம். இது குரு உபதேசம் எனப்படும். நல்ல அருள் வாக்குகளைச் சொல்வது.

5) மந்திர தீக்ஷை:- குரு, சீடனுக்கு மந்திரங்களை உபதேசித்து அருளுவது.

6) யோக தீக்ஷை:- யோகம் என்பது சேர்க்கை. குரு, சீடனை (உபாஸகனை) இறைவனோடு ஒன்றுவைப்பது- யோக முறைகளைச் சொல்லித் தருவது.

7) ஔத்திரி தீக்ஷை - ஹோமகுண்டத்தில், ஹோமாக்கினியில். சீடனுடைய மலங்களைத் தகித்து அவனைத் தூய்மைப்படுத்துவது.

205. அகமர்ஷம்---அகமர்ஷணம் என்பவை யாவை?

அகமர்ஷணம் என்பது தண்ணீருக்குள் நின்று செய்யும் ஒருவகை ஜபம். இந்த ஜபத்தைச் சொல்லிச் செய்யும் ஸ்நானம் அகமர்ஷம் எனப்படும்.



கோயில் - வழிபாடு

206. ஆலயம், கோயில்-பொருள் யாது?

ஆ + லயம் = ஆன்மா இறைவன் திருவடிகளில் லயிக்கும் இடம்.

கோ + இல் = தலைவன் (கடவுள்) தங்குமிடம் (வீடு).

207. ஆலயத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

திருக்கோயில், தேவக்கிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவமந்திர், தேவஸ்தானம், அர்ச்சாக்ரஹம், கோட்டம் என்பன

208. ஆலய நிர்மாணம் எத்தனை வகைப்படும்?

1) **ஆவர்த்தம்** :- புதிதாக ஆலயத்தைக் கட்டி, விக்ரகப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல்.

2) **அநாவர்த்தம்** :- ஆற்றுவெள்ளம், அதிக மழை, பூமி அதிர்வு, மணல் மூடுதல் முதலிய செயல்களால் ஆலயம் அழிந்து போயின் அதை மீண்டும் கட்டி, விக்ரகங்களைப் புதுப்பித்துச் சீர்திருத்தம் செய்தல்

3) **புநராவர்த்தம்** :- காலப்போக்கில் ஆலயத்திற்குத் தேவைப்படும் திருப்பணிகளைச் செய்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்தல்.

4) **அந்தரிதம் :-** திருடுதல் முதலியவை நிகழ்ந்து ஆலயம் தூய்மை கெடின் அதைச் சரிசெய்யும் பொருட்டுச் சம்ப்ரோக்ஷணம் செய்தல்.

209. கோயில்களின் அமைப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஏழு வகைப்படும் அவை:-

1. கரக்கோயில் 2 ஞாழக்கோயில்
3. கொகுடிக்கோயில் 4. இளங்கோயில்
5. மணிக்கோயில் 6. ஆலக்கோயில்
7. தூங்கானைமாடம்

210. ஆலய விமானங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஆலய விமானங்களின் அமைப்பு மூன்று வகைப்படும்.

1. நாகரம் - பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ள விமானம் (வட இந்தியாவில்)
2. திராவிடம் - கண்டம் முதல் எண்கோளமாக உள்ள விமானம். (தென் இந்தியாவில்)
3. வேசரம் - கண்டம் முதல் வட்டமாக உள்ள விமானம். (மத்திய இந்தியாவில்)

[நாகரத்தைப் ஆணாகவும், திராவிடத்தைப் பெண் விமானமாகவும், வேசரத்தை அலி விமானமாகவும் கூறுவர்].

விமானத்தின் கீழ்ப்புறம் முருகனையும, தென்புறம் தக்ஷிணாமூர்த்தியையும், மேற்புறம் விஷ்ணுவையும், வடப்புறம் பிரமனையும் சுதையால் அமைப்பர். விமானத்தின் மேல்பாகத்தில் இடபத்தையாவது பூதத்தையாவது அமைப்பது மரபு.

211. ஆலய அமைப்பு ஆருதாரங்களுக்கும் பொருந்துமாற்றை எழுதுக.

ஆலயத்தின்

1) கர்ப்பக்கிருகம்—மூலாதாரம்
2) அர்த்தமண்டபம்—சுவாதிஷ்டானம்
3) மஹாமண்டபம்—மணிபூரகம்
4) ஸ்தபன மண்டபம்—அனுகதம்
5) அலங்கார மண்டபம்—விசுத்தி
6) சபா மண்டபம்—ஆக்ஞை

என்பவற்றை உணர்த்துகின்றன.

212. திருக்கோயிலில் அமையும் மண்டபங்களின் பெயர்களை எழுதுக.

1. அர்த்த மண்டபம் 2. ஸ்தபன மண்டபம்
3. மகாமண்டபம் 4. நிருத்த மண்டபம்
5. வாத்ய மண்டபம் 6. சோபான மண்டபம்
7. ஆஸ்தான மண்டபம் 8. யாக மண்டபம்
9. புஷ்ப மண்டபம் 10. பூஜா மண்டபம்
11. உத்யான மண்டபம் 12 ஜலக்ரீடை மண்டபம்
13. சுவர்ண மண்டபம் 14. அபிஷேக மண்டபம்
15. அலங்கார மண்டபம் 16. வசந்த மண்டபம்
17. உபசார மண்டபம் 18. பீடாரோஹண மண்டபம்
19. அத்யயன மண்டபம் 20 ஆகம மண்டபம்
21. புராண மண்டபம் 22. தீக்ஷா மண்டபம்
23. துவஜாரோகண மண்டபம் 24. விஜய மண்டபம்
மற்றும் யாகசாலை, பாதசாலை, கோசாலை, கஜசாலை, தான்ய ஆலயம், ரத்னாலயம் முதலியன.

213. அர்த்த மண்டபம் எது?

கருவறைக்கு (மூலஸ்தானத்திற்கு) முன்பு (வெளியில்) உள்ள மண்டபம் அர்த்த மண்டபம் ஆகும்.

214. ஸ்தபன மண்டபம் எது?

அர்த்த மண்டபத்திற்கு முன்பு (வெளியில்) உள்ள மண்டபம் ஸ்தபன மண்டபம் ஆகும்.

215. மகா மண்டபம் எது?

ஸ்தபன மண்டபத்திற்கும். வெளியில் இருப்பது மகா மண்டபம் ஆகும். இங்குத்தான் உண்டியல் போன்றவை இருக்கும்

216. கருவறை-கர்ப்பக்கிருகம் எது?

ஆலயத்தின் மையப் பகுதி கருவறை. நம் இதயத்தில் இறைவன் இருப்பதற்குரிய அடையாளமாக இது கருதப்படுகிறது.

217. கோயிலின் ராஜகோபுரத்தில் பல்வகை உருவச் சிற்பங்களும் அமைவது ஏன்?

கோயிலில் உள்ள கோபுரங்களைவிட இது உயர்ந்ததாக இருக்கும். ஆலயத்தின் முகப்பில் உள்ள இக்கோபுரம் 'ஸ்தூல லிங்கம்' எனப்படும். தொலைவில் உள்ளோரும் கண்டு கைகூப்பித் தொழத்தக்கதாக அமைந்துள்ள இக்கோபுரத்தின் அமைப்பு 3, 5, 7, 9, 11 என்னும் எண்ணிக்கையில் அமைந்த நிலைகளைக் கொண்டதாக இருக்கும். இக்கோபுரத்தில் பல்வகை வடிவங்களும் சிற்பங்களாக இடம் பெறும். பிரபஞ்சத்தின் பிரதிபலிப்பாக இக்கோபுரம் திகழ்வதால்--ஆகம அடிப்படையில் அமைவதால் - எல்லாவகையான நிலையுடைய சிற்பங்களும் இக்கோபுரத்தில் இடம் பெறுகின்றன. இக்கோபுரத்தைத் தொலைவில் காணும் போதே கைகூப்பித் தொழுதல் வேண்டும்.

218. 'பலிபீடம்' என்பதன் சிறப்புங்கருத்தும் யாது?

திருக்கோயிலில் பலிபீடம் என்பது பாசத்தைக் குறிக்கின்றது. இதை ஸ்ரீபலிநாதர் என்பர். ஆலயத்துள்

எட்டு மூலைகளில் எட்டுப் பலிபீடங்கள் அமைந்திருக்கும். இவை எட்டுத்திக்குபாலர்களை உணர்த்துகின்றன. இவைகளுக்கெல்லாம் தலைமைப் பீடமாக உள்ளது நந்தியெம்பெருமானின் பின்பு உள்ள பலி பீடமாகும்.

இங்கு நம்முடைய பாசங்கள் அனைத்தையும் பலியிடுவதாக-இல்லாமற் செய்வதாகக் கருத்து எனவே பாசங்களைப் பலியிட்டு, உள்ளே சென்று பரமனருள் பெறுகிறோம். என்பது கருத்து. எனவே முதலில் இதன் முன்பு நின்று மேற்சொல்லிய பாவனையைக் கொண்டு வணங்கிப் பின்பே உள்ளே தரிசனத்திற்குச் செல்ல வேண்டும்,

219. பலிபீடத்தின் முன் வணங்கும் செயலின் உட்கருத்து யாது?

பலிபீடம் இறைவனின் மாயாசக்கரம். நாம் பிறப்பு இறப்பு என்னும் மாயா சக்கரமான பலிபீடத்தில் மும் முறை வணங்குவதும், அதை உட்படுத்தி வலம்வருவதும், ஸ்தூல சூட்சும காரண சரீரங்களிலிருந்து என்னை விடு விப்பாயாக என்று வேண்டுவதாகும்.

220. நந்தி தேவரின் சிறப்புக்களை எழுதுக.

நந்தி:- எப்போதும் ஆனந்தமாக இருப்பவர்என்பது பொருள். இலிங்கத்தின் முன்பிருந்து அதைப் பார்த்துக் கொண்டு இருப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. இவரே இறைவனிடத்திலிருந்து சிவாகமங்களைத் தெரிந்து நமக்கு அருளிச் செய்தார் என்பது மரபு, ஆகவே இவரே முதற் குரு சைவ சமயத்திற்கு, எனவேதான் "நம் குரு மரபுக் கெல்லாம் முதற் குரு நாதனுகி" என்று திருமூலர் பாடு கின்றார்.

நந்தி தேவருக்கு நெற்றிக்கண்ணும் நான்கு புயங் ளும் கையில பொன் பிரம்பும் உடைவாளும் இரு புயங்

களில் மான் மழுவும் உள்ளது. சிவ பெருமான் சந்நிதியில் இவரே பொன் பிரம்பேந்தி காவல் தொழிலைச் செய்கின்றார். இவருடைய அனுமதி பெற்றே சிவதரிசனம் செய்யவேண்டுமென்பதே மரபு.

221. கர்ப்பக்கிருகத்தினுள் இருக்கும் மூலவருக்கும் அவருக்கு எதிரில் உள்ளே இருக்கும் நந்திக்கும் இடையில் நின்று வணங்கலாமா? கூடாதா ? ஏன் ?

ஆலய ஆகமவிதிப்படி கர்ப்பக்கிருகத்தினுள் இருக்கும் மூலவருக்கும், எதிரில் நந்தி இருக்கும் இடத்திற்கும் இடையில் நின்று வணங்குதல் கூடாது. காரணம், ஆலய சாஸ்திரப்படி மூலவருக்கு முன்னால் உள்ள நந்தி, மூக்கிலிருந்து விடும் மூச்சுக் காற்றினால்தான் கர்ப்பக்கிருகத்திலுள்ள மூலவருக்கு உயிர்நிலை தருவதாகக் கருத்து. இதனால்தான் மூலவரின் வயிற்றுப் பகுதி-- கொப்பூழ் (தொப்புள்) பாகத்தை உயிர்நிலையாகக் கொண்டு அந்த இட மட்டத்தின் நேராக நந்தியின் மூக்கு அமையுமாறு ஆலயங்களில் நந்தி அமைக்கப் படுகிறது. இம்மூச்சுக் காற்று தடைபடாமல் செல்வதற்காகவே குறுக்கே போவதும், இங்கு நின்று, வீழ்ந்து வணங்குவதும் கூடாது என்றனர். சந்நிதி விட்டு அகன்று நிற்றல் என்ற பழக்கமும் இதன் விளைவாக வந்ததே. இன்று பிறருக்கும் தரிசனம் கிடைக்க வேண்டும் என்பதாலும் இப்பழக்கம் கைக்கொள்ளப்படுகிறது

222. கருவறையில் எவ்வெம்மூர்த்திகளுக்கு நேராக எவ்வெவ்வாகனங்கள் பிரதிஷ்டை செய்யப்படும்?

சிவபெருமான்	எதிரில்	நந்தியும்
அம்பாள்	"	சிங்கமும்
விநாயகர்	"	மூஷிகமும்

திருமால் எதிரில் கருடனும்
முருகன் " மயிலும்—பிரதிஷ்டை
செய்யப்படும்.

223. கொடிமரத்தைப் (துவஜஸ்தம்பம்) பற்றி எழுது.

அசுரர்களை அகற்றவும், சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது. சிவன் கோயில் கொடிமரத்தின் மேல்பாகத்தில் நந்தியையும், விஷ்ணு கோயிலில் கருடனையும், தேவி ஆலயங்களில் சிங்கத்தையும், விநாயகர் கோயிலில் மூஷிகத்தையும் முருகன் கோயிலில் மயிலையும் அமைப்பர்.

224. துவஜஸ்தம்பத்தின் அமைப்பு நிலையை விவரி.

கரம், வகுளம், தாலம், ஹிந்தாளம் ஆகிய மரங்களிலிருந்து துவஜஸ்தம்பம்—கொடிமரம் தயாரிக்கப்படும் கருங்காலி, தேவதாரு இவற்றையும் கொள்வர்.

கொடிக்கம்பத்தின்–துவஜஸ்தம்பத்தின் 1/5 பாகம் பூமியிலிருக்கும்படி நடுவர். இதன் அடியிலிருந்து உச்சி வரை 7 பாகமாக்கி, சதுர, கோண வ்ருத்த வடிவங்களில் அமைப்பர்.

சதுரபாகம் பிரம்ம பாகமாகும். அதன்மேல் விஷ்ணுபாகம் எண்கோண வடிவம், அதன் மேலுள்ளது ருத்ரபாகம்.

இதன் பீடம் பத்ரபீடம் எனப்படும். இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு மனத்தைப் பலியிட வேண்டும் என்பதற்காக—ஆன்மாவைப் பாசக்கயிறு சுற்றியுள்ளதை நினைப்பூட்டும் வகையில்—துவஜஸ்தம்பத்தில் கயிறு சுற்றியிருக்கும்,

225. கொடிமரத்தைப் பிரதிஷ்டை செய்வதன் கருத்து யாது?

அசுரர்களை அகற்றவும், சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், பக்தர்களைக் காக்கவும் கொடிமரம் பிரதிஷ்டை செய்யப் படுகிறது. மூல லிங்கத்திற்குச் செய்யும் அபிஷேகம் அலங்காரம் முதலிய அனைத்தும் கொடிமரத்திற்கும் செய்யவேண்டும்.

கொடிமரத்தில் 33-கணுக்கள் இருப்பது நல்லது. நீளம் ஆலயத்திற்கு ஏற்றதாக இருக்கும்.

226. ஆலய விழாக்களில் முதல் நாளில் கொடி யேற்றுவதன் கருத்து யாது?

கொடியேற்றுவது (துவஜாரோகணம்) ஆகம விதிப்படி நடைபெறுவதாகும். கொடி மரம்—சிவபெருமான். கொடிக் கயிறு—திருவருட் சக்தி. கொடித் துணி—ஆன்மா. தர்ப்பைக் கயிறு—பாசம்'

மும்மலவயப்படும் ஆன்மா. திருவருட்சக்தியினாலே பாசம் அற்று, 'சிவஞான வடிவமாகிய பதியின் திருவடியை அடைதல் என்னும் முறையை இச்சம்பவம் காட்டுகிறது

[த்வஜம் = கொடி, ஆரோகணம் = மேலே ஏறுதல்]

227. கொடி மரத்திற்கு ஏற்ற மரவகைகள் எவை?

சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழ் முதலிய மரங்கள் ஆகும். இவை உத்தமம். பலா, மா, முதலிய மரங்கள் மத்திமம். கமுகு, தென்னை, பனை முதலிய மரங்கள் அதமம்.

228 ஒவ்வொரு கோயிலிலும் தலமரம் இருப்பது ஏன்?

பண்டைநாளில். ஆகம சாஸ்திர முறையில் கட்டப் பட்ட கோயில்கள் எல்லாம், இன்று நாம் வெற்று

நிலத்தில் கட்டுகிற கோயில்களைப் போலக் கட்டப் பட்டவை அல்ல. இடத்தின் விசேஷம், தீர்த்தத்தின் விசேஷம், ஏதேனும் ஒரு அற்புதம் நிகழ்ந்த இடம், எவரேனும் சித்தி பெற்ற-இறையருள் பெற்ற இடம், எவருக்கேனும் இறைவன் காட்சி தந்த இடம், தேவர், முனிவர், மகரிஷி போன்றோர் தவஞ் செய்த இடம் முதலிய சிறப்பு வாய்ந்த இடங்களிலேதான் கட்டப் பட்டன,

பண்டை நாளில் மகரிஷிகள் முதலியோர் மரங்களின் அடியில்தான் தவம்/தியானம் செய்தனர். எந்தெந்த மரங்களின் அடியில் தவஞ் செய்தால் எந்தெந்த அளவுக்குப் பலன் சித்திக்கும்; எந்தெந்த மரங்களின் அடியிலிருந்து எந்தெந்த மந்திரங்களை உச்சரிக்க வேண்டும், எந்தெந்த தேவதைகளைத் தியானிக்க வேண்டும் என்றெல்லாம் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. அந்தந்த முறைகளில், எந்தெந்த தலத்தில் யார் யார் எவ்வெவ்மரத்தின் கீழிருந்து தவம்/தியானம் செய்து சித்தி பெற்றார்களோ அவ்வத் தலத்திலுள்ள அவ்வவ் மரங்களெல்லாம் தலமரங்களாகப் போற்றப்பட்டு - வழிபடப்பட்டு வருகின்றன.

தலத்துக்குரிய மரம் தலமரம் (ஸ்தல விருக்ஷம்) என்று பெயர் பெற்றது.

229. கோயிலில் உள்ள மூர்த்தங்களின் சிறப்பைக் கூறு?

பசுவின் உடம்பில் பால் முழுவதுமாகப் பரவியிருந் தாலும் மடிக்காம்புகள் வழியே நமக்குப் பால் கிடைப்பது போல, இறைவனருள் எங்கும் பரவியிருப் பினும் நமக்குக் கோயிலில் உள்ள மூர்த்தங்களின் வழியாகவே கிடைக்கிறது. ஆதலின் ஆலயம் சென்று இம் மூர்த்தங்களை வழிபட வேண்டியதும் அவைகளுக்குச் செய்ய வேண்டிய பூஜைகள், வழிபாடுகள்

முதலியவற்றைத் தவருமல் முறையாகச் செய்ய வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

230. கோயிலில் பிராகாரங்களை வலம் வருவதன் சிறப்பைக் கூறுக.

கோயிலில் பிராகாரங்கள் 3, 5, 7 என்ற எண்ணிக்கையில் அமைந்திருக்கும். 3 பிராகாரங்கள்-(1) அன்னமயம் (2) பிராணமயம் (3) மனோமயம் ஆகிய மூன்று கோசங்களை உணர்த்துகின்றன. 5 பிராகாரங்கள் இவற்றுடன் (1) விஞ்ஞானமயம் (2) ஆனந்தமயம் ஆகியவற்றையும்; 7 பிராகாரங்கள் இவ்வைந்துடன் (1) ஸ்தூலம் 2) சூட்சுமம் ஆகியவற்றையும் உணர்த்துகின்றன. பிராகாரங்களை வலம் வருவது இக்கோசங்களைக்கடந்து இறைவன் விளங்குகின்ருன் என்பதை நினைவூட்டுகிறது. பிராகாரங்களைவலம்வந்து, கடந்து சென்று மூலவரைத் தரிசிப்பது, இக்கோசங்களைக் கடந்து இறைதரிசனமும் அருளும் பெறுகிறோம் என்பதைக் குறிப்பதாகும்.

231. எவ்வெக் கடவுளர்க்கு எவ்வெத்தனை முறை வலம் வரவேண்டும்?

விநாயகருக்கு ஒருமுறையும், சூரியனுக்கு 2முறையும், சிவனுக்கு மூன்றுமுறையும் அம்பிகைக்கும் திருமாலுக்கும் நான்குமுறையும் அரசமரத்தை ஒருமுறையும் வலம் வர வேண்டும். இவை குறைந்தபட்ச அளவு. ஒருகுறிப்பிட்ட பயனைக் கருதி வலஞ்செய்வோர் அதிகபட்சமாக 21, 108 என்ற எண்ணிக்கையில் வலம் வரலாம்.

" ஏகம் விநாயகே ப்ரோக்தம் த்வேசூர்யே த்ரீணி சங்கரே சத்வாரி தேவ்யா விஷ்ணோச்ச ஸப்தாச்ரவத்தே ப்ரதக்ஷிணம்". (சகலாகம சார சங்கரஹம்)

232. அடி தண்ட ப்ரதக்ஷிணம் (வலம்) என்பது யாது?

உடம்பு தரையில் படும்படி படுத்துக் கொண்டே வலம் வருவது - பிரதக்ஷிணம் செய்வது அங்க ப்ரதக்ஷிணம் ஆகும். ஓர் அடிக்கு ஒருமுறை நமஸ்காரம் செய்து (கைகூப்பி வணங்கி) வலம் வருவது அடித் தண்ட பிரதக்ஷிணம் எனப்படும்.

233. பூசைகளின் வகைகளை விவரி

பூசை இருவகைப்படும்

1. **ஆத்மார்த்த பூசை:-** தீட்சை பெற்றோர் வீட்டில் செய்வது.

2 **பரார்த்த பூசை:-** அரசன், நாடு, மக்கள், உயிர்கள் இவர்கட்கு நலன்கள் விளைய ஆலயத்தில் செய்யப்படும் பூசை.

பரார்த்த பூசை 1) நித்யம் 2) நைமித்யம் 3. காமியம் எனப்படும்.

நித்ய பூசை 1) நித்யம் 2) ஆகந்துக நித்யம் என இருவகைப்படும். நாடொறும் செய்யும் பூஜை:- நித்யம். மாதாந்திர விசேட பூசை—ஆகந்துக நித்யம் எனப்படும்.

234. நித்திய, நைமித்திய, காமிய பூஜைகள் என்பவை யாவை?

1. **நித்திய பூஜை:-** நாள்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பூஜைகள்.

2. **நைமித்தியம்:-** ஒரு காரியத்தின் நிமித்தமாகச் செய்யும் பூஜைகள் (கிரஹண காலம், தீட்டு,

ஆசாரங்கெடல் முதலிய காலங்களில் அவற்றின் நிமித்தமாகச் செய்யப்படும் பூஜைகள்,

3. **காமியம்:-** காம்யம் = விருப்பம். ஒரு விருப்பத்தின் பொருட்டு—பலனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பூஜைகள்.

வேள்வியிலும் இம்முறைகளுண்டு. அன்றாடம் செய்யும் அக்னி ஹோத்ரம்; வருஷத்திற்கொரு முறை, விசேஷமாக உள்ளதைச் செய்தால்தான் நித்தியம் பூரணமாகும் என்று வருவதனைச் செய்வது, பலனை எதிர்பார்த்துச் செய்வது என மூன்றுகும். யாகத்தைக் கர்மா என்று சொல்வர்.

235. சிவபூசைக்கான சிறப்பான வார நைவேத்யங்கள் யாவை?

ஞாயிறு—பாயசன்னம்
திங்கள்—வெண்பொங்கல்
செவ்வாய்—எள்ளன்னம்
புதன்—சர்க்கரைப் பொங்கல்
வியாழன்—தயிரன்னம்
வெள்ளி—சுத்தன்னம்
சனி—உளுந்தன்னம்

236. அபிஷேகம் செய்வதன் கருத்து யாது?

திருவருள் ஞானமே, நீர்எனப் பாவித்து, மருள் ஞானமே மலம் ஆதலால் அம்மல அசுத்தத்தை அருள்நீர் கொண்டு சுத்தி செய்தல் என்னும் பாவனையே அபிஷேகம் செய்வதன் உட்கருத்தாகும்.

237. அபிஷேகப் பொருள்கள் அருளும் பலன்களை எழுதுக.

எண்ணெய்—சுகம்
மாப்பொடி—கடன் போக்குதல்

நெல்லி முள்ளிப் பொடி—வியாதி நீக்கம்
மஞ்சள் பொடி—வசிகரணம்
பஞ்சகவ்யம்—தூய்மை
பஞ்சாமிர்தம்—ஜயம்
பால்—ஆயுள்
தயிர்—மக்கட்பேறு
நெய்—முத்தி
தேன்—சுகம், இனியகுரல்
கரும்பின் சாறு—பிணி நீக்கம்
உரித்த வாழைப்பழம்— பயிர் வளர்த்தல்
எலுமிச்சை முதலிய பழச்சாறு—எமபயம் நீக்கம்
இளநீர்—போகம்
சந்தனம்—லட்சுமிகரம்
கும்பம்—குற்றம் பொறுத்தல்

238. எவ்வெக் காலங்களில் தரிசிப்பது கூடாது?

காலையில் கோயிலைத் திறந்தவுடன் உடனே சென்று தரிசிக்கக்கூடாது. சிவாசாரியார் முதலில் சென்று தீபமிட்டு, தீபாராதனை செய்த பிறகே நாம் சென்று தரிசிக்க வேண்டும்.

அவ்வாறே திரை போட்டிருக்கும் காலங்களிலும், ஆடையின்றி அபிஷேகம் செய்யும் போதும், சந்நிதியில் தீபம் இல்லாதபோதும் தரிசிக்கக்கூடாது.

பரிசுத்தமான இடமான கோயிலுக்குச் சென்று வீடு திரும்பி வந்ததும் உடனே கால்களைக் கழுவக்கூடாது. சிறிது நேரம் உட்கார்ந்த பின்பு கால்களைக் கழுவிக் கொள்ளலாம்.

239. அபிஷேகக் காலத்தில் வலம் வந்து வணங்கலாமா?

அபிஷேகக் காலத்தில் உட்பிராகாரத்தில் வலம் வந்து வணங்கலாகாது. அபிஷேகம், நிவேதனம்

முதலியவை நடைபெறும்போதும், திரை போட்டிருக்கும்போதும், சுவாமியைத் தரிசனம் செய்யலாகாது.

240 அபிஷேக தீர்த்தம் பெற்று உட்கொண்ட பின்பு சிலர் கைகளைத் தலையில் தடவிக் கொள்வது ஏன்?

அபிஷேக தீர்த்தம் மிகவும் உயர்ந்ததும் புனிதமானதும் ஆகும். இதை இருகைகளாலும் பெற்று அப்படியே உட்கொள்ள வேண்டும். அவ்வாறு பெறும் போது விரல்கள் இடுக்கில் கீழே சிந்தாமலிருக்க வேண்டும் என்பதற்காக, கைகளின் அடியில் துணியை வைத்துப்பிடிக்கும் பழக்கம் ஏற்பட்டது.

உட்கொண்டபின்பு கைகளில் ஒட்டி இருக்கும் நீரும் கீழே சிந்தாதிருக்க வேண்டும் என்பதால் கைகளையே ஒன்றின் மீது ஒன்றாகத் தேய்த்துக் கொள்வதும், கைகளைத் தலையில் தடவிக்கொள்வதும் ஆகிய பழக்கங்கள் ஏற்படலாயின அபிஷேகதீர்த்தம் சிறிதும் கீழே சிந்தலாகாது என்பதே இவற்றின் அடிப்படை.

241. ஆன்ஐந்து (அ) பஞ்ச கவ்யம் என்பது யாது?

பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம் (கோஜலம்) சாணம் (கோமயம்) என்ற ஐந்தும் சேர்ந்தது பஞ்சகவ்யம் எனப்படும். பசுவினிடத்திலிருந்து இவை ஐந்தும் கிடைப்பதால் ஆன் ஐந்து என்று வழங்கப்படுகிறது.

242. சிவராத்திரியில் காலங்கள்தோறும் இறைவனுக்குச் செய்ய வேண்டிய அபிஷேக ஆராதனை முறைகளை எழுது.

முதல் யாமம் :- பஞ்சகவ்ய அபிஷேகம், சந்தனப் பூச்சு, வில்வம், தாமரை அலங்காரம். அர்ச்சனை, பச்சைப் பயற்றுப்பொங்கல் நிவேதனம், ருக்வேதம் பாராயணம்

இரண்டாம் யாமம்.- சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த ரஸபஞ்சாமிர்தம் அபிஷேகம், பச்சைக்கற்பூரம் பன்னீர் சேர்த்து அரைத்துச் சார்த்துதல், துளசி அலங்காரம், தாமரை அர்ச்சனே, பாயசம் நிவேதனம், யஜுர்வேதம் பாராயணம்.

மூன்றும் யாமம் :- தேன் அபிஷேகம், பச்சை கற்பூரம் சார்த்துதல், மல்லிகை அலங்காரம், வில்வம் அர்ச்சனே, எள் அன்னம் நிவேதனம், சாமவேதம் பாராயணம்.

நான்காம் யாமம் :- கருப்பஞ்சாறு அபிஷேகம், நந்தியாவட்டை மலர் சார்த்துதல், அல்லி, நீலோற்பலம், நந்தியாவர்த்தம் அலங்காரம் அர்ச்சனே, சுத்தான்னம் நிவேதனம், அதர்வணவேத பாராயணம்.

243. ஆலயத்தில் செய்யப்படும் அபிஷேகங்களுக்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் தரப்பட்டு வெளியாகியுள்ள செய்தி -

விஞ்ஞானம் முடிகிற இடத்தில் மெய்ஞ்ஞானம் தோன்றுகிறது என்பது அனுபவசாலிகள் கண்டறிந்து கூறிய உண்மை. விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானம்: மெய்ஞ்ஞானத்தின் பயன் மனிதனின் இன்ப வாழ்வு என்பதை விளக்குவதை ஒருதிட்டமாகவே எடுத்துக்கொண்டு அதனே ஆய்ந்து வருகிறது குற்றுலத்தில் அமைந்துள்ள ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி. 'ஆலயங்கள் விஞ்ஞான உண்மைகளுக்கு விளக்கம் தரும் ஆய்வுக் களங்கள்' என்பது இக்கல்லூரி ஆய்ந்து கண்டறிந்த முடிவாகும். விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் இடையே அமைக்கப்பட்ட ஒரு பாலமாக ஆலயம் அமைந்துள்ளது என்பதை நேரில் விளக்கிக் காட்டும் பணியை இக்கல்லூரி இப்போது செய்து வருகிறது. சென்னே சுற்றுலா வர்த்தகப்பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ள அறநிலேயத்துறை காட்சிக் கூடத்தில் இந்த நேர்முக விளக்கம் தரப்படுகிறது.

அந்தக் காட்சிக் கூடத்தில் ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஒத்ததிர்வுறும் காற்று மண்டலம் குறிப்பிட்ட அதிர்வெண்ணுடைய ஒலிக்குப் பெரும் ஓசை எழுப்பவல்லது என்பது விஞ்ஞான ரீதியான உண்மை. ஆகம, சிற்ப சாத்திரங்கள் விக்கிரகத்தின் உயரத்திற்கேற்ப கர்ப்பக் கிருகத்தின் உள் அளவை வரையறுத்துள்ளன. 'ஓம்' என்ற ஒலிக்கு கர்ப்பக்கிருகத்திலுள்ள காற்று மண்டலம் ஒத்ததிர்வுறும்படி கர்ப்பக் கிருகத்தின் உள்ளளவு அமைக்கப்படுகிறது. அப்பொழுது காற்றின் ஒவ்வொரு மூலக்கூறும் பெரும் வீச்சுடன் ஒத்ததிர்வுறும். இதனைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இந்த காட்சிக்கூடத்தில் விளக்கிக் காட்டுகிறார்கள்.

இரும்புத்துண்டு மீது கட்டையால் ஓங்கி அடித்து ஓசை எழுப்புகிறார்கள். கர்ப்பக்கிருகத்துக்கு வெளியே இந்த ஓசை கேட்பதில்லை. தட்டப்பட்ட இரும்புத் துண்டில் அதிர்வுகளை மிகவும் நுணுக்கமாகப் பார்த்தால் புலப்படுகிறது. இதே இரும்புத் துண்டின்மீது கட்டையால் தட்டி, பின் அந்த இரும்புத் தகட்டைக் கர்ப்பக் கிருகத்தினுள் கொண்டு சென்றபோது 'ஓம்' என்ற ஓசை மிகத் தெளிவாக வெளியே கேட்கிறது. ஓசை ஒலியெல்லாம் ஆன இறைவனின் திருக்கூத்தை இப்படி விஞ்ஞான விளக்கத்துடன் நேரில் கண்ட நாத்திகர் ஒருவர் நான் நாத்திகன்! ஆனால் விஞ்ஞான ரீதியான இந்த விளக்கத்தை நேரில் கண்டு தெளிந்ததன் காரணமாக ஒரு ஹிந்து என்று நான் இனி என்னைப் பெருமையுடன் கூறிக்கொள்வேன்" என்று பார்வையாளர் புத்தகத்தில் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

கோயில்களில் நாள்தோறும் செய்யப்படும் அபிடேகம் அர்ச்சனை ஆராதனை ஆகியவை விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் எவ்வாறு இணைக்கிறது என்பதும் இந்தக்காட்சிக் கூடத்தில் விளக்கப்படுகிறது. ஆலயங்களில் மூல விக்கிரகத்திற்கு அபிடேகம் செய்யும்போது

என்னென்ன மாறுபாடுகள் நிகழ்கின்றன என்பதை விளக்குவதற்காக கற்சிலைக்குத் தண்ணீர், எண்ணெய், பால், தேன், தயிர், குங்குமம், விபூதி ஆகியவை கொண்டு அபிடேகம் செய்தனர். அப்பொழுது அந்தச் சிலையில் அபிடேகம் செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் மின் கடத்தும் திறன் மாறுபடுவதைக் காண முடிந்தது.

தயிர், பால், தண்ணீர், சந்தனம் ஆகிய அபிடேகங்களின் போது சிலையின் மின் கடத்தும் திறன் அதிகமாயிருந்தது. எண்ணெய், தேன், விபூதி, குங்குமம், பூ ஆகியவற்றால் அபிடேகம் செய்தபோது சிலையின் மின் கடத்தும் திறன் குறைந்திருந்தபோதிலும் நிலையாக இருந்தது குறிப்பிடத் தக்கது. அதுபோலவே தீப ஆராதனை செய்தபோதும் சிலையின் மின் கடத்தும் திறன் நிலையாக இருந்தது. சந்தனம், மஞ்சள், தண்ணீர் ஆகியவற்றைக்கொண்டு அபிடேகம் செய்வதால் கர்ப்பக்கிருகத்திலுள்ள காற்று மண்டலத்திலும் எதிர் மின்னூட்டங்கள் அதிகரிக்கும் என்பதும் விளக்கப் பட்டது காற்றிலுள்ள எதிர் மின்னூட்டங்கள் உயிர் வாழ்விற்கு இன்றியமையாதவை. அவற்றைப் பெற வேண்டின் கடற்கரைக்கும் மலைவாச ஸ்தலங்களுக்கும் அருவிக்கரைகளுக்கும் மக்கள் செல்ல வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஈரப்பதம் உள்ள காற்று மண்டலத்தின் பிராணவாயு அழுத்தம் அதிகரிக்கிறது. அந்தக்காற்று மண்டலம் பிராணவாயு மூலக்கூறுகளை அதிக அளவில் பெறுவதால் அக்காற்று உடலுக்கு நன்மை பயக்கும். இது விஞ்ஞானம் கூறும் உண்மை, மேலும் ஒளியின் திசை வேகம் ஈரப்பதம் மிக்க காற்றில் அதிகமாக இருக்கும் என்பது விஞ்ஞான உண்மை. எதிர் மின்னூட்டமும், ஈரப்பதமும் உள்ள காற்று மண்டலம் கர்ப்பக்கிருகத்துள் அமைந்துள்ளது. அந்தக் காற்று மண்டலத்துள் 'ஓம்'

என்ற ஒலியுடன் அர்ச்சனை செய்யும்போது. அவ்வொலி விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கப்படுகிறது. இதனால் அக்காற்று மண்டலம் பெரும் அலைவும், ஒத்ததிர்வும் பெறுகிறது இக்காற்று மண்டலத்தின் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகள், எதிரேயுள்ள பக்தர்களை அடையும் போது, அவர்களது உள்ளத்தை வளப்படுத்துவதற்கு அடிப்படையான உடல் நலத்தை அளிக்கும் என்பது விஞ்ஞானம் தந்திடும் விளக்கமாகும். இந்த விஞ்ஞான உண்மையை அன்றே அறிந்திருந்த நம் முன்னோர்கள் குன்றுதோறும் கோயிலையும், கடற்கரைகளில் ஆலயங்களையும் அமைத்ததோடல்லாமல் அருவிக்கரைகளையும் புண்ணியத் தீர்த்தங்களாக்கி வழிபட்டு வந்தனர்.

ஆலயங்களுக்குச் செல்பவர்கள் மேலே சொன்ன பலனைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்காகத்தான் ஆலயங்களில் ஆறுகால அபிடேகங்களும், ஆராதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் விக்கிரகத்தில் அதிர்வுகள் தொடர்ந்து நிலைத்திருக்கின்றன. இவ்வதிர்வுகள் விக்கிரகத்துக்கு அடியிலுள்ள தாமிரத்தகட்டில் ஆற்றலாகச் சேமிக்கப் படும் என்பதை நிருபிக்கும் வகையிலும் ஆராய்ச்சிகளை இக்கல்லூரி தொடரவிருப்பதாக அதன் முதல்வர் செல்வி பாகீரதி கூறினர்.

இந்து சமயத்தின் ஆலய வழிபாடு விஞ்ஞானப் பாதையில் மெய்ஞ்ஞானத்தைப் படைக்கும் ஒரு சிறந்த சாதனம் என்பதை இக்கல்லூரியின் ஆராய்ச்சி தெளிவுபடுத்தி வருகிறது. [ஆதாரம்-தினமணி சுடர் அநுபந்தம்].

244. நடராஜர் அபிஷேகத்திற்குரிய சிறப்பு நாள்கள் எவை?

1) சித்திரை—திருவோண நட்சத்திரம்
2) ஆனி—உத்தர நட்சத்திரம்

3) ஆவணி—வளர்பிறை சதுர்த்தி
4) புரட்டாசி—வளர்பிறை சதுர்த்தி
5) மார்கழி—திருவாதிரை
6) மாசி—வளர்பிறை சதுர்த்தி

ஆனி, மார்கழி மாதச்சிறப்பு நாள்களில் காலை அபிஷேகம்—தரிசனம். மற்ற 4 மாதங்களிலும் மாலை அபிஷேகம்—தரிசனம்.

245. வைதிக பூஜை நடைபெறும் தலங்கள் சில கூறுக.

1. திருஒற்றியூர் (சென்னை)
2. இராமேஸ்வரம்
3. காஞ்சிபுரம் (காமாட்சியம்பாள் கோயில்)
4. திருஆனைக்கா (அகிலாண்டேஸ்வரி ஆலயம்)
5. ஆவுடையார் கோயில்
6. திருச்செந்தூர் (மூலவர்)
7. கன்னியாகுமரி அம்மன் கோயில்
8. சிதம்பரம்
9. தஞ்சை (பங்காரு காமாட்சியம்மன் கோயில்)

இங்கெல்லாம் ஆகம முறைப்படி அன்றி, வேத முறைப்படி வழிபாட்டு முறைகள் நடைபெற்று வருகின்றன. மகாராஷ்டிரம் முதல் வட இந்தியா முழுவதும் வைதிக முறைப்படியே (வேத மந்திரம் பிரதானம்) பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

246. ஆறுகால பூஜைகள் யாவை?

1. உஷத்காலம்
2. காலசந்தி
3. உச்சிக்காலம்
4. சாயரட்சை
5. பிரதோஷம்
6. அர்த்த சாமம்

247. பூஜை முறைகளில் சொல்லப்படும் ஐவகை சுத்திகள் (பஞ்ச சுத்திகள்) யாவை?

1. **ஆத்மசுத்தி:-** பூஜைசெய்பவர் தன் உடம்பைத் திருக்கோயிலில் உள்இருக்கும் திருமேனிபோலச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்

2. **ஸ்தான சுத்தி:-** பூஜிக்கும் இடத்தைச் சுத்தப் படுத்துதல்.

3. **திரவிய சுத்தி:-** பூஜைக்குரிய பாத்திரங்களை நன்கு கழுவி, பூஜைக்குரிய பொருள்களில் அர்க்கிய நீரைத் தெளித்துச் சுத்தமாக்கி வைத்தல்.

4 **மந்திர சுத்தி:-** மூல மந்திரத்தை முறைப்படி ஜபித்தல்

5. **இலிங்க சுத்தி:-** அபிஷேக பாத்திரத்தில் நீர் நிரப்பி, அதில் தீர்த்தங்களை ஆவாஹனம் செய்து, இலிங்கத்தை அபிஷேகம் செய்து—சுத்தமான ஆடை உடுத்த வேண்டும்.

248. இறைவனுக்குப் பூஜையில் செய்யப் படுகின்ற பதினாறு வகையான உபசாரங் கள் (ஷோடசோபசாரம்) யாவை?

1) தியானம் 2) ஆவாஹனம் 3) ஆசனம்
4) அர்க்கியம் 5) ஆசமனம் 6) அபிஷேகம்
7) வஸ்திரம் 8) சந்தனம் 9) அலங்காரம், அர்ச்சனை
10) தூபம் 11) தீபம் 12) நிவேதனம் 13) ஆரத்தி
14) புஷ்பாஞ்சலி 15) வலம்வரல்
16) பிழை பொறுக்க வேண்டுதல் என்பன.

249. ஐவகை உபசாரங்கள் யாவை?

கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் என்பன.

250. பஞ்சாயதன பூஜையாவது யாது?

ஒரே பரம்பொருளின் பல்வேறு சகுணத் தோற்றங்களே இன்று நாம் வணங்கும் அனைத்துத் தெய்வங்களும் ஆகும். பரம்பொருளின் ஆற்றல் கணபதி. சூரியன், சிவன், சக்தி, விஷ்ணு போன்ற பல்வேறு நிலைகளில் வெளிப்படுகிறது. இதனையே இந்துக்கள் ஐந்து தேவதைகளாக வைத்து வழிபடுகிறார்கள். இதற்குப் பஞ்சாயதன பூஜை என்று பெயர்.

251. பஞ்சாயதன பூஜையில் பயன்படுத்தும் (விக்ரஹ) கற்கள் யாவை?

பாணலிங்கம், ஸ்வர்ணமுகிக்கல், சாளக்கிராமம் ஸ்படிகம், சோணபத்ரம் முதலியன.

நர்மதை நதியில் ஓங்கார குண்டத்தில் கிடைக்கும் பாணலிங்கத்தைச் சிவனாகவும், ஸ்வர்ணமுகி நதியில் கிடைக்கும் ஸ்வர்ணமுகி சிலா என்ற கல்லைச் சக்தியாகவும் (இந்தக்கல்லில் ஸ்வர்ண ரேகை காணப்படும்), நேபாளத்திலுள்ள கண்டகி நதியிலிருந்து கிடைக்கும் சாளக் கிராமத்தை விஷ்ணுவாகவும், தஞ்சைக்கு அருகில் கிடைக்கும் ஸ்படிகத்தைச் சூரியனாகவும். சோணபத்ர ஆற்றில் காணும் சோணபத்திரக்கல்லைக் கணபதியாகவும் உரிய இடத்தில் வைத்துப் பூஜித்து வந்தனர். இது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.

252. 'பாரத தேசமே ஒரு பஞ்சாயதன வடிவம்' என்பதன் கருத்து யாது?

பஞ்சாயதன பூஜையில்; மத்தியில் வைக்கப்படும் (சிவன் அம்சம்) பாணலிங்கம் நர்மதையில் கிடைக்கிறது. ஈசான திசையில் வைக்கப்படும் சாளக்கிராமம் (விஷ்ணு அம்சம்) நேபாளத்தில் கிடைக்கிறது. சூரியன் வடிவான ஸ்படிகம் தஞ்சைப் பகுதியிலும், கணபதி வடிவமான

சோணபத்திரம் அமரகண்டத்திலும் (நர்மதையின் தென்மேற்கில்), சக்தி வடிவமான சுவர்ணமுகி, காஷ் மீரத்திலும் கிடைக்கிறது. இதனுல் பாரத தேசமே ஒரு பஞ்சாயதன வடிவில் அமைந்துள்ளது என்பர்,

253. சுவாமியின் அலங்காரத்திற்குரிய ரத்தினங்கள் எவை?

மாணிக்கம், முத்து, பவழம், மரகதம், புஷ்பராகம், இந்திரநீலம் முதலியன.

254. பூசைக்குரிய பத்திரங்கள் எவை?

துளசி, மகிழம், சண்பகம், தாமரை, வில்வம், மருக்கொழுந்து, தர்ப்பை, அறுகு, விஷ்ணுகிரந்தி, நெல்லி முதலிய இவற்றின் பத்திரங்கள் பூசைக்குரியவைகள் ஆகும்.

255. அருச்சனைக்குரிய பத்திரங்கள் எவை எவை? அவைகளுள் மிகச்சிறப்புடையது எது?

வில்வம், துளசி, மருக்கொழுந்து, நொச்சி. கரந்தை, மாசிப்பச்சை, கதிர்பச்சை, எலுமிச்சை கிளுவை, வன்னி, மாவிலங்கை, விளாமிச்சை, இலந்தை முதலிய பலவகைப் பத்திரங்கள் உள்ளன. இப்பத்திரங்கள் மலர்களுக்குச் சமமாகக் கருதப்படுவதால் இவைகளும் அருச்சனைக் குரியவை. இவைகளுள் மிகவும் உயர்ந்ததாகக் கொள்ளப்படுவது "வில்வ பத்திரம்". வில்வம் சிவ சொருபமே இது பூசிப்பவரையும் புனிதமாக்கும், வில்வார்ச்சனைப் பயன் அளவிறந்தது.

நோயறவேண்டினும் நோன்மை வேண்டினும்
மாயிரும்புவி அடிவணங்க வேண்டினும்
தூயவிண் வேண்டினும் துறத்துமும்மலம்
ஒயநன்முத்தியை உதவும் வில்வமே"—

பேரூர்ப்புராணப்பாடல்.

256. வில்வத்தின் சிறப்பைக் கூறுக.

வில்வத்தில் லக்ஷ்மி வாசம் செய்கிறுள். ஒரு வில்வ தளம் லட்சம் ஸ்வர்ண புஷ்பத்துக்குச் சமம். ஒரு வில்வ தளம் சிவனுக்கு அர்ப்பித்தால் மகாபாவங்கள் விலகிச் சகலக்ஷேமங்களும் உண்டாகும். மாதப் பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி நாள்களில் வில்வம் பறிக்கக்கூடாது.

இந்நாள்களில் பூஜைக்குத் தேவைப்படும் வில்வத்தை முன்நாள் மாலை வேளையிலேயே பறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

257. எவ்வெவர்க்கு எவ்வெம் மலர்கள் ஆகாதவை?

விநாயகருக்கு—துளசியும்
தேவிக்கு—அறுகும் (அறுகம்புல்)
சூரியனுக்கு—வில்வமும்
விஷ்ணுவுக்கு—எருக்கம்பூவும், ஊமத்தம்பூவும்
—ஆகாதவை.

விநாயகருக்குத் துளசி ஆகாதது என்று பொதுவாக்க் கூறப்பட்டுள்ளது. ஆனல் விநாயக சதுர்த்தி அன்று மட்டும் விநாயகரை அர்ச்சிக்கத்தக்க 21 வகை பத்திரங்களுள் துளசியும் ஒன்ருக - சிறப்பாகச் சொல்லப் பட்டுள்ளது.

258 நால்வகைப் பூக்கள் எவை?

1. கோட்டுப் பூ — கொன்றை, சண்பகம், மகிழம், மந்தாரை, பாரிசாதம், பாதிரி முதலியவை.
2. கொடிப் பூ — முல்லை, மல்லிகை, இருவாட்சி முதலியவை.
3. நீர்ப் பூ — தாமரை, நீலோற்பலம் முதலியவை.
4. நிலப் பூ — தும்பை முதலியவை.

[நள்ளிரவில் பூத்து மணம் வீசுவதால் **இருள்வாசி** என்று பெயர் பெற்ற மலரின் பெயர் இன்று உலக வழக்கில் **இருவாட்சி** என வழங்குகிறது]

259. கோட்டுப் பூக்கள் சிலவற்றைக் கூறுக.

கொன்றைப்பூ, செண்பகப்பூ, புன்னைப்பூ, மகிழம்பூ செங்கழுநீர்ப் பூ, பாரிசாதம், பன்னீர்ப் பூ, குராப்பூ, பாதிரிப்பூ முதலியவை கோட்டுப் பூக்கள் வகையைச் சேர்ந்தவை. கோட்டுப்பூக்களில் கொன்றைப்பூ சிறந்தது. குராமரத்தின் பூ (குராப்பூ) முருகனுக்கு மிகவும் விசேஷமானது.

260. கொடிப் பூக்கள் சிலவற்றைக் கூறுக.

தாளி, முல்லை, மல்லிகை, இருவாட்சி, பிச்சிப் பூ முதலியவை கொடிப்பூக்கள் வகையைச் சேர்ந்தவை. இவற்றுள் மிகவும் உயர்ந்தது தாளிப்பூ.

261. நீர்ப்பூக்கள் சிலவற்றைக் கூறுக.

செந்தாமரை, வெண்டாமரை, செங்குவளை, கருங்குவளை, நீலோற்பலம் முதலிய மலர்கள் நீர்ப்பூக்கள் வகையைச் சேர்ந்தவை.

இவற்றுள் நீலோற்பலம் மிகவும் உயர்ந்தது.

262. நிலப்பூக்கள் சிலவற்றைக் கூறுக.

தும்பை, புலிநகக் கொன்றை, அடுக்கு அலரி, மாதுளை, வெள்ளை அலரி, மந்தாரை, வெட்சி, செவ்வலரி சூரியகாந்தி, செவ்வந்தி, வெள்ளெருக்கு, நந்தியாவட்டம் பொன்னவரை, வெள்ளை ஊமத்தை முதலியவை நிலப் பூக்கள் வகையைச் சேர்ந்தவை. இவற்றுள் மிகவும் உயர்ந்தது தும்பைப்பூ ஆகும்.

263. பஞ்ச வில்வங்கள் என்பன எவை?

1) வில்வம், 2) கிளுவைப் பத்திரம், 3) மாவிலங்கை
4) விளா, 5) நொச்சி.

264. மலர்களின் தன்மைகளை எங்ஙனம் பிரித்துக் கூறியுள்ளனர்?

1. வெண்மலர்கள் சத்துவ குணம் உடையன.

2 செம்மலர்கள் ரஜோ குணம் உடையன,

3. கரிய மலர்கள் (நீலோற்பலம் தவிர) தமோ குணம் உடையன.

4 பத்திரங்கள்—மக்கட் செல்வத்தைத் தருவன.

5. மஞ்சள் வண்ண மலர்கள்—மங்களகரமானவை.

265. விசேஷமான மலர்களின் பெயர்களையும் அவற்றின் சிறப்புக்களையும் எழுதுக.

1. தாமரை மலர் — இதை 7 நாள்களும்
2. அரளி மலர் — இதை 3 நாள்களும்
3. வில்வம் — இதை 6 மாதங்களும்
4. துளசி — இதை 3 மாதங்களும்
5. தாழம்பூ — இதை 5 நாள்களும்
6. சண்பகம் — இதை 1 நாளும்
7. விஷ்ணு கிரந்தி — இதை 3 நாள்களும்

வைத்திருந்து பூஜை செய்யலாம்.

266. அஷ்ட புஷ்பங்கள் எவை?

எருக்க மலர், தாமரை, புன்னை, நந்தியாவட்டை, பாதிரி, அரளி, சண்பகம், நீலோற்பலம் என்பவை அஷ்ட புஷ்பங்கள் எனப்படும்.

[மலர்களை முழுமையாக இட்டுத்தான் பூசிக்க-வேண்டும். பத்திரங்களைக் கிள்ளி பூசை செய்யலாம்.]

267. உதயகால பூசைக்கு ஏற்ற மலர்கள் எவை?

நந்தியாவட்டை, சிரியாவர்த்தம், வெள்ளெருக்கு, வெண்தாமரை, புன்னை முதலிய மலர்கள்.

268. நண்பகலில் (மத்தியானம்) அருச்சிப்பதற்குரிய மலர்கள் எவை ?

செந்தாமரை, செங்கழு நீர், செவ்வலரி, செங்கடம்பு முதலிய செந்நிற மலர்கள் மத்தியான அர்ச்சனைக்கு உகந்தவைகளாம்.

269. சாயரட்சை, அர்த்தசாம காலங்களில் அருச்சிப்பதற்குரிய மலர்கள் எவை?

வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலிய சாத்விக மலர்களாகும்.

270. அறுகு, கொன்றைப்பூ, வில்வம், துளசி, தும்பை முதலியவைகளைக் கொண்டு வழிபடுவோர்க்கு உண்டாகும் பயன்களைக் கூறு.

1. அறுகு — பகைவரை வெல்லுதல்
2. கொன்றை — தாய்க்குச் செய்த குற்றம் நீங்கும்
3. வில்வம் — பொய் சொன்ன பாவம் போகும்
4. துளசி — வறுமையைப் போக்கும்
5. தும்பை — தோஷங்களை நிவர்த்தி செய்யும்

271. நிர்மால்ய தோஷம் இல்லாதவை எவை?

துளசி, முத்துமாலை, வில்வம், ருத்ராட்சம், ரத்தின மாலை இவைகளுக்கு நிர்மால்ய தோஷம் கிடையாது.

272. மலர்கள் மலரும் நேரங்களைப் பார்த்து, பண்டை நாளில் எவ்வாறு நேரத்தை அறிந்துகொண்டனர்?

அந்தி, மந்தாரை மலர்ந்தால் மாலை மணி 6. மல்லிகை மலர்ந்தால் மாலை மணி 7. பாரிஜாதம் மலர்ந்தால் மணி 8. மாதவி புஷ்பம் மலர்ந்தால் மணி 9. நன்ருக இருட்டு ஆட்சி செய்யும்போது இரவு 12 மணிக்கு மலரும் புஷ்பம் இருள் ஆட்சி. அதாவது இருவாட்சி. காலை 6 மணிக்கு சூரியன் உதிக்க அத்துடன் மலர்வது தாமரை. இவ்வாறு மலர்கள் மலர்வதைக் கொண்டு பண்டைக் காலத்தில் நேரத்தை அறிந்துகொண்டனர்.

273. பண்டைய மலர்களுக்கு இன்று வழங்கும் பெயர்களைச் சில சான்றுகள் தந்து எழுதுக.

1) வகுளம்—மகிழம்பூ 2) பாடலீ—பாதிரி
3) துரோணம்—தும்பை 4) பில்வம்—வில்வம்
5) குந்தம்—முல்லை 6) பாரிஜாதம்—பவழமல்லி
7) ஜாதி—ஜாதிமுல்லை 8) கேதகீ—தாழம்பூ
9) மாதவி—மல்லிகை 10) கரவீரம்—அரளி.

274 கற்பூர ஆரத்தி செய்வது எதைக் குறிக்கிறது?

ஆத்மா, பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும். கற்பூரம் வெள்ளையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கற்பூரத்தை ஏற்றியவுடன் அது தீபம் போல எரிவது, ஞானக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மாவானது சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கற்பூரம் இறுதியில் ஒன்றுமின்றிக் கரைந்து போவது போல ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் தத்துவம்.

275. தேங்காய் உடைப்பதன் கருத்து யாது?

தேங்காய் உடைப்பதன் காரணம், தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயா மலம்; உரித்து எடுக்கின்றநார் கன்மமலம்; சந்நிதியில் உடைத்து எடுக்-கின்ற ஓடு ஆணவமலம். இந்த மூன்றும் நீங்கினுல் வெண்மையான பருப்பு வெளிப்படுகிறது. இறைவனிடத்தில், "மும்மலத்தை நீக்கி, சுத்த சத்துவ சித்தத்தை அருள வேண்டும்" என்று குறிப்பிடுவதுவே தேங்காய் உடைப்-பதன் உட்பொருள்.

(வாரியார் சுவாமிகள் தந்த விளக்கம்)

276 அலங்காரத் தீபாராதனையின் போது ஆலயத்தில் காட்டப்படும் பலவகைத் தீபங்களின் பெயர்களை எழுதுக.

(1) தூபம்
(2) ஐந்தடுக்குள்ள அலங்கார தீபம்
(3) மூனறடுக்குள்ள அலங்கார தீபம்
(4) நாக தீபம் (5) ரிஷப தீபம்
(6) புருஷ தீபம் (7) நக்ஷத்திர தீபம்
(8) யானை தீபம் (9) அன்ன தீபம்
(10) குதிரை தீபம் (11) மயில் தீபம்
(12) ஐந்து தட்டுகளுடன் கூடிய பூர்ண கும்ப தீபம்
(13) கோழி தீபம் (14) சிங்க தீபம்
(15) கற்பூர ஆரத்தி (16) மேரு தீபம்
(17) ஏழுகிளை கற்பூர ஆரத்தி
(18) உபசாரங்கள் :-

குடை, கொடி, விசிறி, கண்ணுடி, சுருட்டி, அப்தாகிரி, சாமரம், அர்க்கிய பாத்திரம் முதலியன.

277. தாண்டவ தீபாராதனை என்பது யாது?

மார்கழித் திருவாதிரை நாளில் இந்தத் தீபாராதனை தென்காசியிலும் குற்றலத்திலும் இடம் பெறும்.

ஆனந்த பைரவி ராகத்தை நாதஸ்வரக் கலைஞர் இனிமையாக வாசிக்க, சிவாசாரியார் அப்போது பெரிய தீபாராதனை தட்டை ஏந்தி, அந்த இசைக்கு ஏற்றபடி அசைத்து தீபாராதனை செய்வார். இதுவே தாண்டவ தீபாராதனை என்று இங்கு வழங்கப்படுகின்றது. இதை லயித்துக் காணுகின்றபோது அம்பலவாணரே ஜோதி ரூபமாய் ஆடுவது போன்ற காட்சி தோன்றும். இது அற்புதமான தரிசனமாக இவ்விரு கோயில்களிலும் சொல்லப்படுகிறது.

278. பஞ்சபுராணம் பாடும் அமைப்பை எழுது.

1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா
4) திருப்பல்லாண்டு 5) பெரியபுராணம்
— என்னும் அமைப்பில் திருமுறைகளைப் பாடுவது பஞ்புராண முறை எனப்படும்.

279 ஆலயத்தில் எவ்விடத்தில் வீழ்ந்து வணங்க வேண்டும்? எங்கு வணங்கக்கூடாது?

ஆலயத்தில் கொடிக்கம்பத்தின் (துவஜஸ்தம்பத்தின்) முன்புதான் வீழ்ந்து வணங்கவேண்டும். ஆலயத்தின் உள்ளே எந்தச்சந்நிதிகளிலும் வீழ்ந்து வணங்கக்கூடாது.

280. ஆலயத்தில் எந்தத் திசையிலிருந்து வீழ்ந்து வணங்க வேண்டும்?

கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கே தலை வைத்தும்;

தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் கிழக்கே தலை வைத்தும் வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

[தான் கால் நீட்டும் பின்புறத்தில் எந்தத் தெய்வச் சந்நிதியும் இருத்தல் கூடாது. கொடிமரத்தின் முன்னால் வீழ்ந்து வணங்கினால் அங்கு எத்தெய்வச் சந்நிதியும்

இருக்காது. எனவேதான் இங்கு மட்டுமே விழ்ந்து வணங்க வேண்டும் என்று நம் முன்னோர் விதித்துள்ளனர்.]

281. நமஸ்காரத்தின் வகைகளை விவரி.

தலைமட்டும் குனிந்து வணங்கல்—
ஏகாங்க நமஸ்காரம்

தலைமேல் இருகரம் கூப்பி வணங்கல்—
திரியங்க நமஸ்காரம்

கை இரண்டு, முழந்தாள் இரண்டு, சிரம் ஆக
ஐந்தும் நிலம் பொருந்த வணங்கல்—
பஞ்சாங்க நமஸ்காரம்

தலை, கையிரண்டு, இருசெவிகள், இருமுழந்தாள்.
மார்பு, இவை பூமியில் படும்படி வணங்கல்—
அஷ்டாங்க நமஸ்காரம்

282. 'சாஷ்டாங்க நமஸ்காரம்' செய்வதன் பொருள் யாது?

நம் உடலில் உள்ள எட்டு அங்கங்களும் பூமியில் படும்படி விழ்ந்து வணங்குதல் சாஷ்டாங்க நமஸ்காரம் எனப்படும். இது தமிழில் 'தண்டனிடுதல்' எனப்படும். ஆதாரமற்ற ஒரு தண்டம் (கோல்) விழுவதைப்போல இறைவனையே அடைக்கலமாகக் கொண்டு அவனை முழுவதும் சரணம் அடைவதன்—உள்ளத்தின் வெளிப்பாடே (சக+அஷ்ட+அங்க) சாஷ்டாங்க நமஸ்காரம் ஆகும்.

283. அஷ்டாங்க (அட்டாங்க) நமஸ்காரம் என்பது யாது?

தலை, இரு கைகள், இரு காதுகள், இரு முழந்தாள், மார்பு, ஆகிய எட்டு அங்கங்களும் நிலத்திலே படுமாறு வீழ்ந்து வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம் எனப்படும்.

இவ்வகை நமஸ்காரம் ஆண்களுக்கு உரியது.

284 பஞ்சாங்க நமஸ்காரம் என்பது யாது?

தலை, இரு கைகள், இரு முழந்தாள்கள் ஆகிய ஐந்து அங்கங்களும் நிலத்திலே படுமாறு விழ்ந்து வணங்குவது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும்

[பஞ்ச-அங்கம்—ஐந்து உறுப்புகள்.)

பெண்கள் இவ்வகை நமஸ்காரம் செய்வதற்கு உரியர்.

285. பெண்கள் அங்கபிரதட்சணம் செய்யலாமா? கூடாதா?

பெண்கள், மார்பு பூமியில் படாமல் வணக்கம் செய்ய வேண்டும். எனவே அங்கபிரதட்சணம் பெண்கள் செய்யக்கூடாது என்பது முறை.

286. 'தண்டம் சமர்ப்பித்தல்' என்பதன் கருத்து யாது?

நமஸ்காரம் செய்வதை-கீழே விழ்ந்து வணங்குவதை தண்டம் சமர்ப்பித்தல் என்கிறார்கள். தண்டம் என்பது கழி அல்லது கோல். கையில் பிடித்துள்ள ஒரு கோலை விட்டுவிட்டால் அது கீழே விழுந்துவிடும். நமஸ்காரம் செய்வதை தண்டம்போல் செய்யவேண்டுமென்று சொல்வது வழக்கம். நம் சரீரம் வெறும் மரக்கோல் தான். உதவாத பொருளை "அது தண்டமாகிவிட்டது" என்கிறோம். அப்படித் தண்டமான வஸ்துதான் நம் சரீரம். இதைத் தூக்கிப் பிடித்து, நிறுத்திவைத்து ஆட்டுகிற சக்தி ஈஸ்வரன் கொடுத்ததே ஆகும்.

இந்த உடம்பை ஏதோ நாமே தாங்கி நடத்துகிறோம் என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு, அதாவது அகங்காரத்தை விலக்கிவிட்டு, அதற்கு அடையாளமாக ஈஸ்வரன் முன் இந்தச்சரீரத்தைக்கீழேபோட வேண்டும் இதுதான் தண்டம் சமர்ப்பித்தல்.

—ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அருளுரை.

287. கோயிலில் எவ்விடத்தில் அமர்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்யவேண்டும்?

கோயிலில் கொடிக்கம்பத்தின் அருகில் அல்லது தக்ஷிணாமூர்த்திக்கு எதிரில் அமர்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்யவேண்டும். இதுவே சிறந்தது. சில கோயிலில் தியான மண்டபம் கட்டப்பட்டு ஏகாந்தமாக அமர்ந்து தியானம் செய்ய வசதி செய்யப்பட்டிருப்பின் அங்கும் அமர்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்யலாம்

288. பெண்கள் தலைக்குமேல் இருகைகளையும் உயர்த்திக் குவித்து வணங்கலாமா? கூடாதா? விளக்குக.

அட்டாங்க நமஸ்காரம் ஆண்களுக்கும், பஞ்சாங்க (பஞ்ச+அங்க) நமஸ்காரம் பெண்களுக்கும் உரியன. தலைக்குமேல் கைகளை உயர்த்துதல்-நீட்டுதல் என்பது அட்டாங்க நமஸ்காரத்தில் தான் இடம் பெறுகிறது. பஞ்சாங்க நமஸ்காரத்தில் இடம் பெறவில்லை. பெண்களுடைய உடலமைப்பையொட்டியே அவர்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பெண்கள் தலைக்குமேலே இருகைகளையும் உயர்த்திக் குவித்து வணங்கலாகாது. மார்புக்கு நேரே கைகளைக் குவித்து வணங்குவதே பொருத்தமானதாகும்.

289. நவக்கிரகங்கள் அருளும் நன்மைகளை எழுது.

(1) சூரியன்—ஆரோக்கியம்

(2) சந்திரன்—கீர்த்தி

(3) அங்காரகன்—செல்வம்

(4) புதன்—அறிவு

(5) குரு—நன்மதிப்பு

(6) சுக்கிரன்—அழகு, நாவன்மை
(7) சனி—சந்தோஷம்
(8) ராகு—பகைவர் பயம் போக்குதல்
(9) கேது—குல அபிவிருத்தி

290. தமிழ்நாட்டில் நவக்கிரகங்களுக்குரிய கோயில்கள் எங்கெங்கு உள்ளன?

1) சூரியன்—சூரியனூர் கோயில்
2) சந்திரன்—திருவாரூர்
3) செவ்வாய்-வைத்தீசுவரன் கோயில் (அங்காரகன்)
4) புதன்—திருவெண்காடு
5) குரு—ஆலங்குடி
6) சுக்கிரன்—கஞ்சனூர்
7) சனி—திருநள்ளாறு
8) ராகு—திருநாகேச்சரம்
9) கேது—திருச்சி (நாகநாதர் கோயில்)

291. நவக்கிரகங்களுக்குரிய வாகனங்களின் பெயர்களைக் கூறு

1) சூரியன்—ஏழு குதிரைகள் பூட்டிய ரதம் (அருணன் தேரோட்டி)
2) சந்திரன்—முத்து விமானம், மான்
3) செவ்வாய் (அங்காரகன்)- ஆடு
4) புதன்—குதிரை
5) குரு—யானை
6) சுக்கிரன்—கருடன்
7) சனி—காகம்
8) ராகு—சிம்மம்
9) கேது—புரு (அன்னமும் சொல்வர்)

292. சண்டேசுவரர் வழிபாட்டை எழுதுக.

சிவதரிசனப் பலன் சண்டேசுவரரைத் தரிசித்தால் தான் பூர்த்தியாகும். சிவாலயத்துள் மூலவரைத்

தரிசித்த பின் வலமாக வந்து சண்டேசுவரர் சந்நிதி முன்சென்று—அவர் தியானத்தில் உள்ள பெருமானை தரிசித்த பின்—அவர் முன்பு மூன்று முறை கையால் மெதுவாகத் தாளமிட்டுத் தரிசனப் பலனைத் தருமாறு கைகூப்பி வேண்டி, சென்ற வழியே திரும்பி வரவேண்டும்.

[சண்டேசுவரரை முழு வலமாகச் சுற்றக்கூடாது.]

இவருடைய வரலாறு திருத்தொண்டர் (பெரிய) புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

293. சண்டேசுவரர் திருமேனியின் பல பெயர்களை எழுதுக.

1) சிவாலயத்தில் உள்ள சண்டேசுவரரின் பெயர்—த்வனிச்சண்டேஸ்வரர் (தொனிச் சண்டேஸ்வரர்)
2) முருகர் ஆலயத்தில் உள்ள சண்டேசுவரரின் பெயர்—சுமித்ர சண்டேசுவரர்
3) விநாயகர் ஆலயத்திலுள்ள சண்டேசுவரரின் பெயர்—கும்ப சண்டேசுவரர்
4) சூரியன் ஆலயத்திலுள்ள சண்டேசுவரரின் பெயர்—தேஜஸ் சண்டேசுவரர்
5) அம்பாள் ஆலயத்திலுள்ள சண்டிகேசுவரியின் பெயர்—யமுனு சண்டிகேஸ்வரி

294. சண்டேசுவரர் சந்நிதியில் செய்யத்தகாத செயல் யாது?

பண்டை நாளில் மக்கள் கோயிலுக்குப் போகும்போது தாங்கள் கொண்டு செல்லும் நிவேதனப் பொருள்களையும் விளக்கிடுவதற்கான எண்ணெய், நெய், திரி முதலானவற்றையும் சண்டேசுவரர் சந்நிதியில் வைத்திடுவர். ஆலய அர்ச்சகர்கள் அவற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வர். இம்முறையில் அங்கு வைக்கப்பட்ட 'திரி'

பழக்கம் நாளடைவில் பொருளறியாமையால் மாறிப் போய், மக்கள் வேட்டி நூலை எடுத்துச் சண்டேசுவரர் மீது போடும் பழக்கமாக மாறிவிட்டது.

இவ்வாறு அறியாமையால் சிலர் செய்யும் இத்தவறான பழக்கத்தை அவர்க்கு எடுத்துச் சொல்லித்தடுக்க வேண்டியது அனைவரின் பணியாகும்.

295. "ப்ரதோஷம்" என்பதன் பொருள்யாது?

காலை வேளை "உஷா" எனப்படும். இரவுக்கு முன் நேரம் "தோஷா" எனப்படும். இக்காலம் (தோஷா) வழிபாட்டுக்குரிய காலமாகும். இதிலும் பிரதோஷ காலம் என்பது (சிவ) வழிபாட்டுக்கே உரிய காலமாதலின் அவ்வேளையை-மேலான தோஷா—என்ற பொருளில் ப்ரதோஷா-ப்ரதோஷம் என்றழைக்கலாயினர்.

296. பிரதோஷ காலத்தின் சிறப்பு யாது?

வளர்பிறையில் திரயோதசி அன்றும், தேய்பிறையில் திரயோதசி அன்றும் மாலை 4-30 மணி முதல் 6 மணிவரை யுள்ள காலம் பிரதோஷ காலம் எனப்படும். இறைவன் நந்தியின் இரு கொம்புகளுக்கு மத்தியில் நின்று நடனம் செய்து தேவர்களுக்குத் தரிசனம் தந்தருளிய சிறப்புடைய காலம் இதுவே. ஆதலின் **பிரதோஷ புண்ணிய காலம்** என்று மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது. இக்காலத்தில் சிவபெருமானை வழிபடுவதும், தரிசிப்பதும் மிகப்பெரும் புண்ணியச் செயலாகும்.

சிவதரிசனத்திற்கே உரிய காலம் இஃது.

297. சிவபெருமான் பிரதோஷ நடனத்தை நிகழ்த்திய விதம் யாது?

பிரதோஷகாலத்தில் சிவபெருமான் நந்திதேவருடைய இரண்டு கொம்புகளுக்கு இடையேயிருந்து உயிர்கள்

கடைத்தேறும் பொருட்டு நடனம் ஆடினர். அப்போது, இந்திரன் குழலிசைக்க சரஸ்வதி வீணைவாசித்தாள், பிரமர் தாளமிட்டார், இலக்குமி இசையுடன் பாடினள், திருமால் மத்தளம் வாசித்தார், தேவர்களும் முனிவர்களும் சித்தர்கள் முதலானேரும் (பிரதோஷ காலத்தில்) நடனத்தைக்கண்டு கைகூப்பித் தரிசித்து வழிபட்டனர்.

இச்செய்தி பிரமோத்ரகாண்டத்தில் சொல்லப் பட்டுள்ளது.

298. சோமசூத்ரப் பிரதக்ஷிண முறை வந்த வரலாறு யாது?

ஆலகால விஷம் தேவர்களை முன்னும் பின்னுமாகத் துரத்தியது. அதைக் கண்ட தேவர்கள் பயந்து கயிலைக்கு ஓடினர். இறைவனை வலமாக வந்து உள்ளே சென்று சரணடைய எண்ணி ஓடியபோது ஆலகாலம் தொடர்ந்து சென்று அவர்களை (எதிர்த்துச் சென்று) அப்பிரதஷிணமாகச் சென்று எதிர்த்தது. அதைக்கண்ட தேவர்கள் பயந்து வந்த வழியே திரும்பிஓட, ஆலகாலம் அந்தப் பக்கத்திலும் வந்து எதிர்த்துப் பயமுறுத்தியது. இவ்வாறு தேவர்கள் வலமும் இடமுமாக ஓடி ஓடி வலம் வந்த முறைதான் சோமசூத்ரப் பிரதக்ஷண அமைப்பு (வலம் வரும்) முறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

299. சோமசூத்ரப் பிரதக்ஷண முறையை விவரி.

பிரதோஷ காலத்தில் சிவாலயம் சென்று தரிசிக்கும் போது வலம்வரும் முறைக்கு, சோமசூத்ரப் பிரதக்ஷிணம் என்று பெயர். இம்முறை வருமாறு:- முதலில் சிவ லிங்கத்தையும் ரிஷபதேவரையும் (நந்தி) வணங்கி, அப்பிரதக்ஷணமாக சண்டேசுவரர் சந்நிதிவரை சென்று, அவரை வணங்கிக்கொண்டு அப்படியே திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தையும் ரிஷபதேவரையும்

வணங்கிக்கொண்டு, வழக்கம்போல் பிரதக்ஷணமாக ஆலயத்தை வலம்வரும் போது, சுவாமியைக்கடக்காமல், அப்படியே வந்த வழியே திரும்பி, அப்பிரதக்ஷிணமாக சந்நிதிக்கு வந்து, சிவலிங்கத்தையும் ரிஷபதேவரையும் வணங்க வேண்டும்.

இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இவ் வ..ம் பிரதோஷ கால தரிசனத்திற்கு மட்டுமே உரியது. இம்முறைக்குச் சோமசூத்ரப் பிரதக்ஷணம் என்று பெயர்.

300. காலங்களுக்குரிய சிவதரிசனப் பலனைக் கூறுக.

காலை—பிணிபோக்கும்
நண்பகல்—தனம் பெருக்கும்
சந்தியா காலம்—பாவம் அகற்றும்
(மாலை)
அர்த்த சாமம்—வீடு பேறு அளிக்கும்

301. இறைவன் நடனமாடுவதன் தத்துவம் யாது?

மாயாமலத்தை ஓட்டி. கன்ம மலத்தைச் சுட்டு, ஆணவ மலத்தை அதன் வலி கெடுமாறு அமுத்தி. ஆன்மாக்களை அருளாலே மேலேதூக்கி ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்கச் செய்வதே இறைவன் ஆடும் தாண்டவத்தின்—நடனத்தின் கருத்தாகும்.

302. வீணா தக்ஷிணாமூர்த்தி, யோக தக்ஷிணாமூர்த்தி-விளக்கம் தருக,

தக்ஷிணாமூர்த்தியின் இரு நிலைகள் இவை.

1. யோக முறையைக் காட்டியதால் யோக தக்ஷிணாமூர்த்தி எனப்படும் நிலை ஒன்று, சின்முத்திரையை மார்பில் வைத்துக் காட்டியபடியுள்ளது இத்திருக் கோலம்.

(2) வீணையின் இலக்கணத்தை தும்புரு, நாரதர் முதலியோருக்கு உணர்த்திய வடிவம் வீணாதர தக்ஷிணாமூர்த்தி-வீணை யேந்திய திருக்கோலம்.

303. பவித்ரோற்சவம் என்பதை விளக்குக,

ஒவ்வொரு சிவாலயத்திலும் சிவபெருமானைப் பூசிப்போர் திருமால் முதலாகச் சிவாசாரியர்கள் ஈருக உள்ளதாலும், அவற்றுள் தேவர்கள் பூசையிலும் குறைவு ஏற்படலாம், மக்கள் செய்யும் பூசையிலும் குறைவு ஏற்படலாம். இவ்விரு குறைகளையும் போக்கு வதற்காகவே பவித்ரோற்சவத்தை விதித்துள்ளார்கள்.

இது இருவகை. ஒன்று நித்திய பவித்ரோற்சவம். மற்றொன்று வருஷப் பவித்ரோற்சவம். முன்னையது நித்தியத்தில் ஏற்படும் தாழ்வுகளைப் போக்கிக்கொள்ளச் செய்யப் பெறுவதாகும். தினந்தோறும் பூசை முடிவில் அறுகம்புல்லை அக்ஷதையுடனும், எள்ளுடனும் சேர்த்து மந்திரம் சொல்லிப் பெருமானுக்குச் சார்த்துவது மரபு. மற்றொன்று ஆண்டு தோறும் செய்யப்பெறும் வருஷப் பிராயச்சித்த உற்சவமாகும்.

304. 'தீர்த்தவாரி' என்பதன் பொருள் யாது?

உயிர்கள், இறைவனின் அருட்கடலில் மூழ்கிப் புனிதமடைந்து விடு பேறு அடைவதையே, தீர்த்தவாரி குறிக்கின்றது.

305, கும்பாபிஷேகத்தின் வகைகளை விவரி.

1. **ஆவர்த்தப் :-** ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் படுவது.

2. **அனுவர்த்தம் :-** பூஜை இல்லாமலும் ஆறு, கடல் இவற்றால் சலனமடைந்திருந்தாலும் அக் கோயிலைப் புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது.

3 **புனராவர்த்தம் :-** கருவறை, பிராகாரம், கோபுரம் முதலியன பழுதுபட்டிருந்தால், பாலாலயம் செய்து, அவற்றைப் புதுப்பித்து அஷ்டபந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

4. **அந்தரிதம் :-** கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்து விடின் அதன்பொருட்டுச் செய்யப் படும் சாந்தி.

306. கும்பாபிஷேகத்தில் விக்ரகப் பிரதிஷ்டையில் மேற்கொள்ளப்படும் அவசியமான கிரியைகளைப் பற்றி எழுதுக.

1 **அனுக்ஞை :-** செயல்களைச் செய்யும் ஆற்றல்மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந்தெடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனஞ் செய்தல்.

2. **கணபதி பூஜை :-** செயல் இனிது நிறைவேறக் கணபதியை வழிபடுதல்.

3. **வாஸ்து சாந்தி :-** தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிதுநிறைவேற; செயலுக்கும் செய்பவர்க்கும் இடையூறு வாராதபடி காக்கச் செய்யும் செயல்.

4. **மண் எடுத்தல் :-** அட்டதிக்குப் பாலகர்களிடம் அநுமதி பெற்றுச் சுத்தமான இடத்திலிருந்து மண் எடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல்.

5. **முளையிடுதல் :-** மண் பாலிகைகளில் விதைகளை யிட்டு முளை வளரச் செய்தல்.

6. **காப்புக் கட்டுதல் :-** கிரியைகளைச்செய்யும் ஆசாரிய னுக்கு, இடையூறுகள் வாராதபடிக் காத்தற் பொருட்டு அவன்கையில் மந்திரபூர்வமாகக் காப்பு (கயிறு) கட்டுதல்.

7. **கும்ப ஸ்தாபனம்:-** கும்பங்களை — கலசங்களை ஸ்தாபனம் செய்தல்.

8. **கலாகர்ஷணம் :-** எந்த மூர்த்தியை எந்தக்குடத்தில் ஆவாஹனம் பண்ணுகிறோமோ அம்மூர்த்தி அக் குடத்தில் இருப்பதாகக்கருதி அதனைப் பூசித்து வழிபடுதல்.

9, **யாகசாலை :-** யாகசாலைகள் விதிப்படி அமைத்தல்.

10, **பிம்பசுத்தி :-** விக்ரகத்தை அழுக்கு நீக்கிச் சுத்தம் செய்து அபிஷேகம் செய்தல்.

11. **ஸ்பர்ஸாஹுதி :-** யாகசாலை இடத்திற்கும் மூலத் திருமேனிக்கும் தர்ப்பைக் கயிறு தங்கக் கம்பி. வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்துதல்

12. **அஷ்டபந்தனம் :-** எட்டுப் பொருள்களால் ஆன இம்மருந்தினால் மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல் — பந்தித்தல். இதை மருந்து சார்த்துதல் என்பர்.

13. **குடமுழுக்கு :-** யாகசாலையில் மூர்த்திகளுக்குரிய தாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகித்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருளுகிறார்.

14, **மஹாபிஷேகம்:-** கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூலவிக்ரஹத்திற்கு முறைப்படி அபிஷேக அலங் காரங்கள் செய்தல்.

15. **மண்டலாபிஷேகம்.**

307. கும்பத்தை நம் சரீரமாகச் சொல்லப்படும் கருத்தைக் கூறு.

யோகஜம் என்ற சிவாகமம் சரீரமாக கும்பத்தை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு விபரமாகச் சொல்லுவதாவது. "கும்பமாகிய குடம் மாமிச மாகும்; குடத்திலுள்ள தண்ணீர் இரத்தமாகும்; கும்பத்தினுள் போடப்பட்டுள்ள கும்பரத்தினங்கள் சுக்லமாகும்; கும்பத்தின் உள்ளே இருக்கும் அந்தக் கூர்ச்சம் என்ற தர்ப்பைக் கட்டு நாடியாகும்; குடத்தின் மேல் நெருக்கமாகச் சுற்றப்பட்டுள்ள முப்புரி நூல்களே நரம்புகளாகும்; கும்பத்தைப் போர்த்திக் கட்டியுள்ள வஸ்திரமே தோல் ஆகும். உச்சரிக்கப்படும் மந்திரங் களே பிராணனாகும்; குடத்தின் மீதிருக்கும் தேங்காயைச் சிரசாகவும், முகமாகவும் கூறப்படுகிறது. தேங்காயின் மேலே விரித்துள்ள லம்பகூர்ச்சம் சிகை; மாவிலைகள் சிவபிரானின் ஜடாபாரங்கள்." இவ்வாறாக அங்க கற்பனைச் சிவாகமத்தில் சொல்லப்படுகிறது.

308. உழவாரத் தொண்டு என்பது யாது? இதற்கு உதவும் கருவிக்கு யாது பெயர்?

திருக்கோயிலில் உள்ள கற்கள், முட்கள், தேவை யற்ற செடிகள் முதலியவைகளை அகற்றித் திருக் கோயிலைப் பராமரிக்கும் தொண்டே உழவாரத் தொண் டாகும். இப்பணியைச் செய்துவந்த திருநாவுக்கரசரின் திருக்கரத்தில் உள்ள (தொண்டு செய்யும்) கருவியே உழவாரப் படை எனப்படும்.

309. சிவாலயங்களில் செய்யத்தக்கன யாவை?

1. நீராடித் தூய ஆடை உடுத்தித் திருநீறணிந்து, இயலுமாயின் உருத்திராக்கமும் பூண்டுசெல்ல வேண்டும்
2. மலர், தேங்காய், பழம், பூ, சூடம் ஆகிய இவற்றுள் அவரவர் வசதிக்கேற்ப இயன்றவை களை எடுத்துச்செல்ல வேண்டும்.

3. கோபுரத்தைச் கண்டவுடன் இரு கைகூப்பி வணங்க வேண்டும்.

4. ஐந்தெழுத்தை மனத்தில் ஜபித்தவாறே செல்லவேண்டும்.

5. தல விநாயகரைத் தரிசித்துக் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டுக்கொண்டு உட் செல்லவேண்டும்.

6. பலிபீடம், நந்தி ஆகியவற்றை வணங்கிச் செல்லவேண்டும்.

7. உள்ளே மூலமூர்த்தியை வணங்கிச் சுற்றிலுமுள்ள உற்சவ மூர்த்திகளையும். சண்டேசுவரரையும்; பிற சந்நிதிகளையும் வணங்க வேண்டும்.

8. திருநீற்றினை இருகையால் பணிவுடன் பெற்றுக் கீழே சிந்தாது அணிந்து கொள்ளவேண்டும்.

9. ஆலயப் பிராகாரத்தை மும்முறையாவது வலம் வரவேண்டும்.

10. தரிசிக்கும் காலத்தில் அவ்வச் சந்நிதிகளுக் கேற்ப துதிப்பாடல்களைச் சொல்லி வழிபடுதல் வேண்டும்.

11. வெளியே வந்து கொடி மரத்தின்கீழ் விழ்ந்து வணங்கவேண்டும். (உள்ளே எச்சந்நிதியிலும் தரையில் வீழ்ந்து வணங்கலாகாது).

12. சிறிது நேரம் அமர்ந்து அவரவர் நிலைக்கேற்ப ஜபத்தியானம் செய்து பின் அங்கிருந்து புறப் பட்டுச் சிவ சிந்தனையோடு செல்லவேண்டும்.

310. சிவாலயங்களில் செய்யத்தகாதன யாவை?

தூய்மையின்றிச் செல்லல், ஆலயத்துள் மிதியடியுடன் செல்லல், சமயச் சின்னங்களினின்றிச் செல்லல், வீண்பேச்சு பேசுதல், சண்டையிடுதல், இடித்து நெருக்குதல், எச்சில் துப்புதல், நிர்மாலியத்தை மிதித்தல், விக்ரகங்களைத் தொடுதல். பலிபீடம்நந்தி இவற்றின் குறுக்கே செல்லுதல். ஒருகையால் கும்பிடுதல், முதலியன போன்ற செயல்கள்.

311. எத்தகையோர் ஆலயத்திற்குச் செல்லக் கூடாது?

நீராடாதோர், தூய ஆடை உடுத்தாதோர், வீட்டில் பிறப்பு இறப்பு முதலியவை நேர்ந்து அதனுல்தீட்டு உடையவர்கள், மாதவிலக்குடைய மகளிர் ஆகியோர் கோயிலுக்குள் செல்லக்கூடாது.





இந்து சமயம் - வேதம் - வேத அங்கங்கள்-

312. இந்து சமயத்தின் தொன்மை பற்றிக் கூறு.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்டவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்லமுடியாதவாறு தொன்று தொட்டு இருந்துவரும்—அநாதியாக இருந்து வரும் சமயம் ஆகும். வேத நெறியை அடிப்படை யாகக்கொண்ட மிகப் பழமையான சமயம் ஆகவே தான் வைதிக சமயம். சனாதன சமயம் எனவும் பெயர் பெற்றது.

313. இந்து மதத்திற்குரிய வேறு பெயர்கள் யாவை?

1) சனாதன மதம் 2) சனாதன தர்மம்

3) இந்து மதம் 4) இந்து தர்மம்

5) வைதிக மதம் 6) வைதிக தர்மம் என்பன.

314. இந்து தர்மத்திற்கு அடிப்படையான 14 வித்யாஸ்தானங்கள் எவை?

வேதங்கள்—4, வேதாங்கங்கள்—6, மீமாம்சை—1, நியாயம்—1, புராணம்—1, தர்மசாஸ்திரம்—1.

ஆக மொத்தம் = 14.

315. வேதவியாசரின் பெருமைகளை எழுது.

நம் இந்து மதம் மிகமிகப் பழமையானது. நம் மதத்திற்கு மூலம் வேதம். வேதத்தை அடிப்படையாகக் கொண்ட நம் மதத்திற்கு வைதிக மதம் என்று பெயர். வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை. வியாச மகரிஷி இவ்வேதங்களைத் துவாபரயுக முடிவில் நான்காகப் பிரித்து, கேட்டு ஸ்வரத்தோடு அத்திய யனம் செய்து உலகில் தொடர்ந்து வந்துகொண்டிருக்க வேண்டுமென்று நான்கு முனிவர்களிடத்தில்—ஜைமினி, வைசம்பாயனர், ஸுமந்து, பைலர் ஆகியோரிடத்து ஒப்படைத்துப் பின்பு வேதத்தின் தாத்பரியத்தைப் பதினெண் புராணங்களாக்கிச் சூத முனிவருக்கு உப தேசித்து அனைவரும் பயன் அடையச் செய்தார். தவிர வேதத்தின் தத்துவங்களை உள்ளடக்கிச் சுருக்கமாக 'பிரம்மசூத்திரம்' எழுதினார். ஸ்ரீ ஆதிசங்கரர் முதலிய பலரும் இதற்குப் பாஷ்யம் எழுதியுள்ளனர்.

நம் மதத்திற்கு மூல புருஷராக விளங்கும் வியாச பகவானுக்கு ஆண்டுதோறும் சாதுர்மாஸ்ய விரதத்தின் முதலில் சிறப்பு வழிபாடு—வியாச பூஜை நடை பெறுவதை நாம் அனைவரும் அறிவோம்.

316. வியாசமுனிவரின்/வேத வியாசருடைய இயற்பெயர் யாது? அவருடைய சீடர்களுள் சிறந்தோர் யாவர்?

பராசரமுனிவரின் புதல்வரும், ஞானியருள் சிறந்தவருமான வேத வியாசருடைய இயற்பெயர் "கிருஷ்ண த்வைபாயனர்" என்பது. வேதப் பாகுபாடு செய்தவரும், மகாபாரதம் இயற்றியவரும், பதினெண் புராணங்களை அருளியவரும், வேதாந்த சூத்திரத்தைத் தொகுத்தவரும் இவரே. இவருடைய சீடர்களுள் சுமதி, அக்கினிவர்ச்சஸ், மித்ராயு, ஸாம்சபாயனர், அகிருதவருணர், ஸாவர்சி முதலியோர் சிறந்தோர்களாவர்.

317. வியாச பூஜையை விளக்கிக் கூறு.

வியாஸ பூஜை என்பது சாந்திரமானப்படி ஆஷாட பௌர்ணமி அன்று வருவது. இதையே குருபௌர்ணமி என்றும் சொல்வர். எல்லோருக்குமே இந்த பௌர்ணமி உயர்ந்ததே எனினும் ஸன்யாஸிகளுக்கு மிகவும் முக்யமானது. மொத்தமாயிருந்த வேதத்தைப் பல கிளைகளாய்ப் பிரித்துச் சிஷ்யர்களுக்கு உதவியவர் வேத வியாஸர். மேலும் வேதாந்த ஸூத்ரங்களை அருளிச் செய்தும், 18 புராணங்கள், 18 உப புராணங்கள் ஸ்ரீ மஹாபாரதம் முதலிய பலவற்றையும் செய்திருப்பதால் வைதிக ஹிந்து மதத்திற்கு ஆணி வேராக இவர் போற்றப்படுகிறார். ஆகையால் குரு பரம்பரை பல இருப்பினும் வேதவியாஸர் பெயர் இதில் முக்யமாய்ச் சொல்லப்படுகிறது. இந்த வியாஸ பூஜையில், வியாஸர் அவர் நான்கு சிஷ்யர்களான, பைலர் ஜைமினி, வைசம்பாயநர், ஸுமந்து—ஆதிசங்கரர் அவ சிஷ்யர்களான, பத்மபாதர் ஸுரேச்வரர், ஹஸ்தாமலகர், தோடகர் மற்றும் ஸநக ஸனந்தன, ஸநாதன ஸநத்குமாரர், ஆகியோரும் நாரதர், சுகர், கௌடபாதர், கோவிந்த பகவத் பாதர் கடைசியாக, சுத்தசைதன்யம் என்ற பெயரில் ஸாளக்ராமம் ஆகியோர் பூஜிக்கப் படுகின்றனர். ஸன்யாஸிகளாலேயே செய்யப்படும் இந்த பூஜையானது முனையில்லாத அக்ஷதையைப் பரப்பி நடுவில் க்ருஷ்ண விக்ரஹமும், ஸாளக்ராமமும் வைத்து எலுமிச்சம் பழத்தை ஆங்காங்கு வைத்து முறைப்படி குருபரம்பரை பூஜையாக நடத்தப் பெறுகிறது.

318. சாதுர் மாஸ்ய விரதம்—பற்றி எழுதுக.

எப்போதும் யாத்திரை செய்து கொண்டே இருக்கும் சந்நியாசிகள்—துறவிகள், மழைக் காலத்தில், ஜீவராசிகள் பெருகி அலையுமாதலின் தங்கள் நடமாட்டத்தால் அவற்றுக்கு ஹிம்சை நேராதவாறு (மழைக்காலத்தில்) ஒரே இடத்தில் தங்கியிருப்பர். நான்குமாதங்கள்

இவ்வாறு தங்கியிருக்கும் விரதமே, "சாதுர்மாஸ்ய விரதம்" எனப்படும். ஆனி மாதம் பௌர்ணமி முதல் தொடங்கும் இவ்விரதம் ஒருமாதத்தை ஒரு பக்ஷம் எனக் கொள்ளும் வகையில்—4 மாதங்களை 4 பக்ஷங்களாகக் கொண்டு—அதாவது 2 மாதங்கள் ஒரே இடத்தில் தங்கியிருப்பது எனற முறையில் தற்பொழுது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விரதத்தை மேற்கொள்ளும் போது; துறவி/சந்நியாசி

ப்ராயேண ப்ராவ்ருஷி ப்ராணி ஸங்குலம் வர்த்ம
த்ருச்யதே !
அதஸ்தேஷாம் அஹிம் ஸார்த்தம் பக்ஷாவை ச்ருதி
சோதிதான் !
ஸ்தஸ்யாம : சதுரோ மாஸான் அத்ரை வாஸதி பாதகே !!

" 'ப்ராவ்ருட்' எனப்படும் மழைக் காலம் வந்ததனுல் எங்கும் ஜீவராசிகள் பெருகியிருக் கின்றன : அவற்றுக்கு நான் ஹிம்சை இழைக்காமலிருக்கும் பொருட்டு இவ்விடத்திலேயே நான்கு மாதங்கள் இருப்பதற்கு அநுமதி தாருங்கள்" என்று ஊர் மக்களைக் கேட்க; அதற்கு மக்கள்

நிவஸந்து ஸுகேநாத்ர கமிஷ்யாம : க்ருதார்த்ததாம்.
யதாசக்திச சுச்ருஷாம் கரிஷ்யாமோ வயம் முதா !!
"தாங்கள் இங்கேயே சுகமாக வசியுங்கள்.

நாங்கள் எங்கள் சக்திக்கு முடிந்தமட்டும் சந்தோஷத்துடன் தங்களுக்குப் பணிவிடை செய்கிரும்" என்று விடை சொல்வதாகச் சங்கல்பம் செய்யப்படுவது மரபாகும். இக்காலத்தில் வேதாந்த விசாரத்தில் உள்ளத்தை ஈடுபடுத்தி வசிப்பர்.

319. வேதம் என்பதன் பொருள் யாது?

நம் அறிவுக்கு எட்டாததை அறிவிப்பது 'வேதம்' என்பதன் பொருளாகும்.

நம் அறிவுக்கு எட்டாது மறைந்திருப்பவைகளைச் சொல்வதால் 'மறை' என்று பெயர் பெற்றது.

குரு—ஆசான் வழியே கேட்டு உணர வேண்டியதாதலால் 'சுருதி' என்று பெயர் பெற்றது.

320 வேதத்தில் சொல்லப்பட்டுள்ள நான்கு மகா வாக்கியங்கள் எவை?

1. பிரக்ஞானம் பிரம்மம்—(ரிக்வேதம்)—அறிவேபிரம்மம்
2. அஹம் பிரம்மாஸ்மி —(யஜுர்வேதம்)—நானே பிரமமாகவுள்ளேன்
3. தத்வமஸி —(சாமவேதம்)—நீ அதுவாக இருக்கிறாய்
4. அயம் ஆத்மம் பிரம்மம்—(அதர்வணவேதம்)— —ஆத்மாவே பிரம்மம்.

321. வேதத்தில் மந்திரங்கள் எதற்கு உபயோகப் படுத்தப்படுகின்றன?

தேவதைகளை வணங்கி அழைப்பதற்கு மந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

322. 'பிரஸ்தான த்ரயம்' என்பவை யாவை?

உபநிஷதங்கள், பிரம்மசூத்திரம், கீதை இம் மூன்றையும் 'பிரஸ்தான த்ரயம்' என்பர். இவை இந்து சமயத்தின் அடிப்படை நூல்களாம்

323. 'த்ரயீ' என்பது யாது?

ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம்—இம் மூன்று வேதங்களும் வைதிக காரியங்களான ஹோமம், யாகம் முதலியவைகளுக்கு உபயோகப்படுவதால் இவற்றிற்குத் 'த்ரயீ' என்று பெயர் வந்தது.

324. கர்ம காண்டம், ஞான காண்டம் என்பவை யாவை?

வேதத்தில்; வேள்வி முதலிய கர்மாக்களைச் செய்யும் முறைகளையும், சுவர்க்கம் முதலிய மேல் உலகங்களை அடைவதற்கான கர்மாக்களையும் விரிவாகச் சொல்வது கர்ம காண்டம்.

ஆத்ம தரிசனம் அடைவதற்கான வழிகளைச் சொல்வது ஞான காண்டம் என்னும் பகுதி ஆகும்.

325. ரிக்வேதம் எத்தகையது?

ரிக் வேதம் பெரும்பாலும் சுலோக வடிவமான பாகங்களைக் கொண்டது.

326. ரிக் வேதம் உணர்த்துபவை யாவை?

'ரிக்' என்பதற்குத் துதித்தல் (அ) வழிபடுதல் என்பது பொருள். இறைவனைத் துதிப் பாடல்களால் பாடி வணங்குவதற்கேற்ற வழிகளை ரிக் வேதம் வகுத்துச் சொல்கிறது.

327. யஜுர் வேதம் எத்தகையது?

யஜுர் வேதம் பெரும்பாலும் உரை நடையாலான பாகங்களைக் கொண்டது.

328. யஜுர் வேதம் உணர்த்துபவை யாவை?

"யாஜ்" என்னும் பதத்திற்கு வேள்வி, யாகம் என்பது பொருள். யாகம், பலி, தானம் முதலிய செயல்களைச் செய்யும் முறைகளை இப்பகுதி விளக்கமாகக் கூறுகிறது. அமாவாசை, பௌர்ணமி முதலிய காலங்களில் செய்யவேண்டிய செயல்கள், பிதிர்கர்

மாக்களைச் செய்யும் முறைகள் முதலியன இதில் சொல்லப்பட்டுள்ளன. மிகச் சிறப்பு வாய்ந்த ஸ்ரீருத்ரம் இதில் தான் அமைந்துள்ளது.

329. யஜுர் வேதத்தின் இரு பிரிவுகள் யாவை?

1. கிருஷ்ண யஜுர் வேதம்.– இதில் மந்திரங்களும் பிராமணங்களும் கலந்துள்ளன.
2. சுக்ல யஜுர் வேதம்:– இதில் மந்திரங்களே உள்ளன. பிராம்மணங்களின் கலப்பே இல்லை.

330. சாம வேதம் எத்தகையது?

சாமவேதம் பெரும்பாலும் இசை வடிவமான பாகங்களை உடையது,

331. சாம (ஸாம) வேதப் பயன் யாது?

இது ஸாமம் என்னும் இசையால் பாடப்பட்டது. இசையுடன் இதைப் பாடுவதால் நம் பாவங்கள் நீங்குகின்றன.

332. அதர்வண வேதம் எவற்றைப்பற்றிச் சொல்கிறது?

மந்திர பிரயோகங்களுடன், ராஜநீதி, தர்ம நீதி இவைகளின் பலன்களை அடைவதற்குரிய வழி முறைகளை அதர்வண வேதம் சொல்கிறது.

333. சாகைகள் எனப்படுபவை யாவை?

வேதத்தின் உட்பிரிவுகளுக்குச் சாகைகள் என்று பெயர்.

ரிக் வேதம்—21 சாகைகள்
யஜுர் வேதம்—101 சாகைகள்

சாமவேதம்—1000 சாகைகள்

அதர்வண வேதம்—9 சாகைகள்

ஆகப் பிரிக்கப்பட்டுள்ளன.

334 உப வேதங்கள் எவை?

1) ஆயுர் வேதம் 2) தனுர் வேதம்
3) காந்தர்வ வேதம் 4) அர்த்த சாஸ்திரம் (அரச நீதி நூல்)

335. 'ஆயுர் வேதம்' என்பதைப்பற்றி எழுதுக.

உப வேதங்களுள் ஆயுர் வேதம் ஒன்று. உடல், உள்ளம் இவையிரண்டும் ஆரோக்கியமாக- சந்தோஷமாக இருப்பதற்கு வேண்டிய வழிகளை—மருந்துகளை இது கூறுகின்றது இதன் மூல புருஷர் தன்வந்திரி மகரிஷி. இன்றைய உலகில் அறிவியலால் குணப்படுத்த முடியாத நோய்களைக்கூட இம்முறையால் குணப் படுத்த முடியும். சரகர், சுச்ருதர், மாதவர், வாக்படர் முதலிய பலர் பல நூல்களை இத்துறையில் எழுதி யுள்ளனர்.

336. தனுர் வேதம் என்பது யாது?

உப வேதங்களுள் தனுர் வேதமும் ஒன்றுகும் கவசங்கள், ஆயுதங்கள் செய்யும் முறைகள், ஆயுதங் களைப் பயன்படுத்தும் முறைகள், போரில் படைகளை அமைக்கும் பாணி, (கருட, பத்ம, வியூகங்கள் முதலி யன) முதலியவைகளைப் பர்றி இவ்வேதம் சொல்கிறது.

337. அஸ்திரம், சஸ்திரம் என்ருல் என்ன?

உபவேதங்களுள் ஒன்ருன தனுர் வேதத்தின் பிரிவுகள் இவை யிரண்டும்.

அஸ்திரம் என்பது மந்திரப் பிரயோகம் மூலமாகப் பாணங்களை, தர்ப்பை முதலியவைகளை ஏவிவிடச் செய்வது.

சஸ்திரம் என்பது கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்களைப் பற்றிச் சொல்வது.

338. வேத இதிகாசங்கள் எவரெவர் மூலமாக இவ்வுலகில் பரவலாயின?

வியாச முனிவர்

1. ரிக் வேதத்தை—பயில முனிவருக்கும்
2. யசுர் " —வைசம்பாயனருக்கும்
3. சாம " —ஜைமினிக்கும்
4. அதர்வண " —சுமந்துக்கும்
5. இதிகாச புராணங்களை—ரோமஹர்ஷணருக்கும்

உபதேசித்துக் கொடுத்து அவர்கள் மூலமாக இவ்வுலகில் பரப்பினர்.

339. வேதத்தின் அங்கங்கள் யாவை? அவை ஒவ்வொன்றைப்பற்றியும் குறிப்பெழுதுக.

1) சிக்ஷை 2) வியாகரணம் 3) சந்தஸ்
4) நிருக்தம் 5) ஜோதிஷம் 6) கல்பம்

1) **சிக்ஷை:-** வேத சப்தங்களை உச்சரிக்கும் முறைகளைப் பற்றிக் கூறுகிறது.

2) **வியாகரணம்:-** சப்த முறைகளைப் பற்றிக் கூறுகிறது.

3) **சந்தஸ்:-** வேதத்திலுள்ள வாக்கியங்களின் அமைப்பைப் பற்றிக் கூறுகிறது.

4) **நிருக்தம்:-** எழுத்துக்களின் பிறப்பிடங்கள், ஸ்வரம், இனம் முதலியவைகளை விளக்குகிறது.

5) **ஜோதிஷம் :-** வேதத்தில் விதிக்கப்பட்ட காரியங்களை எந்தெந்தச் சமயத்தில் செய்யவேண்டுமென்று காலத்தைக் கணித்துக் கொடுக்கின்றது

6) **கல்பம் :-** வேத காரியங்களை எந்தெந்த இடங்களில் எந்தெந்த முறைகளில் எந்தெந்த விதங்களில் அமைத்துச் செய்யவேண்டும் என்பதைப் பற்றிக் கூறுகின்றது.

340. 'ஷட் தரிசனம்' என்பவை யாவை?

தரிசனம் என்பதற்கு இங்கு மதம் என்பது பொருள். ஷட் தரிசனம் என்பது ஆறு மதங்கள் எனப்படும். இம்மதங்களும் அவற்றிற்குரிய பிரமாண நூல்களும் வருமாறு:-

1) மீமாம்சை—ஜைமினி சூத்திரம்
2) நியாயம்—கௌதம சூத்திரம்
3) வைசேஷிகம்—கணாத சூத்திரம்
4) சாங்க்யம்—கபில சூத்திரம்
5) யோகம்—பதஞ்சலி சூத்திரம்
6) வேதாந்தம்—வியாச சூத்திரம்.

341. 'தச காரியம்' என்பவை எவை?

ஞானம் உடையவர்களிடத்தில் இவை அமையும்.

1. தத்துவ ரூபம் 2. தத்துவ தரிசனம்
3. தத்துவ சுத்தி 4, ஆன்ம ரூபம்
5. ஆன்ம தரிசனம் 6. ஆன்ம சுத்தி
7. சிவ ரூபம் 8. சிவ தரிசனம்
9. சிவயோகம் 10. சிவபோகம் என்பன.

342. 'மன்வந்திரம்' என்பது யாது?

நான்கு யுகங்களும் 71 தடவை வருமானால் அது ஒரு மன்வந்திரம் எனப்படும். மொத்தம் 14

மன்வந்திரங்கள் சேர்ந்தது ஒரு கல்பம். பிரமனின் ஒரு பகற்காலம் ஒரு கல்பம் ஆகும்.

343. உபநிஷதங்கள் யாவை?

வேதம்; சம்ஹிதை, பிராம்மணம் என்னும் இரு பிரிவுகளையுடையது. சம்ஹிதை பாகத்தில், சொல்ல வேண்டிய மந்திரங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மண பாகத்தில் யாகங்களில் செய்ய வேண்டிய முறைகளும் தேவதைகளும் அதன் பலன்களும் சொல்லப்பட்டுள்ளன. இந்தப் பிராம்மண பாகத்தின் ஒரு பாகமே உபநிஷத் எனப்படும். இதில் மனிதர்களிலிருந்து தேவதைகள் வரை பிறவியில்லாத பெரும் பேற்றை அடைவதற்குச் சாதனமான ஈசுவர உபாசனை, வேதாந்த தத்துவம், பரமாத்ம ஞான விஷயமான தத்துவங்கள் முதலியவை சொல்லப்பட்டுள்ளன.

344. முக்கியமான உபநிஷதங்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

1) ஈசாவாஸ்யஉபநிஷதம்
2) கேனோபநிஷதம்
3) கடோபநிஷதம்
4) பிரச்னோபநிஷதம்
5) முண்டகோபநிஷதம்
6) மாண்டுக்யோபநிஷதம்
7) தைத்திரிய உபநிஷதம்
8) ஐத்ரேய உபநிஷதம்
9) சாந்தோக்ய உபநிஷதம்
10) பிருஹதாரண்யக உபநிஷதம்

345. தர்ம சாஸ்திரங்களை எடுத்துக் கூறும் சூத்ரங்கள் எத்தனை? அவை யாவை?

தர்ம சாஸ்திரங்களை எடுத்துக் கூறும் 18 சூத்ரங்களின் பெயர்கள் வருமாறு –

1) போதாயனம்
2) ஆபஸ்தம்பம்
3) சத்யாஷாடம்
4) த்ராஹ்யாயணம்
5) ஆகஸ்த்யம்
6) சாகல்யம்
7) ஆச்வலாயனம்
8) சாம்பவீயம்
9) காத்யாயனம்
10) வைகானஸம்
11) சௌனகீயம்
12) பாரத்வாஜம்
13) ஆக்னிவேச்யம்
14) ஜைமினீயம்
15) மாதுன்யம்
16) மாத்யந்தினம்
17) கௌண்டின்யம்
18) கௌஷிதகம் என்பன

346. பிரம்ம சூத்திரம்—என்பது யாது?

உபநிஷதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து, அவற்றின் பொருளை சூத்திர வடிவில் கூறப் பட்டது பிரம்ம சூத்திரம் ஆகும்.

347. நீலகண்ட பாஷ்யம் யாரால் எழுதப்பட்டது?

பிரம்மசூத்திரத்திற்கு நீலகண்ட சிவாசாரியார் என்பவர் எழுதியுள்ள பாஷ்யமே நீலகண்ட பாஷ்யம் எனப்படும், இது சிவபரத்துவமாக (சைவ பரமாக) எழுதப்பட்டதாகும்.

348. ஸம்ஹிதை என்று எதற்குப் பெயர்?

ஒவ்வொரு வேதத்திலும் மந்திரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. அத்தொகை நூலுக்கு ஸம்ஹிதை என்று பெயர்.

349 பிராம்மணங்கள் (ப்ராஹ்மணங்கள்) என்பவை யாவை?

பிராம்மணங்கள் மந்திரங்களுக்கு வியாக்யானம் போன்றவை.

350. கல்பங்கள் ஏழு எவை?

1) பார்த்திப கல்பம்
2) கூர்ம கல்பம்
3) ப்ரளய கல்பம்
4) அனந்த கல்பும்
5) ச்வேத வராஹ கல்பம்
6) ப்ரம்ம கல்பம்
7) சாவித்ர கல்பம் என்பன.

351 'சமகம்'—'நமகம்' என்பன யாவை?

மூன்று வேதங்களிலும் யஜுர்வேதம் பிரதானமானது. இது ஏழு காண்டங்களையுடையது. அவற்றுள் நடுவிலுள்ள நான்காவது காண்டத்தில் 'ருத்ரம்' இருக்கிறது. "நமோ நமோ" என்று அதில் வருவதால் தெலுங்கு மக்கள் அதை "நமகம்" என்பார்கள். தமிழ் நாட்டில் அதை "ருத்ரம்" என்பர். அதற்குப் பிறகு "சமேசமே" என்று வரும் அதனால் "**சமகம்**" என்று சொல்வது வழக்கம். "பரமேஸ்வரனுக்கு நமஹ" என்று அடுத்தடுத்து வரும் மந்திரங்களையுடையது இஃது.

352 ஆகமங்கள் என்பவை யாவை? விளக்கமாக எழுது.

ஆ + கமம் = ஆகமம்.

ஆ = ஆன்மாக்களின், கமம் = பாசங்களைப் போக்கி முத்தியைத் தர வந்தது. வழிபாட்டு முறைகள் ஆலய அமைப்பு, பிரதிஷ்டை முறைகள் முதலியவைகளைப் பற்றி ஆகமங்கள் விரிவாகச் சொல்கின்றன. இவை சிவாகமம், வைஷ்ணவாகமம், சாக்தாகமம் என மூன்று வகைப்படும். இறைவனின் ஐந்து முகங்களிலிருந்தும் 28 ஆகமங்கள் தோன்றின என்று காரணாகமத்தால் அறிகிறோம்.

முகம்	தோன்றிய ஆகமங்கள்
1) சத்யோஜாதம்	—காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம்.
2) வாமதேவம்	—தீப்தம், சூஷ்மம் ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம்.
3) அகோரம்	—விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநிலம், வீரம்.
4) தத்புருஷம்	—ரௌரவம், மகுடம், விமலம், சந்திரக்ஞானம், முகபிம்பம்,
5) ஈசானம்	—ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம்.

353. ஆகமத்தின் நால்வகைப் பாதங்கள் எவை?

எல்லா ஆகமங்களும் (1) வித்யாபாதம் (2) கிரியா பாதம் (3) யோகபாதம் (4) சரியாபாதம் என்னும் 4 பிரிவுகளை உடையன.

1. **வித்யாபாதம்:-** ஞானபாதம், பதி, ஆன்மா இவற்றின் இலக்கணங்கள் சிருஷ்டி முதலிய பேதங்கள் முதலியவற்றைச் சொல்வது.
2. **கிரியாபாதம்:-** மந்திரங்கள், ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளை விரிவாகச் சொல்வது.
3. **யோகபாதம்:-** தத்வங்கள், அட்டாங்க யோகம் முதலியவை பற்றிச் சொல்வது.
4. **சரியாபாதம்:-** நித்திய கருமங்கள், பிராயச்சித்த விதிகள் பற்றிச் சொல்வது.

354. சிவாகமங்கள் இருபத்து எட்டின் பெயர்களை எழுதுக.

1) காமிகம்
2) யோகஜம்
3) சிந்த்யம்
4) காரணம்
5) அஜிதம்
6) தீப்தம்
7) சூக்ஷ்மம்
8) ஸஹஸ்ரம்
9) அம்சுமான்
10) ஸுப்ரபேதம்
11) விஜயம்
12) நிச்வாஸம்
13) ஸ்வாயம்புவம்
14) அனலம்
15) வீரம்
16) ரௌரவம்
17) மகுடம்
18) விமலம்
19) சந்த்ரக் ஞானம்
20) முகபிம்பம்
21) ப்ரோத் கீதம்
22) லலிதம்
23) ஸித்தம்
24) ஸந்தானம்
25) சர்வோக்தம்
26) பாரமேச்வரம்
27) கிரணம்
28) வாதுளம்

355. பதினெட்டு ஸ்மிருதிகள் எவை?

1) மநுஸ்மிருதி
2) யாக்ஞவல்க்யஸ்மிருதி
3) ஆபத்ஸ்தம்பஸ்மிருதி
4) விஷ்ணுஸ்மிருதி
5) ஹரீதஸ்மிருதி
6) உஷனஸ்மிருதி
7) ஆங்கீரஸஸ்மிருதி
8) யமஸ்மிருதி
9) ஆத்ரேயஸ்மிருதி
10) ப்ருஹஸ்பதிஸ்மிருதி
11) பராசரஸ்மிருதி
12) சாதாதவஸ்மிருதி
13) தக்ஷஸ்மிருதி
14) கௌதமஸ்மிருதி
15) சம்வர்த்தஸ்மிருதி
16) லிகிதஸ்மிருதி
17) பிரசேதஸ்மிருதி
18) ஸங்கஸ்மிருதி

முதலியன. (இவற்றுள் கலியுகத்திற்கு உபயோகப் படுவது பராசரஸ்மிருதியே என்று சொல்லப்படுகிறது.)

356. எந்தெந்த யுகங்களில் எந்தெந்த ஸ்மிருதிகள் முதன்மைத்தன்மை பெறுகின்றன.

கிருதயுகத்தில் மனு ஸ்மிருதியும்
திரேதாயுகத்தில் கௌதமரிஷியின் ஸ்மிருதியும்
துவாபரயுகத்தில் சங்கர ஸ்மிருதியும்
கலியுகத்தில் பராசர ஸ்மிருதியும் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன.

357. மீமாம்சை என்பது யாது?

வேதம் அநாதி. அதுவே பிரமாணம். செய்யும் வினையே மோக்ஷம் முதலான பலன்களைத் தரும். உலகம் என்றும் நிலைபெற்று விளங்கும். கடவுள் தேவையில்லை என்னும் கருத்துகொண்டு கர்ம காண்டத்தையே கடைப்பிடிப்பது மீமாம்சை எனப்படும். இத்தகையோர் மீமாம்சகர் எனப்படுவர். இதனை வகுத்துத் தந்தவர் ஜைமினி.

358. கல்ப சூத்ரம் என்று எதற்குப் பெயர்?

வேதங்களிற் சொல்லப்பட்டுள்ள யாகங்கள் ஒவ்வொன்றையும் எவ்வெம் முறைகளில் செய்ய வேண்டும் என்பதைப்பற்றிப் பிற்காலத்தில் பெரியோர்களால் எழுதி வைக்கப்பட்டுள்ள நூல்களுக்கு கல்ப சூத்ரம் என்று பெயர்.

[திருமண வேள்வி முறைகள் பொதுவான தர்மம் முதலியவைகளையும் சேர்த்துப் பிற்காலத்தில் கல்பசூத்ரம் என்றே அழைக்கலாயினர்.]

359. கல்பங்கள் மொத்தம் எத்தனை? அவைகளின் பெயர்களைக் கூறுக

கல்பங்கள் மொத்தம் 30 ஆகும். அவை

1. சேஷ கல்பம்
2. நீலலோஹித கல்பம்
3. வாமதேவ கல்பம்
4. ரதந்தர கல்பம்
5. ரௌரவ கல்பம்
6. ப்ராண கல்பம்
7. பிருகத் கல்பம்
8. கந்தர்ப்ப கல்பம்
9. சத்ய கல்பம்
10. ஈசான கல்பம்
11. வ்யான கல்பம்
12. ஸாரஸ்வத கல்பம்
13. உதான கல்பம்
14. கருட கல்பம்
15. கௌர்ம கல்பம்
16. நரசிம்ம கல்பம்
17. ஸமான கல்பம்
18. ஆக்நேய கல்பம்
19. சோம கல்பம்
20. மானவ கல்பம்
21. தத்புருஷ கல்பம்
22. வைகுண்ட கல்பம்
23. லட்சுமி கல்பம்
24. சாவித்ரி கல்பம்
25. அகோர கல்பம்
26. ச்வேதவராஹ கல்பம்
27. வைராஜ கல்பம்
28. கௌரி கல்பம்
29. மஹேஸ்வர கல்பம்
30. பித்ருகல்பம்

[இப்போது நடந்துகொண்டிருப்பது ச்வேதவராஹ கல்பம் ஆகும்.]

360. மன்வந்தரங்கள் மொத்தம் எத்தனை? அவற்றின் பெயர்களைத்தருக.

மொத்த மன்வந்தரங்கள் 14. அவை (1) ஸ்வாயம் புவ மன்வந்தரம் (2) ஸ்வாரோசிஷ மன்வந்தரம் (3) உத்தம மன்வந்தரம் (4) தாமஸ மன்வந்தரம் (5) ரைவத மன்வந்தரம் (6) சாக்ஷுஷ மன்வந்தரம் (7) வைவஸ்வத மன்வந்தரம் (8) ஸாவர்ணி மன்வந்தரம் (9) பிரம்ம ஸாவர்ணி மன்வந்தரம் (10) தர்ம ஸாவர்ணி மன்வந்தரம் (11) ருத்ர ஸாவர்ணி மன்வந்தரம் (12) தேவ ஸாவர்ணி மன்வந்தரம் (13) இந்திர ஸாவர்ணி மன்வந்தரம் (14) தக்ஷ ஸாவர்ணி மன்வந்தரம்

[இப்போது நடைபெறுவது வைவஸ்வத மன்வந்தரம் ஆகும்]

361. பதினெண் புராணங்களைப் பற்றி விளக்கம் கூறுக

1) பிரம்மபுராணம் :- பிரம்மாவைப் பற்றியும், அவருடைய உலகப் படைப்பு பற்றியும் கூறுவது. கலியுகத்தில் ஏற்படும் கெடுதிகளும், மக்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும் பக்தியின் அவசியமும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

2) பத்மபுராணம் :- காயத்ரீ மகிமையும் கற்பின் சிறப்பும் சொல்லப்படுகிறது.

3) பிரம்மவைவர்த்தபுராணம் :- கிருஷ்ண பரமாத்வையே பிரம்மமாக-பரப் பிரம்ம சொருபமாகப் போற்றிச் சொல்கிறது.

4) இலிங்கபுராணம் .- பரமசிவனுடைய வரலாறுகளையும் திருநீறு முதலியவைகளையும் விரிவாகச் சொல்கிறது.

5) விஷ்ணுபுராணம் :- விஷ்ணுவின் பெருமைகளை விரிவாகச் சொல்கிறது.

6) கருடபுராணம் :- கருடன் கச்யப மகரிஷிக்குச் சொல்லியது. பிராணன் உடம்பை விட்டு நீங்கி அனுபவிக்கின்ற பல விதமான நிலைகளைக் கூறுகிறது.

7) அக்கினிபுராணம் :- அக்கினியைப் பற்றிய புராணம். அக்கினி, வசிஷ்டருக்கு உபதேசித்தது. மனிதன் செய்ய வேண்டிய செயல்கள், கடைப் பிடிக்க வேண்டிய நன்னெறிகள் முதலியவைகளைக் கூறுகிறது.

8) மத்ஸ்ய(மச்ச)புராணம்:- பலவகை விரதங்களின் பெருமைகளும், தானங்களும் சொல்லப்பட்டுள்ளன. சிராத்தத்தின் அவசியம் பிதிர்காரியங்கள் இவைகளைப் பற்றியும் சொல்கிறது.

9) நாரத புராணம் :- நாரதருடைய வரலாறும், அதையொட்டிப் பலவகை வாழ்க்கை நீதிகளையும் விரிவாக எடுத்துச் சொல்கிறது.

10) வராஹ புராணம்:- திருமாலின் அவதார மகிமை, அன்னதானம் முதலிய தருமங்களின் சிறப்புக் களைச் சொல்கிறது.

11) வாமன புராணம் :- வாமன அவதார நிகழ்ச்சியை எடுத்துரைக்கிறது.

12) கூர்ம புராணம்:- கூர்ம அவதார நிகழ்ச்சி, மாயையால் வரும் துன்பங்கள், நீக்கும் முறைகள் பற்றிச் சொல்கிறது.

13) பாகவத புராணம்:- விஷ்ணுவைப் பற்றியும் தேவியைப் பற்றியும், அன்னையாம் பராசக்தியின் பெருமையையும் பலபடச் சொல்கிறது,

14) ஸ்காந்த புராணம்:- முருகப்பெருமான் வரலாறு சொல்லப்படுகிறது

15) சிவபுராணம்:- சிவபெருமானின் பெருமை களை எடுத்துச்சொல்கிறது. இலிங்கோற்பவ நிகழ்ச்சிகள் எல்லாம் இதில் இடம் பெற்றுள்ளன.

16) மார்க்கண்டேய புராணம்: மார்க்கண்டேய ரால் ஜைமினிக்குச் சொல்லப்பட்ட புராணம். அத்ரி, அனுசூயை முதலியோர் வரலாறுகள் எல்லாம் இதில் உள்ளன.

17) பிரும்மாண்ட புராணம்:- பிரம்மாவால் படைக்கப்பட்ட பிரம்மாண்டங்களைப் பற்றிய செய்தி கள் இதிலுள்ளன.

18. பவிஷ்ய புராணம்:- 'பவிஷ்ய' என்றால் வரப் போகும் என்று பொருள். கலியுகத்தில் நடைபெற

விருக்கும் செய்திகளையும். இறைவன் கல்கி அவதாரம் எடுக்கவுள்ள முறைகளையும் வேதவியாசர் தன் தீர்க்க தரிசனத்தில் எடுத்துச் சொல்லியுள்ளவற்றைத் தன்கைத்தே கொண்டது.

362, 'பஞ்சாங்கம்' என்று பெயர்வரக் காரணம் யாது?

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்து அங்கங்களையும் பற்றிக் கூறுவதால்—இவ்வைந்து அங்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் (பஞ்ச + அங்கம்) = பஞ்சாங்கம் என்று பெயர் பெற்றது.

363. பஞ்சாங்கம் எத்தனை வகைப்படும்?

மூன்று வகைப்படும் அவை:-

1) வாக்கிய பஞ்சாங்கம்
2) திருக்கணித பஞ்சாங்கம்
3) சித்தாந்த பஞ்சாங்கம் என்பன.

364. 'வாரம்' எனப்படுவது யாது?

நவக்கிரகங்களில் ராகு, கேதுவைத் தவிர, மற்ற ஏழு கிரகங்களுக்கும் நாடோறும் ஆட்சி முகூர்த்தங்கள் மாறி மாறி வருகின்றன. அப்படி வருவதில் எந்த தினத்தில் சூரியோதய காலத்தில் யாருடைய ஆட்சி வருகிறதோ அந்தக் கிரகத்தின் பெயர் அந்த வாரத்திற்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த முறைப்படியே ஞாயிறு, திங்கள் .... சனி என்று கிழமைகள் ஏற்பட்டிருக் கின்றன.

365. திதி, யோகம் எனப்படுபவை யாவை?

ஒவ்வொரு நாளும் சந்திரன் ஆகாயவீதியில் செல்லும் தூரத்திலிருந்து சூரியன் செல்லும் தூரத்தைக் கழித்து வந்த மிகுதியே திதி எனப்படும்.

இதேபோன்று ஒவ்வொரு நாளும் சூரியன் செல்லும் கதியுடன் சந்திரன் செல்லும் கதியைக் கூட்டிவந்த தொகையே யோகம் எனப்படுகிறது.
[இவ்விதமான யோகங்கள் 27]

366. நட்சத்திரம், கரணம் எனப்படுபவை யாவை?

பூமியிலிருந்து பார்ப்பவர்களால்; எந்த தினத்தில் எந்த நட்சத்திரத்திற்குச் சமீபமாக இருப்பதாகச் சந்திரன் பார்க்கப்படுகிருனே அந்த தினத்தில் அந்த நட்சத்திரம் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு திதியை இரண்டாகப்பிரித்து ஒவ்வொரு பகுதியையும் ஒரு கரணம் எனப்படுகிறது.

367. நாழிகை, யாமம்—விளக்குக

ஒரு நாள் அதாவது 24 மணி நேரம் கொண்டது 60 நாழிகையாகும். இது சூரிய உதயத்திலிருந்து கணக்கிடப்படுகிறது.

ஒரு யாமம் என்பது 3 மணி நேரமாகும். (யாமம் என்பது வழக்கில் ஜாமம் எனப்படுகிறது.)

368. லக்னம், ராசி என்பவை யாவை?

எந்த நட்சத்திரத்தில் பிறக்கிருர்களோ அந்த நட்சத்திரம் ராசி எனப்படும்.

பிறக்கும் நேரம் லக்னம் எனப்படும்.

369. சுக்ல பக்ஷம் (வளர்பிறை) கிருக்ஷ்ண பக்ஷம் (தேய்பிறை) என்பன யாவை?

அமாவாசையை அடுத்துவரும் 15 நாள்கள் சுக்ல பட்சம் (வளர்பிறை) என்ப்படும். இது பிதிர் தேவதைகளுக்குப் பகற்காலமாகும்.

பௌர்ணமிக்குப் பிறகு வரும் 15 நாள்கள் கிருஷ்ண பக்ஷம் (தேய்பிறை) எனப்படும். இது பிதிரர்களுக்கு இரவு நேரமாகும்

370. ஓரைகளும் அவற்றுக்குரிய பலன்களும் யாவை?

ஓரையின் பலன்கள்

சூரியன் :- முதலில் தொழில் செய்ய, மலை பார்க்க, Chemicals தொழில் செய்ய

சந்திரன் :- பிரயாணம், நகை செய்தல் திருமணம் பேச

செவ்வாய் :- பூமி சம்பந்தப்பட்ட காரியம் வைத்தியம் செய்ய

புதன் :- படிப்பு துவங்க, Documents எழுத

குரு :- சகல நற்காரியம் செய்ய, பெரியோர் ஆசி பெற

சுக்கிரன் :- சகல நற்காரியம் செய்ய

சனி :- தோட்டப் பணி, வழக்கு முடிவுகட்ட

371. தக்ஷிணாயனம், உத்தராயனம் — என்றால் என்ன?

உத்தராயன காலம்:- சூரியன், வடக்கு பக்கமாகச் சாய்ந்து சஞ்சரிக்கும் காலம்.

[உத்தரம்=வடக்கு, அயனம்=வழி.]

தக்ஷிணாயன காலம்:- சூரியன் தெற்குப் பக்கமாகச் சாய்ந்து சஞ்சரிக்கும் காலம்.

[தக்ஷிணம்=தெற்கு]

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி— இந்த ஆறு மாதங்கள் உத்தராயனம்.

ஆடி ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி; இந்த ஆறு மாதங்கள் தக்ஷிணாயனம்.

372. சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் என்றால் என்ன?

ராகு, கேது என்னும் இவ்விரு கிரகங்களும் சூரியனையும், சந்திரனையும் மறைக்கும் காலம் சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் எனப்படும்

373. 'ருது' என்பது யாது? பெயர்களை எழுதுக.

இரண்டு மாதங்கள் கொண்ட கால அளவு 'ருது' எனப்படும். ஓராண்டிற்கு 6 ருதுக்கள்.

1) சித்திரை, வைகாசி—வசந்தருது (கோடைகாலம்-இளவேனில்)
2) ஆனி, ஆடி—கிரீஷ்மருது (இலையுதிர் காலம்-முதுவேனில்)
3) ஆவணி, புரட்டாசி—வ்ருஷருது (மழைக்காலம்-கார்காலம்)
4) ஐப்பசி, கார்த்திகை—சரத்ருது (குளிர்காலம்-கூதிர்காலம்)
5) மார்கழி, தை—ஹேமந்தருது (முன்பனிக்காலம்)
6) மாசி, பங்குனி—சசிருது (பின்பனிக் காலம்)

374. இராகு காலம், எமகண்டம் முதலிய நேரங்களை எழுதுக.

	இராகு	குளிகை	எமகண்டம்
ஞாயிறு	4-30—6	3—4-30	12—1-30
திங்கள்	7-30—9	1-30—3	10-30—12
செவ்வாய்	3—4-30	12—1-30	9—10-30
புதன்	12—1-30	10-30—12	7-30—9
வியாழன்	1-30—3	9—10 30	6—7-30
வெள்ளி	10-30—12	7-30—9	3—4-30
சனி	9—10-30	6—7-30	1-30—3

இராகு காலம், எமகண்ட வேளைகள் விலக்கப்பட வேண்டியவை. குளிகையில் சுப காரியங்கள் செய்யலாம்.

375 'யமகண்டம்' என்றகாலம் வந்த விதம் யாது?

பிரகஸ்பதியாகிய தேவகுருவுக்கு 'யமகண்டன்', 'கசன்' என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் 'யமகண்டன்' என்பவனுடைய காலத்தையே 'யமகண்டம்' என்று கூறுகிறோம். இவ்வேளை நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஏற்றதன்று

(யமகண்டம் என்பதையே வழக்கில் எமகண்டம் என்று சொல்கிறோம்)

376. சௌர மானம், சாந்திர மானம் என்பன யாவை?

சூரியன் ராசிகளில் சஞ்சரிப்பதைக் கொண்டு கணக்கிடப்படுவது 'சௌரமானம்'. தமிழ் மாதங்கள் 'சௌரமான' முறையில் கணக்கிடப்பட்டவை.

சந்திரனின் கதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுபவை 'சாந்திரமானம்' எனப்படும்,

தமிழ்நாடு, கேரளம் தவிர மற்ற மாநிலத்தவர்களால் வழங்கப்படும் மாதங்கள் சாந்திரமானம் ஆகும். மாத ஆரம்பங்கள் வெவ்வேறாக இருந்தாலும், இவ்விரு பிரிவைச் சேர்ந்தவர்களும் சில பண்டிகைகளைச் சௌர மானத்திலும் சில பண்டிகைகளைச் சாந்திர மானத்திலும் கொண்டாடுவார்கள்.

பொதுவாக அமாவாசை முடிந்து தொடங்குவது சாந்திர மானம்; பௌர்ணமி முடிந்து தொடங்குவது சௌர மானம்.

377. 'தியாஜ்யம்' — பற்றி எழுது.

தியாஜ்யம் — என்பது விஷகடிகை. இது ஒரு நட்சத்திரத்தில் குறிப்பிட்ட நாழிகையிலிருந்து 2 மணி

நேரத்திற்கு ஏற்படும். அந்த நேரத்திலும், குளிகை காலத்திலும், முடிந்த வரையில் எந்தவொரு நற்செயலை யும் செய்யாமலிருப்பதே நல்லது.

378. மஹாளய பக்ஷத்தின் சிறப்பு யாது?

தக்ஷிணாயன காலம் தேவர்களுக்கு இரவாகும். இக்காலத்தில் வரும் ஐந்தாவது கிருஷ்ண பட்சம் பிதிர்தேவதைகளுக்குரிய காலமாகச் சொல்லப்படுகிறது. சூரியன், கன்னி ராசியில் சஞ்சரிக்கும் இந்தப் பதினைந்து நாள்கள் 'மஹாளய பக்ஷம்' எனப்படும் இவ்வேளையில் அனைத்துப் பிதிர் தேவதைகளும் தங்களது சக்தியைப் பெற்று சஞ்சரிக்கும். இவ்வேளையில் இறந்தவர்க்கு வழிபாடுகள் செய்வது சிறப்புடையது.

இப்பக்ஷத்தில் ஒரு நாளிலாவது கட்டாயம் பிதிரர்களுக்குத் தர்ப்பணம் (நீர்க்கடன்) செய்யவேண்டும் என்பது சாஸ்திரம். ஆந்திரத்தில் 10 நாளும் இக்கடனைச் செய்வார்கள். வடநாட்டில் உள்ளவர்கள் இப்பக்ஷத்தில் ஒரு நாளாவது கங்கைக்குச்சென்று நீராடி, பிதிரர்களுக்குத் தர்ப்பணம் செய்வார்கள். குளித்து முடித்து ஈர ஆடையை எதிர்முகமாகப் பிழிந்து அந்நீரைவார்த்து நீர்க்கடனைக் கொடுப்பதுவும்;

குடுமியை முன்புறமாகப் பிழிந்து வார்த்து அந்நீரைப் பிதிரர்க்குரியதாக்கி நீர்க்கடன் செய்தலும் தினந்தோறுமே பிதிர்கடனைச் செய்வதுண்டு. நம் முன்னோர்களுக்கு இவை மிகவும் முக்கியமான ஆகாரமாகச் சொல்லப் படுகிறது.

379. 'சிராத்தம்' என்பதன் பொருளையும் அது செய்யப்படுவதன் முக்கியத்துவத்தையும் கூறு.

சிரத்தையுடன் செய்வது சிராத்தமாகும். முன்னோர்கள் இறந்த நாளில் அவர்களின் மேற்கதிக்காகச் சந்ததியினர்

சிரத்தையுடன் செய்யும் கிரியை இது ஆகும். இறந்த நாளில் மட்டுமன்றி அமாவாசை, வருஷப்பிறப்பு முதலிய நாள்களிலும் இதைச் செய்யவேண்டும். நம் மதம் மனிதன் பிறப்பதற்கு முன்பும், பிறந்து வாழ்கின்ற போதும், இறந்த பின்பும் அவ்வாழ்வு உண்டு என்று வற்புறுத்தி அதற்கு உரிய கிரியைகளை வகுத்துள்ளது. இவைகளைத் தவருமல் செய்யவேண்டும்.

380. சிராத்த காலத்தில் தகப்பனுர், பாட்டனுர், முன்பாட்டனுர் ஆகிய மூவர் பெயர்களையும் சொல்லிச் செய்வதற்கான காரணம் யாது?

இதற்கு இருவகையாகச் சொல்லாம்.

1. ஒரே பெயரில் வேறு எவரேனும் பித்ருக்களாக இருக்கலாம். அதனுல் அவருக்கு முற்பட்டவரைச் சொல்கிருேம். இனங் கண்டுகொள்வதற்காக ஒரு வேளை அதிலும் ஒற்றுமையிருந்துவிட்டால் என் செய்வது? அதற்காக மூன்ருமவர் பெயர் உதவக்கூடும் அல்லவா? அதற்காகச் சொல்கிருேம். மூன்று பெயர்களும் ஒன்று போலச் சேர்வது என்பது பொதுவாக அமைவதில்லை. மிகவும் அபூர்வம்.

2. அறிவியல் பூர்வமான கருத்தாவது.- தந்தையின் சுக்கில தாதுவிலிருந்தே குழந்தை பிறப்பதாகச் சொல்லப் படுகிறது. குழந்தையின் உற்பத்திக்கான மூலமாகவுள்ள இந்த சுக்கில தாதுவில் 84 கூறுகள் (அம்சங்கள்) உள்ள தாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அக்கூறுகளுள் 28 கூறுகள் — அவன் சாப்பிடும் உணவு நீர் ஆகிய வற்ருல் உண்டாகின்றன. மற்ற 56 கூறுகள் அவனுடைய முன்னேர்கள் மூலம் கிடைக்கின்றன. முன்னேர்கள் மூலம் வரும் இந்த 56 கூறுகளுள் தந்தையிடமிருந்து 21ம், பாட்டனுரிடமிருந்து 15ம், முன்பாட்டனுரிடமிருந்து 10ம், நான்காம் பாட்டனுரிடமிருந்து 6ம், ஐந்தாவது பாட்டனு ரிடமிருந்து 3ம், ஆருவது மூதாதையரிடமிருந்து 1ம் ஆக

(56 கூறுகளும்) கிடைக்கின்றன என்பது அறிவியல் உண்மை. இதிலிருந்து ஒருவனுக்கு, அவனோடு சேர்ந்து ஏழு தலைமுறைகளுக்கு ஒரு சுக்கிலத் தொடர்பு இருப்பது தெரிகிறது. அதனால்தான் ஏழு தலைமுறைவரை பிண்டத் தொடர்பு இருக்கிறது. இந்தக் கணக்கில்தான் தாயாதிகளை கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்.

இவர்களுள் பிண்டத் தொடர்பு, படைத்தல் சக்திக்கு அதிக நெருக்கமாக இருப்பது 21, 15, 10 ஆகிய கூறுகளையுடைய முதல் 3 தலைமுறைகளில்தான் அமைகின்றது.

பத்துக்குக் குறைவான கூறுகளைத் தருபவர்களின் அம்சங்கள் (கூறுகள்) மிகவும் குறைவாக இருப்பதால் அவை சிறு அம்சங்களாகின்றனவே தவிர,படைத்தலுக்கு அவ்வளவாகத் துணையாவதில்லை. அதிகமாக அம்சங்களையுதவி படைப்புக்குத்துணையாவது தந்தை, பாட்டனர், முன்பாட்டனர் ஆகியோருடைய தாதுத்தொடர்பேயாகும் அதனால்தான் சிராத்த காலத்தில் இம்மூன்று பெயர்களைச் சொல்லியழைத்து அவர்களுக்குப் பிண்டதர்ப்பணம் செய்கின்றோம். (முன்பாட்டனர் = முப்பாட்டனர்)

381. பிண்டதானம் தருவதன் கருத்து யாது? இதனால் பித்ருக்களுக்குத் திருப்தி ஏற்படுவது எங்ஙனம்?

படைப்பின் ஆரம்பத்தில் முதலில் உயிர்களே உற்பத்தி செய்யப்பட்டதாக வைதிக விஞ்ஞானம் கூறுகிறது. அவை இருபகுதிகளாகப் பிரிந்தன. 1) பிருகு 2) அங்கிரா எனப்பட்டன. பிருகு = குளுமையான உயிர். அங்கிரா = வெப்பமான உயிர். வெப்பமான (ஆக்னேயமான) உயிர்களிலே ஸோமம் (குளுமை) பெய்யப்படும் பொழுது படைப்பு நடைபெறுகிறது. பூமியை 3 அங்குலம் தோண்டினால் அதற்கு அக்கினியின் தொடர்பு ஏற்படுகிறது. அதில் விதை உருவமான ஸோமத்தை விதைத்தால் முளை விடுகிறது. அதைப்

பாதுகாக்க ஸௌம்ய பிராணன்கள் (குளுமை) தேவைப் படுகிறது. இதைக் கவனித்தால் அக்கினி—ஸோமம் இவையிரண்டுங்கலந்ததே சிருஷ்டி (படைப்பு) என்பது தெரியவரும். பித்ருக்கள் (முன்னோர்கள்) ஸோம உயிர்கள். ஸோமனின் இனம் ஸோமனின் பக்கத்தையே நாடும். அதனால்தான் பித்ருக்கள் குளிர்ச்சியான (ஸோமம்) சந்திரலோகத்துக்குப் (ஸோமன் = சந்திரன்) பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஸோமப் பிரதானமாக எள் போன்றவை கலந்த பிண்டங் களைத் தருவோமேயானால் அவர்கள் குளிர்ச்சியும் தங்களுக்கென்று குறித்துள்ள (குளிர்ச்சி நிறைந்த) சந்திர லோகத்திற்கு அருகில் உள்ள பித்ரு லோகத்தை அடைந்து அங்கு குளுமையாக, சந்தோஷத்துடன் (திருப்தியடைந்து) வாழ்கிறார்கள். இதுவே பிண்டதானம் செய்யப்படுவதின் கருத்தாகும்.

382. பிரம முகூர்த்தம் என்பது யாது?

இரவின் கடைசியாகிய—விடியும் முன் உள்ள ஐந்து நாழிகை—அதாவது விடியற்காலம் 4 மணி முதலாகும்.

383. முகூர்த்த அளவு என்பது யாது?

முகூர்த்த அளவு என்பது ஒன்றரை மணி நேரமாகும்.

384. அமாவாசை என்றால் என்ன?

சூரியனும் சந்திரனும் ஒன்றுகூடும் தினம்.

முப்பது நாட்களுக்கு ஒரு முறை வருவது. இது பிதிர்தினம். இத்தினத்தில் பிதிர்களை நோக்கி ஒரு சிறிது, தான தர்ப்பணம் முதலிய செய்யினும் அவர்கள் பூரணகிருபை செய்யும்தினம் இதுஎன்றும்நூல்கள் கூறும்.

385. திதிகள் 15ன் பெயர்கள் யாவை?

1. பிரதமை	2. துவிதியை	3. திருதியை
4. சதுர்த்தி	5. பஞ்சமி	6. சஷ்டி

7. சப்தமி 8. அஷ்டமி 9. நவமி
10. தசமி 11. ஏகாதசி 12. துவாதசி
13. திரயோதசி 14. சதுர்த்தசி 15. அமாவாசை
(அ) பௌர்ணமி

386. மனுக்கள் பதினால்வர் பெயர்களை எழுதுக.

(1) சுவாயம்புவன் (2) சுவாரோசிஷன்
(3) உத்தமன் (4) தாமசன் (5) ரைவதன்
(6) சாக்ஷுசன் (7) வைவசுவதன்
(8) சூரியசாவர்ணி (9) தக்ஷசாவர்ணி
(10) ப்ரஹ்மசாவர்ணி (11) ருத்ரசாவர்ணி
(12) தர்மசாவர்ணி (13) ரௌஸியன்
(14) பௌசியன் ஆகியோர்

387. ஆதித்தர் பன்னிருவர் யாவர்?

1. வைகத்தன் 2. விவச்சுதன் 3. பாசன்
4. மார்த்தாண்டன் 5. பாஸ்கரன் 6. ரவி
7. உலோகப்பிரகாசன் 8. உலோக சாட்சி
9. திரிவிக்ரமன் 10. ஆதித்தன்
11. திவாகரன் 12. அங்கிசமாலி
ஆகியோர்.

388. ஏகாதச ருத்திரர்களின் பெயர்கள்யாவை?

1, மகாதேவன் 2. ருத்திரன் 3. சங்கரன்
4. நீலலோகிதார் 5. ஈசானன் 6. விஜயன்
7. வீமதேவன் 8. சௌம்ய தேவன்
9. பலோத்பவன் 10. கபாலிகன்
11. ஹரன் என்போர்.

389. ரிஷிகள் பதினொருவர் எனப்படுவோர் யாவர்?

1. அத்ரி 2. வசிஷ்டர் 3. புலஸ்தியர்
4. கிருது 5 பரத்வாஜர் 6. விச்வாமித்திரர்

7 பிரசேதன் 8. ருசிகர் 9. அகத்தியர்
10. ததீசி 11. துர்வாசர் ஆகியோர்.

390. பதினெண் மகரிஷிகள் யாவர்?

1. மனு 2. பிரஹஸ்பதி 3. தக்ஷர்
4. கௌதமர் 5. யமர் 6. அங்கிரஸ்
7. யாக்ஞவல்கியர் 8. பிரசேதஸ்
9. சாதாதபர் 10 பராசரர் 11. சம்வர்த்தர்
12. உசநஸ் 13. சங்கரர் 14 லிகிதர்
15 அத்ரி 16. விஷ்ணு 17. ஆபஸ்தம்பர்
18. ஹாரீதர்

391. அத்வாக்கள் ஆறு எவை?

1. கலாத்வா (கலை) 2. புவனுத்வா (புவனம்) 3. வர்ணுத்வா (வர்ணம்)
4. மந்திராத்வா (மந்திரம்) 5. பதாத்வா (பதம்) 6.. தத்வாத்வா (தத்வம்)

என்பன.

392. பஞ்ச மஹா யக்ஞங்களை விளக்கிக் கூறு.

1. **தேவயக்ஞம்:—** தேவதைகளைக்குறித்து அக்கினியில் ஹோமம் செய்வது

2. **பித்ரு யக்ஞம்:—** நம் குலத்தில் இறந்துபோன முன்னோர்களின் திருப்திக்காகச் செய்யப்படும் ஹோமம்.

3. **பூத யக்ஞம்:—** மனிதர் நீங்கலாக மற்ற ஈ எறும்பு முதலான பிராணிகளுக்குத் தன்னிடமுள்ள உணவுப் பொருள்களைச் சிறிதளவாவது சுயநலமின்றித் தியாக மனப்பான்மையுடன் கொடுத்து உதவுவது.

4. **மனித யக்ஞும்:—** நம்மை நாடி பசித்து வந்தோர்க்கு உணவளித்து உதவுவது.

5. **பிரம யக்ஞும்:—** முன்னோர்களால் வழக்கப்படி கற்கப்பட்டு வரும் வேதத்தை விதிப்படி அத்யயனம் செய்வது.

393. பஞ்ச யக்ஞ ஹோமங்களைப்பற்றி எழுதுக.

1. கணபதி ஹோமம் — தடங்கலின்றிக் காரியங்கள் நடைபெற
2. சண்டி ஹோமம் — வறுமை, பயம் நீங்க
3. நவக்ரஹஹோமம் — கிரகங்களைப் பிரியப் படுத்த
4. மகாசுதர்சன ஹோமம் — வெற்றி கிட்ட
5. ருத்ர ஏகாதச ஹோமம் — ஆயுள் விருத்தி, க்ஷேமம் கிட்ட

ருத்ர ஹோமம்:— 11 வேத வித்துக்கள் 11 முறை ருத்ரஜபம் செய்து ஹோமம் செய்வது.

மகாருத்ரஹோமம்:— 121 வேத வித்துக்கள் 11 முறை ருத்ர ஜபம் செய்து 11 முறை ஹோமம் செய்வது

அதிருத்ர ஹோமம்:— மேற்சொல்லியவாறு 11 முறை மகா ருத்ரம் செய்வது.

394. சூக்ஷ்ம சரீரம் என்பது யாது?

கன்மேந்திரியங்கள் (5) ஞானேந்திரியங்கள் (5) பிராண பேதங்கள் (5) மனம் (1) புத்தி (1) என்னும் இந்தப் பதினேழின் சேர்க்கையே சூக்ஷ்ம சரீரம் எனப்படும்.

395. மூவகையான சத்தியங்கள் யாவை? விவரி.

1) ப்ராதிபாஸிக சத்தியம்
2) வியாவஹாரிக சத்தியம்
3) பாரமார்த்திகசத்தியம் என்பன.

நதியில் தண்ணீரைப் பார்த்து தண்ணீராக நினைத்து அதில் நீராடியது உண்மை. இந்த உண்மை ஞானம்/ அறிவு வியாவஹாரிகம் எனப்படும்.

தண்ணீர் இல்லாத சமயத்தில் கானல் நீரைத் தண்ணீராக நினைத்துக்கொண்டு நீரைப் பருகச்சென்றது பிரமை—உண்மையன்று, இந்த பொய் அறிவு ப்ராதி பாஸிகம் எனப்படும். இவ்வுலக முழுவதும் தோன்று வதற்கு ஆதாரமானது பரமாத்மாதான். அந்த பரமாத் மாவில் இந்த உலகமானது கற்பிக்கப்பட்டுள்ளது. கற்பிக்கப்பட்டதெல்லாம் நிஜமல்ல—வெறும் தோற்றமே அவற்றிற்கு ஆதாரமான காரணமான வஸ்துவானது ஒன்றுதான் எனப்படுவதே பாரமார்த்திக சத்தியம் எனப்படும்

396. ஆறு ஆதாரங்களின் பெயர்களையும் அவற்றுக்குரிய தலங்களின் பெயர்களையும் எழுதுக.

1; மூலாதாரம் — திருவாரூர்
2. சுவாதிஷ்டானம் — திருவானைக்கா
3. மணிபூரகம் — திருவண்ணாமலை
4, அனாகதம் — சிதம்பரம் (தில்லை)
5, விசுத்தி — திருக்காளத்தி
6. ஆக்ஞை — காசி
[துவாதசாந்தம் — மதுரை]

397. பிரம்மாவின் ஆயுட்காலக் கணக்கு நம் சமயத்தில் எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது?

தேவலோகத்திலுள்ள இந்திராதி தேவர்களுக்குத் தக்ஷிணாயனம் என்பது இரவுக் காலமாகும், உத்தராயனம்

என்பது பகற் காலமாகும். நம்முடைய ஒரு வருஷ காலமானது தேவலோக இந்திராதி தேவதைகளுக்கு ஒரு நாள் ஆகும். இவ்விதம் தேவமானப் பிரகாரம் •800 வருஷங்களைக் கொண்டது கிருதயுகமாகும். 3600 வருஷங்களைக் கொண்டது த்ரேதா யுகமாகும். 2400 வருஷங்களைக் கொண்டது துவாபர யுகமாகும். 1200 வருஷங்களைக் கொண்டது கலியுகமாகும். இவ்விதம் நான்கு யுகங்களும் ஒன்றன் பின் ஒன்ருக ஆயிரம் தடவைகள் வந்தால், அதுவே உலகம் படைக்கும் பிரம்ம தேவனின் ஒரு பகற் காலமாகும். அதுபோல் நான்கு யுகங்களும் மறுபடியும் ஒன்றன்பின் ஒன்ருக ஆயிரம் தடவைகள் வந்தால் "அது பிரம்ம தேவனின் ஓர் இரவுக் காலமாகும். இரண்டாயிரம் தடவைகள் சுற்றி வந்தால் அது பிரம்ம தேவனின் ஒருநாளாகும்.

பிரம்மதேவனின் பகற்காலத்தில் உலக சிருஷ்டியும், இரவு காலத்தில் பிரளயமும் உண்டாகின்றன. அந்தப் பிரளய காலத்தில் பூலோகம் - புவர்லோகம் - சுவர்க்க லோகம் என்று சொல்லப்படுகின்ற மூன்று லோகங்களும் அழிந்து விடுகின்றன. இந்தப் பிரளயம் பிரம்ம தேவனின் இரவுக்காலத்தின் நிமித்தமாய் ஏற்படுவதால் இதை "நைமித்திகப்பிரளயம்" என்பார்கள். பிறகு பிரம்மதேவனின் பகற்காலத்தில் பூலோகம்-புவர்லோகம், சுவர்க்க லோகம் ஆகிய லோகங்களின் சிருஷ்டி மாத்திரம் தொடங்குகிறது. மற்றெல்லா லோகங்களும் முன்போலவே இருக்கின்றன. பிரம்ம தேவனின் ஒரு பகற் காலத்தை ஒரு 'கல்பம்' என்று கூறுவர்.

அந்த ஒரு கல்ப காலத்தில் 14 மனுக்கள் வருகிருர்கள். நான்கு யுகங்களும் 'CyclicRotation'-ல் 71 தடவைகள் வருவது ஒரு மனுவின் காலமாகும். அந்த 14 மனுக்கள்:-

1. ஸ்வாயம்புவ 2. ஸ்வாரோசிஷ 3. உத்தம 4. தாமஸ 5. ரைவத 6. சாக்ஷுஷ 7. வைவஸ்வத 8. பௌஷ்ய 9. அக்னி ஸாவர்ணி 10. ஸூர்யஸாவர்ணி 11. இந்திர ஸாவர்ணி 12. பிரம்ம சாவர்ணி 13. ருத்ர சாவர்ணி 14. ரௌச்ய எனப்படுவர்.

கல்பங்கள் மொத்தம் ஏழாகும். அவை 1. பார்த்திவ 2. கூர்ம 3. ப்ரளய 4. அனந்த 5. ச்வேதவராஹ 6. ப்ராம்ஹ 7. சாவித்ர எனப்படும். ஆக உலகைப் படைக்கும் பிரம்மதேவனின் ஒரு பகல் காலத்தில் நான்கு யுகங்களும், ஒவ்வொன்றும் ஆயிரம் தடவைகள் வந்து செல்லும்போது 14 மனுக்கள் வருகிறார்கள். இவ்விதம் பிரம்மதேவனின் ஒவ்வொரு பகலிலும் இரவிலும் சிருஷ்டியும், பிரளயமும் மாறி மாறி நடைபெற்று வருகின்றன. இந்தக் கணக்குப்பிரகாரம் பிரம்மதேவன் நூறு வருஷங்கள் இருப்பார்.

பிரம்மதேவனின் ஆயுளுக்குப் 'பரம்" என்று சொல்லுவார்கள். "பர அர்த்தம்" என்றால் பரத்தில் பாதி என்று பொருள். இவ்விதம் ஒரு பிரம்மதேவனின் ஆயுள் முடிந்தவுடன், மற்றொரு பிரம்மதேவன் உலகைப் படைக்கத்தோன்றுகிறார். இப்பொழுது உலகைப் படைத்துக் கொண்டிருக்கும் பிரம்மதேவனின் காலத்தில் பாதி கழிந்துவிட்டது. அவர் ஆயுளின் இரண்டாவது பாதி நடந்து வருகிறது தற்போது இருக்கும் பிரம்மதேவனின் பட்டத்தை அடுத்தபடியாக அலங்கரிக்கப்போகிறவர், ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவரும், ஸ்ரீராமருக்கு ஆத்மார்த்தமாகக்கைங்கர்யம் செய்தவரும், வாயு பகவானின் அம்சமுமான ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி ஆவார். ஆகவே உலகம் தோன்றின காலம் முதல், உலகைப் படைக்கும் பிரமாக்கள் பலர் தோன்றிப் போய்விட்டார்கள்.

398. "எண்பத்து நூருயிரம் யோனிபேதம்" -என்பதன் கணக்கைகூறு.

ஊர்வன	—11	நூருயிரம் பேதம்
மானுடம்	— 9	"
நீர் வாழ்வன	—10	"
பறப்பன	—10	"
நடப்பன	—10	"
தேவர்	—14	"
தாவரம்	—20	"
	84	நூருயிரம்.

399 சந்தியாவந்தனம் ஏன் செய்ய வேண்டும்?

சூரியனை அசுரர்கள் எதிர்க்கிருர்கள். அவர்களின் எதிர்ப்பின் வலிமையைக் கெடுப்பதற்குப் பூவுலகத்தவர்கள் சந்தியாவந்தனஞ் செய்கிருர்கள். சாப்பிடுவதை விட்டாலும் சந்தியாவந்தனத்தை விடலாகாது. சந்தியாவந்தனம் காலையிலும் மாலையிலும் கட்டாயமாகச் செய்தல் வேண்டும். அது பெரிய கடமை. சிலர் காலை, நண்பகல், மாலை ஆகிய முவேளைகளிலும் செய்வார்சள். முவேளைகளையும்—காணுமுன், கோணுமுன், கண்டு—என்று வழங்குவர், காலையில் சூரியன் உதயமாவதன் முன்பும், நண்பகல் உச்சிப்பொழுதிலும் மாலையில் சூரியன் மறையுமுன்னும் சந்தியாவந்தனஞ் செய்தல் முறையாகும்.

எல்லாக் கருமங்களுக்கும் எல்லா உபாசனைகளுக்கும் எல்லா மந்திரங்களுக்கும் ஆணிவேர் போன்றிருப்பது சந்தியாவந்தனம். சந்தியாவந்தனம் செய்யப்பழகியவன் இரண்டாம் பிறப்பு என்னும் மறுபிறப்பை அடைகிருன். உபநயனம் என்னும் பூணூல் அணிவது இரண்டாவது கண் எனப்படும் அது ஞானக்கண். சந்தியாவந்தனம்

செய்யும்போது உடலுறுப்புக்களை மந்திர பூர்வமாகத் தொடும்போது, அவை ஆற்றல் பெறுகின்றன. சைவ சமயத்தவர் குறைந்தது சமயதீட்சை என்னும் முதற்படியையாவது பெற்று ஆறுமுக நாவலரின் நித்திய கருமவிதியைப் பின்பற்றவேண்டும்.

400. காயத்ரி மந்திரத்தின் சிறப்பை எழுதுக.

காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனம் செய்து முடித்தபிறகு காயத்ரி மந்திரம் ஜபிக்க வேண்டும். நியமத்தோடு ஜபித்தால் பாவங்கள் ஒழியும்; வினைகள் அகலும். இதற்கு "ஜபிப்பவனைக் காப்பது (காயந்தம்-த்ராயதே) என்று பொருள். இம்மந்திரத்தில் உள்ள 24 எழுத்துக்களும் எல்லாத் தேவதைகளையும் சுட்டுகின்றன. இம் மந்திரம் வருமாறு:-

"ஓம் பூர் புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம், பர்க்கோ தேவஸ்ய தீமஹி; தீயோ யோந: பிரசோதயாத்."

401 திருஆதிரை—நட்சத்திரம் பற்றி எழுதுக.

இது சிவப்பு நிறமுடையது. சூரியனைவிட 2½கோடி மடங்கு பெரியது. குறுக்களவு 200 கோடி மைல். சூரியன், பூமிஆகியவற்றைக் காட்டிலும் 13லட்சம் மடங்கு பெரியது.

402. உஷத் காலம், என்பது யாது?

'உஷஸ்' என்னும் பெண் தேவதையைப் பற்றி ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவளே விடியற் காலை நேரத்திற்கு உரியவள். இவள் தோன்றிய பின்பே சூரியன் உதயமாகிறான். இக்காரணம் பற்றியே விடியற்காலை நேரம், உஷத் காலம்' எனப்படுகிறது. இத்தேவதையின் செழிப்பான கிரணங்கள் விடியற்

காலையில் பூமி நோக்கிப் பாய்வதால்தான். அந்த வேளையில் நீரில் முழுகி நீராடுதல் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. இதனால்தான் அக்காலத்தில் நீரும் வெது வெதுப்பாக உள்ளது.

403. தந்திரம், மந்திரம், யந்திரம் இவைகளைப் பற்றி எழுது.

1) வழிபடுபவனை உயர் நிலைக்கு அழைத்துச் செல்வது மந்திரமாகும். ஒவ்வொரு தேவதைக்கும் மந்திரம் உள்ளது. அதை ஜபிக்குந்தோறும் அச் சப்த அலைகள் மனஒருமைப்பாட்டையும் தேவதா பலத்தையும் கிடைக்கச் செய்கிறது— தெய்வ தரிசனமும் கிடைக்கிறது.

2) ஒவ்வொரு தெய்வ வழிபாட்டிற்கும் சில குறிப்பிட்ட முத்திரைகள்—பூஜை முறைகள் வகுக்கப் பட்டுள்ளன. இவை தந்திரங்கள் எனப்படும்

3) ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய சக்கரங்கள். [அத்தெய்வத்தின் தத்வ அடிப்படையில் சதுரம், வட்டம், முக்கோணம், பத்மம் முதலிய வடிவங்களால் ஆனவை] உண்டு. இவையே யந்திரம் எனப்படுபவை.

404. அத்வைதக் கொள்கையை எழுது.

அ + த்வைதம்.

த்வைதம் = இரண்டு. அ = இல்லை.

அத்வைதம் = இரண்டற்ற ஒன்று.

பிரமம் என்ற ஒரு பொருளே உள்ளது. உயிர்கள் பிரமமே ஆவர். காணப்படும் உலகம் கயிற்றில் பாம்பும், கானலில் நீரும் போலப் பொய்த் தோற்றமாகும். ஒரு சூரியன் பல குடங்களிலுள்ள நீரில் தோற்றுவது போலவும், ஒரே உருவம் பல கண்ணாடிகளில்: பிரதிபலிப்பது

போலவும் ஒரு பிரமமே எல்லாவற்றிலும் விளங்கி நிற்கின்றது நாம் பாசக் கட்டுகளால் நிலையான இன்பத்தை உணராமல் இருக்கிறோம். ஞானத்தினல், அஞ்ஞானம் விலக, இக்கட்டுக்கள் அனைத்தும் நீங்கும். உண்மை இன்பம் விளங்கும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் நிஷ்டை கூடுதல் முதலிய வழிகளால் நிலையான இன்பத்தை அடைந்து பிரம மயமாகி முத்தியை அடையலாம் என்பது இக்கொள்கையாகும்.

405. விசிஷ்டாத்வைதம் என்றால் என்ன?

விசிஷ்டம் என்றால் சேர்ந்தது என்று பொருள். ஆகவே சித்-அசித் என்ற தத்துவங்களுடன் கூடிய ஈசுவரன் என்றதத்துவம் ஒன்று எனப் பொருள். அதாவது இறைவனுக்கு சித் என்ற ஜீவான்மாவும், அசித் என்ற ஜடப்பொருளான ஊன் உடலும், உடல் போல் அமைய இறைவன் இந்த உடலில் உயிர் போல் இருக்கிறார் என்பதாகும். இது ஸ்ரீ இராமாநுஜரால் பரப்பப்பட்டது.

406. துவைத மதக் கொள்கையை எழுது.

பரமாத்மா, ஜீவாத்மா, ஜடமான உலகம் இவை பிறரால் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். ஜீவாத்மாக்களுக்கு பிறப்பு இறப்புண்டு. உலகம் உண்மையானது. சுதந்திர புருஷன் இறைவன் ஒருவனே கடவுளும் உயிர்களும் எக்காலத்தும் எந்நிலையிலும் வேறானவையே. பிரம்மா முதலிய தேவர்களும் ஜீவர்களே. அவர்களுக்கும் பிறப்பு, இறப்பு, ஸ்தூல சரீரம் இவையுண்டு. கர்மம் தீர்ந்தால் மோக்ஷம் கிடைக்கும்.

407. மத்வாசார்யர் அவதரித்த தலம் எது? எங்குள்ளது?

தென்கன்னடத்தில் உடுப்பியிலிருந்து 10கிமீ தொலைவில் உள்ள பாஜக க்ஷேத்திரமே மத்வாசார்யரின் அவதாரத்

தலமாகும். இவர் ஆஞ்சநேய சுவாமியின் அவதாரமாகக் கருதப்படுகிருர்.

408. மத்வாசார்யார் நிறுவிய எட்டு மடங்கள் யாது?

1) கனியூர் மடம்
2) சோதே மடம்
3) புத்திகே மடம்
4) அத்மார் மடம்
5) பேஜாவர் மடம்
6) பாலிமார் மடம்
7) கிருஷ்ணபுர மடம்
8) சிரூர் மடம் என்பன.

409. மத்வாசார்யரின் பிரதான சீடர்கள் யாவர்?

1 நரஹரி தீர்த்தர் 2. பத்ம நாப தீர்த்தர்
3. மாதவ தீர்த்தர் 4. அட்சோப்ய தீர்த்தர்
என்போராவர்

410. மாத்வ சம்பிரதாயத்தில் சொல்லப்படும் வியாஸராயர் என்னும் மகானின் பெருமை யாது?

வியாஸராயர் அவதாரத்தலம் பன்னூர் என்னும் சிற்றூராகும். இவர் மிகச்சிறந்த ஆஞ்சநேய பக்தர். விஜயநகர ராஜ்யத்தில் ராஜகுருவாக விளங்கினர் திருப்பதி வெங்கடாசலபதியை 12 வருஷங்கள் வழி பட்ட பெருமையுடையவர் திருமலையில் கோயிலில் விமானத்தில் உள்ள வேங்கடேஸ்வரர் இவருடைய பிரதிஷ்டையே யாகும்

இம்மகான் நாடுமுழுவதிலும் 732 ஆஞ்சநேய மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்துள்ளார். இவர்

பிரதிஷ்டை செய்த ஆஞ்சநேயர் விக்ரகத்தில் தலைக்குமேல் வால் வளைந்து காட்சி தர அதில் மணி தொங்கிக் கொண்டிருக்கும் என்பது அடையாளமாகும்.

இவரால் நிறுவப்பட்ட வியாஸராய மடத்தைச் சேர்ந்தவர்களுக்கு திருமலையில் பெருமாளைத் தொட்டுச் சேவிக்கும் உரிமை வழங்கப்படுகிறது.

411. அரச மரத்திற்கு அச்வத்தமரம் என்று பெயர் வரக்காரணம் யாது?

அக்னி தேவர்தான் சகல தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ஹோமம் செய்த பொருள்களைக் கொண்டு போய்க் கொடுப்பவர். ஒருசமயம் அந்த கைங்கர்யத்தில் வெறுப்பு தோன்றி தன்னால் அப்பணியைச் செய்ய முடியாதெனக் கூறினார், மற்றொருவர் வரும் வரையாவது இக்கைங்கர்யம் புரிய வேண்டுமென தேவர்கள் வற்புறுத்தினர். அதை ஏற்காமல் வெளியே சென்றார். தேவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். உடனே அவர் அச்வரூபமெடுத்துச் சென்றார். அதையும் அமரர் பின் தொடர அவர் ஒரு மரத்தில் தன்னை லயப்படுத்தி மறைந்தார். அந்த மரமே அரச மரமாம். அச்வம் அதில் மறைந்திருந்ததால் அச்வத்தமரம் எனப் பெயருண்டாயிற்று.

412. அரசமரத்தின் சிறப்பு யாது?

அரசமரம் தெய்விகமானது. இதன் குச்சிகள் வேள்விக்குச் சமித்தாகப் பயன்படுகின்றன. எனவே இதன் கிளைகளை வெட்டி அடுப்பெரித்தல் முதலான வேறு பணிகளுக்குப் பயன்படுத்தக்கூடாது. தானே பட்டுப்போன மரமாயினும்கூட அதையும் கோவிலுக்கே தந்து விடவேண்டும் என்பர். இதன் கிளை, நெருப்பினை உண்டு பண்ண—கடையப் பயன்படுகிறது. இதனால் அரணி என்றும் பெயர். அச்வத்தமரம், பிப்பலம் என்பனவும் இதன் வேறு பெயர்களாம். அரசமரம் அறிவின் அடையாளம்.

413. இந்துக்கள் பசுவைப் புனிதமாகக் கருதுவது ஏன்?

பசுவின் உடம்பில் எல்லாத் தெய்வங்களும் குடி கொண்டுள்ளதாகக் கூறுவது சமயமரபு திருநீற்றுக்கு மூலமான சாணத்தைத் தருவதும், இளமையில் உயிர்கள் வளரத் தேவைப்படும் பாலைத்தந்து, தாய்க்கு அடுத்து, நம்மை—உயிர்களைக் காப்பதுவும் பசுவே. மேலும் இலக்குமி வாசம்செய்யும் இடங்களுள் ஒன்ருகச் சொல்லப்படுவதும் பசுவே. இந்துக்கள் கோமாதா என்று பசுவைப் புகழ்ந்து வணங்கிப் புனிதமாகக் கருதி வழிபடுகிருர்கள்,

414. பஞ்ச பருவங்கள் எவை?

1) மாதப்பிறப்பு 2) அஷ்டமி 3) சதுர்த்தசி
4) அமாவாசை 5) பௌர்ணமி ஆகிய இவை பஞ்ச பருவங்கள் எனப்படும்.

415. அவிமுக்த க்ஷேத்திரம் என்று எதற்குப் பெயர்? அப் பெயர்வரக் காரணம் யாது?

இப்பூமியில் இறைவன் சிறிது நேரமுங்கூட (அரை க்ஷணமும்) தன்னை விட்டு அகலாத சிறப்புடையதால் காசிக்கு அவிமுக்த க்ஷேத்திரம் என்று பெயர் வந்தது. இத்தலத்தில் உள்ள விசுவநாதர் ஆலயத்தில் முத்தி மண்டபத்தில் அமர்ந்து வியாசமுனிவர் வேதங்களை வகுத்ததாகச் சொல்லப்படுகிறது.

416. காசி என்பதன் பொருள் யாது?

'காசி' என்பதற்குத் "தானே ஒளியாக விளங்கும் நகரம்" என்பது பொருளாகும்.

417. சூரியனின் தேரில் பூட்டப்பட்டுள்ள 7 குதிரைகளின் பெயர்களை எழுது.

1. காயத்ரீ 2. உஷ்ணிக் 3. அநுஷ்டுப் 4. பிருஹதீ 5. திருஷ்டுப் 6. ஜகதீ 7. பங்க்தீ என்னும் ஏழுகுதிரைகள் பூட்டிய தேரில் சூரியன் சஞ்சரிக்கின்றார்.

418. மேருமலைமீதுள்ள உலகங்களையும் [நகரங்களையும்] அவற்றின் அதிபதிகளையும், வசிப்போர்களையும் எழுதுக.

அமராவதி எனும் நகரில் இந்திராணியுடன் இந்திரன் வசிக்கிறான். யாகம் செய்த மஹரிஷிகள் அங்கு அவனை உபாஸித்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குத் தென் புறத்தில் தேஜோவதி என்றோர் நகரமிருக்கிறது. அது அக்கினிக்குச் சொந்தமானது. அங்கு ஜபம் செய்தவர்களும், ஹோமம் செய்தவர்களும் அக்கினியை உபாஸித்துக் கொண்டிருக்கின்றனர் அங்கிருந்து தென்புறத்தில் யமனுக்குச் சொந்தமான ஸம்யமநீ என்ற பட்டணமிருக்கிறது. சத்தியம் தவறாதவர்கள் அங்கே சென்று யமனை உபாஸிக்கின்றனர். அதற்கு மேற்கு மூலையில் ராக்ஷஸர்கள் நிறைந்த ரக்ஷோவதி எனும் நகரமிருக்கிறது. அதற்கு அதிபதி நிருதி என்பவர். தாமஸ குணத்தோடு தர்மம் செய்பவர் அங்குச் செல்வர். மேற்குப்புறத்தில் சுத்தவதீ நகரமுள்ளது. அதற்கு வருணராஜனே அதிபதி அதற்கு வடபக்கத்தில் ஓர் நகரமுண்டு. அதற்கு கந்தவதீ என்று பெயர். அதை ஆளுபவன் வாயுதேவன். பிராணாயாமம் செய்த புண்ணியசாலிகள் அங்குச் செல்வர். கிழக்குப் புறத்தில் காந்திமதி என்றோர் அழகிய பட்டணமுண்டு. அதை ஆண்டு வருகிறவன் ஸோமன். ஸ்வதர்மத்தைத் தவறாமல் அனுஷ்டிப்பவர் அங்குச் செல்வர் அவரவர்களது புண்யத்திற்கு ஏற்றபடி அநேக போக ஸாத

னங்களங்கே இருக்கின்றன. அதற்கு கிழக்கே யசோவதீ என்ற பட்டணமிருக்கிறது. அதற்கு ஈசாநன் அதிபதி. அங்குப் பல கணங்கள் இருக்கின்றனர். கணாதிபதிக்குத் தனித்ததொரு நகரமுண்டு. அங்கே கங்கை ஓடுகிறது.

419. பாசுபத யோகம் என்பது யாது?

பத்மாசனத்தில் அமர்ந்து விநாயகர், சிவபெருமான், தன்னுடையதரு ஆகியோரை வணங்கி, உடல் வளையாமல் நேரே அமர்ந்து, தன்னுடைய மூக்கின் நுனியைப்பார்த்தவாறே யோகாப்பியாசம் செய்ய வேண்டும். தன் தலைக்குமேலே பனிரண்டு அங்குல இடத்தில் வெண்தாமரை மலர் இருப்பதாகவும், அதன் நடுவில் பொன்நிறமாய் ஓங்கார வடிவில் சிவபெருமான் ஒளியுடன் பிரகாசிப்பதாகவும் பாவித்துத் தியானம் செய்ய வேண்டும். இதுவே பாசுபத யோகம் எனப்படுகிறது. இந்த யோகப்பயிற்சியால் பேரானந்தம் கிட்டும்.

420. மல மாஸம் (மாதம்) என்று எதற்குப் பெயர்?

ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்தால் அம்மாதத்திற்கு மல மாஸம் (மாதம்) என்று பெயர்.

421. புராணங்களில் நிலப்பரப்பைக் கூறும்போது இவ்வளவு 'யோசனைப்' பரப்பு என்றும் 'அண்டம்' என்றும் கூறப்படுகிறது. இவற்றிற்குரிய அளவு யாது?

பரமாணு	24	கொண்டது	—மயிர்நுனி
நுனி	8	”	—ஈர்
ஈர்	8	”	—பேன்
பேன்	8	”	ஒரு நெல்
நெல்	8	”	ஒரு அங்குலம்

அங்குலம்	24 கொண்டது	ஒரு முழம்	
முழம்	4	"	ஒரு தனு
தனு	2	"	ஒரு தண்டம்
தண்டம்	2000	"	ஒரு குரோசம்
குரோசம்	4	"	ஒரு யோசனை

100 கோடி யோசனை கொண்டது. ஓர் அண்டம்.

422. மொத்தக் கடல்கள் எத்தனை? அவற்றின் பெயர்கள் யாவை?

மொத்தக் கடல்கள் 7 ஆகும். அவை (1) லவண (உப்பு) சமுத்திரம் (2) இக்ஷு சமுத்திரம் (3) ஸுரா சமுத்திரம் (4) ஸர்பி சமுத்திரம் (5) ததி (தயிர்) சமுத்திரம் (6) க்ஷீர (பால்) சமுத்திரம் (7) சுத்தோதக சமுத்திரம்

இவற்றுள் இன்று இருப்பது லவண சமுத்திரம் (உப்புக் கடல்) ஒன்று மட்டுமே.

423. பூணூல் அணிவதன் அவசியம் யாது?

ஆடை அணிவது உடம்புக்கு அவசியமானது போல உயிர் நலத்துக்கு அவசியமாகப் பூண (அணிய) வேண்டிய நூல் ஆதலின் "பூணூல்" என்று பெயர் பெற்றது. மந்திர பூர்வமாக அணிவதால் தெய்வீகத் தன்மை பெறுகிறது.

தெய்வகாரியங்களைச் செய்யும்போது இடது தோளில் பூணூல் இருந்தால் தேவர்களும்; பித்ரு வழிபாட்டின் போது வலது தோளில் பூணூல அணிந்து கொண்டால் பித்ருகளும் வந்து வழிபாட்டை ஏற்றுக்கொள்கிறார்கள் இதை ஒரு காலத்தில் மக்கள் எல்லோருமே அணிந்திருந்தார்கள். காலக்ரமத்தில் அது ஓரளவு குறைந்து இன்று க்ஷத்ரியர்கள், விஸ்வப்ராம்மணர்கள், சௌராஷ்ட்ரப் பிராம்மணர்கள், வாணிபம் செய்பவர்கள், மண் தொழி

லாளர்கள், விஸ்வப்ராம்மணர்கள் என்ற தங்கத் தொழிலாளர்கள், வைஸ்யர்கள், ஸ்ரேஷிடர்கள் என்ற செட்டியார்கள் மிகவும் அகிம்சையே உயிராகக் கொண்ட ஜைனர்கள். எல்லோரும் அணிந்துகொண்டிருக்கிறார்கள். **வேதத்தை ஓதி, கடவுளை வேண்டி நாடு செழிக்க நலம்பெற ஜீவ வர்க்கங்கள் மரம், செடி கொடி, பிராணி வர்க்கங்கள், மனித சமுதாயம் எல்லோரும் நல் வாழ்வு. பெற வேண்டுகோள் விடுக்க பூணூல் அணிந்து வேள்விகளையும், பூஜைகளையும் செய்து வருகிறார்கள்.**

பூணூல் ஒன்பது விதமான தேவதைகளுடன் முப்புரி நூல்களாக விளங்கித் தெய்வ வழிபாடு செய்ய உதவியாகிறது. இது கடவுளுக்கு அடிமை என்ற அடையாளத்தையே காட்டுகிறது,

424 ரத சப்தமி நாளில் எருக்க இலைகளைத் தலையில் வைத்து நீராடுவது ஏன்?

தை மாதம் வளர்பிறை சப்தமி நாளில் சூரியபகவான் உண்டானார். அவர் பிறந்த திதியான ஏழு (சப்தமி) என்பதில் அவருக்குப் பிரியம் அதிகம். அவர் உடலை வடிவமாக்கிப் பிடித்த பொழுது அது சிந்தின இடத்தில் எருக்கஞ் செடி உண்டானது எனவேதான் சூரியன் வழிபடுகின்ற நாளாகிய (சூரியபூஜை) ரதசப்தமி நாளில் எருக்கன் இலைகளை 7ஐ தலைமீதுவைத்து அப்பெருமானைத் துதித்து நீராடினால் ஏழு ஜன்ம பாவங்களும் அகலும் என்பது சமய மரபு.

425. கோகுலம்—எங்குள்ளது?

கண்ணபிரான் அவதாரம் செய்த திருத்தலமான மதுராவுக்குச் சற்றுத் தொலைவில் கண்ணன் வளர்ந்த இடமான கோகுலம் உள்ளது. கண்ணபிரான், கம்சனைக் கொன்று இளைப்பாறிய இடம் "விச்ராந்திகாட்" என்ற பெயருடன் அங்குள்ளது. இவ்விடம் யமுனையின் ஒரு

துறையாக விளங்குகிறது யமுனைக் கரையில் கண்ணபிரான் ஆலயம் உள்ளது. இங்கிருந்து சற்றுத் தொலைவில் பிருந்தாவனம் உள்ளது. கண்ணன் இளமையில் குழலூதி ஆநிரை மேய்த்து அற்புதங்களை நிகழ்த்திய இடம் இதுவே.


426. ஈர ஆடையுடன் காரியங்களைச் செய்யலாமா?

ஈர ஆடையுடன் எந்தச் சுபகாரியங்களையும் செய்யக் கூடாது. (அபர காரியங்களை மட்டுமே ஈர ஆடையுடன் செய்வர்.) சுபகாரியங்களைச் செய்யுங் காலத்தில் உலர்ந்த ஆடையில்லையேல் ஈர ஆடையை ஏழுமுறை உதறி, உலர்ந்த பாவனையாகக் கட்டிக்கொள்ளலாம் என்பது ஆசார விதியாகும்.

427. ஆடை உடுத்திக் காரியங்களைச் செய்வது பற்றி விளக்குக.

அழுக்கடைந்ததும், தீப்பட்டதும் ஈர ஆடையும் கட்டிக்கொண்டு நல்ல சுப காரியங்களைச் செய்யக் கூடாது மங்கல காரியங்களைச் செய்யும்போது புத்தாடைகளை உடுத்திக்கொள்ளலாம்.

கர்மாக்களைச் செய்யுங்காலத்தில் நீலநிற ஆடைகளை உடுத்தலாகாது ஆனால் பட்டாடையாக இருப்பின் அதற்கு நீலம் தோஷமில்லை. ஜபம், பூஜை, ஹோமம் செய்கின்ற காலங்களில் ஆடையால் உடம்பைப் போர்த்திக்கொண்டு செய்யலாகாது.



சமயம்- பொதுக் கருத்துக்கள்

428. கடவுள்—என்பதன் பொருள் யாது?

கட + உள் = கடவுள்.

கடவுள் என்பதற்கு (1) எல்லாவற்றையும் கடந்தவர்; (2) எவற்றினுள்ளும் கடந்து நிற்பவர்; (3) எல்லா அண்டங்களையும் அவற்றிலுள்ள எல்லாவற்றையும் இயக்குகின்றவர் (கடவுகின்றவர்) என்றும் பொருள் சொல்வர்,

429. 'தெய்வம்' என்பதன் பொருள் யாது?

'திவு' என்னும் சம்ஸ்கிருதப் பகுதியிலிருந்து வந்த சொல் 'தெய்வம்' எனப்படும். இதன் பொருள்: பிறரால் வெல்லப்படாதது. இன்ப வடிவினது, ஊழி. முடிவில் சாந்தமாய் நிற்பது என்பதாம்.

430. மதம் என்பது யாது?

மனிதப் பிறவி பயன்படும் வழியைப் போதிக்கும் சாதனமே மதம் ஆகும். தவறான வழியில் செல்லாதபடி தடுத்து, இவ்வாறு நடந்தால் நலம் பெறலாம் என்று சொல்வதும்; பொருளின் தத்துவம் இதுவே என்னும் அறிவைப் புகட்டுவதும் மதத்தால் வரும் பயன்களாம்.

431. இறைவனுக்குரிய எண் குணங்கள் யாவை?

1. தன்வயத்தனுதல் 2. தூய உடம்பினனுதல்
3. இயற்கை உணர்வினனுதல் 4. முற்று முணர்தல்
5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
6. பேரருளுடைமை 7. முடிவிலா ஆற்றலுடைமை
8. வரம்பிலா இன்பமுடைமை.

432. ஷண்மதங்கள் (அறுவகைச் சமயவழிபாடு) யாவை?

1. காணுபத்யம் (கணபதிவழிபாடு)
2. கௌமாரம் (முருக வழிபாடு)
3. சௌரம் (சூரிய வழிபாடு)
4. சாக்தம் (சக்தி வழிபாடு)
5. சைவம் (சிவ வழிபாடு)
6. வைஷ்ணவம் (விஷ்ணு வழிபாடு)

433. சப்தகோடி மகாமந்திரங்கள் என்பவை எவை?

சப்த = ஏழு. கோடி = முடிவு

ஏழு சொற்களை முடிவில் (இறுதியில்) கொண்டுள்ள உயர்ந்த மந்திரங்கள் சப்த கோடி மகாமந்திரங்கள் எனப்படும்.

அம்முடிவுகளாவன:- 1. நமஹ 2. ஸ்வாஹா 3. ஸ்வதா 4. வௌஷட், 5. வஷட், 6. பட், 7. ஹூம் என்பன.

[ஹ்ருதயாய நம: சிரசேஸ்வாஹா, சிகாயை வஷட் கவசாயஹூம்' நேத்திரேப்பியோ வௌஷட், அஸ்திராயபட், உபாங்கே பய:ஸ்வதா என ஒவ்வொரு கோடியாய் (முடிபாய்) ஏழு கோடியும் வந்தன]

434. முப்பத்து முக்கோடி தேவர்கள் யாவர்?

ஆதித்தர் 12, உருத்திரர் 11, அஸ்வினி தேவர் 2 வசுக்கள் 8 = மொத்தம் 33.

இம்முப்பத்து மூவரும் ஒவ்வொரு கோடி பரிவாரங் களுடன் இருத்தலால் தேவர்கள் முப்பத்து முக்கோடி என்று எண்ணப்பெற்றனர்.

435. 'சந்தியா வந்தனம்' செய்வதன் அவசியம் யாது?

சந்தியாவந்தன ஜபத்தினுலேயே சித்தி பெறலாம் மற்ற கர்மங்களை அனுஷ்டித்தாலும் அனுஷ்டிக்கா விட்டாலும் பிற உயிர்களுக்கு இம்சை செய்யாமல் சந்தியாவந்தன ஜபத்தை மாத்திரம் விடாது செய்தால் போதும் என ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. சந்தியாவந்தனத்தை விட்டவர்கள் எந்த ஒரு கர்மத் திற்கும் அதிகாரமுடையவர்களாகார்—செய்தற்குத் தகுதி யுடையவராகார்.

436. ஸ்நானத்தின் வகைகள் யாவை? ஒவ்வொன்றையும் விளக்குக.

ஸ்நானம் ஆறு வகைப்படும்,

1) **நித்தியம் :-** நாடொறும் செய்யும் ஸ்நானம்.

2) **நைமித்திகம் :-** சண்டாளர், பிணப்புகை, மாத விலக்குடைய பெண்டிர் முதலியோர் தொட்டு விட்டால் செய்வது.

3) **காமியம் :-** கிருத்திகை முதலிய நாள்களில் புண்ணியச் செயல் அல்லது இச்சை பூர்த்தியாகச் செய்வது.

4) **கிரியாங்கம் !**- பித்ரு காரியங்களைச் செய்தலின் பொருட்டுச் செய்வது.
5) **மலாபகர்ஷணம் :**- எண்ணெய்தேய்த்துக்குளித்தல் முதலியவை.
6) **கிரியாஸ்நானம் :**- புண்ணிய நதிகள், தீர்த்தங் களுக்குச் சென்று ஸ்நானம் செய்வது.

437. நீராடும் முறை பற்றி எழுது.

ஓடும் நீரில் நின்றுகொண்டு ஓட்டத்தை எதிர்நோக்கி நீராட வேண்டும். குளம், ஏரி இவற்றில் பகலில் நீராடும் போது சூரியனை பார்த்துக்கொண்டே நீராட வேண்டும், கிழக்கு அல்லது வடக்கு முகமாக நின்றும் நீராடலாம். கோயில் கோபுரம், சந்நிதி தெரிந்தால் அதைப் பார்த்துக் கொண்டே நீராடவேண்டும்.

438. புஷ்டி ஸ்நானம் என்பது யாது?

கிரக தோஷ பரிகாரங்களைச் செய்துகொள்ளும் முன் நீராடுவது புஷ்டி ஸ்நானம் எனப்படும்.

439. 'கிரியா ஸ்நானம் என்பது யாது?

விசேஷமான நாள்களில் கடல் மற்றும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது கிரியா ஸ்நானம் எனப்படும்.

[புண்ணிய நாள்களில் கடலில் குளிப்பவர்கள் செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் குளிப்பதைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் அந்த நாள்கள்தாம் நதி தேவதையும் கடலரசனும் சங்கமமாகும் நாள்களாம்]

440. 'கடி ஸ்நானம்' 'கண்ட ஸ்நானம் என்பவை யாவை?

இடுப்புக்குக் கீழே நீரால் கழுவி, மீதமுள்ள மேல் உடம்பைத்தண்ணீரில் நனைத்ததுணியினால் துடைத்துக் கொள்வது கடிஸ்நானம் ஆகும்,

கழுத்துக் கீழேயுள்ள உடம்பை நீரால்சழுவி மேற் புறத்தை ஈரத்துணியால் துடைத்துக் கொள்ளுவது கண்ட ஸ்நானம் எனப்படும்.

441. 'மிருத்தி காலேபன ஸ்நானம்' என்பது யாது?

இது வைத்தியசாஸ்திரத்தில் சொல்லப்படுவது உடலிலுள்ள வாய்வு நோய்களும் சரும நோய்களும் குணமடைய, சுத்தமான களிமண்ணைப்பிசைந்து தலைமுதல் உள்ளங்கால்வரை பூசிக் கொண்டு; சிறிது நேரம்இருந்து பிறகு நீராடுதலாம்.

இம்முறை தற்காலத்தில் இயற்கை வைத்திய முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

442. ஐவகை ஸ்நானங்கள் எவை?

(1) ஆக்னேயம் — விபூதியைப் பூசிக் கொள்ளுதல்

(2) வாருணம் —நீரில் மூழ்குதல்

(3) பிரம்மம் —மந்திர நீரால் ஜலத்தில் மூழ்குதல்

(4) வாயவ்யம் —பசுவின் கால்தூசு (தூளி) தன் மீது படுமாறு நடந்து செல்லுதல்

(5) திவ்யம் —வெயிலுடன் கலந்த மழை நீரில் மூழ்குதல்.

443. பத்து வகையான ஸ்நானங்கள் யாவை?

1) **வாருண ஸ்நானம்** :- ஜலத்தில் மூழ்குவது.

2) **ஆக்நேய ஸ்நானம்** :- விபூதி பூசிக்கொள்வது.

3) **மந்த்ர ஸ்நானம்** :- ஸத்யோஜாதாதி மந்த்ரங்களை யாவது அல்லது அகமர்ஷண ஸூத்ரத்தையாவது உச்சரிப்பது.

4) **மானஸ ஸ்நானம் :-** பிரணவத் தியானம்.

5) **திவ்ய ஸ்நானம் :-** வெயிலோடு பெய்யும் மழையில் ஸ்நானம் செய்வது.

6) **மாருத ஸ்நானம் :-** காற்றில் கலந்த பசுக்களின் பாததூளி சரீரத்தில் படியும் படிச் செல்லுதல்.

7) **மிருத்திகா ஸ்நானம் :-** சிவாலயம், நதி, முதலிய விடங்களிலுள்ள மண்ணைக் குழைத்துச் சரீரத்தில் பூசிக்கொள்ளுதல்.

8) **கௌரவ ஸ்நானம் :-** குருவின் பாத தீர்த்தத்தில் மூழ்குதல், புரோக்ஷணம் செய்து கொள்ளுதல்.

9) **காபில ஸ்நானம் :-** ஈர வஸ்திரத்தினால் ஸர்வாங்கமும், துவட்டிக் கொள்ளுதல்.

10) **பாரிச ஸ்நானம் :-** கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களைச் சிரசில் புரோக்ஷித்துக் கொள்ளுதல்.

444. நம்முள் அடங்கியுள்ள 24 தத்துவங்கள் எவை?

பஞ்ச பூதங்கள் 5 ஞானேந்திரியங்கள் 5
கன்மேந்திரியங்கள் 5 பஞ்சபிராணன் 5
மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம்
ஆகமொத்தம் 24 தத்துவங்கள்.

445. கன்மேந்திரியங்கள் எவை?

1) நாக்கு 2) கை 3) கால்
4) பிறப்பு உறுப்பு (மூத்திரம்)
5) விசர்ஜன உறுப்பு (மலம்)

446. ஞானேந்திரியங்கள் எவை?

1) காது (செவி) (சப்தம்)
2) மெய்(உடம்பு) (ஸ்பரிசம்)
3) கண் (ரூபம்) (வடிவம்)

4) நாக்கு (ரஸம்- சுவை)
5) மூக்கு- (கந்தம்-வாசனை)
(ஐம்புலன்கள்) —என்பன.

447. வித்யா தத்துவங்கள் ஏழாவன எவை?

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன், மாயை என்பவை ஏழு வித்யா தத்துவங்கள் ஆகும்.

448. ஐந்து அவஸ்தைகளின் பெயர்களையும் அவற்றுக்கு உரிய இடங்களையும் கூறுக.

1) ஜாக்ரம் —நடுப்புருவம்
2) சொப்பனம் —கழுத்து
3) சுழுத்தி —இருதயம்
4) துரியம் —நாபி (கொப்பூழ்)
5) துரியாதீதம் —மூலாதாரம்.

449. பதினெண் கணங்கள் யாவர்?

1. தேவர்	2. அசுரர்	3. தைத்தியர்
4. கருடர்	5. கின்னரர்	6. கிம்புருடர்
7. இயக்கர்	8. விஞ்சையர்	9. இராக்கதர்
10. கந்தருவர்	11. சித்தர்	12. சாரணர்
13. பூதர்	14. பைசாசர்	15. தாராகணம்
16. நாகர்	17. ஆகாயவாசிகள்	18. போகபூமியோர்

450 பதினெண் சித்தர்கள் யாவர்?

1. நந்தீசர் 2. பொதிகைமுனி (அகத்தியர்)
3. புலத்தியர் 4. பாம்பாட்டிச்சித்தர்
5. இடைக்காடர் 6. கோரக்கர் 7. இராமதேவர்
8. சட்டைநாதர் 9. கமலமுனி 10. புண்ணாக்கீசர்
11. காலங்கிச்சித்தர் 12. போகர் 13. கொங்கணர்
14. கருவூரார் 15. திருமூலர் 16. மச்சமுனி
17. அழுகண்ணர் 18. புலிப்பாணி

451. பன்னிரு ஜோதிர் லிங்கத் தலங்கள் எவை? எங்குள்ளன?

1) கேதாரம்—இமயம்—கேதாரேஸ்வரர்
2) சோமநாதம்—(குஜராத்-சௌராஷ்டிரம்) சோமநாதேஸ்வரர்.
3) மகாகாளேசம்— (உஜ்ஜயினி)- மாகாளேஸ்வரர்
4) விஸ்வநாதம்—(காசி)—விஸ்வநாதேஸ்வரர்
5) வைத்தியநாதம்—(மகாராஷ்டிரம்)— வைத்தியநாதேஸ்வரர்-
6) பீமநாதம்— (மகாராஷ்டிரம்)- பீமாநாதேஸ்வரர்
7) நாகேஸ்வரம்— (மகாராஷ்டிரம்- தாருகாவனம்)- நாகநாதீஸ்வரர்
8) ஓங்காரேஸ்வரம்— (மத்தியப் பிரதேசம்- அமலேஸ்வரம்) ஓங்காரேஸ்வரர்.
9) த்ரயம்பகம்-(மகாராஷ்டிரம்— கௌதமம்)- த்ரயம்பகேஸ்வரர்.
10) குசுமேசம்—(மகாராஷ்டிரம்) குஸ்ருணேஸ்வரர்
11) மல்லிகார்ஜுனம்—(ஆந்திரம்-ஸ்ரீசைலம்)— மல்லிகார்ச்சுனர்.
12) இராமநாதம்— (தமிழ்நாடு-இராமேஸ்வரம்)— இராமநாதேஸ்வரர்.
[ஜோதிர்லிங்கத் தலங்கள் 12-ல் தமிழ் நாட்டில் உள்ளது இராமேஸ்வரம் ஒன்றே]

452. பத்து வகை வாயுக்கள் எவை?

1. பிராணன்—இதயத்தில் இயங்குவது
2. அபானன்— உடலிலிருந்து கீழ் நோக்கி வெளிப் படுவது.
3. சமானன்— வயிற்றில் இருப்பது.

4. உதானன்—நாபியில் நிற்பது

5. வியானன்— உடம்பு முழுவதும் பரவி இருப்பது

6. நாகன்—கை கால்களை நீட்டவும், மடக்கவும் அசையவும் செய்வது

7. கூர்மன்—உடல் புளகாஷங்கிதம் அடையச் செய்வது.

8· கிருகரன்— முகத்தில் நின்று தும்மல், கோபம்; வெப்பம் முதலிய்வற்றை உண்டாக்குவது.

9. தேவதத்தன்-ஒட்டமும், இளைப்பும், வியர்த்தலும் விளைவிப்பது.

10. தனஞ்சயன்—தலைசிழித்து அகல்வது

453. நம் உடம்பில் உள்ள நாடிகளைப் பற்றி எழுதுக?

நம் உடம்பில் மொத்தம் 72,000 நாடிகள் உள்ளன. இவற்றுள் மேல் நோக்கியவை 61, 000 கீழ் நோக்கியவை. 11,000. இந் நாடிகளுள் முக்கியமானவை 10. அவை வருமாறு:-

1. இடைகலை- } மூலாதாரத்திற்கும் இரு நாசிகளுக்கு
2. பிங்கலை - } -மாக நிற்பது.
3. சுழுமுனை- வீணதண்டத்தைப்பற்றி நிற்பது
4. காந்தாரி- கண்களில் நிற்பது
5. அத்தி -எலும்பில் ஈடுண்டு இருப்பது
6. சிங்குவை- நாக்குடன் தொடர்புடையது
7. அலம்புடை- செவிகளுடன் ,,
8. புருடன் -கைகளுடன் ,,
9. சங்கினி - உபத்தத்தினிடம் ,,
10. குரு - குதத்தினிடம் ,,

454. ஒன்பது வகையான பக்திமார்க்கங்களை எழுது?

1. கேட்டல் 2. பாடுதல் 3. நினைத்தல்
4. பாதங்களைச் சேவித்தல் 5. பூசித்தல்
6. வணங்குதல் 7. தொண்டுசெய்தல்
8. நட்பு கொள்ளுதல்
9. தன்னையே அர்ப்பணித்துக்கொள்ளுதல்.

"ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோஸ்மரணம்
பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம்
ஆத்மநிவேதனம்"

455. அட்டாங்க (அஷ்டாங்க) யோகத்தின் நிலைகள் யாவை?

(1) இமயம் (2) நியமம் (3) ஆசனம்
(4) பிராணயாமம் (5) பிரத்யாகாரம்
(6) தாரணை (7) தியானம் (8) சமாதி
என்பன.

456. பூத கண நாதர்கள் என்போர் யாவர்?

1) குண்டோதரர் 2) கும்போதரர்
3) மகோதரர் 4) கஜகர்ணர்
5) விசித்திரகர்ணர் 6) வியாக்ரமுகர்
7) சிங்கமுகர் 8) பட்சபாட்சர் முதலியோர்.

457. அஷ்டதிக்குப் பாலகர்களைப்பற்றிய விவரங்களை எழுது.

திசை – திசைப்பாலகர் - மனைவி - வாகனம் - ஆயுதம் – நகரம்

கிழக்கு - இந்திரன் – சசி - ஐராவதம் – வச்சிரம் - அமராவதி
மேற்கு - வருணன் – காளிகை - முதலை – பாசம்-கெந்தாவதி
தெற்கு - எமன் – சாமளை - எருமைக்கிடா - தண்டம் – சமனுவதி
வடக்கு – குபேரன் – சித்ரரேகை – குதிரை – கடகம் –அளகாபுரி
தென்கிழக்கு – அக்கினி – ஸ்வரை– ஆட்டுக்கிடா–சத்தி–தேஜோவதி
தென்மேற்கு – நிருதி – துர்க்கை – தண்டிகை – முசலம் – ரக்ஷோவதி
வடகிழக்கு – ஈசானன் – பார்வதி – ரிஷபம் – சூலம் – கைலாசகிரி
வடமேற்கு –வாயு – அஞ்சனை – கிளைவான் – கொடி – சுத்தராவதி

458. அஷ்டதிக்கு கஜங்களின் பெயர்களையும் அவற்றின் பிடிகளின் பெயர்களையும் உரிய திசைகளையும் எழுது.

	பெயர்	பிடி	திசை
1.	ஐராவதம்	அப்பிரமை	கிழக்கு
2.	புண்டரீகம்	கபிலை	தென்கிழக்கு
3.	வாமனம்	பிங்கலை	தெற்கு
4.	குமுதம்	அனுபமை	தென்மேற்கு
5.	அஞ்சனம்	தாமிரகரிணி	மேற்கு
6.	புஷ்பதந்தம்	சுப்பிரதந்தி	வடமேற்கு
7.	சாருவபூமம்	அங்கலை	வடக்கு
8.	சுப்பிரதீபம்	அஞ்சனுவதி	வடகிழக்கு

459. அஷ்டபுஷ்பங்கள் எவை?

1. புன்னை 2. வெள்ளெருக்கு 3. சண்பகம் 4. நந்தியாவட்டை 5. பாதிரி 6 நீலோற்பலம் 7. அலரி 8. செந்தாமரை

460. அஷ்ட பரிவாரங்கள் எவை?

1. சூரியன்
2. சந்திரன்
3. சப்தமாதர்கள்
4. கணபதி
5. முருகன்
6. ஜேஷ்டாதேவி
7. சண்டேசுவரர்
8. பைரவர்

461. அட்ட வீரட்டத் தலங்கள் யாவை?

1) திருக்கண்டியூர் (தஞ்சை மாவட்டம்)— பிரமன் சிரம் கொய்தது.

2) திருக்கோவலூர் (தெ. ஆ மாவட்டம்)—
அந்தகாசூரனை அழித்தது.

3) திருவதிகை (தெ. ஆ மாவட்டம்)—
திரிபுரத்தை எரித்தது.

4) திருப்பறியலூர் எனப்படும் பரசலூர்
(தஞ்சை மாவட்டம்)—தக்கன் சிரம் கொய்தது.

5) திருவிற்குடி (தஞ்சை மாவட்டம்)—
சலந்தராசுரனை அழித்தது

6) வழுவூர் (தஞ்சை மாவட்டம்)—
யானையை உரித்தது.

7) திருக்குறுக்கை (தஞ்சை மாவட்டம்)—
மன்மதனை எரித்தது.

8) திருக்கடவூர் (தஞ்சை மாவட்டம்)—
எமனை உதைத்தது.

462. அஷ்ட வைரவர்கள் யாவர்?

1. மகாவைரவர்	2. உக்கிரவைரவர்
3 சண்டாளவைரவர்	4. குரோத வைரவர்
5. உன்மத்தவைரவர்	6. காபாலவைரவர்
7. பீஷணவைரவர்	8. சாகரவைரவர்

இவர்கள் சிவலோகத்தில் சோதிமயமான கோட்டையில் 8 வாயில்களிலும் காவல் செய்துகொண்டிருப்பவர்கள்.

463. அஷ்ட வசுக்கள் யாவர்?

1. அனலன்	2. அனிலன்	3. ஆபத்சைவன்
4. சோமன்	5. தரன்	6. துருவன்
7. பிரத்தியூசன்		8. பிரபாசன்

464. முத்திதரும் தலங்கள் (சப்தமோக்ஷபுரிகள்) எவை?

1. அயோத்தி-ராமர்பிறந்த இடம்-வைணவத்தலம்
2. மதுரா-கிருஷ்ணர் பிறந்த இடம்:வைணவத்தலம்
3. மாயா-[ஹரித்வார்] விஷ்ணுவை வழியாக உடையது என்பது இச் சொற்பொருள் —வைணவத்தலம்
4. துவாரகை - கிருஷ்ணர் வாழ்ந்த இடம் —வைணவத்தலம்
5. காசி - விசுவேசுவரர் உபதேசம்-சிவத் தலம்
6. அவந்தி - [உஜ்ஜயினி] மகாகாளேசுவரர்தலம் விக்கிரமாதித்தனுக்குக் காளி காட்சி தந்து அருள்புரிந்த இடம்-சக்தித்தலம்.
7. காஞ்சிபுரம்-சீவன் முத்தித்தலம்-விஷ்ணு, சிவன் சக்தி மூன்றும் சேர்ந்த தலம்.

[இந்த ஏழுதலங்களுள் தென்னுட்டில் உள்ள ஒரே தலம் காஞ்சிபுரம்]

465. சூரியனின் ஏழு வகையான கிரணங்கள் எவை?

1. சுஷும்ன
2 ஹரிகேச
3. விஸ்வகர்மா
4. விஸ்வ வியாஸ
5. ஸம்யத் வஸு
6. அர்வாக் வசு
7. ஸ்வராட்

என்பன.

466. ''சப்த விடங்கத் தலங்கள்'' எவை?

1) திருவாரூர்—வீதிவிடங்கர்—அஜபா நடனம்
2) திருநள்ளாறு—நகரவிடங்கர்—உன்மத்த நடனம்

3) நாகப்பட்டினம்—சுந்தரவிடங்கர்—வீசி நடனம்

4) திருக்காருயில்—ஆதிவிடங்கர்—குக்குட நடனம்

5) திருக்கோளிலி—அவனிவிடங்கர்-பிருங்க நடனம்

6) திருவாய்மூர்—நீலவிடங்கர்—கமல நடனம்

7) திருமறைக்காடு—புவனிவிடங்கர்-ஹம்சபாத நடனம்

467. மயிலாடுதுறையை மையமாகக்கொண்ட சப்த ஸ்தானத் தலங்கள் யாவை?

1. வள்ளலார்கோயில் 2. கௌரிமாயூரம் 3. காசிவிசுவநாதர் கோயில் 4. புனுகீஸ்வரர்கோயில், 5. சித்தர்க்காடு சம்பந்தசுவாமி கோயில் 6. சோழம் பேட்டை 7) மூவலூர் வழிகாட்டும் வள்ளல் கோயில்

468. குடந்தையை (கும்பகோணத்தை) மையமாகக் கொண்ட சப்த ஸ்தானத் தலங்கள் எவை?

1) கும்பகோணம் 2) கலயநல்லூர் 3) தாராசுரம் 4) திருவலஞ்சுழி 5) சுவாமிமலை 6) கொட்டையூர் 7) மேலைக்காவிரி.

469. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானத் தலங்கள் எவை?

1) திருவையாறு 2) திருப்பழனம் 3) திருவேதிகுடி 4) திருச்சோற்றுத்துறை 5) திருப்பூந்துருத்தி 6) திருக்கண்டியூர் 7) திருநெய்த்தானம்.

470. மேலுள்ள உலகங்கள் எவை? அங்கு வசிப்போர் யாவர்?

பூலோகம்-மனிதர், விலங்கு முதலியோர்.

2. புவர்லோகம்-சூரியன் முதலான கிரகங்கள், நட்சத்திரங்கள், சூக்ஷ்ம வடிவத்தில் உள்ள கின்னரர் முதலியோர்

3. சுவர்க்கலோகம்-இந்திரன், தேவர்கள், அதிஷ்டான தேவதைகள், மஹரிஷிகள், கந்தர்வர்கள், அப்ஸ்ரஸ்கள் முதலியோர்.

4. மஹர் லோகம் மார்க்கண்டேயர் முதலிய தவ முனிவர்கள்

5. ஜனோ லோகம்-பித்ருக்கள்

6. தபோலோகம்-அயோநிஜ தேவதைகள்

7. சத்தியலோகம்-பிரமர்கள்

471. கீழ் உள்ள ஏழு உலகங்கள் எவை? அங்கு வாழ்வோர் யாவர்?

1. அதல : அசுரர்கள்
2. விதல : அசுரர்கள்
3. சுதல : மஹாபலி முதலியோர்
4. தராதல : மாயாவிகள், அசுரர்கள், ராக்ஷஸர்
5. மஹாதல } அசுரர்களில் சிறப்பானவர்கள்
6. ரஸாதல } நிவாதகவசர், காலகேயர்

முதலியோர்.

7. பாதாள : வாசுகியுடன் கூடிய பாம்புக் கூட்டங்கள் மிகப்பெரிய சர்ப்பங்கள் முதலியன.

472. சிரஞ்சீவியர் எழுவர் யாவர்?

1. ஆஞ்சநேயர் 2) வீடணன் (விபீஷணன்)
3) அசுவத்தாமர் 4) வியாசர் 5) மகாபலி
6) கிருபர் 7) பரசுராமர்

"அச்வத்தாமா பலிர்வ்யாச; ஹனுமான்
ச விபீஷணக்ருப: பரசுராமஸ்ச்ச ஸப்ததேத
சிரஞ்ஜீவின"

473. சப்த ரிஷிகள் யாவர்?

1) கௌதமர் 2) பரத்வாஜர்
3) விசுவாமித்திரர் 4) ஜமதக்னி
5) வசிஷ்டர் 6) காசிபர் 7) அத்ரி ஆகியோர்.

474. சப்த (ஏழு) கன்னிகையர் யாவர்?

1) அகல்யை 2) சீதை 3) திரௌபதி
4) தாரை 5) மண்டோதரி 6) நளாயினி
7) அருந்ததி

475. ஏழு புண்ணிய நதிகள் எவை?

1) கங்கை 2)யமுனா 3) கோதாவரி
4) சரஸ்வதி 5) நர்மதை 6) சிந்து
7) காவிரி

476. ஏழு மண்டலங்கள் எவை?

1 சூரிய மண்டலம்
2. சந்திர மண்டலம்
3. வாயு மண்டலம்
4. வருண மண்டலம்
5. நட்சத்திர மண்டலம்
6. அக்கினி மண்டலம்
7. திரிசங்கு மண்டலம் என்பன.

477. நம் உடம்பில் உள்ள, ஆறு ஆதாரங்களும் அவற்றிற்குரிய இடங்களும் எவை?

(1) மூலதாரம்—மல வாயிலுக்கும், ஜலவாயில்லுக்கும் இடையில்.

(2) சுவாதிஷ்டானம் குறியின் அடியில்.
(3) மணிபூரகம்—கொப்பூழின் அடியில்.
(4) அனாகதம்—இதயத்து இடத்தில்
(5) விசுத்தி—கழுத்திடத்தில்.
(6) ஆக்ஞை—புருவ மத்தியில்.

478. பஞ்சப் பிராணன்கள் எவை எவை?

1) பிராணன்—(இதயத்திற்கு முக்கியமான வாயு)
2) அபானன்—(நம் உடலிலிருந்து கீழ்நோக்கி வெளிப்படும் வாயு)
3) வியானன்—(உடம்பை விழ்ந்து விடாமல் தாங்கிக்கொள்ளும் ஒரு வாயு உடம்பில் உள்ளது)
4) உதானன்—(ஏப்பம் விடுவதற்கு உதவும் வாயு)
5) சமானன்—(வயிற்றில் உள்ள ஒரு வாயு—உண்ட உணவை ஜீரணிக்க உதவுவது).

479. பஞ்ச கலைகள் யாவை?

வித்யாகலை நிவிர்த்திகலை பிரதிஷ்டா கலை
சாந்தி கலை சாந்தியதீத கலை

480. பஞ்ச [ஐந்து] கோசங்கள் எவை?

(1) அன்னமய கோசம்
(2) பிராணமய கோசம்
(3) மனோ மய கோசம்
(4) விஞ்ஞானமய கோசம்
(5) ஆனந்தமய கோசம்.

481. பஞ்ச பூதத் தலங்கள் எவை?

1. பிருதிவி (மண்)—திருவாரூர், காஞ்சிபுரம்
2. வாயு (காற்று)—திருக்காளத்தி (காளஹஸ்தி)
3. தேயு(நெருப்பு)—திருவண்ணாமலை

4) அப்பு(நீர்)—திருஆனைக்கா
5) ஆகாசம்(ஆகாயம்)—தில்லை (சிதம்பரம்)

482. பஞ்ச சபைத்தலங்களையும் பஞ்சாட்சர வடிவமாகச் சொல்லும் கருத்தை எழுதுக.

1. திருநெல்வேலி - தாமிர சபை— ந
2. திருக்குற்றாலம் - சித்திரசபை— ம
3. திருவாலங்காடு – இரத்தினசபை— சி
4. திருத்தில்லை(சிதம்பரம்)- பொற்சபை –வ
5. மதுரை - வெள்ளிச்சபை- ய

மேலாம் சிவயநம மேவும் பொன் வெள்ளி
பாலாம் செம்போடுமண் பற்றல் போல- மேலாம்
அவனுடல் செய் வணக்கம் ஆல் தில்லை கடல்
தவநெல்லை குற்றாலந்தான்" திருமந்திரம் –2715

483. பஞ்ச கன்னிகைகள் என்போர் யாவர்?

1) அகல்யை 2) தாரை 3) சீதை
4) மண்டோதரி 5) திரௌபதி.

"அஹல்யா த்ரௌபதி ஸீதா தாரா மந்தோதரீ: ததா பஞ்ச கன்யா; ஸ்மரேந்நித்யம் மஹாபாதக நாசனம்"

484. பஞ்சாக்கினித் தவம் எனப்படுவது யாது?

நான்கு பக்கங்களிலும் தீ மூட்டி, நடுவில் இருந்து தலைநிமிர்ந்து கண் மூடாமல் சூரியனை நோக்கிப் பார்த்த வாறே தவம் செய்வது பஞ்சாக்கினித்தவம் என்று போற்றப்படுவதாகும்.

485. பஞ்சவடி என்று எதற்குப் பெயர்?

ஐந்து ஆலமரங்களின் அடியிலிருந்து கோதாவரி உற்பத்தியாகிறது. இந்த இடமே பஞ்சவடி என்ப்படும்.

486. பஞ்சப் பிரம மந்திரங்கள் எவை?

ஈசானாய நம: தத்புருஷாய நம:
அகோராய நம: வாமதேவாய நம:
சத்யோஜாதாயநம: என்பன.

487. பாதம் படக்கூடாதவை எவை எவை?

பயானகரி, அக்கினி, அடுப்புமீது, விபூதி, சான்றோர்மீது, பசுவின்மீது, இரத்தம்முதலானவை மீது நம் பாதம் படக்கூடாது. படுமாயின் நம்மைச் 'சனி' தொடருவார் என்று ஆசார நூலில் சொல்லப்பட்டுள்ளது.

488. பஞ்ச பூத அட்சரங்களின் எண்ணிக்கை யாவை?

பிருதிவி — 11
அப்பு — 10
தேயு — 8
வாயு — 19
ஆகாயம் — 3
ஆக 51 அட்சரங்கள்

489. ஐந்து(பஞ்ச)சபைகள் எவை?

1) தில்லை(சிதம்பரம்)—பொற்சபை, பொன்னம்பலம்.
2) மதுரை—வெள்ளிச்சபை, வெள்ளியம்பலம்.
3) திருநெல்வேலி—தாமிரச் சபை
4) திருவாலங்காடு—இரத்தினச் சபை
5) திருக்குற்றாலம்—சித்திரச் சபை

490. பஞ்சாக்னியின் பெயர்களை எழுதுக.

1. தக்ஷிணாக்கினியம் 2. காருகபத்யம்
3. ஆக்வனீயம் 4. சத்யம் 5. ஆவசத்யம் என்பன.

491. பஞ்ச(மலர்ப்) பாணங்கள் அம்புகள் எவை?

1. தாமரை 2, மா. 3. மல்லிகை
4. அசோகம் 5. நீலோத்பலம்

492. முத்திக்குரிய நால்வகை மார்க்கங்களாகச் சைவம் கூறுவதை எழுதுக.

1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்

493. முத்தியின் நான்கு நிலைகள் யாவை?

1. சாலோகம்— இறையுலகை அடைதல்
2. சாமீபம்—இறைவனை அணுகுதல்
3. சாரூபம்—இறைவடிவம் கொள்ளுதல்
4. சாயுச்சியம்-இறைவனோடு இரண்டறக் கலத்தல்.

[இவற்றள் முதல் மூன்றும் அபரமுத்தி என்றும் நான்காவதான சாயுச்சியம் பரமுத்தி என்றும் சொல்லப் படும்.

494. நால்வகை ஆசிரமங்கள் யாவை?

1, பிரமசரியம் 2. கிருஹஸ்தம்
3. வானப்பிரஸ்தம் 4. சந்யாசம் என்பன.

495. நான்கு யுகங்கள் எவை?

1. கிருதயுகம்--17, 28, 000 வருஷங்கள்
2. திரேதாயுகம்—12, 96 000 வருஷங்கள்
3. துவாபரயுகம்— 8, 64, 000 வருஷங்கள்
4, கலியுகம்— 4 32, 000 வருஷங்கள்

496. சனகாதி முனிவர் நால்வர் யாவர்?

1. சனகர் 2. சனந்தனர்
2. சனற்குமாரர் 4. சனாதனர் ஆகியோர்.

497. ஆதிசங்கரரின் நான்கு சீடர்கள் யாவர்?

1. சுரேஸ்வரர் 2. தோடகர்
3. பத்மபாதர் 4. அஸ்தாமலகர்

498. வேள்வித்தீயின் மூன்று வகைகள் யாவை?

1) ஆகவநீயம் 2) தக்ஷிணாக்கினியம்
3) காருக பத்தியம்

499. மூவகையான தேகங்கள் எவை?

1. ஸ்தூல உடம்பு 2. சூக்கும (சூக்ஷ்ம) உடம்பு
3. காரண உடம்பு

500. முச் சுடர்கள் எவை?

1 சூரியன் 2. சந்திரன் 3. அக்கினி

501. மூவகைத் துன்பங்கள் எவை?

1. **அத்யாத்மிகம்**-நம்நடத்தையால் ஏற்படும் உடல். மன நோய்கள்

2. **ஆதிதெய்விகம்**-நம் சக்திக்கு அப்பாற் பட்டு ஏற்படும் கலகம், போர், விபத்துக்கள்

3. **ஆதி பௌதிகம்**-பஞ்சபூதங்களால் ஏற்படும் தீ வெள்ளம், பூகம்பம் முதலியன.

502. முப்புராதிகள் என்று சொல்லப்படும் மூன்று அசுரர்களின் பெயர்கள் யாவை?

1· வித்யுன்மாலி 2. தாரகாட்சன் 3. கமலாட்சன்

503. மூவகை நாடிகள் எவை?

1. வாதம் 2. பித்தம் 3. சிலேத்துமம்

504. ஆசமனம் செய்யும் முறையை விளக்கு.

வலக்கை கட்டைவிரலை மடக்கி ஆள்காட்டி விரலுக்குப் பின்புறமாக நடுவிரலின் நடுரேகையைத் தொடும்படியாக(கோகர்ணாக்ருதியாக)வைத்துக்கொண்டு வலக்கை நடுவில் உளுந்து முழுகும் அளவு (இருதயம் வரையில் போகக் கூடிய அளவு) நீரை எடுத்துக் கொண்டு ஆசமனம் செய்யவேண்டும்.

குக்குடாஸனமாக பாதங்களைப் பூமியில் வைத்துக் கொண்டு முழங்கால்களுக்குள் இருகைகளும் இருக்கும் படி வைத்து பின்பாகம் கீழே படாதபடி ஆசனத்திலோ பூமியிலோ உட்கார்ந்து கொண்டு ஆசமனம் செய்ய வேண்டும்,

505. ஈர ஆடையுடன் ஜபம் செய்யலாமா? கூறுக.

ஈர ஆடையுடன் கரையிலும் (அ) நீரிலும் ஜபம் செய்யக்கூடாது. உலர்ந்த ஆடையை உடுத்தியே கரையில் ஜபம் செய்யவேண்டும். உலர்ந்த வஸ்திரம் இல்லையெனில் ஈர ஆடையை ஏழு முறை காற்றில் உதறிவிட்டு, உலர்ந்த ஆடையான பாவனையாக ஜபிக்கலாம்.

506. ஜபம் செய்வதற்கு உகந்த இடங்கள் எவை?

அக்கினிச் சாலை, ஜலத்தின் கரை, கோவில்,புண்ணிய தீர்த்தம், மாட்டுக்கொட்டில், ஸித்த க்ஷேத்திரங்கள் ஆகி யவை ஜபத்திற்குரிய ஸ்தலங்களாகும். இவை இல்லா-விடில் வீட்டில் ஜபிக்கலாம்.

அரசு, வில்வம், துளசி, புஷ்பச் செடிகள் உள்ள இடத்திலும் ஜபிக்கலாம்.

507. ஜபம் செய்வதற்குரிய மாலைகள் எவை எவை?

சங்குமணிமாலை, வெள்ளிமணிமாலை, வேப்பங் கொட்டை மாலை, பவழமாலை, முத்துமாலை, ஸ்படிகமாலை, ருத்ராக்ஷமாலை, தாமரைக்கொட்டைமாலை இவைகளைக் கொண்டு ஜபம் செய்வது மிகவும் விசேஷமாகும்.

508. எவ்வெவற்றின் மீதமர்ந்து ஜபம் செய்யலாம் அவற்றின் பலன்களைக் கூறுக?

1) புலித்தோல் — சர்வசித்தியும் அளிக்கும்
2) மான் தோல் — ஞானம்தரும்
3) துணி(ஆடை)—ரோகத்தைப் போக்கும்
4) கம்பளம் — துக்கத்தைப் போக்கும்

[புல்தரை, செங்கல் கல் இவற்றின் மீதமர்ந்து ஜபம் செய்யக்கூடாது. தீட்சை பெறுத இல்லறத்தான் கருப்பு மான் தோலை உபயோகிக்கக் கூடாது]

509. எவ்வெவ் ஆசனங்களிலிருந்து பூசை செய்யலாம்?

வடக்கு முகமாக ஆசமனஞ் செய்து விபூதியை அணிந்து கொள்ள வேண்டும்.

தர்ப்பாசனம், மரப்பலகை. வஸ்திராசனம் கம்பளம் புலித்தோலாசனம் முதலியவற்றில் அமர்ந்திருந்து பூசையைச் செய்யலாம்.

[வெற்றுத்தரையில் அமர்ந்தும் கல்லின் மீதமர்ந்தும் மூங்கிற்பாய் மீதிருந்தும் பூசையைச் செய்யக்கூடாது].

510. மந்திரத்தை ஜபிக்கும் முறைகள் யாவை?

1) மனத்திற்குள் ஜபிப்பது மானசம்

2) தனக்கு மட்டும் கேட்குமாறு உச்சரிப்பது—மெதுவாக ஜபிப்பது மந்தம்,

3) பிறர் கேட்குமாறு உரக்க உச்சரிப்பது—வாசகம். (உபாம்ஸு)

[மானசம் உத்தமமானது. மற்ற இரண்டும், முறையே மத்திமம் அதமம் ஆகும்]

511. சந்தியா வேளையில் (சாயங்கால வேளை) உண்ணவோ உறங்கவோ கூடாது. ஏன்?

சந்திக்காலம் என்பது பகலின்முடிவும் இரவின் ஆரம்பமுமான காலம். இது தோஷமுடைய காலம். அசுரர். பூதம், பிசாசுகள், நோய் முதலியவைகளுக்கு ஏற்ற சமயமிது. எனவேதான் உண்ணுவதோ உறங்குவதோ இவ்வேளையில் கூடாது என்பர்.

[மக்கள் வழக்கில் இன்றும் விளக்கேற்றும் நேரத்தில் படுத்துத் தூங்கக்கூடாது என்னும் கருத்து உள்ளது].

512. 'மூவேடனை' என்பவை யாவை? விளக்குக.

(ஏடனை) ஏஷனை = ஆசை.
மூன்று + ஏடனை = மூவேடனை - மூவகை ஆசைகள்
அவை 1. தன ஏஷனை— (தானேஷனை)- பொருளாசை
(2) தார ஏஷனை (தாரேஷனை)— பெண்ணாசை
(3) புத்திர ஏஷனை (புத்ரேஷனை)- மக்களாசை
என்பன.

[இம்மூவகை ஆசைகளையும் விட்டதற்குச் சேரமான் பெருமாள் நாயனாரையும், திருநீலகண்ட நாயனாரையும், சிறுத்தொண்ட நாயனாரையும் சான்றாகச் சொல்வர்.]

513. சுவர்க்கம், நரகம் என்பன யாவை?

அவரவர் செய்த பாவங்களுக்குரிய பயன்களைப் பலவிதமான துன்பங்களில் அநுபவிக்கும் இடமே நரகம் எனப்படும்.

அவ்வாறே, புண்ணியங்களுக்குரிய பயன்களைப் பலவிதமான இன்பங்களில் அநுபவிக்கும் இடமே சுவர்க்கம் ஆகும்.

514. ஆதிசங்கரர் கயிலையிலிருந்து கொண்டு வந்த ஐந்து லிங்கங்கள் எங்கெங்கு வழிபடப் பெறுகின்றன?

1) போகலிங்கம்—சிருங்கேரியிலும்
2) வரலிங்கம்—நேபாளத்திலும்
3) முக்திலிங்கம்—கேதாரத்திலும்
4) யோகலிங்கம்—காஞ்சியிலும்
(ஸ்ரீ காமகோடி பீடம்)
5) மோக்ஷலிங்கம்—சிதம்பரத்திலும்
வழிபடப் பெறுகின்றன.

515. சூரியனுக்கு அமைந்த மிகப்பெரிய கோயில் எங்குள்ளது?

ஒரிசா மாநிலத்தில் கோனார்க் என்னுமிடத்தில் உள்ளது.

516. காசிக்குச் சமமான தென்னாட்டுத் தலங்கள் எவை?

1) திருவெண்காடு 2) திருவையாறு
3) மயிலாடுதுறை 4) திருவிடைமருதூர்
5) திருச்சாய்க்காடு 6) ஸ்ரீவாஞ்சியம்

517. பிறக்க, வசிக்க, காண, இறக்க, நினைக்க முத்தி தரும் தலங்கள் எவை?

1) பிறக்க— திருவாரூர் 2) வசிக்க— காஞ்சிபுரம்
3) காண—தில்லை(சிதம்பரம்) 4, இறக்க—காசி
5. நினைக்க—திருவண்ணாமலை

518. காலையில் எழுந்ததும் அவரவர் தத்தம் உள்ளங்கையை முதலில் பார்த்துக்கொள்ளல் வேண்டும் என்று சொல்லப்படுவது ஏன்?

உள்ளங்கையின் அடிப் பாகத்தில் பார்வதியும் மத்தியில் சரஸ்வதியும் மேற்புறத்தில் லக்ஷ்மியும் அமைந் திருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் காலையில் கண் விழித்தவுடன் அனைவரும் தத்தம் உள்ளங்கையைப் பார்த்துத் தரிசித்துக்கொள்ள வேண்டும் என்பர்.

"கராக்ரே வஸதே லக்ஷ்மீ சரமத்யே ஸரஸ்வதீ
கரமூலேது கௌரீ ஸ்யாத் ப்ரபாதே கரதர்சனம்'

519. உணவு உண்ணும்போது சொல்ல வேண்டியபாடலும் சுலோகமும் யாவை?

"அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" —அப்பர்

"அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கர ப்ராணவல்லபே
ஞானவைராக்ய ஸித்யர்த்தம் பிக்ஷாம் தேஹிச பார்வதி"
—ஆதிசங்கரர்

520. வரலட்சுமி விரதத்தை விளக்கி எழுதுக.

ஆவணி பௌர்ணமிக்கு நெருங்கிய வெள்ளிக்கிழமை கோதூளி வேளை எனப்படும். மாலை வேளையில் சுத்த மான, இடத்தில் அழகிய மண்டபம் அமைத்து அக்ஷதை நிறைந்த கும்பம் வைக்கவும். அதற்கு வண்ணச் சீலை உடுத்தி கும்பத்தின் வயிற்றில் அம்பாள் திருமுக மண்டலத்தை அமைத்து, செந்தாமரைத் திருமகளை சிந்தையில் தியானித்துப் பாராயணம் சேய்ய வேண்டும், மங்களகரமான மஞ்சள் நூலையும் வைத்துப் பூஜிக்க

வேண்டும். கடைசியில் திருமகளுக்குச் சோடசோபசாரங் களைச் செய்து உற்ருருடன் இருந்து ஸ்ரீதேவியை வாழ்த்தி மஞ்சள் சரடை வலது கை மணிக்கட்டில் அணிந்து கொள்ள வேண்டும்.

521. இஷ்டம், பூர்த்தம் என்பவை யாவை?

அன்னதானம் செய்வது, தாகத்திற்கு நீர் தருவது இவை போன்ற செயல்களைச் செய்வது இஷ்டம் எனப் படும். குளம் வெட்டுவது, நந்தவனம் வைத்து வளர்ப்பது' கிணறு வெட்டுவது இவை போன்ற செயல் களைச் செய்வது பூர்த்தம் எனப்படும்.

522. ரக்ஷாபந்தனம்—என்ருல் என்ன?

காப்பு நாண் அணியும் விழா என்பது பொருள், ஆசிரியர் அல்லது பெரியோர் வடக்காக இருந்து, அணிந்து கொள்பவரை கிழக்காக நிறுத்தி, 3, 5 என ஒற்றைப்படை இழைகளால் முறுக்கப்பட்ட பருத்தி நூலை' மூன்று முறை மந்திரத்தைச் சொல்லி உருவி விட்டு' அணிந்து கொள்பவரின் வலக்கையில் கட்டி விடுவர்.

இவ்விழா இப்போதும் வடநாட்டில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தென் நாட்டில் சிலவிடங்களிலும் கொண்டாடப்படுகிறது.

523. த்ரிலிங்கதேசம் என்று எதற்குப் பெயர்? விளக்கமாக எழுது.

தெலுங்கு தேசத்திற்கு "த்ரிலிங்கம்" என்று பெயர். தெலுங்கு தேசத்திற்கு (ஆந்திரத்திற்கு) மூன்று இலிங்கங் களே எல்லைகளாக உள்ளன. அதாவது பரமேச்வரனே இத்தேசத்திற்கு எல்லைகளாக இருக்கிருன் என்பர். தெற்கில் திருக்காளத்தி (காளஹஸ்தி), மேற்கில் ஸ்ரீசைலம் வடக்கில் திராக்ஷராமம் ஆகிய சிவத்தலங்கள் உள்ளன.

''த்ரிலிங்கதேசம்'' என்பது தான் தெலுங்கு தேசம் என்று ஆயிற்று என்பர். (இன்று ஆந்திரப்பிரதேசம் எனப்படுகின்றது)

524. 'பிரமஹத்தி'—என்பது யாது?

பிரமஹத்தி என்பது, பிரம ஞானமுள்ளவனைப்பற்றிக் கொள்ளும் பேய். இது பெண்வடிவமாகப் பேசப்படு கிறது. இது கருநிறம் உடையதாய் நீண்ட தலைமயிரைப் பெற்று, தீப்பொறிகக்கும் கண்களும் கோரப்பற்களும் அச்சந்தரும் முகமும் கொண்டு விளங்குவது, இதன் இருப்பிடமாக மரம், நெருப்பு, நீர், பெண்கள் முதலியவை சொல்லப்படுகிறது.

இது பற்றிக்கொள்வதையே பிரமஹத்தி தோஷம் என்று சொல்லுகிறோம்.

525. சங்கநிதி—பதுமநிதி—என்பவைகளை விவரி.

சங்கம்—பதுமம் என்பன பெரிய—மிகப்பெரிய எண் களைக் குறிக்கும் அடையாளம். தொல்காப்பியர் காலத்தி லேயே ஐ-அம்-பல் என வரூஉம் இறுதி எண்கள் பேசப் பெறுகின்றன. அம் என்னும் இறுதியுடைய எண்ணுப் பெயர் சங்கம்—பதுமம் என்பனவே. சங்கம் என்பது கோடி × கோடி கொண்ட எண். அதாவது ஒன்றுடன் பதினான்கு பூஜ்யங்கள் இட்டு எழுதும் எண். இதனை ஒரே எழுத்தாக எழுதிக்காட்டத் தமிழர் கையாண்ட முறை சங்கு வடிவம் இதனையொரு பூதத்தின் கைகளில் கொடுத்துவைத்தார்கள். ஆகவே ஒரு குறட்பூதம் இரு கைகளிலும் சங்குகளை ஏந்தியதுபோல இவ்வுருவம் அமைந்திருக்கும்.

பதுமம் என்பதும் முற்கூறியவாறு ஒருபெரிய எண் ணிற்குக் கொடுக்கப்பெற்ற தாமரை வடிவம். இது

ஒன்றுடன் முப்பத்தைத்து பூஜ்யங்கள் சேர்த்துஉண்டாக்கப்பெற்றது. அதாவது கோடியைக் கோடியால் பெருக்கி. அந்த எண்ணை ஒரு கோடியாற் பெருக்கி, அந்த எண்ணை ஒருகோடியாற் பெருக்கி, அதனை ஒரு கோடியாற் பெருக்கி வந்த பெரிய எண்ணாகும். இதனைக் குறிப்பது தாமரை வடிவம். ஒரு பூதம் இருகைகளிலும் தாமரை ஏந்தியிருப்பதுபோல இவ்வடிவம் அமைக்கப்பெற்றிக்கிறது. இவ்விரண்டும் குபேரனிடத்திலுள்ள ஒன்பது வகையான (நவ) நிதிகளுள் அடங்கும்.

526. வேள்விகளில் பயன்படத்தக்க சமித்துக்களைத் தரும் மரங்கள் எவை?

1. வில்வம் 2. ஆல் 3. வன்னி 4. கருங்காலி
5. மா 6. முறுக்கை 7. அத்தி 8. பலாசு
9. சந்தனம் 10. வேங்கை 11. அரசு 12. வாகை முதலியன.

527. அக்ஷதை (அட்சதை) என்பதன் பொருள் யாது?

'க்ஷதம்' என்றால் குறைவுடையது. 'அக்ஷதம்' என்றால் குறைவில்லாதது- நிறைவுடையது- பூரணத்துவம் உடையது என்று பொருள். குறைவில்லாத பூரணத்துவம் பெற்று வாழ வாழ்த்துவதற்கு அக்ஷதையைப் பயன்படுத்துகிறோம், அரிசி, மஞ்சள் இவையிரண்டுமே மங்கலப் பொருள்களாம்.

528. கேதார கௌரி விரத நோன்பின்போது 21 என்ற எண்ணிக்கையில் அதிரசங்களையும் மற்றப்பொருள்களை (வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ) யும் வைத்துப் படைப்பதன் நோக்கம் யாது?

பிருங்கி என்னும் மகரிஷி பெருமானை வணங்க வந்த போது அவர் அம்மையப்பராக இருந்த கோலங்கண்டு

வண்டு உருவங்கொண்டு அவர்களுக்கு இடையிற் புகுந்து இறைவனை மட்டும் வலம் வந்தார். இதைக்கண்ட உமாதேவி இறைவனை விரதமிருந்து நோற்று அவருடம் பிலிருந்து பிரிக்கமுடியாதவாறு இடப்பாகத்தில் ஒன்றி யிருக்கும் பேற்றினைப் பெற்றார். இவ்வடிவமே அர்த்த நாரீசுவரராகும் இந்த நோன்பு விரதமே கேதார கௌரி விரதம் எனப்படும்.

புரட்டாசி மாதம் வளர்பிறையில் தசமி திதி நாள் தொடங்கி, ஐப்பசிமாதம் தேய்பிறை அமாவாசை-தீபாவளி வரை 21 நாள்கள் நாடொறும் இறைவனை வில்வார்ச்சனை செய்து நாளுக்கொருவகையாகப்பலகாரங் கள் நிவேதித்து இருபத்தோரு இழையில் ஒரு கயிற்றை முறுக்கி, அதில் நாளுக்கு ஒரு முடிவீதம் 21 முடிகள் முடிந்து கடைசி நாளில் அக்கயிற்றை கையில் அணிந்து கொள்வர். இதுவே இந்நோன்பு முறை. பிற்காலத்தில் 21 நாள்கள் இருக்கும் முறைமாறி இவ்விரதம் ஒரு நாள் அளவே யிருக்கும் முறைக்கு வந்துவிட்டது. இதனால் 21 நாள்களிலும் செய்தது போன்ற பாவனையாக 21 வகை யான பலகாரங்களை நிவேதிப்பது என்ற முறை வந்தது. இம்முறையும் மாறி, இன்று ஒருவிதமான பலகாரத்தையே -இனிப்பையே 21 என்ற எண்ணிக்கையில் வைத்து நிவேதிக்கும் வழக்கம் வந்து விட்டது. இம்முறையில் தான் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ இவற்றின் எண்ணிக் கையும் நடைமுறைக்கு வரலாயிற்று. (பண்டை நாளில் இனிப்பு என்னும்போது அதிரசம் என்னும் பண்டமே நடைமுறையில் தெரிந்ததாக இருந்ததால் அப்பலகாரமே இன்றும் வழக்கத்தில் கொள்ளப்படுகிறது).

(அதி-ரசம் = மேலான இனிப்புடையது).

529. துறவிக்குள்ள பஞ்ச முத்திரை (அடை யாளங்கள்) யாவை?

1. உருத்திராக்கம் 2. கமண்டலம் 3. காவியுடை
4. சடை 5. தண்டு என்பவையாம்.

530. துறவிகள்-சந்நியாசிகளின் கையில் ஏந்தி யிருக்கும் "தண்டத்தின்" தத்துவம் யாது?

வாழ்க்கை நிலைகள் — ஆசிரமங்கள் நான்கு வகைப்படும்,

1) பிரம்மசரியம் 2) கிரஹஸ்தம்
3) வானப்பிரஸ்தம் 4) சந்நியாசம்.

இந்நால்வகை ஆசிரமத்திற்கும் அடையாள தண்டம் உண்டு.

1) பிரம்மசரிய நிலையில் இருப்பவர்களுக்கு உபநயனம் செய்து வைக்கும் காலத்தில் கையில் அரசு (அ) புரசு குச்சியைக் கொடுப்பார்கள்.

2) கிரஹஸ்த நிலையினருக்குரிய அடையாளம் ஓட்டை இல்லாத மூங்கில் ஆகும்.

3) வானப்பிரஸ்த நிலையினருக்கு ஓட்டை உள்ள மூங்கில் ஆகும்.

4) சந்நியாச ஆசிரமத்தில் இருப்போர்க்கு உரியது (மூங்கிலன்று) மூங்கில் வகையைச் சேர்ந்த ஒரு குச்சி-ஆகும். இதையே தண்டம் என்கிறோம். இதில் ஓட்டை கிடையாது ஸ்ரீ சங்கராசாரியர் சம்பிரதாயத்தைச் சேர்ந்தோரும் ஸ்ரீமத்வர் சம்பிரதாயத்தைச் சேர்ந்தோரும் ஒரு தண்டத்தை வைத்திருப்பர். இது ஏக தண்டம் எனப்படும்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தோர் 3 தண்டங்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி வைத்திருப்பர். இது திரிதண்டம் எனப்படும்.

[சந்நியாசிகள் கொண்டிருப்பது ஞான தண்டம் என்றும், கிரஹஸ்தருக்குரியது யோக தண்டம் என்றும், சொல்லப்படும்].

தண்டத்தின் மேற்புறத்தில் மடித்துக் கட்டப்பட்டிருக்கும் துணி "பரசு" (கோடாலி) எனப்படும். ஞான பரசு, ஞான அங்குசம் எனவும் வழங்கப்படும். அறியாமையை உடைப்பது என்பது பொருள். சுற்றியிருக்கும் கயிறு நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கும் பந்தத்தின் அளவைக் குறிப்பதாம்.

ஞானப் பரசு கொண்டு அறியாமையை உடைத்தெறிந்து, பந்தக் கட்டிலிருந்தும் விடுபட வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

தண்டத்தில் உள்ள கணுக்கள் ஒற்றைப் படையில் அமைந்திருக்கும்.

531. திரிவேணி சங்கமம் என்பது யாது?

கங்கையும், யமுனையும், உள் ஓட்டமாகச் சரஸ்வதி நதியும் ஆகிய இம்மூன்றும் ஒன்று சேரும் இடமே திரிவேணி சங்கமம் எனப்படுகிறது.

532. மங்கள, பிதிர் காரியங்களில் கணவன் மனைவி வலம் வரவேண்டிய முறை யாது?

தெய்வ வழிபாடு போன்ற மங்கள காரியங்களில் வலஞ் செய்யும் போது கணவன் முன்னதாகவும் பெண்கள் பின்னதாகவும் செல்ல வேண்டும். பித்ரு காரியங்களில் மனைவி முன்னதாகச் செல்ல வேண்டும்

533. திருவாதிரை நாளில் 'களி' படைத்து உண்ணும் வழக்கம் வந்த முறையாது?

திருவாதிரை நாளன்று கோயில்களிலும் வீடுகளிலும் களி என்னும் உணவுவகை ஒன்றைச் செய்வதனைப்பார்க்கிறோம். இது 'திருவாதிரைகளி' என்றே வழங்கப்படுகிறது. தவிர. 'திருவாதிரை ஒருவாகளி' என்ற பழமொழியும் வழங்குவது உண்டு. ஒருவா களி என்பது

நீங்காத மகிழ்ச்சி என்று பொருள்படும். திருவாதிரையன்று நடராசப்பெருமானை வணங்குவது நீங்காத மகிழ்ச்சியை உண்டாக்கும் என்பது அதன் பொருள். ஆனால் நடைமுறையில் அதன் பொருள் மாறி, அந்த தினத்தில் களி செய்து உண்பது என வழங்கப்படுகிறது.

534. அரச மரத்தின் கீழ் நாகப்பிரதிஷ்டை செய்யப்படுவது ஏன்?

அரசமரத்தின் அடிப்பாகத்தில் பிரமனும், மத்திய பாகத்தில் விஷ்ணுவும், மேற்பாகத்தில் சிவனும்—ஆக மும்மூர்த்திகளும் அரச மரத்தில் இருப்பதால் இம்மரத்தின்கீழ் நாகப்பிரதிஷ்டை செய்வது விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனால் சகல தோஷங்களும் நீங்கும்.

535. 'குரு க்ஷேத்திரம்' பற்றி எழுது.

இங்குத்தான் பாரதப் பெரும் போர் நடந்தது பகவத்கீதை தோன்றிய பெருமையுடையது இவ்விடமே. இத்தலத்திற்கு பிரம்மக்ஷேத்திரம், தர்மக்ஷேத்திரம், ஆர்யாவர்த்தம், உத்தரவேதி முதலியன வேறு பெயர்கள். சரஸ்வதி நதிக்கும் திருஷத்வதி நதிக்கும் இடையில் அமைந்துள்ளது. வியாசமகரிஷி பாரதத்தையும், மனு, மனுஸ்மிருதியையும் இங்குத்தான் இயற்றியதாகச் சொல்லப்படுகிறது. மாபெரும் ரிஷிகளும் மகான்களும் தவமியற்றிய பெரும்பதி.

இன்று இத்தலம், மாவட்டத்தலைநகரமாகவும் விளங்குகிறது. இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றது, ததீசிமுனிவர் தம் எலும்பை இந்திரனுக்குத் தந்தது. பரசுராமர் பீஷ்மர் யுத்தம் நடந்தது முதலியவை அனைத்தும் இப்பகுதியில்தான். இப்பகுதியிலுள்ள, கர்ணன் கோட்டை, பானகங்கை, சக்கரதீர்த்தம் முதலிய இடங்கள் மகாபாரதத்துடன் தொடர்புடையவை.

தென் கிழக்கு ஆசியாவில் உள்ள லாவோஸில் கிடைத்துள்ள ஐந்தாம் நூற்றுண்டைச்சேர்ந்த ஒருகல்வெட்டிலும் குருக்ஷேத்திரத்தின் சிறப்பு சொல்லப்பட்டுள்ளது.

மௌரியர், சுங்கர், குஷானர், ஹூணர் ஆகிய பல இனத்தவர்களின் அடுத்தடுத்த படையெடுப்புக்களுக்கு இப்பகுதி உள்ளான போதிலும் இங்குள்ள நிலை மாற வில்லை. அக்காலத்தில் இது ஸ்ரீ கண்டமாவட்டம் என்று வழங்கப்பட்டது.

536. அஷ்டகல்யாணி குதிரையின் அமைப்பு யாது?

இதுஉயர்ந்த இனத்தைச் சேர்ந்தது-நான்கு கால்கள், முகம், தலை. வால், மார்பு ஆகியவை தூய வெண்மை நிறமாக இருக்கும்—இவ்வினக்குதிரைகள் சிறந்தனவாகச் சொல்லப்படுகின்றன.

537. ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முக்கிய கடமையாக-பிறவிப்பயன் அடைவதற்குரிய மார்க்கமாகச் சொல்லப்படும் கருத்தை எழுதுக.

திருநீற்றை நெற்றியிலும், ருத்ராக்ஷத்தை கழுத்திலும், மகாலட்சுமியின் இருப்பிடமாகிய வில்வத்தைத் தலையிலும், 'சிவ' என்னும் இரு எழுத்துக்களை நாவிலும் ஸ்படிக ரூபமாகவுள்ள சிவலிங்கத்தை உள்ளத்திலும் கொண்டு, தியானித்தும் ஓதியும் அணிந்தும் பிறவிப் பயன் அடைய ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

538. 'த்வீபம்' என்பது யாது? எத்தனை த்வீபங்கள் உள்ளன.

நாம் வசிக்கும் பூலோகத்தை நம் முன்னோர் ஏழு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஏழுகடல்கள் ஏழு

தீவுகள் என்ற அமைப்பில்-அதாவது முதலில் ஒரு தீவு அதைச்சுற்றி ஒரு கடல், பிறகு 'ஒரு தீவு அதைச் சுற்றி ஒருகடல்-என்ற முறையில் பிரித்துள்ளார்கள்.

த்வீபம் என்பதற்கு தீவு என்பது பொருள். ஏழு த்வீபங்கள் வருமாறு:—

(1) ஜம்பூத்வீபம் (2) ப்லக்ஷத்வீபம்
(3) சான்மலித்வீபம் (4) குசத்விபம்
(5) க்ரௌஞ்சத்வீபம் (6) சாகத்விபம்
(7) புஷ்கரத்வீபம்

[ஜம்பூத்வீபம் ஒன்பது கண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று நாம்வசிக்கும் பரத கண்டம். இத் த்வீபத்தின் மத்தியில் தான் மேருமலே உள்ளது. நம்பரதகண்டம்—மேருமலேக்குத் தெற்கில் உள்ளது].

539. 'கருட பஞ்சமி'—விளக்குக.

சுமங்கலிகள் கடைப்பிடிக்கும் ஒரு விரதம். இது கருடனே வழிபடுவதற்காக ஆவணி மாதம் வளர்பிறை பஞ்சமி திதி நாளில் அனுஷ்டிக்கப்படும். ஒரு காலத்து அரசகுமாரர்கள் எழுவர் பாம்பு தீண்டியிறக்க அவர் களின் தங்கை இவ்விரதத்தை அனுஷ்டித்து, பாம்பு புற்றைப் பூசித்து அப்புற்று மண்ணே நீரில்கரைத்து அவர்கள்மீது தெளித்து உயிர்ப்பிக்கச் செய்ததாக வரலாறு சொல்லப்படுகிறது.

540. 'கோத்திரம்' என்று சொல்லப்படுவதன் பொருள் யாது?

ஒவ்வொருவரும் குலம், கோத்ரம் என்ற இரு வழியைப் பெற்றிருக்கின்ரேம் பிறப்பு வழி வருவது குலம், இது உடம்பைப்பற்றிவரும் பரம்பரை. இவ்வாறு அறிவு பற்றிவரும் பாரம்பரியமே கோத்திரம் (கோத்ரம்) என்ப

தாகும். ரிஷிகளைத் தம் சந்ததிக்கு முதன்மையான வராகக் கொண்டு சொல்லப்படுவது.

(கோயிலில் அர்ச்சனை செய்யும்போது பெயர், கோத்திரம், நட்சத்திரம் ஆகியவற்றைச் சொல்லியே செய்யவேண்டுமென்பது மரபு).

541 பிருந்தாவனம், அதிஷ்டானம் என்பவை யாவை?

சந்நியாசிகளை அடக்கம் செய்த இடம் அதிஷ்டானம் எனப்படும். அடக்கம் செய்யப்பட்டோர் அங்கு அவ்விடத்து அடங்கினமையால் அது அதிஷ்டானம் எனப்பட்டது. அங்குத் துளசி மாடம் அமைத்து வளரச் செய்வார்கள். அப்போது அது பிருந்தாவனம் எனப் படும். அதிஷ்டானத்தில் ஆலய நிர்மாணமும் செய்யப் படும். ஆலயங்கள் கட்டுவித்தால் அதில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வார்கள்.

542. ஜமதக்னி முனிவரின் பிள்ளைகள் யாவர்?

1) ருமண்வா 2) சுஷேணன் 3) வசு
4) விச்வாவசு 5) பரசுராமன் ஆகியோர்

543. ,கின்னரர்' என்பவர் யார்?

பிரமனின் பிரதிபிம்பத்தில் பிறந்தவர்கள். இவர்கள் மனித உருவத்தையும் குதிரை முகத்தையும் பெற்றுள்ள தேவசாதியைச் சேர்ந்தவர்கள்

544. ஜீவன் முத்தர் எனப்படுவோர் யாவர்?

இருவினை ஒப்பும், மலபரிபாகமும், அருள் வீழ்வும் (சத்திநிபாதம்) குருவருளும் பெற்று, பண்டைஅறிவை ஒழித்து, ஞானம்பெருகி, இறைவன் திருவருளை நுகர்ந்து வாழ்பவர் முத்தர் எனப்படுவர். அவர் ஜீவனோடு இவ்

உலகில் வாழும் வரை அவரை ஜீவன் முத்தர் என்று கூறுவர்.

545. தாண்டவச் சிறப்புத் தலங்கள் எவை?

1) தில்லைச் சித்திரகூடம், பேரூர்—ஆனந்தத் தாண்டவம்
2) திருவாரூர்—அசபா நடனம்
3) மதுரை—ஞானசுந்தரத் தாண்டவம்
4) திருப்புக்கொளியூர்—ஊர்த்துவ தாண்டவம்
5) திருமுருகன்பூண்டி—பிரம்ம தாண்டவம்.

546. பக்திக்குச் சொல்லப்படும் இருவித உவமைகள் (நியாயங்கள்)யாவை?

பக்திக்கு 1) மர்க்கடம் (குரங்குக் குட்டி) 2) மார்ச்சாலம் (பூனைக் குட்டி) ஆகிய இரண்டும் உவமைகளாகச் சொல்லப்பட்டுள்ளன. இவற்றை மர்க்கட நியாயம், மார்ச்சால நியாயம் என்பர்

547 மர்க்கட நியாயம் பற்றி எழுதுக?

மர்க்கடம்: குரங்குக் குட்டி. குரங்குக் குட்டி தாயின் உடம்பை உறுதியாகப் பற்றிக்கொள்ளும். அதுபோல நாம் நம் மனத்தை இறைவனிடம் செலுத்தும் முயற்சியைச் செய்யவேண்டும். தாய்க் குரங்கு எங்குத் தாண்டினாலும், ஓடினாலும், தாயின் உடம்பைப் பிடித்துக் கொண்டிருப்பதால் தன் கைகளுக்குச் சிரமம் நேர்ந்தாலும் அவைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் தாயின் உடம்பைப் பற்றிக் கொண்டிருக்கும் பிடியிலிருந்து குட்டி எப்படி நழுவுவதில்லையோ அதுபோல எவ்வித இடையூறுகளையும் லட்சியம் செய்யாமல் தம் மனத்தை இறை வடிவில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். இதுவே மர்க்கட நியாயம் எனப்படும். இதுவே பக்தியில் முதல் நிலை.

548 மார்ச்சால நியாயம், என்பது யாது?

மார்ச்சாலம் : பூனைக்குட்டி. இது பூனைக்குட்டி நியாயம் எனப்படும். இது பக்தியின் இரண்டாவது நிலை. மர்க்கட நியாயப்படி நம் மனத்தை இறைவனிடம் செலுத்தினால் இறைவன் நம்மிடம் அருள் புரிவார். அருள் புரியத் தொடங்கியதும் பூனைக்குட்டி நியாயம் என்னும் நிலையை அடையலாம். பூனைக்குட்டி, தான் இருக்குமிடத்திலேயே இருந்துகொண்டு தாய்ப் பூனையை நினைந்துகொண்டே இருக்கும். குட்டிக்கு துன்பம்வராமல் அதனைத் தாய்ப்பூனை பலவிடங்களுக்கும் தானே கவ்வி எடுத்துச் சென்று பத்திரப்படுத்திக்காக்கும். உணவு முதலியவைகளையும் கொண்டுவந்து கொடுத்தும் காப்பாற்றும்,இதுபோல பக்தன் எப்போதும் ஈசுவரனையே தியானித்து இருக்கும் இடத்திலேயே இருந்தால் ஈசுவரன் அவனுக்கு எப்பொழுதும் அருள் செய்து–ஏதும் துன்பம் வராதபடி வேண்டியன செய்து அவனைக் காப் பாற்றுவார்.

549. கோதூளி லக்னம் என்பது யாது?

மாலை 5–30 மணி முதல் 6 மணிவரை உள்ள காலம் கோதூளி லக்னம் எனப்படும். வெளியிற் சென்ற பசுக்கள் மேய்ந்து வீடு திரும்பும் நேரம்.

550. யுக முத்திகள் எவை?

கிருதயுகத்தில் ஞானத்தினால்முக்தி
திரேதா யுகத்தில் தானத்தினால் முக்தி
துவாபர யுகத்தில் யாகத்தினால் முக்தி
கலியுகத்தில் பக்தியினால் முக்தி

551. அர்ச்சுனனுக்கு, கீதையில் அமைந்துள்ள பெயர்களை எழுதுக.

1) அர்ச்சுனன் — தூய இயல்புடையவன்.
2) பாண்டவன் — பாண்டுவுக்கு மைந்தன்.

3) தனஞ்சயன் — அடைபட்டுக் கிடக்கும் செல்வத்தைச் சேகரிப்பவன்.
4) கபித்வஜன் — குரங்குக் கொடியுடையவன்.
5) குடாகேசன் — தூக்கத்தை வென்றவன்.
6) பார்த்தன் — பிரிதாவின் மைந்தன்.
7) அனகன் — பாவமற்றவன்.
8) பாந்தபன் -- எதிரிகளை வாட்டுபவன்.
9) கௌந்தேயன் — குந்தியின் மைந்தன்
10) பாரதன் — பாரதத்தில் உதித்தவன்.
11) கிரீடி — கிரீடம் தரித்தவன்.
12) குருநந்தனன் — குருகுலத்தில் தோன்றியவன்
13) ஸவ்யஸாசி - இடைக்கையால் அம்புஎய்பவன்.

552. மனித உடம்பில் பஞ்ச பூதங்களின் பாகங்களும் அமைந்திருப்பதை எழுதுக?

நம் உடம்பில்:-
1) உச்சந்தலை முதல் நெற்றிவரை = ஆகாயபாகம்
2) மூக்கு முதல் இதயம் வரை = வாயுபாகம்
3) வயிறு = தேயு பாகம்(நெருப்பு)
4) வயிற்றுக்குக்கீழ் தொடைவரை = அப்பு பாகம் (நீர்)
5) தொடைக்குக் கீழே = பிருதிவி பாகம் (மண்) என அமைந்துள்ளது.

553. எவற்றிற்கு ஈடானவை உலகில் இல்லை?

1) காயத்திரிக்கு ஈடான மந்திரமில்லை
2) தாய்க்குச் சமமான தெய்வமில்லை
3) காசிக்குச் சமமான க்ஷேத்திரமில்லை
4) கங்கைக்குச் சமமான தீர்த்தமில்லை
5) ஏகாதசிக்குச் சமமான விரதம் இல்லை

554 அத்யாத்ம ராமாயணம் என்று எதற்குப் பெயர்?

விசுவாமித்திரரால் எழுதப்பட்ட இராமாயணத்திற்கு அத்யாத்ம ராமாயணம் என்று பெயர்.

555. பஞ்ச துவாரகைகள் எவை?

1) துவாரகை— கண்ணன் அரசாண்ட ஊர்

2) பேட்டிதுவாரகை— கண்ணன் குசேலரைப் பேட்டி கண்ட இடம்

3) டாக்கூர்துவாரகை— கிருஷ்ண துலாபாரம் நடந்த இடம்

4) ஸ்ரீநாத் துவாரகை

5) காங்க்ரோலி துவாரகை என்பன. இவற்றுள்முதல் நான்கும் குஜராத்திலும். காங்க்ரோலி துவாரகை குஜராத் ராஜஸ்தான் எல்லையிலும் உள்ளன.

556. மகாமகம் என்பது யாது? சிறப்பு எழுதுக?

மாசி மாதத்தில் குரு சிம்ம ராசியில் சேரும் காலம் மிகவும் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. இக்காலத்தில் கும்பகோணத்தில்-பாவம் போக்கவல்ல தலத்தில்-தீர்த்தச் சிறப்புடையபுண்ணியத் திருக்குளத்தில் நீராடுதல் மிகவும் விசேஷமாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு சேரும் காலம்

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதால் மகாமகம் 12 ஆண்டுகளுக் கொருமுறை என்று சிறப்பாகக் கருதப் படுகிறது.

வட நாட்டில் இத்தகைய திருவிழா 'கும்பமேளா' 'அர்த்தமேளா' என்ற பெயர்களிலும்; ஆந்திரத்தில் "புஷ்கரம்" என்ற பெயரிலும்;கொண்டாடப்படுகிறது.

557. (தக்ஷிண) தென் கயிலாயம் என்று சொல்லப்படும் தலங்கள் எவை?

1) திருக்காளத்தி(ஸ்ரீகாளஹஸ்தி)

2) திருச்சிராப்பள்ளி

3) திரிகோண மலை(ஸ்ரீலங்கா) என்பன.

558. பக்தி எனப்படுவது யாது? இதற்குச் சொல்லப்படும் சான்றுகள் யாவை?

1) அழிஞ்சில் மரத்தை விதைகளும், 2)காந்தக் கல்லை இரும்பும் 3) பதிவிரதை தன் கணவனையும் 4) கொடி மரத்தையும் 5) ஆறு, கடலையும் சென்று சேர்வது போலப் பசுபதியாகிய இறைவனுடைய திருவடிவங்களில் சென்று ஈடுபடும் மனநிலையே பக்தி எனப்படும்.

[அழிஞ்சில்விதை கிளையிலிருந்து கீழேவிழுந்தால் மறுபடியும் மரத்தில் வந்து ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையது]

559. யமன் என்று யாருக்குப் பெயர்?

ஒருவன் இறக்கும் போது ஜீவன் பூதவுடலிலிருந்து வெளியே செல்லுமாறு செய்பவனுக்கு யமன் என்று பெயர்.

560. (உயிர்) ஜீவன் எப்படி உடலை விடுகிறது?

ஐந்து பிராணன்களில்; இருதயத்தில் பிராணன், மல வழியில் அபானன், கொப்பூழில் ஸமானன், கழுத்தில் உதானன், சரீரமெங்கும் வியானன், தங்கியிருக்கிறன். பிராணன் போவதற்கு முன், வியானன் ரத்தத்திலிருந்து திரும்பி. பிராணனிடம் வருகிறன். ரத்தம் சுண்டுவதால் அப்போதுதான் மரணவலி ஏற்படும். அபானன் சமானன்

இவர்களும் இங்கு வந்து சேரும் போது ஜீவனாம் மல ஜலம் நின்று விடும். ஒரு வீட்டைக் காலி செய்து வேறு வீடு செல்பவர் எப்படி எல்லாப் பொருள்களையும் நடு வீட்டில் கொண்டு வைப்பார்களோ அப்படி எல்லாம் இருதயத்தில் வந்து தங்கும்.

உதானன், பிராணனுக்கு வழியைத் திறந்து விடும் போது பால் ஜலம் விட்டால் வாயால் வழிந்து வெளியே வந்துவிடும். எல்லா இந்திரியங்களின் சக்திகளும் ஒடுங்கி மனத்தில் லயமாவதால் கண்கள் பார்க்கமாட்டா. காதுகள் கேளா, நா உண்ணாது, தோல் உணராது மூக்கும் முகராது. அந்நிலையில் பிராணன் உடலை விட்டு வெளியேறும். சூஷ்மசரீரமே மேலேசெல்கிறது.

561. ஏகாதசி விரதம் பற்றி எழுதுக.

மிகச்சிறந்தது ஏகாதசி விரதம் அன்று முழு உபவாசம் இருக்கவேண்டும். பலவீனமானவர்களும் நோயாளிகளும் ஒருவேளை பழம், பால் எடுத்துக் கொள்ளலாம். அப்படியும் இருக்க முடியாதவர்கள்-சக்தியற்றவர்கள், அரிசியை கஞ்சி வடிக்காமல் வேகவைத்து, உப்பு, புளி, காரம் எதுவும் சேர்க்காமல் ஒரேவேளை சாப்பிட்டு உபவாசமிருக்கலாம். இதுவே "ஒரு பொழுது" என்று வழக்கில் சொல்லப்படுகிறது. சைவர், வைணவர் அனைவரும் இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

562. ஏகாதசி விரத நாளில் செய்ய வேண்டுவன யாவை?

ஏகாதசி விரதம் மிகவும் உயர்ந்தது. இந்நாளில் உபவாசம் இருந்து, உறங்காமல், பாராயணமும் ஜபமும் செய்வது மிகவும் உத்தமமானது.

563. சகுனங்களைப் பற்றிக் கூறுக.

சகுனம்பார்த்துக் காரியங்களைச் செய்வது நல்லது. சகுனம் என்பது தானாகவே நடக்க வேண்டும். அதுவே உத்தமம். வெளியில் புறப்படும்போது சகுனம் நன்கு அமையவில்லையெனில் . வீட்டிற்குள் வந்து தண்ணீர் குடித்துவிட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்து பிறகு செல்லலாம். ஜாதகப் பொருத்தம் அமையாவிடினும் இயற்கையாக ஏற்படும் சகுனத்தைப்பார்த்துத் திருமணம் செய்து வைக்கும் வழக்கமும் உள்ளது.

564. வீட்டில் இருக்க வளம் பெருக்கும் பொருள்கள் எவை?

1. வலம்புரிச் சங்கு
2. காராம் பசு(பால் சிவபூசைக்கு)
3. ஏகமுக ருத்ராக்ஷம்
4. துளசி மாடம் முதலியன.

565. நல்ல சகுனங்கள் சிலவற்றைக் கூறுக?

கன்னிப்பெண், சுமங்கலி எதிர்ப்படல், பசு, குதிரை, யானை முதலியன எதிரேவருதல், பூக்கூடை பழக்கூடை கரும்பு முதலியன எடுத்துவருதல், திருமண ஊர்வலம், மங்கலம் வாத்யங்கள் ஒலித்தல், பேரிகைஒலி, சங்கொலி, பிரேதம் எதிரே வருதல் முதலியன நல்ல சகுனங்களாம்

566. தீய சகுனங்கள் சிலவற்றைக் கூறுக.

எண்ணெய்க்குடம், புதுப்பானை, மூங்கில், கோடரி கடப்பாரை முதலிய ஆயுதங்கள், விறகுச்சுமை, ஒற்றைப் பிராமணர், பன்றி, மங்கலமில்லாப் பெண்டிர் முதலியவை தீய சகுனங்களாமென்பர்.

[வெளியே செல்லப்புறப்படும் போது கால் இடறக் கூடாது. மழைத்தூறலில் செல்வதைத் தவிர்த்தல்

நலம். வெளியில் செல்லப்புறப்படுபவரைக்கூப்பிடுதலும் கூடாது].

தெய்வத்தை வணங்கி, அச்சிந்தையுடன் புறப்பட்டுச் செல்வது நல்லதாகும்.

567. வேதத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மேல் நாட்டவர் யார்?

மாக்ஸ்முல்லர்.

568. நான்காம் பிறைச் சந்திரனைப் பார்த்தல் கூடாது. ஏன்?

விநாயகர் ஒருமுறை. அதிகமாக உண்டு. அசைந்து சாய்ந்து நடந்து வரக்கண்டு சந்திரன் சிரித்தான். கோபமுற்ற விநாயகர் அவனைப் பார்த்துச் சாபமிட்டார் அவன்பின் அழுது வேண்ட அந் நாளில் சந்திரனைக் காண்போர் அச் சாபத்தின் துன்பத்தை அடையட்டும் என்றார். அவ்வாறு சாபமிட்ட நாளே நான்காம் (பிறைக் குரிய) நாள். எனவே (அந் நாளில்) நான்காம் பிறையைக் கண்டால் நமக்குத் துன்பம் வரும்.

2) கண்ணபிரான் ஒருமுறை நான்காம் பிறையைப் பார்த்து விட்டார். அவரையும் அத்துன்பம் விடவில்லை.

பிரசேனன் என்ற அரசன் சூரியனிடமிருந்து ஒரு இரத்தின மணியைப் (ஸ்யமந்தகமணி) பெற்றான். அது அவனிடம் இருக்கும் வரையில் அவன் நாடு செல்வமுறும் எவ்விதக் குறைவும் இருக்காது. இதைக்கண்ட பிற அரசர்கள் அம் மணியைத் தாங்கள் அடைய எண்ணினர். அவ்வாறே கண்ணபிரானும் எண்ணினார். அம்மணியை வைத்திருக்கும் போது சுத்தமாக இருக்க வேண்டும் அசுத்தமானால் அவனுக்குத் தீங்கு விளையும் என்று மணியைத் தந்தபோது சூரியனும் சொல்லியிருந்தான்.

ஒருநாள் பிரசேனன் வேட்டைக்குச் சென்று மிருகங்கள் வேட்டையாடினுன். இரத்தக்கறை அவன் மீது படிந்தது. அப்போது அவன் மணியுடன் இருந்ததால் இறந்து போனுன். அங்கு வந்த ஜாம்பவான் என்னும் முனிவர் அம் மணியைக் கண்டு எடுத்துச் சென்று, பூமிக்குக்கீழ் குகையிலிருந்த தன் வீட்டில், குழந்தையின் தொட்டிலில் கட்டி வைத்தார்.

கண்ணபிரான் சேனையுடன் காட்டிற்குச் சென்ருர். பிரசேனன் உடலைக் கண்டார். சேனைகளை அங்கேயே நிறுத்தி, அங்கிருந்து தெரிந்த காலடிகளைப் பின்பற்றிச் சென்ருர். குழந்தையின் தொட்டிலின் மீது அம்மணி இருந்ததையும். அக்குழந்தையின் தாய் அம்மணியின் வரலாற்றைப் பாடித் தாலாட்டுவதையும் கண்டார். தான் விரும்பிய மணி அதுவே என்றறிந்த கண்ண பிரான் அதனைந்தருமாறு ஜாம்பவானிடம் கேட்டார். இதனுல் இருவருக்கும் 15 நாள்களுக்கு இடைவிடாது கடும்போர் நிகழ்ந்தது கடைசியில் தன்னுடன் போரிடுபவர் கண்ணனே என்றறிந்து ஜாம்பவான் அம் மணியைத் தந்தனுப்பினுர். உள்ளே சென்ற கண்ண பிரான் வெளியே வாராமையால், சேனைகள் பயந்து போய், தங்கள் நகரம் திரும்பி, நடந்ததைக் கூற, மற்றவர்களும் கண்ணபிரான் இறந்து விட்டார் என்று எண்ணி அவருக்குக் கர்மாக்களையும் செய்து விட்டனர். அந்நிலையில் கண்ணபிரான், அந்த இரத்தினமணியுடன் அங்கு வந்து சேர்ந்து நடந்ததை அறிந்து, தனக்கு நேர்ந்ததையும் சொன்னுர். இத்துன்பம் நான்காம் பிறையைப் பார்த்ததால் அவருக்கு நேர்ந்தது என்பது வரலாறு. ஆதலின் நான்காம் பிறையைப் பார்க்கலாகாது. பார்ப்போர் துன்பமடைவர் என்பது செய்தி.

569. 'கும்பகோணம்'—தலத்தின் பெருமை யாது?

"இதர இடங்களில் பண்ணிய பாவங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச்சென்ருல் போகும். புண்ணிய க்ஷேத்

திரங்களில் பண்ணிய பாவங்கள் காசிக்குச் சென்றால் போகும் காசியில் உள்ளவனே பாவம் செய்தால் எங்குப் போவது? ''காசிக்ஷேத்ரேக்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி'' காசியிலே இருக்கிறவர்கள் பாவம் செய்தால் கும்பகோணத்திற்குப் போனால்தான் போகும். கும்பகோணத்தில் இருப்பவர்கள் பாவம் செய்தால் என்ன பண்ணுவது? மரத்தில் இருந்து விழுந்தால் மண்ணில் விழலாம். மண்ணிலிருந்து விழுந்தால் மண்ணில் தானே விழவேண்டும் கும்பகோணக்ருதம் பாபம்கும்பகோணே விநச்யதி'' கும்பகோணத்தில் செய்யும் பாவம் கும்பகோணத்திலேதான் போகவேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ பரமாசார்யாள் அருள்வாக்கு

570. அசுவமேதயாகம் —குறிப்பு தருக,

அசுவம்: குதிரை. குதிரையைமையமாக வைத்துச் செய்யப்படும் யாகம். இஃது அரசர்களுக்கு உரியது.

ஓர் அரசன் உத்தமலட்சணங்களையுடைய குதிரையைத் தேர்ந்தெடுத்து, அதன் நெற்றியில் அரசனின் வீரம், ஆற்றல் முதலியவைகளைப் படமாக வரைந்து; பட்டம் கட்டி நாட்டை வலம்வரச் செய்வான். அக்குதிரை விருப்பம் போல் வலம் வரும் எவரேனும் அதைப் பிடித்து கட்டினால் ஒற்றர்மூலம் செய்தியறிந்து அவர்மீது படையெடுத்து வெற்றிகண்டு. அவர்தம் செல்வங்களையெல்லாம் கவர்வான். அவனின் தலைமையை ஏற்போர் அக்குதிரையைப் பிடித்துக் கட்டமாட்டார்கள் இவ்வாறு வலம் வரச்செய்து தன் தலைமையைநிலை நிறுத்தி, கவர்ந்த செல்வங்களைக் கொண்டு அரசன் யாகத்தைச் செய்வான். இதுவே அசுவமேதயாகம்.

571. துருவ நட்சத்திரம் பற்றி எழுதுக.

வானத்தில் வடக்கில் உள்ள நட்சத்திரங்களுள் இதுவும் ஒன்று. தன்னைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களின்

நடுவில் இது பெரியதாகக் காணப்படுகிறது. பூமியின் வடபாகத்தை அறிய இந்நட்சத்திரம் அடையாளமாக வுள்ளது. பண்டையநாளில் கடலிற்செல்லும் மாலுமிகள் இதைக் கொண்டே வடதிசையை அறிந்தனர் என்பர்

[துருவன் பெயரில் உள்ள நட்சத்திரம். துருவன் தன்தவவலிமையால் மஹாவிஷ்ணுவைத் தரிசித்துஎன்றும் அழியாத பேற்றைப் பெற்று வானத்தில் நட்சத்திரமாகப் பிரகாசிக்கின்றான் என்பது புராண வரலாறு]

572. எம்முறையில் விளக்கு ஏற்றுவது சிறந்ததாகும்?

நெய் விட்டுத் தீபமேற்றுவது உத்தமம் நல்லெண்ணெய் விட்டும் ஏற்றலாம். கடலை எண்ணெய் விட்டு ஏற்றுவது அவ்வளவு நல்லதன்று. பஞ்சுத்திரி தாமரைத்தண்டு திரி, வெண்மையான துணியினாலான திரி முதலிய திரிகளை இட்டு ஏற்றலாம். தெற்குத் திசை நீங்கலாக மற்றத்திசைகளைநோக்கி விளக்கேற்றலாம். (தேவதைகளுக்குப் பிரார்த்தனையாகத் தீபமிடும் போது இலுப்பை எண்ணெயைப் பயன்படுத்தலாம்)

மண் அகல், வெள்ளிவிளக்கு, பித்தளைவிளக்கு முதலியவை ஏற்றவை.

573. இலவம் பஞ்சுப்படுக்கையின் சிறப்பு யாது?

இலவம் பஞ்சுப் படுக்கையில் படுப்பதால் ஆரோக்கியமும் இரத்தவிருத்தியும் உண்டாகும். நல்ல உறக்கம்வரும். (கோரைப்பாயில் படுப்பதால் சூடுதணிந்து உடல் குளிர்ச்சியுண்டாகும்)

574. பெண்கள் செய்யத்தகாத செயல்கள் எவை?

பெண்கள் பூசணிக்காய் திருஷ்டி சுற்றிஉடைக்கக் கூடாது. கர்ப்பமுள்ள பெண்கள் தேங்காயையும்

(சிதறு காயாக) உடைக்கக் கூடாது. கணவனுக்குத் தெரியாமல் தர்மம் செய்யலாகாது (பெண்கள் கண்ணீர் விடும் வீட்டில் செல்வம் ஒருநாளும் தங்காது)தலையை விரித்துப் போட்டுக்கொண்டிருப்பதும், அவ்வாறே உட்கார்ந்திருப்பதும் இரு கைகளாலும் தலையைச் சொரிவதும் கூடாது. இரவில் வீட்டைப் பெருக்கக் கூடாது. பெருக்கினாலும் குப்பையைத் தெருவில் கொட்டக்கூடாது. பகலில் குப்பையைச் சேர்த்து வைக்காமல் பெருக்கியவுடன் கொண்டு போய் கொட்டி விட வேண்டும். திருமணமான பெண்கள் காலில் மெட்டி இல்லாமல் இருக்கக் கூடாது.

575. கொட்டாவி விடும் போது யாது செய்ய வேண்டும்?

கொட்டாவி வீடும் போது அது பிறர்மீது படாதபடி வாய்க்கு எதிரே கையை வைத்து மறைத்துக் கொள்ள வேண்டும். அக்காற்று பிறர்மீது படக்கூடாது. அவ்வாறே பேசும் போது நம்எச்சிலும் பிறர்மீது படக்கூடாது,

576. பிறரிடம் சொல்லக் கூடாதவை எவை?

நம்முடைய நில புலன்கள், சொத்துக்கள்—வீட்டுக் கஷ்டங்கள், நாம்உபதேசம் பெற்ற மந்திரம், நாம் செய்த தானங்கள், பிறர் நமக்குத் தந்த பரிசில்கள், நமக்குள்ள கடன்கள் முதலியவைகளைப் பிறரிடம் வெளிப்படை யாகச் சொல்லக் கூடாது

577. வெளிப்படையாகச் சொல்லாமல் மறைத்து வைக்கவேண்டியவை எவைஎவை?

1. வயது 2. பணம் 3. குடும்பரகசியம்
4. தாம்பத்ய உறவு 5. மருந்து 6. வரவு
7. தானம் 8. அவமானம் 9. மந்திரம்

ஆகிய ஒன்பதையும் வெளிப்படையாகச் சொல்லக் கூடாது.

578. வறுமை நீங்குவதற்குப் பாராயணம் செய்ய வேண்டிய சுலோகம் யாது?

தாரித்ரிய ஹரண தேவி ஸ்துதி

இதை காலை மாலைகளில் மும்முறை நியமத்துடன் ஜபித்தால் ஏழ்மை அகலும்.

1. **யதுத்பவா:** ஸத்வ ரஜஸ் தமோகுணா:!
ஸர்க்க ஸ்திதி த்வம்ஸ நிதான காரிணா:!
யதிச்சயா விஸ்வமிதம் பாவபவெள!
தநோதி முலப்ரகிருதிம் நதாஸ் மதாம்!!

2. யாஹித்ரயோ விம்ஸதி பேதசப்திதா!
ஜகத்யசேஷே ஸமதிஷ்டிதா பரா!
யத்ரூப கர்மாணி ஜடாஸ்த்ர யோபி!
தேவா நவித்யு: ப்ரகிருதிம் நதாஸ் மதாம்!!
தேவா நவித்யு: ப்ரகிருதிம் நதாஸ் மதாம்!!

3. **யத்பக்தி யுக்தா:-** புருஷாஸ்து நித்யம்!
தாரித்ர்ய பீமோஹ பரா பவாதீன்!!
நப்ராப்நுவந்த்யேவஹி பக்தவத்ஸலாம்!
ஸதைவ மூலப்ரகிருதிம் நதாஸ்மதாம்!!

579. ஆத்மாக்களை மூவகையாகப் பிரித்துச சொல்வதை விளக்குக.

ஆத்மாக்களை மூவகையாகப் பிரித்துச் சொல்வர்.

1. **கௌணாத்மா:-** புத்திரர்கள், நண்பர்கள் ஆகியவர்களைத்தானுகப் பாவித்து, அவர்களுடைய சுகதுக்கங்களைத் தனக்குவந்ததாக எண்ணும் மனவிருப்பம் கௌணாத்மா எனப்படும்.

2. **மித்யாத்மா:-** தேகம் (உடம்பு) முதலியவற்றில் நான் என்னும் விருப்பம் உண்டாவது மித்யாத்மா எனப்படும்.

3. **முக்யாத்மா :-** ஆத்மசுவரூபத்தையறிந்து, பரப்பிரம்ம ஸ்வரூபமே தான் என்பது அநுபவத்திற்குவரும் போது பிரம்மம் ஆத்மாவாகிவிடுகிறது. இதைத்தான் முக்யாத்மா என்பர்.

580. பிராணுயாமம் பற்றி எழுது.

நமது உடலிலுள்ள வாயுவுக்குப் பிராணன் என்று பெயர். அதை அடக்குவது பிராணுயாமமாகும். பன்னிரண்டு மாத்திரைக்காலம் வாயுவை அடக்குவது மந்தமாகும். இருபத்துநான்கு மாத்திரைக்காலம் அடக்குவது மத்யமமாகும். முப்பத்தாறு மாத்திரைக் காலமடக்குவது உத்தமமாகும். உள்ளேயிருக்கும் மூச்சை ஒருமுக்கால் விட்டுக்கொண்டே ஓர் பிராணுயாமம் செய்ய வேண்டும். அது **ரேசகமெனப்படும்.** பிராணனை அடக்கிக் கொண்டே ஓர் பிராணுயாமம் செய்தல் வேண்டும். அது **கும்பகமெனப்** படும். மற்றோர் முக்கால் வாயுவை உள்ளே இழுத்துக்கொண்டே ஓர் பிராணுயாமம்செய்வது **பூரகமெனப்** படும். பூரகம் கும்பகம் ரேசகம் என்ற முறையில் மந்த மத்ய உத்தம பிராணுயாமங்களைச் செய்து பயிற்சி செய்தால் பல வகை நன்மைகளைப் பெறலாம்.

581. தாரணை, தியானம், சமாதி—விளக்குக.

வெளியில் திரியும் இந்திரியங்களை அடக்குவது பிரத்யாஹாம் எனப்படும். இருதயத்திலோ நாபியிலோ தலையிலோ மனத்தை நிறுத்துவது தாரணை எனப்படும். ஓரிடத்தை மனத்தால் பற்றிக்கொண்டு ஒரேஎண்ணத்தை எண்ணிவேறென்று குறுக்கிடாமல் கவனிப்பது தியானம் எனப்படும். ஓரிடத்தையும் நினைக்காமல் அதன் பொருளை மாத்திரம் ஒன்ருக எண்ணுவது சமாதி எனப்படும். பன்னிரண்டு பிராணுயாமம் ஓர் தாரணைக்குச் சமமாகும். பன்னிரண்டு தாரணை ஓர் தியானமாகும், பன்னிரண்டு தியானம்

ஓர் சமாதி எனப்படும். சுத்தமான இடத்தில் உட்கார்ந்து பிராணயாமத்தைச் செய்யவேண்டும்.

582. "காரடையான் நோன்பு"—பற்றி எழுதுக.

இந் நோன்பை காமாக்ஷி பூஜை என்றும் சொல்லுவர் ஒரு பெண்ணனவள் தன் கணவன் நீடுழி வாழசாவித்ரி விரதம் என்ற பெயருடைய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். இவ்விரதத்தை உத்தமிகளான பெண்கள் அனுஷ்டித்தால் கணவன் நீடுழி வாழ்வான்.

சாவித்திரி-ஸத்யவான் சரித்திரம் தெரியாதவர்கள் இருக்க முடியாது. யமனை வாதில் வென்று தன் கணவனை மீட்ட மஹா பதிவிரதையின் சரித்திரம் நம்பாரத நாட்டின் சிறப்பாகும். சாவித்திரி நாரத மஹரிஷியால் தன் கணவன் இன்னும் நான்கு நாள்தான் உயிர் வாழ முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு நான்கு நாள் விரதம் இருந்து நான்காவது நாள் இரவில் விரதம் பூர்த்தி செய்தாள் பெரியோர்களை வணங்கி தீர்க்க சௌமங்கல்ய ஆசீர்வாதத்தையும் பெற்ருள். இதற்கு 'காரடை' என்று செய்யப்படும் நிவேதனம் புனிதமான பக்குவப் பதார்த்தம். வெல் லம், காராமணி, தேங்காய், அரிசி மாவினுல் பக்குவமாகச் செய்து வெண்ணெயுடன் நோன்பு நோற்க மஞ்சள் கயிறும் வைத்து, பார்வதி பரமேஸ்வரரை வேண்டிக் கீழ்வரும் சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

1. யன்மயா துஷ்க்ருதம் சர்வம் க்ருதம் ஜன்மசதை ரபி!
   பஸ்மி பவது தத்சர்வ மவைதவ்யம் ச தேஹிமே!!

2. அவியோகோ யதாதேவ சாவித்ரியா ஸஹிதஸ்யதே!
   அவியோகஸ் ததாஸ் மாகம் பூயாஜ் ஜன்மனி ஜன்மனி!!

உருகாத வெண்ணெய் ஓரடையும் நோன்பு நோற்றேன் ஒருக்காலும் என் கணவன் என்னை விட்டுப்

பிரியாமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ள வேண்டும். பிறகு, சாவித்திரி-ஸத்யவான் சரித்திரத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். மஞ்சள் நூல் சரடையும் கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டும். இந்த விரதத்தைப் பங்குனி மாதம் பிறக்கும் முன் மாசி மாதம் கடைசியில் செய்ய வேண்டும். மாசியில் கட்டிக் கொள்ளும் சரடு பாசி போல் படரும் என்பது முதுரை. தனது கணவன் ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடன் இருக்க நற்பண்பு களுடன் கூடிய பெண்மணிகள் செய்யும் விரதமே இக் 'காரடையான்' நோன்பு.

583. சித்ரகுப்த பூஜையைப் பற்றி எழுதுக.

இவ்விரதத்தை நாரத சம்ஹிதை விளக்கமாகக் கூறுகின்றது.

சித்ரா பூர்ணிமா அன்று புருஷர்கள் தம்பதிகளாகவும் அல்லது பெண்மணிகள் மாத்திரமாகவது விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

யமலோகத்தில் நாம் செய்யும் பாப புண்ணியங்களைக் கணக்கிடச் செய்ய ஒரு அமைப்பும் உள்ளது. அதற்கு சித்ர குப்தன் தலைமையாக இருந்து நமது காரியங்களைக் கண்காணிக்கிறார். அவரைப் பூஜித்தால், அவர் நமது பாபத்தைக் குறைப்பார். சித்ரகுப்த பூஜையின்போது ஓலை எழுத்தாணி வைத்து ஓலையில் "மலை போன்ற பாபத் தைக் கடுகாகவும், கடுகு புண்யத்தை மலையாகவும் எழுத வேண்டும்" என்று எழுதுவது வழக்கம்.

பசுவின் வயிற்றில் சித்ரகுப்தர் பிறந்ததாகப் புராணம் சொல்வதால் இவ்விரத நாளில் பசுப்பாலைச் சாப்பிடக் கூடாது.

[பொதுவாக விரதகாலங்களில் உப்பை விலக்க வேண்டும்]

584. தர்ப்பை - யின் சிறப்பைக் கூறுக.

இதற்கு 'குசம்' என்று பெயர். மிக்க ஆற்றல்-சக்தி யுடையது. சுப, அசுப கர்மாக்களுக்கும், யாகம் முதலி யவைகட்கும் மிகவும் அவசியமானதும் மேலானதுமாகும். தோஷங்களைப் போக்கும் வல்லமையுடையது. பசுமையா யுள்ள காலத்தும் மிகவேகமாக எரிந்து போகும் இயல் புடையது. இதில் மின்சாரம் செல்லும் தன்மை அமைந் துள்ளது. ஆலயங்களில் கும்பாபிஷேகங்களில் ஆற்றலைத் தரவல்ல—சேர்க்கவல்ல இடங்களில் தர்ப்பை யைப் பயன்படுத்துகின்றனர். மோதிர விரல் என்ற பெயரே அவ்விரலில் தர்ப்பை மோதிரம் அணிந்து கர்மாக்களைச் செய்வதனால் உண்டானதாகும். இவ்வாறு அணிவதால்—அவ்விரல் கப நாடி முடிவடையும் இட மானதால் அங்குத் தர்ப்பையை மோதிரம் போலப் போட்டுத் தொடர்பு படுத்துவதால் கபங்களைப் போக்கி சுவாசக்குழாய்கள் சரிவர வேலை செய்யவும் வழி செய்கின்றது.

தர்ப்பையை நீரிலிட்டுவைத்தால் அழுக்கைப் போக்கித் தெளிவடையச் செய்யும். தர்ப்பையைச் சுட்டு அச்சாம்பலைக் கொண்டு விக்கிரகங்களைத் தேய்க்குமாறு சிற்ப சாஸ்திரம் கூறுகிறது. இச்சாம்பலில் காரமும் புளிப்பும் இருப்பதால் களிம்பு சீக்கிரம் விலகுமாம். இச் சாம்பல் ஒருபோதும் நாக்கில் படக்கூடாது. பட்டால் புண்ணாகிவிடும். அமாவாசையன்று அறுத்தெடுக்கப் படும் தர்ப்பைகளுக்கு விரியம் அதிகம்.

(நன்றி. காமகோடி இதழ்)

585. சதாபிஷேகம் எப்பொழுது செய்யப்பட வேண்டும்?

80 ஆவது வயது பூர்த்தியான பிறகு சதாபிஷேகம் செய்ய வேண்டும்.

586. பீமரதசாந்தி எப்பொழுது செய்யப்பட வேண்டும்?

70 ஆவது வயது ஆரம்பத்தில் உரிய நட்சத்திரத்தில் பீமரதசாந்தி செய்து கொள்ளப்பட வேண்டும்.

587. நம் நாட்டில் உள்ள புண்ணிய நதிகள் ஏழின் பெயர்களையும், அவற்றின் உற்பத்தி இடங்கள், கடலில் கலக்கும் இடங்கள் முதலியவற்றையும் கூறுக.

	நதி		உற்பத்தி இடம்		கடலில் கலக்குமிடம்
1.	கங்கை	—	கங்கோத்ரி	—	கங்கா சாகர்
2.	யமுனை	—	யமுனோத்ரி	—	அலகாபாத்தில் கங்கையுடன்
3.	கோதாவரி	—	த்ரியம்பகம்	—	ராஜமகேந்திர வரம் பக்கத்தில் பிரும்ம வர்த்தம் என்னுமிடத்தில்
4.	நர்மதை	—	அவர்கண்ட்	—	ப்ரோச் (குஜராத்)
5.	சிந்து	—	மானசசரோவர்சமீபம்	—	(பாகிஸ்தானில்)
6	காவிரி	—	தலைக்காவிரி	—	காவிரிப்பூம் பட்டினம்
7.	சரஸ்வதி	—	ஆங்காங்கே தோன்றி அலகாபாத்தில் கங்கையில் கலந்துவிடுகிறது.		

588. "பரிவ்ராஜக சந்நியாசிகள்" என்ற தொடர் யாரைக் குறிக்கும்?

எப்போதும் யாத்திரையாகச்சென்று கொண்டே யிருக்கும் துறவிகளுக்கு—சந்நியாசிகளுக்குப் "பரிவ் ராஜகர்" என்று பெயர். இவர்கள் ஆனி பௌர்ணமி

தொடங்கிக் கடைப்பிடிக்கும் சாதுர் மான்ய விரதகாலம் மட்டுமே ஓரிடத்தில் தங்கியிருப்பர். மற்றக் காலங்களில் பலபகுதிகளிலும் எப்போதும் யாத்திரையிலேயே இருந்து வருவர்.

589. சிவராத்திரியின் வகைகளை எழுதுக.

1. சித்திரை —தேய்பிறை அஷ்டமி நாள்
   வைகாசி —அஷ்டமி நாள்
   ஆனி —வளர்பிறை சதுர்த்தி
   ஆடி —தேய்பிறை பஞ்சமி
   ஆவணி —வளர்பிறை அஷ்டமி
   புரட்டாசி —திரயோதசி
   ஐப்பசி —வளர்பிறை துவாதசி
   கார்த்திகை —சப்தமி நாள்
   மார்கழி —வளர்பிறை தேய்பிறையில் வரும் சதுர்த்தசி நாள்கள்
   தை —வளர்பிறை திருதியை திதிநாள்
   மாசி —தேய்பிறை சதுர்த்தசி
   பங்குனி —திருதியை திதி நாள்

   என மாதந்தோறும் வருவது மாத சிவராத்திரி.

2. ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை நாள்களில் வருடச் சதுர்த்தசி நாள்களில் வருவது நித்திய சிவராத்திரி.

3. தை மாதத்தில் தேய்பிறை சதுர்த்தசியில் வருவது பக்ஷ சிவராத்திரி

4. திங்கட்கிழமையில் பகல் இரவு ஆகிய இருபொழுதுகளிலும் அமாவாசை இருப்பின் அது யோக சிவராத்திரி.

5. வருடந்தோறும் மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி நாளில் வருவது மகா சிவராத்திரி - என ஐந்து வகையாகச் சொல்லப்படும்.

590. 'ஆத்மா' வுக்கு வழங்கும் பெயர்கள் யாவை? ஆத்மா எவ்வாறு உள்ளது?

ஆத்மா அழிவில்லாதது. இதற்கு 'ஸ்வயம் பிரகாசம்' என்றும், 'சேதனம்' என்றும், 'கர்த்தா' என்னும் 'போக்தா' என்றும் பெயர்கள் உண்டு. இந்த ஆத்மா உடல் முழுவதும் வியாபித்திருக்கின்றது. ஒரு மெழுகு உருண்டைக்குள் மிக நுட்பமான ஒரு தங்கத்துணுக்கு இருப்பது போல இந்த உடலுக்குள் ஆத்மா இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

591. ஆத்மாவுக்கு மூன்று வித வகைகள் யாவை?

1. பக்தம் — பிறந்து இறந்து இன்பதுன்பங்களை அநுபவித்துக் கொண்டிருக்கும் வகை.
2. முக்தம் — பிறப்பு இறப்பு என்னும் பந்தங்களிலிருந்து விடுபட்டு இருக்கும் வகை.
3. நித்யம் — பந்தம் என்பதே இன்றி எப்போதும் பகவானைப் போலவே ஆனந்தத்தை அநுபவித்துக் கொண்டு அவனோடேயே இருக்கும் வகை—

என மூவித வகைகள் சொல்லப்படுகின்றன.

592. மாதப் பிறப்பு என்பது எப்படிச் சொல்லப்படுகிறது?

மேஷம் முதலாக மீனம் வரையிலுள்ள 12 ராசிகளுக்கும் சூரியன் செல்கிறான். இச்சூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குச் செல்லும் சமயமே மாதப் பிறப்பு என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

593. முருகனுக்குரிய விரத காலங்கள் எவை?

வெள்ளிக்கிழமை, கிருத்திகை, கந்த சஷ்டி, மாத சஷ்டி நாள்கள் என்பன.

594. பைரவருக்குரிய விரத நாள் எது?

செவ்வாய்க்கிழமை, சித்திரையிலும் ஐப்பசியிலும் வரும் பரணி நாள்கள்

595. வீரபத்திரருக்கு உரிய விரதநாள் எது?

செவ்வாய்க்கிழமை.

596. "ஆரியன்" — என்பதன் பொருள் யாது? விளக்கம் தருக.

"ஆர்ய" — என்ற சொல்லுக்கு மரியாதைக்கு உரியவர் —வழிபடத்தக்கவர் என்பதே பொருள். ஆகவே இந்துவாக இருப்பவர்களுள் யாராயிருந்தாலும், சிறப்பியல்புகள் உடையவராயின் அவர் வழிபடத்தக்கவராகின்றார்; திராவிடம் என்பது தேசத்தைக் குறிப்பது போல, 'ஆர்ய' என்ற சொல் சிறப்பு நிலையைக் குறிக்கின்றது. ஆகவே ஒரே கலாசாரத்தை உடைய இந்துக்களை ஆரியர்கள் திராவிடர்கள் என்று பிரிப்பது தேவையற்றதே.

597. புஷ்கரம்—எங்குள்ளது? விளக்கம் தருக.

மலைச்சூழலில் உள்ள இப் "புஷ்கரம்" என்னும் பெரியகுளம் ஆஜ்மீரிலிருந்து 11 கி. மீ. தொலைவில் உள்ளது. கஜேந்திரன் என்ற யானை, தன்னை முதலைப் பற்றியதால் ஆதிமூலப் பெருமானை அழைக்க, அவர் வந்து அவ்யானையைக் காத்தருளிய இடம் இதுவேயாகும். இங்குச் சிவலிங்கங்கள் உள்ளன. பிரமதேவருடைய கோயில் இங்குச் சிறப்பாகவுள்ளது. அழகான படித்துறைகள் உள்ள இக்குளத்திடத்தில் அடுமடேஸ்வரம் என்னும் சிவாலயமும், வராகமூர்த்தி கோயிலும், ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலும் உள்ளன.

598. தானமும் பலனும்:-

ஆடை தானம் செய்தல்	—	ஆயுள் விருத்தி
அரிசி தானம் செய்தல்	—	பாவம் போக்கும்

பழங்கள் தானம் செய்தல் — சுவர்க்க போகம் தரும்
அன்னதானம் செய்தல் — நினைத்தது கைகூடும்.

599. துளசியின் பெருமைகளை எழுதுக.

துளசி எல்லாத் தேவர்களுக்கும் உகந்தது. இத்தீர்த்தம் கங்கை நிகரானது. துளசி தீர்த்தத்தில் மகாவிஷ்ணுவின் திருமேனியில் ஆவாஹனாதிகள் செய்வது வைஷ்ணவத்தில் பிரதானமாகும். துளசி மணியைக் கழுத்தில் அணிவதால் சில பயன்கள் உண்டு. விஷப்பூச்சிகள கடிப்பதில்லை; கடித்தாலும் விஷம்ஏறாது. கெட்ட தேவதைகள் கிட்டே வராது. துளசி மணியோடு குளிப்பதால் அதன் வீரியம் அநேக வியாதிகளைக் கண்டிக்கிறது.

துளசி வேரைக் கையில் கட்டிக் கொள்வதால் இடி விழும் பயம் இல்லை. வீடு கட்டும்பொழுது வீட்டின் வாசற்படியில் மஞ்சளில்நனைத்த துணியில் துளசியைக் கட்டிவைக்கவும். இடி தாங்கியை விடஅதிக சக்தியுள்ளது இது.

காது குத்தலுக்குத் துளசிச் சாற்றில் ஒன்றிரண்டு சொட்டு காதில் விடுவதால் குணமாகும்.

துளசியும் ஓமமும் சேர்த்து அரைத்துச் சாப்பிடுவதால் அம்மையில் சுகம் உண்டாகும்.

பூச்சிக் கடிகளுக்குத் துளசிச் சாறு நல்ல பலன் கொடுக்கும்.

ஒவ்வொரு நாளும் காலை மாலை இருவேளைகளிலும் துளசியைத் தின்று வருவதால் உடல் நல்ல ஆரோக்கியத் துடனும், எந்த நோயும் வராமலும் இருக்கும்.

சளி பிடித்தவர்கள் காலை மாலை துளசியும் இஞ்சியும் சாப்பிடுவது மிகவும் நல்லது.

துளசிச் செடி பூ விட்டு வளருகையில் கவனமாயிருந்து பூவும் விதையும் முத்திப் போவதற்கு முன் கொத்து கொத்தாகப் பூவைக் கொய்து விட வேண்டும். இவ்வாறு செய்வதனுல் செடி நீண்ட நாளைக்குப்பட்டுப் போகாமல் இருக்கும்.

600. குங்குமம் தயாரிக்கும் முறையை எழுதுக.

1 கிலோ மஞ்சளைச் சிறிது சிறிதாக உடைத்து, வங்காரம், படிகாரம் இரண்டையும் $\frac{1}{2}$ கிலோ அளவு சேர்த்து, சுமார் 25 எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் முழுவதும் நன்கு நனையுமாறு ஊறவைக்க வேண்டும். பின்பு எடுத்து உலர்த்தி 300 கிராம் பசு நெய் (அ) நல்லெண்ணெய் சேர்த்துக் கலந்து இடித்து அரைக்க வேண்டும். தூய மஞ்சள் குங்குமம் கிடைக்கும். இக் குங்குமத்தை அணிவதே லட்சுமிகரமானது.

601, சௌராஷ்டிர மதம் பற்றி எழுதுக.

பார்ஸி மொழி பேசும் மக்களின் வரலாற்றின்படி, பெர்சியா தேசத்திலிருந்து அவர்கள் பாரதத்திற்கு வந்ததாகவும், இவர்கள் மதத்திற்குச் "சௌராஷ்டிர மதம்" என்றும்; இவர்களுடைய புத்தகத்திற்கு "ஜண்டோவஸ்தா" என்றும், அவர்கள் வழிபடுவது முக்கியமாக அக்கினி பகவானையே என்றும் கூறப்படுகிறது. சௌராஷ்டிரா என்பது குஜராத் மாநிலம், ஜண்டோவஸ்தா என்பது "சந்தோ அவஸ்தா" விலிருந்து மருவி வந்துள்ளது. "சந்தோ அவஸ்தா' —சாமவேதத்தின் சாகையாகிய சாந்தோக்ய சாகையைக் குறிக்கின்றது. சாமவேத சாகைகளின் உபநிஷத்துக்களில் நிறைய அக்கினி உபாசனு முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

602. சந்தனத்தின் சிறப்பு யாது?

உடலின் வெப்பத்தைப் போக்கிக் குளிர்ச்சியைத் தரவல்லது சந்தனம் ஆகும். வாசனையுடையது. நரம்புகள்

ஒன்று கூடும் புருவ மத்தியில் சந்தனம் இட்டுக் கொண்டால், வெப்பத்தைப் போக்கிப் புத்துணர்ச்சியைத் தரும்.

603. நவக்கிரகங்களின் பெயர்களை எழுது.

1. சூரியன் 2. சந்திரன் 3. அங்காரகன் (செவ்வாய்)
4. புதன் 5. வியாழன் (குரு) 6. வெள்ளி (சுக்ரன்)
7. சனி 8. ராகு 9. கேது.

604. சாயாக் கிரகங்கள் என்று வழங்குபவை எவை?

இராகு, கேது ஆகிய இரு கோள்களும் சாயாக் கிரகங்கள் என்று வழங்கப்படுகின்றன.

605. சூரியனை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

கண்நோய், இருதய நோய், காமாலை மற்றுமுள்ள உடற்பிணி முதலிய நோய்களைச்சூரியன் போக்குவார், உடல் நலத்தைத் தருவார். மனக்கவலைகளை மாற்றுவார். பகையை ஒழித்து விரும்பிய காரியங்களை முடித்துவைப்பார் என்று சொல்வர்.

606. சந்திரனை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

ஆயுள் வளரும், பகைமை அழியும், செல்வவளங்கள் விருத்தியாகும்.

607. அங்காரகனை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

அங்காரகனை, பாவக்கிரகமாகச் சொன்னாலும் இவரை வழிபடுபவர்களுக்குப் பூமி லாபத்தைத் தருவார்;

வெட்டுக்காயங்கள் புண் முதலியவற்றை ஆற்றுவார்; பயிர் பசுக்கள் முதலியவற்றை விருத்தியடையச் செய்வார்; போர்களில் வெற்றியுண்டாக்குவார்; விருப்பங்களைப் பூர்த்திசெய்து வைப்பார்; தைரியத்தைத்தருவார், பெரியோர்கள் நிரம்பிய சபையில் நல்ல மதிப்பு உண்டாகும்படிச் செய்வார்.

608. புதன் வழிபாட்டால் உண்டாகும் பயன்கள் யாவை?

கல்வி ஞானம் தருவார், கவிஞானம் அளிப்பார், சிறப்பும் செல்வமும் கொடுப்பார், அழகைத் தருவார், பீடைகளைப் போக்குவார்.

609. வியாழ பகவான் பற்றி எழுது.

தேவர்களுக்குக் குருவானவரே (தேவகுரு) வியாழ பகவான் என்றும் பிரகஸ்பதி என்றும் அழைக்கப்படுகிருர். இவர் பிரமதேவரின் மானச புத்திரர்களுள் ஒருவரான ஆங்கீரச மகரிஷிக்கும் சிரத்தாதேவிக்கும் மகனுகப் பிறந்தவர். அறிவுக்கும் கருணைக்கும் வியாழ பகவான் இருப்பிடமானவர்.

610. குரு வழிபாடு கொடுக்கும் நலன்கள் எவை?

வழிபடுவோர்க்கு நல்ல வாழ்க்கையைத் தருவார், மகப்பேறளிப்பார், விரும்பிய அனைத்தையும் தரவல்ல சுபக்கிரகம் ஆவார் இவர்.

611. சுக்கிரன் என்பவர் யார்?

பிரமதேவனின் மானச புத்திரர்களுள் ஒருவரான பிருகு முனிவருக்கும் புலோமசை என்பவளுக்கும் மகனுகப் பிறந்தவர் சுக்கிரன். இவருக்குப் (பிருகுவின் மகனுதலால்) 'பார்க்கவன்' என்ற பெயரும் உண்டு. இவருடைய நிறம் தூய வெண்ணிறமாதலின் 'வெள்ளி' என்ற பெயரும் ஏற்பட்டது.

612. சுக்கிர வழிபாட்டின் பயன்கள் யாவை?

பெருஞ் செல்வமும் புகழும் கொடுப்பார். சுபகாரியங்களை நடத்தி வைப்பார். ஒருவருக்கு நன்மை உண்டாகும்போது 'சுக்கிரதசை அடிக்கிறது' என்று சொல்லும் வழக்கம் உள்ளது.

613. சனி வழிபாட்டின் பயன்களைக் கூறுக.

வழிபடுவோர்க்கு எல்லாத்துன்பங்களையும் போக்கி நீண்ட ஆயுளைத்தருவார். விரும்பிய பயன்களை அருள்வார். இவரைப்போலக் கொடுப்பவரும் இல்லை, கெடுப்பவரும் இல்லை என்பது முதுமொழி. இவர் எல்லோரையும் தன் வயப்படுத்தி ஆட்டிவைப்பதில் வல்லவர். அதே நேரத்தில் தன்னைப் பணிபவர்க்கு அருள்புரிவதிலும் வள்ளல் ஆவார்.

614. ராகு வழிபாடு தரும் நன்மைகளைக் கூறுக.

வழிபடுவோர்க்கு உண்டாகும் சகல நோய்களையும் நீக்கி அருளுவார். விஷத்தையுடைய விலங்குகளால் உண்டாகும் பயத்தையும் போக்கிக் காப்பார்.

615. கேது வழிபாடு கொடுக்கும் நன்மைகள் எவை?

வழிபடுவோரின் சகல பீடைகளையும் நீக்குவார். தைரியம், செல்வம், வெற்றி, ஞானம் முதலியவைகளைத் தந்தருளுவார்.


616. கீதையில் கண்ணபிரான் அருளியது.

யான்:-

ஆதித்தியருள்	விஷ்ணு
சோதியுள்	கதிரோன்
மருத்துக்களில்	மரீசி
விண்மீன்களுள்—	வெண்நிலா
வேதத்துள்	சாமம்
தேவர்க்குள்	இந்திரன்
புலன்களுள்	மனம்

உயிர்களுள்	உணர்வு
ருத்திரர்களுள்	சங்கரன்
அஷ்டவசுக்களுள்	அக்கினி
மலைகளுள்	மேரு
சேனாத்தலைவருள்	ஸ்கந்தன்
நீர்நிலைகளுள்	கடல்
மகரிஷிகளுள்	பிருகு
சொல்லில்	பிரணவம்
யாகங்களில்	ஜபம்
நிலைத்தபொருளில்	இமயமலை
மரங்களுள்	அரசமரம்
தேவரிஷிகளுள்	நாரதர்
கந்தர்வருள்	சித்ரரதன்
சித்தருள்	கபிலமுனி
பரிகளுள்	உச்சைசிரவஸ்
யானைகளுள்	ஐராவதம்
மாந்தருள்	வேந்தன்
படைகளுள்	வச்சிராயுதம்
பசுக்களுள்	காமதேனு
பாம்புகளுள்	வாசுகி
தேவதையுள்	வருணன்
நாகங்களுள்	அனந்தன்
தண்டிப்பவருள்	எமன்
திதிபுத்திரருள்	பிரகலாதன்
விலங்கில்	சிங்கம்
புள்களுள்	கருடன்
புனிதம் தருவதில்	காற்று
மீனுள்	மகரம்
நதியில்	கங்கை
கலைகளில்	ஆத்மகலை
எழுத்தில்	அகரம்
சந்தங்களில்	காயத்ரி
மாதங்களில்	மார்கழி
ருதுக்களில்	வசந்தம்
யாதவருள்	வாசுதேவன்
பாண்டவரில்	தனஞ்சயன்
முனிவரில்	வியாசன்

என்றருளியுள்ளார்.



பொது-
இலக்கியம்-
பிறசெய்திகள்.

617. உயிரினங்களின் நான்கு வகைகள் யாவை?

(1) **சுவேதஜம்:—** புழுக்கத்திலிருந்து பிறக்கக் கூடியவை— புழு, பூச்சி, கொசு போன்ற சிறுசிறு கிருமிகள்.

(2) **உத்பிஜம்:—** பூமியைப் பிளந்துகொண்டு வெளிவருவன-மரம், செடி, கொடி, சிலவகைப் புழுக்கள் முதலியன

(3) **அண்டஜம் :—** முட்டையிலிருந்து வெளி வருவன - பறவைகள் கோழி, வாத்து முதலியன.

(4) **ஜராயுஜம்:—** கருப்பையிலிருந்து வெளிவருவன- ஆடு, மாடு, முதல் மனிதன் வரை உள்ளவை

618 நால்வகைத் தோற்றம் எவை?

நால்வகை தோற்றம்:

1) அண்டஜம் 2) சுவேதஜம்

3) உத்பிஜம் 4) ஜராயுஜம்

619. எழுவகை பிறப்புக்கள் எவை?

1) தேவர் 2) மனிதர் 3) விலங்கு
4) பறவை 5) ஊர்வன 6) நீர்வாழ்வன
7) தாவரம்

620. விழித்தவுடன் பார்க்கத்தக்கவை எவை?

தாமரை, பொன், விளக்கு, சூரியன், சந்தனம், சிவலிங்கம், கடல், கன்றையீன்றபசு, வலக்கை, கற்புடைப்பெண்டிர், மிருதங்கம், கண்ணாடி, அரசன், காட்டுயானை, கருங்குரங்கு, இறைநூல்கள், தன் வலது தோள் முதலியன.

621. விழித்தவுடன் பார்க்கத் தகாதவை எவை?

நோயாளி, அழுக்காடை உடுத்தியோர், தலை விரித்தவர், அழுக்கு மேனியர், கழுதை, சாம்பல், எருமை, விளக்குமாறு, உலக்கை முதலியன.

622. பல் துலக்கும் முறையைக் கூறு?

பல்துலக்கும் போது ஆள் காட்டி விரலால் பல் துலக்குவது பாவம் என்கிறது சாஸ்திரம். ஆள் காட்டி விரலுக்கு தர்ஜனம் என்று பெயர். தர்ஜனம் என்றால் அடிப்பது, காட்டிக்கொடுப்பது விரட்டுவது என்று பொருள், நடு விரலால்தான் பல் துலக்க வேண்டும். முதலில் சிரமமாக இருந்தாலும் பிறகு இது பழக்கமாகி விடும்.

623 புத்தாடை உடுத்துவதற்கு உரிய நாள்களும் உரியதல்லாத நாள்களும் எவை?

கறைபடா (து) ஒளிசேரும் ஆதிவா ரந்தனிற்
　　கட்டலாம் புதிய சீலை
கலைமதிக்(கு) ஆகாது, பலகாலும் மழையினிற்
　　கடிதுநனை வுற்றெ ழிதரும்.

குறைபடா(து) இடர்வரும், வீரியம்போம். அரிய
குருதிவாரந்த னக்கு
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியில்.
குருவார மதில ணிந்தால்
மறைபடா தழகுண்டு, மேன்மேலும் நல்லாடை
வரும் இனிய சுக்கி ரற்கோ
வாழ்வுண்டு, திருவுண்டு, பொல்லாத சனியற்கு
வாழ்வுபோம், மரணம் உண்டாம்
அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்(கு)
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே;

624. உணவு கொள்ளத் தக்க பாத்திரங்கள், இலைகள் எவை?

பொன், வெள்ளி, வெண்கலப்பாத்திரங்கள். வாழையிலை, பலா இலை, புன்னை இலை, பதிரி இலை, தாமரை இலை மந்தாரையிலை காட்டுமுருக்குஇலை முதலியவை.

625. தரையில் படக்கூடாத சிலவற்றைக் கூறுக

1. மணியினுடைய நாக்கு
2. சங்கினுடைய முதுகுப்புறம்
3. தெய்விகப் புத்தகம்
4: பெண்களின் மார்பு

[மணி சங்கு புத்தகம் முதலியவைகளை ஏதேனும்ஒன்றின் மேல்தான் வைக்க வேண்டும், தரையில்படும்படி வைக்கக் கூடாது. பெண்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் உரியது என்று சொல்லப்பட்டிருப்பது இக் கருத்தையொட்டியே என்பதறிக]

626. புண்ணிய நதிகளாகச் சொல்லப்படும் ஏழு நதிகள் எவை?

1. கங்கை 2. யமுனை 3. சரஸ்வதி 4. நர்மதை
5. கோதாவரி 6. காவேரி 7. சிந்து.

627. இரவில் எவற்றை உண்ணலாகாது?

நெல்லிக்காய், இஞ்சி, தயிர், நெல், வறுத்தமாவு இவைகளை இரவில் சாப்பிடக்கூடாது.

628. இரவில் செய்யக்கூடாத செயல்கள் எவை?

இரவில்; ஆடைகளைத் துவைக்கக் கூடாது; குப்பையைப் பெருக்கி வெளியில் கொட்டக்கூடாது; மரத் தடியில் உறங்கக்கூடாது; பூமியை வெட்டுவதோ உழுவதோ செய்யக்கூடாது.

மரங்கள் இரவில் கரியமில வாயுவை வெளிப் படுத்துவதால் அதனடியில் படுத்தால் நோய் வரும். மேலும் மரத்தில் வந்து தங்கும் பேய் பிசாசுகளால் தீங்கு உண்டாகும்

629. எண்ணெய் தேய்த்து நீராடுவதற்கு உரிய நாளும் முறையும் கூறுக

அருக்கன் எண்ணெய் அழகு அழிக்கும்,
அணியாம் திங்கள் ஆகாது,
திருக்காஞ் செவ்வாய் உயிர் போக்கும்,
செய்ய புதற்குப் பொருளுண்டாம்,
கருத்தை அழிக்கும் கவின் வியாழன்,
கைப்பொருள் போக்கும் கனவெள்ளி,
பெருக்குமுண்டாம் சனி எண்ணெய்,
பேணி முழுக வல்லாரே.

சனி நீராடுதலே நல்லது. மந்தன் (சனி) நாளான அன்று உடலில் அசதி—சோர்வு வரும். அன்று ஒய்வு தேவை. அன்று எண்ணெய் முழுக்கு நன்று.

மயானத்திற்குச் சென்று வந்தவனும், தலைமுடி வெட்டிக்கொண்டவனும் தலையில் எண்ணெய்தேய்த்து ஒருபோதும் குளிக்கக் கூடாது.

630. எவ்வெவற்றின் குறுக்கே செல்லக் கூடாது?

ஆடு, பசுக்களுக்கு நடுவிலும், அக்கினி. பிராமணர் களுக்கு இடையிலும், தம்பதிகளுக்கு இடையிலும், குரு சிஷ்யர்களின் இடையிலும், — குறுக்கேயும் போகக் கூடாது. வலமாகச் சுற்றியே செல்ல வேண்டும்.

631. நல்லவர்கள். நிற்கலாகாத இடங்கள் எவை?

1. கோபங்கொண்டு ஒருவர்க்கொருவர் சண்டை யிட்டுக் கொள்ளுமிடம்
2, கள்குடித்து மகிழ்ந்து ஆடுமிடம்
3. பரத்ஸ்தயர் சேரி
4. நட்பு விலகிய இடம்
5. பலரும் வந்து போகும் நீர்த்துறை முதலியன

632. ஆயுளை விருத்தி செய்வன எவை?

1. மாலைவெயில் 2. ஓமப்புகை 3. தெளிந்தநீர்
4. இரவில் பால்சோறு உண்ணல்
5. பெரியோர்களை வணங்குதல்
6. நோயாளர்களுக்கு உதவுதல் முதலியன.

633. ஆயுளைக் குறைக்கும் செயல்கள் யாவை?

1) காலை வெயிலில் உடம்பு காய்தல்
2) பிணப்புகை நம்மீது படுதல்
3) தன்னைவிட வயதில் மூத்த பெண்ணுடன் உடல் உறவு கொள்ளுதல்
4) கலங்கிய நீரை வடிகட்டாமல் குடித்தல்
5) இரவில் தயிர் உண்ணல்—முதலியன

634. எவ்வெவரை வலமாகச் சுற்றியே செல்ல வேண்டும்?

ஞானிகள், சுமங்கலிகள், திருக்கோயில்கள், தேவதைகள், அரசமரம், பசு, ஆகிய இவர்களை வலமாகச் சுற்றியே செல்லவேண்டும்.

635. ஐயம்-பிக்ஷை — இவற்றிற்கு உள்ள வேறு பாடு யாது??

நாடி வந்தோர் அனைவருக்கும் இட்டுதவுவது ஐயம். சாதுக்களுக்கும் துறவியர்க்கும் இடுவது பிக்ஷை எனப் படும்.

சாதுக்களுக்கும், துறவியர்க்கும் உணவிடுவது பெரும் புண்ணியச் செயலாகும்.

"அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயில்என்
சிகரம் ஆயிரம் செய்துமுடிக்கில் என்
பகரு ஞானி பகல் ஊண் பலத்துக்கு
"நிகரிலை என்பது நிச்சயந்தானே"

(திருமூலர் திருமந்திரம்)

636. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' —பத்தும் எனப்படுபவை எவை?

1. மானம் 2. குலம் 3. கல்வி 4. வண்மை 5. அறிவுடைமை 6. தானம் 7. தவம் 8. முயற்சி 9. தாளாண்மை 10. பெண் இன்பம் என்பன.

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் **பத்தும்**
பசி வந்திடப் பறந்துபோம்".

637. உறங்கும் முறை யாது?

இரவில் கால் கழுவித் துடைத்துக்கொண்டு. இறை வனைத் தியானித்துப் பிறகே உறங்கவேண்டும்.

கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய திசைகளில் வசதிப் படி தலை வைத்து உறங்கவேண்டும். வடக்கே தலை வைத்து உறங்கலாகாது. முறிந்தகட்டிலிலும், பாழான வீட்டிலும் உறங்கக் கூடாது.

638. சஷ்டியப்த பூர்த்தி என்பது யாது?

அறுபது ஆண்டு நிறைவு என்று பொருள். வாழ்நாளில் வரக்கூடிய துன்பங்களை-பாவங்களைப் போக்கிக்கொள்வ தற்குரிய ஒரு சடங்கே சஷ்டியப்த பூர்த்தியாகும். மக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தம்பதிகள் செய்து கொள்ள வேண்டிய சடங்கு இதுவாகும். இச்சடங்கின் போது மனைவிக்குத் திருமாங்கல்யம் அணிவிக்கும் வழக்கம் ஒருசிலரிடையே உள்ளது,

639. 'சதாபிஷேகம்' என்பது யாது?

'ஆயிரம் பிறை கண்டவர்கள் செய்து கொள்ளும் ஒரு நற்சடங்குக்குச் சதாபிஷேகம் என்று பெயர்.

640. ஆண்களுக்குரிய ஏழுபருவங்கள் எவை?

1) பாலன் (1 முதல் 7 வயது வரை)
2) மீளி (8 முதல் 10 வயது வரை)
3) மறவோன் (11 முதல் 14 வயது வரை)
4) திறவோன் (15-ஆவது ஆண்டு)
5) காளை (16-வது ஆண்டு)
6) விடலை (17 முதல் 30 வயது வரை)
7) முதுமகன் (30 வயதுக்கு மேற்பட்டவர்)

641. பெண்டிற்குரிய எழு பருவங்கள் எவை?

1. பேதை (5 முதல் 8 வயதுவரை)
2. பெதும்பை (9 முதல் 10 வயது வரை)
3. மங்கை (11 முதல் 14 வயது வரை)
4. மடந்தை (15 முதல் 18 வயது வரை)
5. அரிவை (19 முதல் 24 வயது வரை)
6. தெரிவை (25 முதல் 29 வயது வரை)
7. பேரிளம்பெண் (30 முதல் 56 வயது வரை)

என்பன.

642. எட்டு ஆத்ம குணங்கள் எவை?

1. தயை (கருணை) 2 பொறுமை
3. பொருமையில்லாமை 4 நல்லவைகளில் உறுதி
5. மனமகிழ்வு 6 பேராசையில்லாமை
7. உலோபத்தன்மையில்லாமை 8. தூய்மை

643. பதினாறுவகைப் பேறுகள் யாவை?

1. புகழ் 2· கல்வி 3. வலிமை
4. வெற்றி 5. நன்மக்கள் 6. பொன்
7. நெல் 8. நல்லூழ் 9. நுகர்ச்சி
10. அறிவு 11. அழகு 12. நோயின்மை
13. வாழ்நாள் 14. பெருமை 15. இளமை
16. துணிவு

[பல்வேறு முறைகளில் இப்பேறுகளைச் சொல்லுவதும் உண்டு]

644. அறுபத்துநான்கு கலைகள் எனப்படுபவை எவை?

1. அக்ஷரவிலக்கணம் (எழுத்தியல்பு)
2. லிகிதம் (எழுதும் ஞானம்)
3. கணிதம் (எண்நூல்)
4. வேதம் (முதல் நூல்)
5. இதிகாசம், புராணம் (பூர்வ கதை)
6. வியாகரணம் (இலக்கணம்)
7. சோதிட சாஸ்திரம் (வான நூல்)
8. தரும சாஸ்திரம் (அற நூல்)
9. நீதி சாஸ்திரம் (நீதி நூல்)
10. யோக சாஸ்திரம் (யோக நூல்)
11. மந்திர சாஸ்திரம் (மந்திர நூல்)
12. சகுன சாஸ்திரம் (நிமித்த நூல்)
13. சிற்ப சாஸ்திரம் (மனையடி நூல்)
14. வைத்திய சாஸ்திரம் (மருத்துவ நூல்)

15. உருவ சாஸ்திரம் (உடல் லட்சணம்)
16. சப்தம் பிரமம் (ஒலிக்குறி நூல்)
17. காவியம் (காப்பியம்)
18. அலங்காரம் (அணியிலக்கணம்)
19. மதுரபாஷணம் (சொல்வன்மை)
20. நாடகம் (கூத்து)
21. நிருத்தம் (நடன நூல்) 22. வீணை
23. வேணு (புல்லாங்குழல்) 24. மிருதங்கம்
25. தாளம் 26. அஸ்திர பரீட்சை
27. கனக பரீட்சை (பொன்மாற்று)
28. ரத பரீட்சை (இரதம் ஓட்டல்)
29. கஜ பரீட்சை (யானைத் தேர்வு)
30. அஸ்வ பரீட்சை (குதிரைத் தேர்வு)
31. ரத்தின பரீட்சை 32. பூமி பரீட்சை
33. சங்கிராமவிலக்கணம் (யுத்தமுறை விதி)
34. மல்யுத்தம் (மற்பிடி)
35. ஆகர்ஷணம் (அழைத்தல்)
36. உச்சாடனம் (அகற்றல்)
37. வித்வேஷணம் (பகைமூட்டல்)
38. மதன சாஸ்திரம் (கொக்கோகம்)
39. மோகனம் (மயக்குதல்)
40. வசீகரணம் (வசியம்)
41. இரசவாதம் (தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கல்)
42. காந்தருவ வாதம் (காந்தருவர்களைப் பற்றிய ரகசியங்கள்)
43. பைபீல வாதம் (விலங்கு மொழியறிவு)
44. கவுத்து வாதம் (துக்கத்தை இன்பமாக மாற்றல்)
45. தாது வாதம் (நாடி நூல்)
46. காருடம் (மந்திரத்தால் விஷமகற்றல்)
47. நஷ்டப் பிரச்சனம் (சோதிடத்தால் இழப்பு கூறல்)
48. முட்டி (சோதிடத்தால் மறைந்தன கூறல்)
49. ஆகாயப் பிரவேசம்

50 ஆகாய கமனம் (வானில் மறைந்து உலாவுதல்)
51. பரகாயப் பிரவேசம் (கூடு பாய்தல்)
52. அதிருசியம் (தன்னை மறைத்தல்)
53. இந்திர ஜாலம் (சால வித்தை)
54. மகேந்திர ஜாலம் (அதிசயம் காட்டல்)
55. அக்கினி ஸ்தம்பம் (நெருப்பைக் காட்டல்)
56. ஜலஸ்தம்பம் (நீர்மேல் நடத்தல்)
57. வாயு ஸ்தம்பம் (காற்று பிடித்தல்)
58. திருஷ்டி ஸ்தம்பம் (கண் கட்டல்)
59. வாக்கு ஸ்தம்பம் (வாயைக் கட்டல்)
60. சுக்கில ஸ்தம்பம் (இந்திரியங் கட்டல்)
61. கன்ன ஸ்தம்பம் (மறைந்ததைக் கண்டு பிடிக்க முடியாத செயல்)
62. கட்க ஸ்தம்பம்
63. அவஸ்தைப் பிரயோகம் (ஆன்மாவைஅடக்கல்)
64. கீதம்

645. முப்பத்திரண்டு அறங்கள் எவை?

1. ஆதுலர்க்குச் சாலையமைத்தல் (ஆதுலன்: நோயாளி)
2. ஓதுவார்க்கு உணவு
3. அறுசமயத்தோர்க்கு உண்டி
4. பசுவிற்கு உணவு
5. சிறையிலுள்ளோர்க்கு உணவு
6. பிச்சையிடுதல் 7. தின்பண்டம் தரல்
8. அறவைச் சோறு 9. மகப்பெறுவித்தல்
10. மகவு வளர்த்தல்
11. மகப்பால் வார்த்தல்
12. அறவைப் பிணம்சுடல்
13. அறவைத்தூரியம் 14. சுண்ணும்பு தருதல்
15. நோய்க்கு மருந்து தருதல்
16. வண்ணார்க்கு உதவுதல்
17. நாவிதர்க்கு உதவுதல் 18) கண்ணடி தருதல்
19. காதோலை தருதல்

20. கண் மருந்து தருதல்
21. தலைக்கு எண்ணெய் தருதல்
22. பெண் போகம்
23. பிறர்துயர் காத்தல்
24. தண்ணீர்ப்பந்தர் அமைத்தல்
25. மடம் கட்டுதல் 26. சோலை அமைத்தல்
27 குளம் அமைத்தல்
28. ஆவுரிஞ்சுதறி அமைத்தல்
29. விலங்குக்கு உணவுதரல் 30. ஏறு விடுத்தல்
31. விலை கொடுத்து உயிர் காத்தல்
32. கன்னிகாதானம் முதலியன.

முப்பத்திரண்டு அறங்கள்

பெறும்இல் பெறுவித்தலொடு காதோலை
நாள் தோறும் பிள்ளைகள் அருந்திடும் பால்

பேசரிய சத்திரம் மடம் ஆவுரிஞ்சுகல்
பெண்போகம் நாவிதன் வண்ணான்

மறைமொழிகண்ணாடி தண்ணீர் தலைக்(கு) எண்ணெய் பசு
வாயின் உறை பிணம் அடக்கல்

வாலி இறும் உயிர் மீட்டல் தின்பொருள் அடைக்காய்
வழங்கல் சுண்ணாம்பு தருதல்

சிறையுறுபவர்க்கமுது வேற்றிலம் காத்தல்
பொழில் செய்தல் முன்னூலின் மணம்

திகழ்விலங்கு ஊண் பிச்சை அறுசமயருக்குண்டி
தேவ ராலயம் அவுடதம்

அறைதல் கற்போர்க்கு அன்னம் நாலெட்டு அறங்களும்
முன் அன்னைசெயல் அருமை மதவேள்

அனுதினமும் மனதில்நினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே.

646. தமிழ் வருஷங்கள் 60ன் பெயர்களை எழுதுக

1.	பிரபவ	21.	சர்வசித்து	41.	பிலவங்க
2.	விபவ	22.	சர்வதாரி	42.	கீலக
3.	சுக்கில	23.	விரோதி	43.	சௌமிய
4.	பிரமோதூத	24.	விக்ருதி	44.	சாதாரண
5.	பிரஜோற்பத்தி	2..	கர	45.	விரோதிகிருது
6.	ஆங்கீரச	26.	நந்தன	46.	பரிதாபி
7.	ஸ்ரீமுக	27.	விஜய	47.	பிரமாதீச
8.	பவ	28.	ஜய	48.	ஆனந்த
9.	யுவ	29.	மன்மத	49.	ராக்ஷச
10.	தாது	30.	துன்முகி	50.	நள
11.	ஈசுவர	31.	ஏவிளம்பி	51.	பிங்கள
12	வெகுதானிய	32.	விளம்பி	52.	காளயுத்தி
13.	பிரமாதி	33.	விகாரி	53	சித்தார்த்தி
14.	விக்கிரம	34.	சார்வரி	54.	ரௌத்திரி
15.	விஷு	35.	பிலவ	55.	துன்மதி
16.	சித்திரபானு	36	சுபகிருது	56.	துந்துபி
17.	சுபானு	37.	சோபகிருது	57.	ருத்ரோத்காரி
18.	தாரண	38.	குரோதி	58.	ரக்தாட்சி
19.	பார்த்திவ	39	விசுவாவசு	59.	குரோதன
20.	விய	40.	பராபவ	60	அட்சய

647. 27 நட்சத்திரங்களின் பெயர்கள் யாவை?

1.	அசுவனி	2	பரணி	3.	கிருத்திகை
4.	ரோகிணி	5.	மிருகசீரிஷம்	6.	திருவாதிரை
7.	புனர் பூசம்	8.	பூசம்	9.	ஆயில்யம்
10.	மகம்	11.	பூரம்	12.	உத்திரம்
13.	அஸ்தம்	14.	சித்திரை	15.	சுவாதி
16.	விசாகம்	17.	அனுஷம்	18.	கேட்டை
19.	மூலம்	20.	பூராடம்	21.	உத்திராடம்
22.	திருவோணம்	23.	அவிட்டம்	24.	சதயம்
25.	பூரட்டாதி	26.	உத்திராட்டாதி	27.	ரேவதி

648. நட்சத்திரம்-தொகை எண்-வடிவம்.

1.	அசுவினி	3	குதிரை முகம்
2.	பரணி	3	அடுப்புக்கட்டி

3. கார்த்திகை	6	அடுக்குதீபம்
4. ரோகிணி	6	தேர்த்தலை, வண்டிக்கூடு
5. மிருகசீரிஷம்	3	தேங்காய்கண்
6. திருவாதிரை	1	பவளம்
7. புனர்பூசம்	6	ஓடம்
8. பூசம்	4	புடலம்பூ
9. ஆயில்யம்	6	பாம்பு
10. மகம்	5	கலப்பை
11. பூரம்	2	கட்டிற்கால்
12. உத்திரம்	2	,,
13. ஹஸ்தம்	5	கை
14. சித்திரை	1	முத்து
15. சுவாதி	1	மாணிக்கச்சுடர்
16. விசாகம்	6	இடிந்த கிணறு
17. அனுஷம்	4	முடப்பனை
18. கேட்டை	4	ஈட்டிக்காம்பு
19. மூலம்	6	எக்காளம்
20. பூராடம்	2	கட்டிற்கால்
21. உத்திராடம்	2	,,
22. திருவோணம்	6	முழக்கோல்
23. அவிட்டம்	6	மிருதங்கம்
24. சதயம்	அநேகம்	சல்லடைக் கண்கள்
25. பூரட்டாதி	2	கட்டிற்கால்
26. உத்திரட்டாதி	2	,,
27. ரேவதி	12	படகு

649. இருபத்தோரு தலைமுறை என்று சொல்லப் படும் கணக்கு முறை யாது?

தந்தை முதல் முன் ஏழு பெயர்
தன் முதல் பின் ஏழுபெயர்
தாய் வம்சத்தில் பாட்டன் முதல் ஏழுபெயர்
ஆக $3 \times 7 = 21$ தலைமுறைகள்.

650. 18. வகை குற்றங்கள் யாவை?

1. பசி 2. தாகம் 3. பயம் 4· கோபம்
5· வெறுப்பு 6. பிரியம் 7. மோகம்
8. நீண்ட சிந்தனை 9 நரை 10 நோய்
11. அழிவு 12. வியர்வு 13. இளைப்பு
14. மதம் பிடித்தல் 15. இரந்து கொள்ளுதல்
16. அதிசயம் 17. பிறப்பு 18 உறக்கம்.

651. பதினாறு (கூலங்கள்) தானியங்கள் எவை?

1. நெல் 2. புல் 3. வரகு 4. தினை 5. சாமை 6. இறுங்கு 7. துவரை 8. கேழ்வரகு 9. எள் 10. கொள்ளு 11 பயறு 12. உளுந்து 13. அவரை 14. கடலை 15. மொச்சை 16. காராமணி முதலியன.

652. சோடச அவதானங்கள் எவை எவை?

1) வினவுக்கு விடைகூறல்
2, சொக்கட்டான் ஆடுதல்
3) கல்லும் நெல்லும் எண்ணிக்கூறுதல்
4) கரும்பு ருசி கூறல் 5) வெண்கல ஓசை விளம்பல்
6) சதுரங்கம் ஆடுதல் 7) சீட்டாடுதல்
8) கேட்கும் பாட்டுக்கு உரை கூறல்
9) இசைக்குறிப்பு சொல்லல்
10) விரிவுரை நிகழ்த்துதல்
11) இலாட சங்கிலி— கோத்தல், கழற்றுதல்
12) குதிரையடி வெண்பா கூறல்
13) கணித பந்தனம் அடைத்தல்
14) வாயினால், வேலும் மயிலும் எனச் சொல்லிக் கொண்டிருத்தல் 15) எழுத்துக் கூட்டிச் சேர்த்தல்
16) பதினாறுபேர்களுக்குப்பாட்டு சொல்லல் முதலியன.

653. அஷ்டாவதானங்கள் — எவை எவை?

1) வாய் வேலும் மயிலும் எனச் சொல்லிக்கொண்டே யிருத்தல்
2) லாடம் போட்டுக் கழற்றல்.
3) பிறர்கூறும் வினுக்களைக் கேட்டு அவ்வரிசையில் விடை கூறுதல்.
4) சூதாடுதல்.
5) முதுகில் எறிந்த கற்களின் எண்ணிக்கையைக் கூறல்.
6) சதுரங்க விளையாட்டைக் காணல்.
7) புலவர்கள் சொன்ன பாடல்களைக் கேட்டு அவற்றை அவ்வரிசையில் திருப்பிச் சொல்லுதல்.
8) கூட்டத்தினருக்கு வரிசைப்படி கவிகளை எழுதிக் கொள்ளக்கூறி பின் அவற்றை முழுவதுமாகத் திருப்பி கூறுதல் முதலியன.

654. எண்வகை போகங்கள் எவை?

1. அணிகலன் 2. ஆடை 3. தாம்பூலம்
4. பரிமளம் 5. சங்கீதம் 6. பூப்படுக்கை
7. பெண் 8. போஜனம்(உணவு)

655. அறுவகை வாழ்த்தாவது யாது?

முனிவர், அந்தணர், ஆனிரை, மழை, வேந்தர் உலகம் என்ற ஆறினையும் பற்றிக்கூறும் வாழ்த்து ஆகும்.

656. கை விரல்கள் ஐந்தினுக்கும் வழங்கப்படும் பெயர்கள் யாவை?

1. பெருவிரல்—அங்குஷ்டம்
2. சுட்டுவிரல் (ஆள்காட்டி விரல்)— தர்ச்சனி
3. நடுவிரல்—மத்திமா 4. மோதிரவிரல்—அநாமிகை
5. சுண்டுவிரல்—கனிஷ்டை.

657. பத்து வகையான ஆயுதங்களின் பெயர்கள் யாவை?

1. வச்சிராயுதம் 2. த்வஜாயுதம்(த்வஜம் = கொடி)
3. கதாயுதம் 4. பத்மாயுதம் 5. சக்ராயுதம்
6. சக்தி ஆயுதம் 7. தண்டாயுதம் 8. வாளாயுதம்
9. பாசஆயுதம் 10. திரிசூலஆயுதம் என்பன

658. பத்துவகையான வைராக்கியங்கள் எவை?

1. பிரசவ	வைராக்கியம்	6. சங்க	வைராக்கியம்
2. தேக	,,	7. ஸ்திரீ	,,
3. ஐஸ்வர்ய	,,	8. போஜன	,,
4. பிரபஞ்ச	,,	9. பிரதிக்ரஹ	,,
5. திரவிய	,,	10. நிர்ஹேதுஉத்தம	,,

659. அரசர்க்குரிய 10 வகை அங்கங்கள் (தசாங்கம்) எவை?

1. மலே 2. ஆறு 3. நாடு 4. ஊர் 5. மாலே 6 குதிரை 7. யானே 8. முரசு 9. கொடி 10. செங்கோல்.

660. அரசர்க்குரிய ஆறு வகைப் படைகள் யாவை?

1. முலப்படை 2. கூலிப்படை 3. நாட்டுப்படை. 4. காட்டுப்படை 5. துணேப்படை 6. பகைப்படை முதலியன.

661. 'எண்பேராயம்'—என்பது யாது?

பண்டை நாளில் அரசர்க்கு உதவும் பொருட்டு நிறுவப்பட்ட எண்வகையினர் அ'-ங்கிய குழு. அவர்கள் வருமாறு:- 1. கரணத்தியலவர் 2. கருமக்காரர் 3. சுற்றத்தார் 4. கடைகாப்பாளர் 4. நகரமக்கள்

6. படைத்தலைவர் 7. குதிரைவீரர் 8. யானை வீரர் முதலியோர்.

662. ஐம் பெருங்குழு —என்பது யாது?

பண்டைநாளில் அரசர்க்கு உதவுவதற்காக அமைக்கப் பட்ட ஒருகுழுவே ஐம்பெருங்குழு ஆகும். இதில் ஐவகை யானோர் இடம் பெற்றனர். அவர்களாவர் வருமாறு:
1. அமைச்சர் 2. புரோகிதர் 3. சேனாதிபதியர்
4. தூதுவர் 5. சாரணர்.

663. ஐம்பெருங்குரவர் எனப்படுவோர் யாவர்?

1. அரசன் 2. ஆசான் 3. தாய் 4. தந்தை 5 தமையன் ஆகிய ஐவரும் ஐம்பெருங்குரவர் எனப்படுவோர். இவர்களைத் தேவர்களைப்போல நினைத்துத் தொழ வேண்டும்

664. அரசனுக்கு இன்றியமையாத ஏழு பேர்கள் யாவர்?

1. அரசலட்சணமுள்ள யானை 2. எல்லாம் செய்ய வல்ல சிற்பி 3 கற்புடைய பெண் 4. ஆற்றல் மிக்க சேனாபதி 5. கஜானாவை (பண்டாரத்தை)க் காப்போன் 6. நல்ல லட்சணமுள்ள குதிரை 7. வருவதை முன் கூட்டியே தெரிவிக்க வல்ல நிமித்தகன்.

இவர்கள் ஆறு பேர்களையும் ஜீவ ரத்னங்கள் என்று குறிப்பிடுவர். அஃதாவது வாழுங்காலத்திலேயே இவர்கள் ரத்னங்களைப்போன்று மதிக்கத்தக்கவர்கள் என்பது பொருளாம்.

665. நவரசங்கள் (ஒன்பான் சுவைகள்) எவை?

1. இன்பம்(சிருங்காரம்) 2. நகைச்சுவை
3. கருணை 4. கோபம் 5. வீரம் 6. பயம்
7. அருவருப்பு 8. அற்புதம் 9. சாந்தம்.

666. நவமுகில்கள் எவை?

1. ஆவர்த்தம் 2. சம்வர்த்தம் 3. புஷ்கலம்
4. துரோணம் 5. காளம் 6. நீலம்
7. வாருணம் 8. வாழிவம் 9. தமம்

667. நவ பாஷாணங்கள் எவை?

1) சாதிலிங்கம் 2) மனோசிலை 3] காந்தம்
4) அரிதாரம் 5) கந்தகம் 6) ரசகற்பூரம்
7) வெள்ளைப் பாஷாணம் (வெடியுப்பு)
8) தொட்டிப் பாஷாணம் 9) கவுரி பாஷாணம் என்பன.
'போகர்' என்னும் சித்தர் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இவரே இந்த நவ பாஷாணங்களைக் கொண்டு பழனியாண்டவர் மூலவிக்கிரகத்தைச் செய்து வைத்தவர்.

668. நவரத்தினங்கள் யாவை?

1. கோமேதகம் 2. நீலம் 3. பவளம் 4 புஷ்பராகம் 5 மரகதம் 6. மாணிக்கம் 7. முத்து 8 வைரம் 9. வைடூர்யம்

669. நவ புண்ணியங்கள் எவை?

1. அமுதம் ஏந்தல் 2. அருச்சித்தல்
3. ஆசனத்திருத்தல் 4. எதிர்கொள்ளல்
5. திருவடி துலக்கல் 6. தீபங்காட்டல்
7. தூபங்காட்டல் 8. பணிதல்
9. புகழ்தல்

670. நவ நிதிகள் யாவை?

1. கச்சபநிதி [கச்சபம்-ஆமை]
2. கற்பநிதி 3. சங்கநிதி 4. பதுமநிதி
5. நந்தநிதி 6. நீலநிதி 7. மஹாநிதி
8. மஹாமதுநிதி 9. முகுந்தநிதி
இவை குபேரனிடமுள்ள நவநிதிகளாம்.

671. நவ நாகங்கள் யாவை?

1. அனந்தன் 2, ஆதிசேஷன் 3. கார்க்கோடகன் 4. குளிகன் 5. சங்கபாலன் 6 தக்ஷன் 7. பதுமன் 8. மகாபதும்ன் 9. வாசுகி

672. நவ தானியங்கள் எவை?

1. உழுந்து (உளுந்து) 2. எள் 3. கடலே
4. கொள்ளு 5. சாமை 6. தினே
7. துவரை 8. பயறு 9. நெல்

673. நம் உடம்பில் உள்ள ஒன்பது வாயில்கள் (நவத்துவாரங்கள்) எவை?

1. செவித்துளைகள்—2 2. கண்கள்—2
3. மூக்குத்துளைகள்—2 4. வாய்—1
5. குறி—1 6. எருவாயில்—1 (மலக்கழிக்கும் வழி)
ஆக மொத்தம் 9

674. ஒன்பது புனித தீர்த்தங்கள் எவை?

1. கங்கை 2. யமுனே 3. கோதாவரி
4. நர்மதை 5. சரஸ்வதி 6. காவிரி
7. குமரி 8 பாலாறு (பயோஷ்ணி)
9. சரயு என்பன

675. அட்டமா (எண்வகை) சித்திகள் எவை?

1. அணிமா — மக்கள் மத்தியிலிருந்து கொண்டே அவர்தம் கண்களுக்குப் புலப்படாமை (அணுப்போல சிறிதாதல்)

2. மகிமா — எல்லா விடங்களிலும் ஒரே காலத்தில் காணப்படல் (மேரு மலே போலப் பெரிதாதல்)

3 லகிமா — உடலே மிகவும் லேசாக்கிக்கொள்ளுதல்

[நம் நாட்டு நிலப்பகுதி ஜம்புத்தீவில் (நாவலந்தீவு) அடங்கியதாகும்.]

686. ஏழு வகை இசைகள் யாவை?

1) குரல் 2) துத்தம் 3) கைக்கிளை
4) உழை 5) கிளி 6) விளரி
7) தாரம் என்பன

687. ஏழுவகைத் தாளங்கள் எவை?

1. துருவம் 2. மட்டியம் 3. ரூபகம்
4. சம்பை 5. திரிபுடை 6. ஹடதாளம்
7. ஏகதாளம்

688. சப்த ஸ்வரங்கள் எவை?

1. ஷட்ஜம் 2. ரிஷபம் 3. காந்தாரம்
4. மத்திமம் 5. பஞ்சமம் 6. தைவதம்
7. நிஷாதம்- என்பன.

689. ஏழுவகை அன்னங்கள் (உணவுகள்) எவை எவை?

1. சுத்தான்னம் (சோறு மட்டும்)
2. மத்வன்னம் (தேன் கலந்த சோறு)
3. தத்யன்னம் (தயிர்கலந்த சோறு)
4. பாயசான்னம் (அரிசி, பயிற்றம்பருப்பு கலந்த சோறு)
5. கிருசாரன்னம் (அரிசி, எள் பொடி, நெய் கலந்த சோறு)
6. குளான்னம் (அரிசி, பால், வெல்லம், நெய் கலந்த சோறு)
7. முற்கான்னம் (அரிசி, சிறுபயறு தேங்காய்த் துருவல் கலந்த சோறு)

690. முதல் எழு வள்ளல்கள் யாவர்?

1. குமுணன் 2. சகரன் 3. சகாரன்
4. செம்பியன் 5. துந்துமாரி 6. நளன்
7. நிருதி என்போராவர்.

691. இடையெழு வள்ளல்கள் யாவர்?

1 அக்குரன் 2. சந்திமான் 3. அந்திமான்
4. சிசுபாலன் 5 தந்தவக்கிரன் 6. கன்னன்
7. சந்தன் என்போர்.

692. கடையெழு வள்ளல்கள் யாவர்?

1 பாரி 2. மலையமான் திருமுடிக்காரி 3. வல்வில்ஓரி
4. ஆய் அண்டிரன் 5. அதியமான் 6. பேகன்
7. கோப்பெருநற்கிள்ளி என்போர்.

693. அறு சுவைகள் எவை?

இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு என்பன.

694. ஆறுவகை பகைக் குணங்களை எழுதி அவ்வக்குணங்களால் அழிவுற்றோர் பெயர்களையும் கூறுக.

1. காமத்தால் — தயரதனும்
2. குரோதத்தால்— கம்சனும்
3. லோபத்தால் — துரியோதனனும்
4. மோகத்தால் — இராவணனும்
5. மதத்தால் / ஆணவம் } —சூராபன்மனும்
6. மாற்சர்யத்தால்— சிசுபாலனும் அழிவுற்றார்கள்

695. ஆறு வகைப்படைகள் எவை?

1) மூலப்படை
4) காட்டுப்படை
2) கூலிப்படை
5) துணைப்படை
3) நாட்டுப்படை
6) பகைப்படை என்பன

696. பஞ்ச பட்சிகள் எனப்படுபவை எவை?

1. வல்லூறு 2. ஆந்தை 3. கோழி 4. காகம்
5. மயில்

697. பஞ்ச (ஐந்து) திரவியங்கள் எவை?

1. ஏலம் 2. லவங்கம் 3. அதிமதுரம்
4. கோஷ்டம் 5. சண்பக மொட்டு என்பன.

698. பஞ்ச ரத்தினங்கள் எவை?

1. பொன் 2. சுகந்தி 3. மரகதம் 4. மாணிக்கம்
5. முத்து முதலியன.

699. பஞ்ச விசுவகர்மாக்கள் என்போர் யாவர்?

1. பொன், வெள்ளி வேலை செய்வோர் (ஆச்சாரி)
2. தச்சு வேலை செய்வோர் (தச்சர்)
3. இரும்பு வேலை செய்வோர் (கொல்லர்)
4. மண் வேலை செய்வோர் (குலாலர்)
5. கல்வேலை செய்வோர் (ஸ்தபதி)
ஆகிய ஐவகையினரும் பஞ்ச விசுவகர்மாக்கள் எனப்படுவர்.

700. ஐவகை இசைக்கருவிகள் யாவை?

1) தோற் கருவி
2) துளைக் கருவி
3) நரம்புக் கருவி
4) கஞ்சக் கருவி
5) கண்டக் கருவி என்பன.

701. பஞ்ச லோகங்கள் எவை?

1. பொன் 2. வெள்ளி 3) செம்பு
4. இரும்பு 5. ஈயம் என்பன.

702. ஐவகைத் தெய்வமணிகள் யாவை?

1) சிந்தாமணி 2) சூடாமணி 3) சூளாமணி
4) சியந்தகமணி 5) கௌஸ்துபமணி

703. பஞ்ச தருக்கள் எவை?

அரிச்சந்தனம் கற்பகத்தரு சந்தனம்
பாரிஜாதம் மந்தாரம்

704. பஞ்சமா பாதகங்கள் எவை?

1) தங்கம் திருடுதல்
2) பிராமணனைக் கொலை செய்தல்
3) கள் குடித்தல்
4) குருவின் மனைவியுடன் புணர்தல்
5) மேற்சொல்லிய நான்கு பாவங்களையும் செய்வோருடன் சேர்தல்.

705. ஐவகை தலை அலங்காரங்கள் யாவை?

1. உச்சி முடித்தல் 3. சுருட்டி முடித்தல்
3. முடிந்து தொங்க விடுதல்
4. பின்னி விடுதல் 5. பின் செருகுதல்

706. பஞ்ச வண்ணங்கள் எவை?

1. கருமை 2. செம்மை 3. பச்சை
4. மஞ்சள் 5. வெண்மை என்பன.

707. நால்வகை யாழ்கள் யாவை?

1) பேரியாழ் (21 நரம்புகளையுடையது)
2) சகோடயாழ் (16 நரம்புகளையுடையது)

3) மகரயாழ் (17 நரம்புகளையுடையது)
4) செங்கோட்டியாழ் (7 நரம்புகளையுடையது)

708. நான்கு வகைப் பொன்கள் யாவை?

ஆடகம் கிளிச்சிறை சாம்பூநதம்
சாதரூபம்.

709. நால்வகை உபாயங்கள் யாவை?

1) சாமம் 2) தானம் 3) பேதம் 4) தண்டம்.

710. நால்வகைக் கவிகள் எவை?

1) ஆசுகவி 2) மதுரகவி 3) சித்திரகவி
4) வித்தாரகவி என்பன.

711. நாற்றிசையிலிருந்து வீசும்காற்றுக்கு வழங்கப்படும் பெயர்களைக் கூறு.

1. கிழக்கு—கொண்டல் 3. தெற்கு—தென்றல்
2. மேற்கு—கோடை 4. வடக்கு—வாடை

712. உணவின் நான்கு வகைகள் எவை?

1. உண்ணல் — (சோறு முதலியன)
2. தின்னல் — (காய்கறி முதலியன)
3. பருகல் — (நீர், பாயசம் முதலியன)
4. நக்கல் — (தேன், பச்சடி முதலியன)

713. நால் வகைக் கரணங்கள் எவை?

1. மனம் 2. புத்தி 3. சித்தம் 4. அகங்காரம்

714. தோற்கருவி நான்கு எவை?

1. மத்தளம் 2. தண்ணுமை 3. இடக்கை
4. சல்லியம் என்பன.

715. நால்வகை அரண்களைக் கூறு.

1. மலையரண் 2. காட்டரண் 3. கடலரண்
4. மதிலரண்

716. மூவகைப் பாவங்கள் எவை?

1. தானே பாவங்களைச் செய்தல்
2. பிறரைப் பாவங்களைச் செய்யும்படிச் செய்தல்
3 பாவங்களைச் செய்வோருக்கு உடன்பட்டுத் துணையாக இருத்தல்.

717. முக்கனிகள் எவை?

மா, பலா, வாழை.

718. திரிகடுகம் எவை?

சுக்கு, மிளகு, திப்பிலி.

719. மும் முரசுகள் எவை?

1) வீரமுரசு 2) வெற்றிமுரசு 3) தியாகமுரசு

720. முந்நீர் என்பது எது?

1) ஆற்றுநீர் 2) மழைநீர் 3) வேற்றுநீர் (ஊற்றுநீர்) இம்மூன்று நீர்களும் கடலில் சேர்வதால் கடலுக்கு முந்நீர் என்று பெயர்.

721. காசி, கயையாத்திரை சென்று வந்தவர்கள் ஏதேனும் ஒரு காய், கனியை உண்ணாமல் விட்டுவிடுவதன் கருத்துயாது?

காசியைப் போல் கயாவும் முக்கியத் தலமாகும். யாத்திரை புரிவோர் எல்லாத் தலங்களுக்கும் போக இயலாதவர்கள் பிரயாகை, காசி, கயை என்ற இந்த மூன்றையும் தவறாமல் சேவிக்க வேண்டும்' பிரயா கையில் முண்டம், காசியில் தண்டம், கயையில் பிண்டம்

என்பது பழமொழி. அதாவது பிரயாகையில் சவுளஞ் செய்து கொள்ள (முடி வாங்கிக் கொள்ள) வேண்டும்; காசியில் விசுவநாதரை நன்கு வணங்க வேண்டும்; கயையில் பிதிர்களுக்கும் பிண்டம் போட வேண்டும்.

கயையில் பிண்டந்தான் பிரதானம்.

கயாசுரன் என்பவன் சிறந்த நாராயண பக்தன். அவன் இருந்து தவஞ்செய்து நற்கதி பெற்றதனால் இத் தலம் தூய்மை பெற்றது. அதனால் கயா என்று அவன் பெயரைப் பெற்றது. பல்குணி நதி ஓடுகின்றது. வடக்கு நோக்கி ஓடும் இந் நதியில் எல்லாத் தீர்த்தங்களும்; எல்லாத் தலங்களும் (கயாவிலுய்) அடங்குகின்றன என்பது மரபு.

பல்குணி நதிக்கரையில் விஷ்ணு பாதம் உளது. விஷ்ணு பாதக்கோயிலுக்கு $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் அட்சய வடம் என்ற பழமைமிக்க ஆலவிருட்சம் உளது. அதன்கீழ் நம்மிடம் உள்ள தீமைகளில் சிலவற்றைத் தள்ளிவிட வேண்டும். இந்த வழக்கத்திற்குப்பதிலாக இப்போது இலை காய்கனிகள் இவைகளில் ஒன்றை விட்டு விடுகின்றனர்கள்.

722. அக்ரஹாரம்' என்பதன் பொருள் யாது?

அக்ரம் என்றால் ஆரம்பம் என்று பொருள், ஹரியும் ஹரனுமாக—ஒருகோடியில் திருமால் கோயிலும் மற்றொரு கோடியில் சிவன் கோயிலுமாக, ஊரின் எல்லையில்—ஆரம்பத்தில் அமைந்த, ஊர் – இருப்பிடத்திற்கு; அக்ரஹாரம் என்று பெயர்.

பிற்காலத்தில் இப்பொருள் மாறி ஒரு குறிப்பிட்ட இனத்தாருடைய, இருப்பிடம் என்று கூறும் சொல்லாக வழங்கலாயிற்று.

723. முத்து பிறக்கும் இடங்கள் எவை எவை?

1. தந்தி(யானை) 2. பன்றி மருப்பு
3. கிளிஞ்சல்(சிப்பி) 4. பூகம்(பாக்குமரம்)

5. வாழை(கதலி) 6 நந்து
7. சங்கு(சலஞ்சலம்) 8. மீன்தலை
9. கொக்கு 10. தாமரை
11. பெண்கள் கழுத்து 12. நெல்
13. மூங்கில் 14. கரும்பு
15. பசுவின்பல் 16. கட்செவி (பாம்பு)
17. மேகம் 18 இந்து 19. உடும்பு
20 கரா(முதலை)

"தந்தி வராகம் மருப்பு இப்பி பூகம் தனிக்கதலி நந்து சலஞ்சலம் மீன்தலை கொக்கு நளின மின்னுர் கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின்பல் கட்செவிகார் இந்து உடும்பு கரா முத்தம் ஈனும் இருபதுமே"

724. அயிராவதம் (ஐராவதம்), அயிராவணம் (ஐராவணம்) எனப்படுபவை யாவை?

1. ஐராவதம் — 4 தந்தங்களை உடைய வெள்ளை யானை. இது இந்திரனுக்கு உரியது. அஷ்டதிக்கு கஜங்களுள் இது கிழக்குத் திசைக்குரியது (இதன் பிடிக்கு— பெண் யானைக்கு 'அப்பிரமை' என்று பெயர்)

2. ஐராவணம் — இது 2000 தந்தங்களை உடைய வெள்ளை யானை. கயிலாயத்தில் இருப்பது— சிவபெருமானுக்குரியது.

725. "மகர சங்கராந்தி என்பது யாது?

'மகர மாதம் என்பது "தை" மாதம். சூரியன் வடக்கு முகமாகச் சஞ்சரிக்கத் தொடங்கி மகர ராசியில் பிரவேசிக்கும் நாள் மகர சங்கராந்தி எனப்படும். உத்தராயணத்தின் தொடக்க நாள். இந்நாளில்தான் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்,

726. வருஷப் பிறப்பன்று வேப்பம்பூ பச்சடி அருந்துவதன் கருத்து யாது?

வருஷத்தின் ஆரம்பநாள். ஆறுருதுக்களும் நவக்கிரகங்களின் முறையும் மாறி, நமக்குத் தருகின்ற நன்மை

தீமையாகிய பயன்களை நாம் இறைவனின் செயலாகவே எண்ணி இன்பமாக அநுபவிக்க வேண்டும்.

கசப்புக்கு இருப்பிடம் வேம்பு.
இனிப்புக்கு இருப்பிடம் கரும்பு.

வேப்பம்பூவுடன் வெல்லம் சேர்த்து பச்சடியாக்கி உலக வாழ்க்கை எனும் வேம்பை, அன்பென்னும் பாகினால் சமப்படுத்தி; நன்மை தீமை ஆகிய இரண்டையும் சமநிலையில் அநுபவிக்க வேண்டும் என்னும் உணர்வைப் பெறவே இந்நாளில் வேப்பம்பூ பச்சடி அருந்தும் வழக்கத்தை நம் முன்னோர் நமக்குத் தந்தனர்.

727. நெருப்பில் செய்யக் கூடாதவை யாவை?

நெருப்பை வாயால் ஊதக் கூடாது; காலினால் தாண்டக்கூடாது; கையால் தொடக்கூடாது; கால்களைத் தீயில் காய்ச்சக்கூடாது; அதில் அசுத்தமான பொருள்களைப் போடக்கூடாது.

728. பாசுபத அஸ்திரம் (பாசுபதாஸ்திரம்) என்பதன் அமைப்பை எழுதுக.

இது ஒருசிவ அஸ்திரம். சூரியனைப்போலப் பிரகாசமுடையதாய், தேவர்களின் சாரமாய், 1000 கைகளும் நாக்குகளும் வாய்களும் உடையதாகி, பயத்தைத்தரக் கூடியதாய், பாம்புவடிவாகி. கைகளில் பலவித கொடிய ஆயுதங்களைப் பெற்று, தன்னிகரின்றி அனைத்திற்கும் பயத்தைத் தருவதாகி விளங்கும் தன்மையது.

729. ஏழில் என்று எதற்குப் பெயர்?

ஏழு + இல் = ஏழில்.

ஏழு துவாரங்களையுடையது - நாதஸ்வரத்திற்குப் பெயர். அதில் 7 துவாரங்களே பயன்படுவன. அதன் கீழ் உள்ள 5 துவாரங்கள் பயனற்றவை.

730. பெண்கள் திருமாங்கல்யசரட்டினை எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்?

திருமாங்கல்ய சரடு நூலிழை ஒன்று பிரிந்தாலும், சனி, செவ்வாய்க்கிழமையில்லாத மற்ற நாள்களில் ராகு -காலம் மரணயோகம் இல்லாத வேளைகளில் வேறு மாங்கல்யசரட்டினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்:

(மாங்கல்யசரடு மஞ்சள் கயிற்றில் இருப்பதே சிறந்தது)

731. வீட்டில் வளர்க்கத்தகாத மரங்கள் எவை எவை?

1. அகத்தி 2. அலரி 3. முருக்கு
4. எருக்கு 5. பருத்தி 6. நந்தியாவட்டம்
7. கருங்காலி 8. ஆல் என்பன.

732. களஞ்சியத்தில் நெல் சேமிக்க உகந்த குறிப்புக்களை எழுதுக?

களஞ்சியத்தில் நெல் சேமிக்க

சனிக்கிழமையே நன்று. சனிக்கிழமையன்று வரும் ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம், ஆகிய லக்னங்களில் சேமிக்க வேண்டும். நெல் கொட்ட கர்ப்பிணிகள், கன்னிப்பெண்கள் உத்தமம்.

733. இலக்குமி வாசம் செய்யும் சில இடங்களைக் கூறுக.

1. தாமரைமலர் 2. யானையின் முன்புறம் (மத்தகம்)
3. பசுவின் பின்புறம் 4. வில்வம்
5. கற்புடைப் பெண்டிரின் தலையின் நேர்வகிட்டின் முன்புறம் முதலியன.

734. பாண்டவர்களின் கைகளில் இருந்த சங்குகளின் பெயர்கள் யாவை?

தருமரின் கையிலிருந்த சங்கு—அனந்தவிஜயம்
விமனின் கையிலிருந்த சங்கு—பவுண்டரம்
அருச்சுனனின் கையிலிருந்த சங்கு—தேவதத்தம்
நகுலனின் கையிலிருந்த சங்கு—சுகோஷம்.
சகாதேவனின் கையிலிருந்த சங்கு—புஷ்பகம்.
[கண்ணபிரானின் கையில் இருந்த சங்கு-பாஞ்ச சன்னியம்]

735. நதி—நதம் வேறுபாடு யாது?

கிழக்குநோக்கி ஒடுவதும்; ஒடிச்சென்று தானே கடலில் கலந்து விடுவதும் நதி எனப்படும்.

மேற்குநோக்கி ஓடுவதும்; ஓடிச்சென்று பிற நதிகளுடன் சேர்ந்துகடலில் கலப்பதும் நதம் எனப்படும்.

736. மன்மதனின் மலரம்புகள் எவை?

(1) தாமரைப்பூ (2) மாம்பூ (3) அசோகுப்பூ
(4) முல்லைப்பூ (5) நீலோற்பலம் என்பன.

[மன்மதனின் வாகனம்-தென்றலாகியதேர், இதனை இழுத்து வருவது கிளி. மன்மதனின்வில் = கரும்பு. மன்மதனின்படை = பெண்டிர்]

737. 'அசரீரி' என்பதன் பொருள் யாது?

சரீரம்: உடம்பு. உடம்பையுடையது = சரீரி,

'அ' சேருமாயின் எதிர்மறைப் பொருளைத் தரும்.

ஆகவே அசரீரி என்ருல் உடம்பில்லாதது என்று பொருள். உடம்பு கண்ணுக்குத் தோன்ருமல் குரல் (ஓசை) மட்டும் கேட்குமாயின் அதனை அசரீரி என்று சொல்லுகிருேம்.

புராண வரலாறுகளில் அசரீரியாகச் சொல்லியதாகக் கதைகளில் வரும். சொல்லியவர் உடம்பு வெளிப்பட வில்லை—குரல் மட்டும் கேட்டது என்பது பொருள்.

738. பண்களில் பகல், இரவுக்காலப் பண்களாகப் பிரித்துச்சொல்லப் படுபவைகளை எழுதுக.

பகற்பண்கள் : புறநீர்மை, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கௌசிகம், இந்தளம், தக்கேசி, சாதாரி, நட்டபாடை, நட்ட ராகம், பழம்பஞ்சுரம், காந்தார பஞ்சமம்

இராப்பண்கள்: தக்கராகம், பழந்தக்கராகம். சீகாமரம், கொல்லி, கொல்லிக்கௌவாணம், வியாழக் குறிஞ்சி, யேகராகக்குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி, குறிஞ்சி.

பொதுப்பண்கள்: செவ்வழி, செந்துருத்தி. தாண்டகம்.

739. 23 வகை வீணைகள் எவை?

1. சித்ரா	2. சிந்திரிகை	3. கூர்மிகை
4. சாரங்கி	5. இராவணசுரம்	6. கின்னரி
7. வராளி,	8. குச்சிகை	9. விபஞ்சி
10. பரிவாதினி	11. சகளவல்லகி	12 சரவீணை
13. அகரலிதம்	14 மஹதி	15. பிருகதி
16. லகுவாச்சி	17. ருத்ரிகை	18. களாவதி
19. கச்சபி	20. காந்தாரி	21. அநுமதம்
22 கீஸ்தி	23. கோசாவளி என்பன.	

740. 'நகரத்தார்கள்' என்று எம்மரபினர்க்குப் பெயர்? அதற்கான காரணம் யாது? அவர்க்கு வழங்கும் வேறு பெயர்களையும் எழுதுக.

நாட்டுக்கோட்டை செட்டிமார்களே 'நகரத்தார்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

முன்னளில் சோழ, பாண்டிய மன்னர்களுக்கு முடிசூட்டும் உரிமை பெற்று அதனுல் வந்த மகுட தனவைசியர்' என்னும் பெயரும், இரத்தின வாணிகம் செய்தமையால் வந்த 'இரத்தின தனவைசியர்' என்னும்

பெயரும், பூம்புகார்ப் பெரு நகரத்தில் வசித்தமையால் வந்த, 'நகர தனவைசியர்' என்னும் பெயரும், வகுத்துக் கொண்ட எல்லேக்குட்பட்டே மனேவாழ்க்கை நடத்தி வருகின்றமையால் வந்த 'நாட்டுக்கோட்டை நகரத்தார்' என்னும் பெயரும், குறுநில மன்னர்களாய் வாழ்ந்த மையால் வந்த 'பூபால தனவைசியர்' என்னும் பெயரும் உடையவர்கள் ஆவர் சிவநெறி ஒன்றேபற்றி ஒழுகிச் சிவாலயத் திருப்பணி, வேதாகம பாடசாலே, திருமுறைப் பாடசாலே, குருபூஜை மடம், நந்தனவனம், பசுமடம் ஆகியவற்றைப் பலதல ங்களில் நிறுவிப் பதி புண்ணியச் சீலர்களாகவும் 'அன்னசத்திரம், கல்விக்கூடம், தண்ணீர்ப்பந்தல், சாலே ஆகியவற்றை நிறுவிப் பசு புண்ணிய சீலர்களாகவும் இவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

741. 'கார் காத்த வேளாளர்' என்னும் பெயர் எவ்வாறு வந்தது?

உக்கிரகுமார பாண்டியன் ஆட்சி செய்துவந்த காலத்து, மழை பெய்யாமல் போகவே, கோபங் கொண்ட பாண்டியன், மேகங்களேப் பிடித்துக்கட்டி விலங்கிட்டானும். அதுகண்ட இந்திரன் (மேகங்களுக்குத் தலேவன்) ''மேகங்களே விட்டுவிடு, மழையைப்பெய்விக் கின்றேன்'' என்று கேட்டுக்கொண்டான், அவன் சொல்லில் பாண்டியனுக்கு நம்பிக்கை ஏற்படாமற் போயிற்று. அதனுல் மேகங்களே விடவில்லே. அப்போது வேளாளர்கள் இந்திரனுக்காக ஜாமீனுக இருந்து (பிணேயமாக இருந்து) மேகங்களே விடுவிக்கச் செய்தனர். அதனுல் அந்த வேளாளர்களுக்குக் கார்காத்த வேளாளர் (கார்=மேகம்) என்ற பெயர் வழங்கலாயிற்று.

இதனால் அம்மரபினர் இன்றும் அப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

742. வனஸ்பதி என்று எவற்றிற்குப் பெயர்? விவரி.

காய்களைப் பார்க்கலாம். பழங்களைப் பார்க்கலாம். ஆனால் அவற்றின் பூக்களைப் பார்க்க முடியாது. இவ்வாறு பூக்கள் தோன்ருமல் பழங்கள் தோன்றும் மரங்களுக்கு **வனஸ்பதி** என்று பெயர். அரசமரம், அத்திமரம், ஆலமரம் போன்றவை வனஸ்பதி. இவை புனிதமானவை இவற்றின் அடியில் செய்யப்படும் எந்த நற்காரியங்களுக்கும் 100 மடங்கு பலன்.

743. நாதசுரம் என்னும் இசைக்கருவியின் வகைகள் யாவை?

1. **பாரிநாதஸ்வரம்**:- இது எல்லோராலும் கையாளப் படுவது
2 **திமிரி**:- இது சற்று குட்டையானது பாரிநாதஸ்வரத்தைவிட கூடுதலான சுதி உடையது.
3. **முகவீணை** - மிகவும் சிறியது. ஆனால் திமிரியை விடச் சுதி அதிகம்.

744. சூரியகாந்தக்கல், சந்திரகாந்தக்கல், -இவற்றின் தன்மையாது?

இவையிரண்டும் ஒருவகையான உயர்ந்த வகைக் கற்களாம். சூரியகாந்தக்கல்—சூரிய ஒளியில் நெருப்பை வெளிப்படுத்தும்.

சந்திரகாந்தக்கல்—சந்திர ஒளியில் நீரை வெளிப் படுத்தும்.

745. 'கஸ்தூரி' என்பது யாது? எங்குக் கிடைக்கிறது?

இது ஒருவகை வாசனைப் பொருள். பெரிய மலைப் பகுதிகளில் வாழும் மான்களின் வயிற்றில் உண்டாகின்றது. ஜன்னி முதலான நோய்களுக்கு மருந்தாக மருத்துவர்கள் இதைப் பயன்படுததுகின்றனர்.

746. 'கோரோசனம்' என்பது யாது?

பசுவின் வயிற்றில் உண்டாகும் ஒருவகைப்பொருள். இதை 'கோரோசனை' என்றுங்கூறுவர். மருந்துப்பொருளாக இது பயன்படுகிறது. சீதளம் முதலிய நோய்களுக்கு இதை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

747. 'ஆர்யாவர்த்தம்' என்று எப்பகுதிக்குப் பெயர் வழங்கியது?

கிழக்கில் வங்காள விரிகுடா, மேற்கில் அரபிக்கடல், வடக்கே இமயமலை, தெற்கே விந்தியமலை ஆகிய இவ் வெல்லைகளுக்கு உட்பட்ட பகுதியே பண்டைய நாளில் ஆர்யாவர்த்தம் என்று வழங்கப்பட்டு வந்தது. இப்பகுதி புராணங்களில் புண்ணிய பூமியாகப் பேசப்படுகிறது.

748. இராமபிரானின் முன்னோர்களின் பெயர்களை எழுது.

1 திருமால் 2. பிரம்மா 3. மரீசி 4. காசிபர் 5. சூரியன் 6. மநு 7 இட்சுவாகு 8. குக்ஷி 9. விகுக்ஷி 10. பாணன் 11. அநரண்யன் 12. பிருது 13 .திரிசங்கு 14. அரிச்சந்திரன் 15. துந்துமாரன் 16. யுவனச்வன் 17. மாந்தாதா 18 சுசந்தி 19. துருவசந்தி 20. பரதன் 21, அஜிதன் 22. சகரன் 23 அசமஞ்சன் 24. அம்சுமான் 25. திலீபன் 26. காகுத்தன் 27. ரகு 28. பிரவிருத்தனன் 29. சங்கணன் 30 சுதர்சனன் 31. அக்னிவர்ணன் 32, சீக்ரகன் 33. மரு 34. பிருசுசுருகன்

35. அம்பரீஷன் 36 நகுஷன் 37. யயாதி 38. நாபாகன் 39 அஜன் 40. தசரதன் 41. இராமர்.

749. 'கஜகர்ணம்' என்ருல் என்ன? (கஜகர்ண வித்தை)

இந்திரனுடைய யானையின் பெயர் ஐராவதம் கஜ கர்ணம் என்ருல் இந்த யானைக்கு மற்ருெருபெயர் (கர்ணம்: வித்தை, கஜம் யானை) இந்த யானை நான்கு கால்களையும் தரையில் ஊன்றி நிற்கும். வேறெந்த யானையும் நான்கு கால்களையும் தரையில் நிலையாகவூன்றி நிற்காது. இதற்குத்தான் கஜகர்ணவித்தை என்று பெயர்.

750. கோகர்ணம் (வித்தை)' என்ருல் என்ன?

கோ = பசு கர்ணம் = வித்தை. பசுவை நாம் எந்த இடத்தில் தொடுகிருேமோ அந்த இடத்தை மட்டும் அது சிலிர்க்கும். இவ்வாறு செய்ய வல்ல செயலுக்குத்தான் கோகர்ணம்—கோகர்ணவித்தை என்று பெயர் இது மிகவும் அரிதான செயல்

751. அந்தகஜநியாயம் (அந்த அத்தி நியாயம்) என்பது யாது?

(கஜம், அத்தி = யானை)

யானையைக்காண எண்ணிய குருடன் ஒருவன் யானையின் ஓர் உறுப்பைத் தடவிப்பார்த்து யானையின் வடிவை நிச்சயிப்பது போல்வது. அதாவது ஒன்றை முழுவதும் ஆராயாது ஒரு பகுதியை மட்டும் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்வது போன்றது.

752. காகதாலிய நியாயம்—என்பது யாது?

பனைமரத்தின் மீது காகம் ஏறவும் பனம்பழம் விழவும் உள்ள சம்பந்தமே காகதாலிய நியாயம் என்று சொல்லப்படும்.

753. 'ஸ்தாலிபுலாக நியாயம்' என்றால் என்ன?

ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்று கொள்வதையே இவ்வாறு கூறுவர்.

754. '"ப்ரமரகீட நியாயம்'; என்பது யாது?

குளவியானது, அரக்கு அல்லது மண்ணால் கூடு கட்டும். புழுக்களை வயிறார உண்டு அடுத்த வேளைகளுக்கும் கூண்டில் புழுக்களை அடைத்து வைக்கும். ஒவ்வொரு முறையும் குளவி, வெளியில் சென்று வந்ததும், புழுக்கள் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்வதுபோல அப்புழுக்களைக் குளவிகொட்டும். சப்தத்தைக் கேட்பதாலும் எப்போது வந்து கொட்டுமோ என்று இடைவிடாது எண்ணிக் கொண்டேயிருப்பதாலும் அந்தப் புழுக்களே குளவிகளாக மாறி விடுகின்றன. இதை "ப்ரமரகீடநியாயம்" என்று சொல்வர். இதேபோல் பிரும்மத்தைத்தியானம் செய்யச்செய்ய ஜீவனும் பிரும்மமாகிவிடும் என்பர்.

755. இதிகாசங்கள் என்பதற்குப் பொருள் யாது? அவை எவை?

'இவர்கள் இப்படி வாழ்ந்தார்கள்' என்பதுவே இதிகாசம் என்பதன் பொருள். மக்களின் வாழ்க்கைக்கு — வாழவேண்டிய நெறிகளுக்கு வழிகாட்டியாகும் நூல்களே இதிகாசங்கள்.

மகாபாரதம், இராமாயணம் இவையிரண்டும் இதிகாசங்களாகும்.

756. இராமாயணம் நடந்த யுகம் எது?

திரேதாயுகம்.

757. இராமருக்கும் சீதைக்கும் எந்த வயதில் திருமணம் நடைபெற்றது?

இராமருக்கு வயது 15 சீதைக்கு வயது 6.

(இந்த வயது அளவினை, நாம் இக்காலக் கணக்கில் பார்க்காமல் அந்த யுகத்தினுடைய சூழ்நிலையில் பார்க்க வேண்டும்)

758. ஜனகரின் புதல்வியர் பெயர்களையும் அவர்களைமணந்தோரின் பெயர்களையும் கூறுக.

1. ஜனகரின் வளர்ப்புமகளான சீதையை—இராமரும் ஜனகர்தான் பெற்றெடுத்த பெண்களான

ஊர்மிளையை	—இலக்குவனும்
மாண்டவியை	– பரதனும்
ச்ருதகீர்த்தியை	—சத்துருக்கனும்

திருமணங் கொண்டனர்.

759. திரிதராஷ்டிரனின் புத்திரர்கள் நூற்றுவரின் பெயர்களை எழுதுக.

1, துரியோதனன் 2. யுயுத்சு 3. துச்சாதனன் 4 துச்சகன் 5. துச்சலன் 6. துர்முகன் 7. விளிஞ்சதி 8. விகர்ணன் 9. சலசந்தன் 10 சுலோசனன் 11. விந்தன் 12. அதுவிந்தன் 13. தூர்த்தருஷன் 14 சுவாகு 15 துர்ப்பிரதருஷணன் 16. துர்மருஷ்ணன் 17 துருமுகன் 18. துர்க்கருணன் 19. கர்ணன் 20. சித்திரன் 21. உபசித்திரன் 22. சித்திராக்கன் 23 சாரு 24. சித்திராங்கன் 25. துர்மதன் 26. துர்பிரகாஷன் 27. விவித்சு 28 விகடன் 29. சமன் 30. ஊர்ணநாபன் 31. பத்மநாபன் 32. நந்தன் 33. உபநந்தன் 34. சேனுபதி 35. சுடேணன் 36 கண்டோதரன் 37. மகோதரன் 38. சித்திரவாகு 39. சித்ரவர்மா 40. சுவர்மா 41. துருவிரோசனன் 42. அயோவாகு 43. மஹாவாகு

44. சித்திரசாயன் 45 சுகுண்டலன் 46. வீமவேகன்
47. வீமபாலன் 48. பாலகன் 49. வீமவிக்ரமன்
50. உக்ராயுதன் 51. வீமசரன் 52 கனகாயு
53. திருஷாயுதன் 54. திருஷவர்மா 55. திருஷகத்ரன்
56. சோமகீர்த்தி 57. அநூதரன் 58 சராசந்தன்
59. திருஷசந்தன் 60. சத்தியகந்தன் 61. சகச்சிரவாகு
62. உக்ரசிரவா 63. உக்ரசேனன் 64 சேஞனி
65. மகமூர்த்தி 66. அபராஜிதன் 67. பண்டிதகன்
68. விசாலாக்ஷன் 69. துராதரன் 70. திருஷகத்தன்
71 சுகத்தன் 72. வாதவேகன் 73. சுவர்ச்சசன்
74. ஆதித்யகேது 75. வெகுவாதி 76 நாகத்தன்
77. அநுயாயி 78. நிஷல்கி 79. கவசி 80 தண்டி
81. தண்டதரன் 82 தனுக்கிரகன் 83. உக்கிரன் 84 பீமரதன்
85. வீரன் 86. வீரவாகு 87, அலோலுபன் 88 அபயன்
89. ரெளத்ரகம்மன் 90. திருஷரதன் 91 அநாதிருஷ்யன்
92. குண்டபேதன் 93 விராவி 94. தீர்க்கலோசனன்
95. தீர்க்கவாகு 96. மகாவாகு 97. வியுகுடாரு
98, கனகாங்கதன் 99. குண்டசித்து 100. சித்திரகன்
ஆகியோர்.

760. உடம்பிற்குரிய வேறு பெயர்கள் யாவை?

1. தேகம்—தகிக்கப்படுவது

2. யாக்கை:— கட்டப்படுவது (யாத்தல்—கட்டல்)

3. மெய்—மெய்ப்பொருள் இறைவன். அந்த இறைவன் இருக்குமிடம் உள்ளம், உடம்பில் உள்ளம் இருப்பதால்—மெய்ப்பொருளைத் தாங்கும் இதுவும் மெய் என்றே பெயர் பெற்றது. (தானியாகு பெயர்)

4. உடம்பு — இருபத்தைந்து தத்துவங்களையும் பரமாத்மாவிடம் சேர்ப்பிக்க இது உடன்படுவதால் இதற்கு உடம்பு என்று பெயர் வந்தது.

761. 'நிச்சயதார்த்தம் என்றால் என்ன?

நிச்சய தாரத்துவம் என்பதே சரியான சொல். இதுவே வழக்கில் நிச்சயதார்த்தம் என்று வழங்குகிறது. தாரம்—மனைவி. தாரத்துவம்—மனைவியாகும் தன்மை. மனைவியாகும் தன்மையை நிச்சயப்படுத்துவது எனபது இதன் பொருள்.

762. திருமணத்தில் மாங்கல்ய தாரணத்தின் போது மூன்று முடிச்சுகள் போடப்படுவதன் நெறி யாது?

பண்டை நாளில் மணமகன், மணமகளின் கழுத்தில் மாங்கல்யத்தை (தாலியை) வைத்துப் பிடிக்க; மணமகனின் தங்கையும், வரும் அம்மணமகளுக்கு நாத்தனாரும், உத்தமப் பெண் ஒருத்தியுமாக ஆக மூவர் ஒவ்வொரு முடிச்சு போடுவது வழக்கமாக இருந்தது. நாளடைவில் இப்பழக்கம் மாறி. மணமகனே இம் மூன்று முடிச்சுகளையும் போடுகின்ற வழக்கம் வந்து விட்டது.

763. 'திருமணத்தில் மரு உண்ணுதல்' என்று சொல்லப்படுவதன் பொருள் யாது?

திருமண மக்கள் மரு உண்ணுதல் மரபு, மருவி உண்ணல் என்றால் கலந்து உண்ணல் என்பது பொருள், முன்னர் தத்தம் இருப்பிடத்தில் தனித்தனியே இருந்து உண்ட தலைவனும் தலைவியும் திருமணத்திற்குப் பிறகு ஓரிடத்தில் கலந்து உண்ணுவதற்கு மருவி உண்ணுதல் என்று பெயர். இதுவே தற்போது 'மரு உண்ணல்' என்று வழங்குகிறது.

764. 'திகைப்பூண்டு'—என்பது யாது?

தென் இந்தியக்காடுகளில் உள்ள ஒரு வகைப்பூண்டு. இதை மிதித்துவிட்டால் புத்தி மயக்கமடைந்து ஒன்றும் புரியாமல் திகைத்துப்போய் அலைந்து திரிவர்.

[யாரேனும் ஒருவர் திகைத்துப் போய் பிரமித்து நின்றால் அவனைப்பார்த்து "தெக்கப்பூண்டு (திகைப் பூண்டு என்பதன் (மரூஉ) மிதித்த மாதிரி நிற்கிறாயே" என்றும் கேட்கும் வழக்கம் இன்றும் உள்ளது]

765. ஆசனங்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறு?

1. பத்மாசனம் 2. சித்தாசனம்
3. சுவஸ்திகாசனம் 4. சுகாசனம்
5. சிரசாசனம் 6. சர்வாங்க ஆசனம்
7. மத்ஸாசனம் 8. புஜங்காசனம்
9 தனுர் ஆசனம் 10. மயூராசனம்
11. திரிகோணாசனம் 12 சவாசனம்
13. அர்த்தமத்ஸ்யேந்திராசனம்
14. ஹலாசனம் 15. சலபாசனம்
16. பஸ்சிமோத்தானாசனம் 17. யோகமுத்ரா
18. பாதஹஸ்தாசனம் 19. உட்டியாணா
20. நௌளி முதலாக உள்ளவை.

766. 'பத்மாசனத்'தின் அமைப்பைக் கூறுக?

பத்மாசனமாவது— யோகாசனங்களுள் ஒன்று அஃதாவது இடப்பக்கத்தொடையின்மேல் வலக்காலினை யும் வலப்பக்கத் தொடையின்மேல் இடக்காலினையும் மாறவைத்து இருகாற் பெருவிரலை இருகரங்களாலும் மாறியுறப் பிடித்திருத்தல்.

767. புண்ணியங்களாவன யாவை?

மகான்களாலும் சான்றோர்களாலும் தெய்விக, தர்மசாஸ்திர, நீதி நூல்களாலும் செய்யத் தக்கன என்று விதிக்கப்பட்ட நற் செயல்களே புண்ணியங்களாம். இவைகளைச் செய்தல் புண்ணிய உலகப்பயனைத்தரும். கடவுளை வழிபடுதல், பெற்றோரை மதித்து வணங்குதல், குருவை வணங்குதல், உயிர்கட்கு இரங்குதல்,

கொல்லாமை, உண்மை பேசுதல், பெரியோர்களைப் போற்றுதல். நன்றி போற்றுதல் முதலியவைகள் புண்ணியச் செயல்களாம்.

768. பாவங்களாவன எவை?

மகான்களாலும், சான்றோர்களாலும், தெய்விக இலக்கியங்களாலும் தர்ம சாஸ்திரங்களாலும், நீதி நூல்களாலும்; செய்யத்தகாதவை என்று விலக்கப் பட்ட செயல்களே பாவங்களாம். இவற்றைத் தெரிந்துசெய்யாது விலக்கவேண்டும் செய்யின் நரகத் துன்பத்திற்கு ஆளாவோம், கொலை, களவு, பொய், விபசாரம், சூதாடுதல், கள்குடித்தல் முதலியனவாம்.

769. யானைக்கு உண்டாகும் எழுவகை மதநீர் பற்றி எழுதுக.

கன்னங்கள் 2, கண்கள் 2, தந்தத்துவாரம் 2, கோசம் ஆகிய இவ்வேழு இடங்களிலிருந்து தோன்றும் மதநீரே எழுவகை மதநிராகும்.

770. கூத்து எத்தனை வகைப்படும்? அவையாவை?

கூத்து; லாஸ்யம், தாண்டவம் என இருவகைப்படும். மகளிர் ஆடுவது லாஸ்யம், ஆடவர் ஆடுவது தாண்டவம் எனப்படும்

771. நாட்டியத்திற்குப் 'பரதம்' என்று பெயர் வரக் காரணம் யாது?

பரதமுனிவர் அருளிச் செய்தது நாட்டிய சாஸ்திரம். எனவேபரதம் எனப்பெயர் பெற்றது.

772. அறநூலில் அன்னையின் பெருமை எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது?

உபாத்தியாயரை விட 10மடங்கு அதிகம்-ஆசார்யன் ஆசார்யனை விட 10 மடங்கு அதிகம் பிதா (தந்தை).

பிதாவை விட 1000 மடங்கு அதிகம் மதிப்புக்கும் பெருமைக்கும் உரியவள் அன்னை. (தாய்)—என்று சொல்லப்பட்டுள்ளது.

773 'கொல்லம் ஆண்டு' என்னும் முறையாது?

முன்பிருந்த 'கொல்லம்' என்னும் ஊர் (கேரளாவில்) கடல்கொண்டு அழிவுற்றது. அதன்பிறகு தற்போதுள்ள கொல்லம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வூர் அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் எண்ணப்பட்டு வருவதே கொல்லம் ஆண்டு என்னும் கணக்கு முறையாகும். இம்முறை கேரளத்தில் பின்பற்றப் படுகிறது.

774. 'பசலி' எனப்படுவது யாது?

வடநாட்டினை ஆண்ட முகலாயமன்னர் அக்பருடைய காலத்தில் தீர்வை (வரி)ப்பணம் பிரித்துக் கணக்கு பார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆண்டுக் கணக்கு பசலி எனப்படும். இக்கணக்கு, தென்இந்தியா வில், அக்பருடைய மகன் ஷாஜஹானால் இரண்டுஆண்டு கள் கழித்து ஏற்படுத்தப்பட்டது. முன்பு இக்கணக்கு ஆடிமாதம் 1 ஆம் தேதி முதல் தொடங்கியது—பின்பு வசதியையொட்டி ஆங்கில அரசாங்கத்தாரால் இப் பசலிக் கணக்கு ஜுலை 1-ஆம் தேதி முதல் கணக்கிடும் முறை பின்பற்றப்பட்டு இன்றும் வழக்கில் உள்ளது.

775. சாலிவாஹன சகாப்தம் என்றால் என்ன?

சாலிவாஹனன் என்னும் அரசனுடைய ஆளுகை தொட்டு நடப்பது சாலிவாஹன சகாப்தம் எனப்படுகிறது.

இவனே ஜோதிஷ சாஸ்திரங்களை ஒழுங்கு படுத்தியவன்.

776. பேமானி என்பதன் பொருள் யாது?

மானி— விசுவாசம் உடையவன்.

பேய்மானி= பேய் போன்ற விசுவாசமுடையவன் அதாவது விசுவாசம் அற்றவன் என்பது பொருள். இச் சொல்லே பேமானி என்று வழங்குகிறது. (பேமான் என்ற உருதுச் சொல்லிலிருந்து இச்சொல் வந்தாகவும் சொல்வர்.)

777. "சௌபாக்யம்" என்று சொல்லப்படுவதன் பொருளை எழுதுக.

ஞானம். வைராக்கியம், செல்வம், புகழ், ஆசை, பெருமை, வலிமை, விடாமுயற்சி, ஒளி-ஆகிய ஒன்பதும் **"பகம்"** எனப்படும். இவை நல்லவற்றுக்குப் பயன்படு மாயின் **சுபகம்** என்று கொள்ளப்படும். இதைப் பெறும் நிலையே **சௌபாக்யம்** என்று சொல்லப்படுகிறது.

778. குளம். வாவி, ஊருணி, ஏரி—பெயர் விளக்கம்தருக.

குளிப்பதற்கு ஏற்றதாக விளங்குவது —குளம்
நீந்துவதற்குரிய இடத்தொடு அமைந்தது—வாவி.
ஊர்மக்களின்குடி நீருக்குப் பயன்படுவது -- ஊருணி
(ஏருக்கு) உழவுக்குப் பயன்படுவது —ஏரி.

779 தேவை என்று எத்தலத்துக்குப் பெயர்?

இராமேஸ்வரத்திற்குத் "தேவை" என்ற பெயருண்டு. இப்பெயரில் பாடப்பெற்ற நூல் "தேவையுலா" என்ற பெயரில் உள்ளது,

780. பன்னிரண்டு ராசிகளுக்கும் ஆங்கிலத்தில் கூறப்படும் பெயர்களை எழுதுக.

1. மேஷம் — ARIES
2. ரிஷபம் — TAURUS
3. மிதுனம் — GEMINI
4. கடகம் — CANCER

5.	சிம்மம்	—	LEO
6.	கன்னி	—	VIRGO
7.	துலாம்	—	LIBRA
8.	விருச்சிகம்	—	SCORPIO
9.	தனுசு	—	SAGITTARIUS
10.	மகரம்	—	CAPRICORN
11.	கும்பம்	—	AQUARIUS
12.	மீனம்	—	PISCES

781. செய்யக்கூடாத பாவச் செயல்கள் யாவை? எவ்வெவற்றைச் செய்வதால் பிரமஹத்தி தோஷம் உண்டாகும்?

தூங்குகின்றவர்களை எழுப்புவது, புண்ணியக் கதைகளைக் கேட்கும்போது இடையில் எழுந்து செல்வது, அக்கதைகளைச் சொல்லாதபடி தடுப்பது, கணவன் மனைவிகளுக்கிடையே விரோதம் உண்டாக்கிப்பிரிப்பது. தாய்க்கும் மகனுக்கும் பகையை உண்டாக்கிப்பிரிப்பது போன்றவை செய்யக்கூடாத, பாவச் செயல்களாம், இவற்றைச் செய்பவரை பிரமஹத்தி பற்றும் என்று தர்ம சாத்திரம் சொல்கிறது.

782. குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவது எத்தனையாவது நாளில் செய்யப்படவேண்டும்?

குழந்தை பிறந்த 11ஆவது நாளில் (நாமகரணம்) பெயர் சூட்டும் விழாவை நடத்த வேண்டும்.

783. "அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு" —என்று கூறுவதன் பொருள் யாது? விவரி.

வெளியுலகில் அண்டங்கள், அவற்றையடுத்துள்ள கடல்கள் உரிய தேவதைகள் முதலிய அனைத்தும் நம்

பிண்டத்திலும் (தசையாலான உடம்பிலும்) உள்ளன என்பது இத்தொடரின் பொருள். இந்த வகையில் சொல்லப்படும் பொருத்தம் வருமாறு. (இக்கருத்து அபி தான சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளது)

அண்டம்—பிண்டம்

அதலம்	—	உள்ளங்கால்
விதலம்	—	கணைக்கால்
சுதலம்	—	முழங்கால்
நிதலம்	—	முழங்காலுக்கு மேற்பகுதி
தராதலம்	—	தொடை
ரசாதலம்	—	குய்யம்
பாதாலம்	—	இடுப்பு
பூலோகம்	—	தொப்புள்
புவர்லோகம்	—	வயிறு
சுவர்க்கம்	—	இருதயம்
மகாலோகம்	—	தோல்
ஜனோலோகம்	–	முகம்
தபோலோகம்	—	நெற்றி
சத்தியலோகம்	–	தலை

திரிகோணத்திற்கு வலப்பக்கம் கயிலை
இடப்பக்கம் இமயம்
மேற்குப்பக்கம் நிடதம்
தெற்குப்பக்கம் கந்தமாதனம்
இடக்கை உள்ளங்கையில்
உள்ள ரேகைகள் வருணமலை.

நாவலந்தீவு	—	எலும்பு
குசத்தீவு	—	தசை
கிரௌஞ்சத்தீவு	—	நரம்பு
விலட்சத்தீவு	—	மயிர்க்கூட்டம்
புஷ்கரத்தீவு	—	உயிர்
உப்புக்கடல்	—	மூத்திரம் (சிறுநீர்)
பாற்கடல்	—	நீர்
கருப்பங்கடல்	—	வாய்நீர்

தயிர்க்கடல்	—	இரத்தம்
சுத்தோதகம்	—	வாய்எச்சில்.
சூரியன்	—	நாதசக்கரத்திலும்
சந்திரன்	—	பிந்துசக்கரத்திலும்
அங்காரகன்	—	நெற்றியிலும்
புதன்	—	இருதயத்திலும்
சுக்கிரன்	—	வாக்கிலும்
சனி	—	தொப்புளிலும்
ராகு	—	முகத்திலும்
கேது	—	காலிலும் உள்ளனர்.

784. கண்குத்திப் பாம்பு—பற்றிக் கூறுக?

கண் குத்திப்பாம்பு என்று சொல்லப்படும் பாம்பு உண்மையில் உண்டு. சிலவகை நாகப்பாம்புகள் படமெடுத்து தன்னுடைய விஷத்தை எதிரிகளின் மீது துப்பக் கூடியவை. ஒன்பதடிவரை இவை தங்களுடைய விஷத்தை துப்பும். உடலில் இந்த விஷம் பட்டால் பெருமளவில் பாதிப்பு ஏற்படாது. இருப்பினும், புண்ணில் பட்டால் விஷம் பரவும். இந்த நாகப்பாம்பு பொதுவாக எதிரியின் கண்களில் விழும்படி விஷத்தை உமிழும். அவ்விஷத்தால் கண்குருடாகிவிடும்.

785. இராமபிரான் ஒரே அம்பினால் துளைத்த ஏழு மரங்களின் பெயர்கள் யாவை?

ஸப்த சால மரங்கள்

786. "சாரங்கி" என்பது யாது?

தமிழ் நாட்டிலுள்ள இசைக்கருவிகளுள் சாரங்கியும் ஒன்று. இது வடநாட்டில் உள்ள கம்பி வாத்தியத்தைப் போன்றது. இதிலுள்ள நரம்புகளை வலக்கையால் மீட்ட வேண்டும், இந்த இசைக்கருவி தமிழகத்தில் தென் காசியில் உள்ள சிவாலயத்தில் மட்டுமே உள்ளது. இக்

கருவியை கோயிலில் நாடொறும் சாயரட்சை பூஜை முடிந்ததும் தொடங்கி அர்த்தசாம வழிபாடு வரை அம்மன் சந்நிதியில் உள்ள மணி மண்டபத்தில் அமர்ந்து வாசிக்கும் மரபு இருந்துவந்துள்ளது என்பர்.

787. மார்த்தாண்டர் ஆலயம் என்று எதற்குப் பெயர்? எங்குள்ளது?

தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் வட்டத்தில் ஆடுதுறை திருமங்கலக்குடி ஆகியதலங்கட்கு அருகில் உள்ள சூரியனூர் கோயிலில்உள்ள கோயிலுக்கு மார்த்தாண்டர் ஆலயம் என்று பெயர். இங்குக்கருவறை மூர்த்தியாகச் சூரியனும், மற்ற கிரகங்களின் சந்நிதிகள் சுற்றிலும் உள்ளன.

788. மணிப் பிரவாளம் — மணிப்பிரவாள நடை என்றால் என்ன?

மணி என்பது வைரம் போன்ற இரத்தினங்கள்/ மணிகளைக் குறிக்கும். பிரவாளம் என்றால் பவழம். வைரத்தையும் பவழத்தையும் சேர்த்துச் சேர்த்து அமைத்து சரத்தை உருவாக்குவதுபோல; தமிழும் சம்ஸ்கிருதமும் கலந்து சொற்களை அமைத்து எழுதப்படும் நடைக்கு மணிப்பிரவாள நடை என்று பெயர் வந்தது. இந்நடை வைஷ்ணவத்தில் சிறப்பாக—உரையில் இடம் பெற்றுள்ளது.

789. பாண்டவர்கள் விராட நாட்டில் மறைந்து வாழ்ந்த காலத்தில் எவ்வெப் பெயர்களைக் கொண்டிருந்தனர்?

1. தருமன் — கங்கன்
2. வீமன் — பலாயனன்
3. அருச்சுனன் — பிருகன்னளை
4. நகுலன் — தாமக்கிரந்தி

5. சகாதேவன் — தந்திரிபாலன்
6. திரௌபதி — விரதசாரிணி

790. குவலயா பீடம் என்று எதற்குப் பெயர்?

கம்சனுடைய பட்டத்து யானைக்குக் 'குவலயாபீடம்' என்றுபெயர்-கண்ணபிரான் கம்சவதையின் போது இதை அழித்தார்.

791. சிவபெருமானின் இரு செவிகளிலும் குழைகளாக இருந்து இசை யெழுப்பிக் கொண்டிருக்கும் இரு வித்யாதரர்களின் பெயர்கள் யாவை?

1. கம்பளர் 2. அசுவதரர்.

792. 'வைடூர்யம், —பற்றி எழுதுக.

நவமணிகளுள் ஒன்று. தேய்த்தால் பூனையின் கண்ணொளியைப் பிரதிபலிப்பதுபோல ஒளியுள்ள பட்டையுடன் பிரகாசிக்கும் இதனால் இதை ஆங்கிலத்தில் 'பூனைக்கண்' (Cat's eye) என்றும் செல்வர்.

வைடூரியத்தில் (1) கிரிசோபெரில் (2) படிகக்கல் வைடூரியம் (3) குரோசிடலைட் (4) குருந்தம் என நான்கு வகையுண்டு. படிகக்கல் வைடூரியம் என்பதுதான் மிகவும் சாதாரணமானது. கிரிசோபெரில் என்ற வகை தான் மிகுந்த சிறப்புடையது.

793. 'வடக்கிருத்தல்' என்றால் என்ன?

போக நுகர்ச்சியைத்துறந்து யோகத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு முத்தியடைய விரும்புவோரும்; வாழ்வில் மனம் சலிப்புற்று உயிரைப் போக்கிக் கொள்ள விரும்புவோரும், தனியே சென்று ஆற்றிடைக்குறைப் பகுதியில் வடக்கு நோக்கியமர்ந்து உணவுமுதலிய

வைகளைத்துறந்து சிறிது சிறிதாக உடலை ஒடுக்கி உயிரை விடுவது வடக்கிருத்தல் ஆகும்-இப்பழக்கம் சங்ககாலச் சமுதாயத்தில் இடம் பெற்றிருந்தது.

794. விசுவபாரதி' என்பது யாது?

ரவிந்திரநாததாகூரின் தந்தையார் தேவேந்திரநாத தாகூர் என்பவர் கல்கத்தாவிலிருந்து 100 கி. மீ. தொலைவில் உள்ள போல்பூர் என்னுமிடத்தில் திறந்தவெளிப் பரப்பில் ஆசிரமம் ஒன்றைக் 1863ல் கட்டினார். அதற்கு சாந்திநிகேதன் என்று பெயரிட்டார். கோயில் ஒன்றையும் கட்டினார். மக்கள் அனைவரும் தியானம் செய்து பயன்பெற்றனர்.

ரவிந்திரநாததாகூர் இவ்விடத்தில் இயற்கையுடன் இயைந்த ஆன்மீக வளர்ச்சிக்கான கல்வியைப் புகட்டுவதற்காக 1901ல் பள்ளி ஒன்றைத்தொடங்கினார். அது வளர்ந்து இன்று **விசுவபாரதி சர்வதேச பல்கலைக்கழகமாக** விளங்குகின்றது

795. 'திரிசங்கு சொர்க்கம்' என்பதன் பொருள் யாது?

விசுவாமித்திரர் பெரியதவசி. இவருக்குப்பிரமரிஷி என்ற பெயருண்டு. குசிக வம்சத்தைச் சேர்ந்தவராதலால் இவருக்குக்கௌசிகர் என்றும் பெயர், இம்முனிவர் 'திரிசங்கு' என்ற மன்னனைத் தம் தவபலத்தால் உடம்புடனேயே தேவலோகத்திற்கு அனுப்பினார். அதுகண்ட இந்திரன் திரிசங்குவைத் தலைகீழாகத் தள்ளிவிடவே அவன் கீழே விழுந்தவாறே வர, விசுவாமித்திரர் அதைக் கண்டு, மேஷம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் முதலிய நட்சத்திரங்களைக்கொண்டு தென்திசையில் அந்தரத்தில் ஒரு தேவலோகத்தையே (சொர்க்கத்தையே) அவனுக்காகப் படைத்து அவனை அங்கேயே தங்கவைத்தார். அம்மன்னன் கீழேயும்

வராமல், மேலேயும் செல்லாமல் இடையிலேயே தங்கியதால் அந்தஇடம் திரிசங்கு சொர்க்கம் ஆயிற்று. இப்பொழுதும் அந்தரத்தில் இருக்கும் நிலையைக்குறிக்க இத் தொடரைப் பயன்படுத்துகிறோம்.

796. விதுரர் என்பவர் யார்?

விதுரர் திருதராஷ்டிரனின் தம்பியாவார். வியாசருக்கும் அம்பாலிகையின் தோழிக்கும் மகனாகப் பிறந்தவர். சிறந்தஅறிவுடையவர். மாண்டவ்யர் என்ற முனிவரின் சாபத்தால் தென்திசைத்தலைவனான எமனே விதுரராக வந்து அவதரித்தான் என்பர்.

797. வைகுண்ட ஏகாதசி பற்றி எழுது.

மார்கழி மாதம் (சுக்ல பக்ஷம்) வளர்பிறை ஏகாதசிக்கு வைகுண்டஏகாதசி என்று பெயர். மகாவிஷ்ணுவை ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் சிம்மாசனத்தில் இருக்கவைத்து தாம் இயற்றிய திருவாய்மொழி என்ற ஆயிரம் பாக்களை மார்கழிமாத ஏகாதசி முதல் 10 நாட்களில் தினம் நூறாகக்கேட்கச் செய்து பத்தாம் நாள் திருவடிசேர்ந்தார்.

இதன்பிறகு ஆண்டுதோறும் இம்மரபைப்பின்பற்றி ஆழ்வார் திருநகரில் நம்மாழ்வாரை எழுந்தருளச் செய்து அரையர்கள் ஓதி இவ்விழாவை நடத்திவந்தனர். பின் வந்த திருமங்கையாழ்வார் நம்மாழ்வாரை திருவரங்கத்திற்கு எழுந்தருளச் செய்து இவ்விழாவைதிருவரங்கத்தில் சம்பிரதாயப்படிநடத்தினார். பின்னர் ஸ்ரீ ரங்கத்திலேயே நம்மாழ்வார் விக்ரகம் அமைத்து ஏகாதசிக்கு முன் 10 நாடகளில் திரு மொழி முதலிய மூவாயிரம் பாடல்களையும் ஓதி முடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்.

வைகுண்டஏகாதசியன்று சுவர்க்கவாசல் என்ற வாயில் திறக்கப்பெற்று, அதன்வழியே மகாவிஷ்ணுவின் திருமேனியை எடுத்துசெல்ல, மக்கள் உடன்சென்று அவ்வாயிலைக்கடந்து பாவனையாகச் சொர்க்கம் சேர்வர்.

798. பகல்பத்து, இராப்பத்து உற்சவம் பற்றி எழுது.

வைகுண்ட ஏகாதசியை இடையில்வைத்து அதிலிருந்து பகலில் 10 நாட்களும், அதற்கு முன் இரவில் பத்து நாட்களும் ஆக முறையே 20 நாட்கள் அத்யயன உற்சவம் நடத்தப் பெறும்-இதுவே பகல்பத்து, இராப்பத்து உற்சவம் என்று வைணவத்தில் சொல்லப் பெறும்.

799. அநுமத் ஜயந்தி எப்போது கொண்டாடப் படுகிறது?

மார்கழி மாதம் அமாவாசை மூல நட்சத்திரம் சேர்ந்த நாளில் கொண்டாடப்படுகிறது.

800. "கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை" என்று சொல்லப்படுவதன் பொருள்யாது?

கேட்டை நட்சத்திரம் நல்லவைகளைச் செய்வதற்கு பொருத்தமில்லாத கெட்ட நட்சத்திரம். மூட்டை என்பது அமாவாசை. பொதுவாகச்செவ்வாய்க்கிழமையில் நல்ல காரியம் தொடங்க மாட்டார்கள். எனவே நட்சத்திரமும் திதியும் கிழமையும் நல்லவை செய்வதற்குப் பொருத்தமில்லாத நிலையில் இருப்பதைக் குறிக்கவே, இத்தொடரைச் சொல்லும் வழக்கம் உள்ளது.

அறிந்து கடைப்பிடிக்கத்தக்க அரிய செய்திகள்

801 பசுவின் உடம்பில் எல்லாத்தேவர்களும் குடி கொண்டிருப்பதால் பசுவுக்குப்புல் முதலான உணவுகளைக் கொடுப்பது. உடம்பைச்சொரிந்து விடுவது, முதலியவற்றைச் செய்வது புண்ணியம் காலால் உதைப்பதும் அடிப்பதும் பெரும்பாவம்.

802 நகத்தைப் பற்களால் கடிப்பது கூடாது.

803 கேட்கும் விருப்பம் இல்லாதவர்களுக்கு அறநெறிகளை உபதேசிப்பதில் பயனில்லை.

804 தண்ணீரிலும் எண்ணெய்யிலும் நம் நிழலை நாம் பார்க்கக்கூடாது.

805 ஒருவனைப் 'பாவி' என்று சொல்லக்கூடாது. சொல்வோமாயின் அவன் பாவம் செய்யாதிருந்தால் அப்போது நமக்குப் பாவம்வந்து சேரும். செய்திருந்தாலோ, சொன்னமையால் அப்பாவத்தில் பாதி நம்மை வந்தடையும்.

806 இருட்டிலோ நிழல்விழும் இடங்களிலோ அமர்ந்து உண்ணக்கூடாது. வெளிச்சத்தில் அமர்ந்தே உண்ண வேண்டும்,

807 தூய்மையான உணவே நல்ல உணர்வைத் தரும். உணவின் மாறுபட்டால் நம் உணர்வும் அறிவும் மாறுபடும்.

808 *கிரகண காலங்களில்:-* கர்ப்பிணிகள் வெளியில் வரக்கூடாது; அசையாமல் ஓரிடத்திலேயே அமர்ந் திருத்தல் வேண்டும். தயிர்; ஊறுகாய் முதலிய பொருள் களில் தர்ப்பையைத் துண்டித்துப் போட்டுவைக்க வேண்டும். கிரகணகாலத்தில் வயிற்றில் உணவில் லாதபடி அதற்கு முன்பே சாப்பிட்டு விடவேண்டும். இல்லையெனில் கிரகணம் விட்டபின்பு நீராடி உண்ணலாம் கிரகண காலத்தில் செய்யும் ஜபத்திற்குப் பயன் பலமடங்காகும்.

809 துடைப்பத்தால் பெருக்கும்போது அத்தூசு பிறர்மேல் படுதல்கூடாது.

810 காதுகளின் இடுக்கில் புஷ்பத்தைவைத்துக் கொள்ளக்கூடாது; தலையில்வைத்துக் கொள்ள வேண்டும் துளசியைக் காதில்வைத்துக் கொள்ளலாம்; தலையில்வைத்துக் கொள்ளக்கூடாது.

811 வயதானவர்கள், கர்ப்பிணிகள், குரு, அரசன், குழந்தைகள் ஆகியோரைப் பார்க்கச் செல்லும் போது வெறுங்கையுடன் செல்லலாகாது. அவர் களுக்கு உதவும் பொருள்களைக் கொண்டு சென்று அவர்களுக்குத் தந்து, பார்த்துவிட்டு வர வேண்டும்.

812 கோயிலுக்குச் செல்லும் போது அர்ச்சனைக்குரிய பொருள்கள், பூ, கற்பூரம், நெய், எண்ணெய் (தீபத்திற்கு) முதலியவைகளை வசதிப்படி எடுத்துச் செல்ல வேண்டும்.

813 ஈர ஆடையுடனும் தலைமயிரை அவிழ்த்து விட்டும் உண்ணக்கூடாது.

814 சாப்பிட்டவுடன் சிறிது நேரம் நடக்கலாம் (அ) பிற பணிகளைச் செய்யலாம். உடனே படுக்கக்கூடாது. அவ்வாறன்றி உண்டவுடனே உறங்கச் செல்வது நோய்க்கு இடந்தரும்.

815 கை, கால்களைக் கழுவிக் கொண்டு அந்த ஈரம் உலர்வதற்கு முன் உண்ணச் செல்ல வேண்டும்'

816 தலை வாழையிலையின் அரிந்த பக்கம் நமக்கு வலப்புறமாக இருக்குமாறு இட்டு உண்ண வேண்டும்.

817 திருவாதிரை நட்சத்திரம் மிகவும் பெரியது. சூரியனின் குறுக்களவைப் போல 300மடங்கு பெரியது ஆதிரை.

818 சனிக்கிழமையில் வரும் பிரதோஷமும், வியாழக் கிழமையில் வரும் தைப்பூசமும் மிகவும் உயர் வானவை.

819 தருமருடைய ஆயுள் 107. பாண்டுமன்னன் இறந்த போது தருமருக்கு வயது 16- பீமனுக்கு 15- அர்ச்சுனனுக்கு 14- நகுல சகாதேவருக்குவயது 13-

820 'ஒரு அக்ரோணி' என்பதன் எண்ணிக்கை 2, 11, 800 ஆகும்.

821 பீஷ்மர், மாசிமாதம் ஏகாதசியில, தம் கபாலம் வழியே உயிரைப் போக்கினர்.

822 பீஷ்மரும் இராமரும் வசிட்டரின் சீடர்கள்.

823 சீதையின் தந்தையார் பெயர் **சீரத்வஜ ஜனகர்.**

824 நடராசப் பெருமான் அம்பலத்தில் ஆடிய நாள் தைப்பூச நன்னுள்

825 கோயில், சந்நிதிகள், அரசமரம், பசு, சான்ருேர்கள் முதலியோர்களை வலமாகச்சுற்றியவாறே செல்ல வேண்டும்.

826 அக்கினியைத் தாண்டக்கூடாது; அசுத்தமான பொருள்களை அதில் இடுவது கூடாது. கால்களை நீட்டியவாறு குளிருக்குக்காய்ச்சவும் கூடாது.

827 புண்ணியதீர்த்தங்களில் முதலில் அந்நீரைத்தலையில் தெளித்துக்கொண்டு, பிறகே கை கால்களை அலம்பவோ நீராடவோ வேண்டும். காரித்துப்புவதும், அசுத்தம் செய்வதும் கூடாது. கற்களை இட்டும் வீசியெறிந்தும் தூர்க்கலாகாது.

828 இரவில் கால்களை அலம்பித்துடைத்துக் கொண்டு, கடவுளைத் தியானம் செய்து விட்டுப் படுத்தல் நல்லது.

829 வெளியூர்களுக்குச் செல்லும்போது முன்புறவாயில் வழியாகவே செல்லவேண்டும்; பின்புற (புழக்கடை) வழியாகப்போகக் கூடாது.

830 இரவில் மரத்தின் நிழலில் படுத்து உறங்கக்கூடாது மரங்கள் இரவில் கரியமில வாயுவை வெளிப்படுத்துவதால் அது தீங்கையுண்டாக்கும். தவிர, பறவைகளும் பேய்களும் பிசாசுகளும் மரங்களில் தங்குமாதலால் அவற்றாலும் துன்பங்கள் நேரிடும்.

831 வடை, அப்பளம், பழம், முதலியவை நீங்கலாக மற்ற உணவுவகைகளையும், காய்கறிகளையும் கையால் எடுத்துப் பரிமாறாமல், அவ்வவற்றுக் கேற்ற கரண்டிகளைப் பயன்படுத்தியே பரிமாறுதல் வேண்டும்.

832 ஆற்றுநீர்—பித்தம் போக்கும். அருவிநீர்—வாதம் போக்கும். ஊற்றுநீர்—சிலேத்துமம் போக்கும். சோற்று நீர்—எல்லாவற்றையும் போக்கும். எனவே பழைய சோறு (முன்னாள் நீர் ஊற்றிவைத்த உணவு) சாப்பிடுவதை நம் முன்னோர் கைக்கொண்டனர்.

833 புளிபழுக்கும் வரை ஓடு தேவை. மனம் பழுக்கும் வரை உடல்தேவை. எனவே உடம்பைப் பாதுகாத்தல் அவசியம்

834 சாப்பிடும் முன்பு, "இந்த உணவு நமக்கு அன்றுடம் கிடைக்கட்டும் என்றெண்ணிப் பகவானை ஒரு கணம் சிந்தித்துச்சாப்பிட வேண்டும். சாப்பிட்டு முடிந்ததும்," இந்த உணவைஇட்டவர்கள் சுகமாக இருக்கட்டும்" என்று ஒரு கணம் சிந்தித்துப் பிரார்த்தித்துப்பின்பு எழுந்திருக்க வேண்டும்.

835 இறந்த உடலை அக்கினியில் ஓமம்செய்ய வேண்டும் என்பது ஐதிகம். அதனால் தான் சிதையை அடுக்கிப் பிணத்தை அதன்மீதுவைத்துத் தீயிடுகிறோம்.

836 எந்த ஒரு பொருளையும் 'இல்லை' என்றுசொல்லாமல், 'அதை வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லிப் பழகிக் கொள்ள வேண்டும்.

837 பற்களை நெரித்தல் கோபத்தின் அடையாளம். இதனால் உடல் நரம்புகள் தெரிக்கப்பட்டு உடல் தளர்வுறுகின்றது- நோய்க்கும் இச் செயல் காரணமாகும்.

838 கிரகணம் தவிர மற்றநாள்களில் நள்ளிரவில் நீராடக்கூடாது. அவசியம் நேரிடின் தீபத்தை நீரில் காட்டிவிட்டு நீராடலாம்.

839 உறவினர்களை ஊருக்கு அனுப்பிவிட்டு உடனே எண்ணெய் தேய்த்துநீராடக் கூடாது.

840 நெல்லிக்காய், இஞ்சி, தயிர், வறுத்தமாவு-இவைகளை இரவில் சாப்பிடக்கூடாது.

841 மாலை வெயில், ஓமப்புகை, தூயநீர்பருகுதல், இரவில் பாற்சோறு சாப்பிடுதல் முதலியவை ஆயுளைவிருத்தி செய்யும்.

842 காலை வெயில், பிணப்புகை முதலியவை உடம்பின் மீது படக்கூடாது.

843 1. ஏழைகட்கு அளிக்கும் தானம் 2. பூஜை நின்று போன கோயிலுக்குப் பூஜை நடைபெற வசதிசெய்து தருவது 3. அனுதை பிணத்தை அடக்கம் செய்ய உதவுவது ஆகிய மூன்றும் அசுவமேத யாகத்திற்குச் சமமான பலனைத் தரும்,

844 சவ ஊர்வலத்தின்போது பின்னுலேயே செல்ல வேண்டும்

845 தன் தாய். தந்தை பிணத்தைத்தவிர பிறபிணங்களை பிரம்மசாரி, சுமந்து செல்லக்கூடாது.

846 தன்மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் கணவன் அந்நியர் பிணத்தைச் சுமந்து செல்லக்கூடாது. ஆனல் தன் தந்தை, தாய், பிள்ளையில்லாத -கோதரன், பிள்ளையில்லாத மாமன் ஆகியோருடைய ட்ணத்தைச்சுமக்கலாம்-தவறில்லை.

847 தீட்டு உள்ளவர்கள் கோயிலுக்குப் போகக் கூடாது

848 தீட்டுக் காலங்களில் கட்டிலில் படுக்கலாகாது; தரையிலேயே படுக்கவேண்டும்

849 பெண்களின் கற்பும் ஒழுக்கமும் கணவனின் ஆயுளை விருத்தி செய்யும்.

850 ஆடை, உதறும் போது பிறர்மீதுபடக்கூடாது

851 முறத்தை வீசும்போது அக்காற்று பிறர்மீது படக் கூடாது.

852 தானங்களுள் சிறந்தவை 1) அன்னதானம் 2. ஆடை தானம்

853 கருவுற்றிருக்கும் பெண்கள்தேங்காயைச்சிதறுகாயாக உடைக்கக்கூடாது. அவ்வாறே பெண்கள் எவராயி. னும் பூசணிக்காயைத் திருஷ்டி சுற்றி உடைக் கவும் கூடாது.

854 கோயிலில் பலவகையான தீபங்களைக் காட்டி ஆரத்தி எடுத்தபின்பு அவற்றின்முடிவில் கற்பூர ஆரத்தி காட்டப்படுவது "நிராஞ்ஜனம்" எனப்படும்.

855 பஞ்ச கவ்யத்தைத் (ஆன் ஐந்து) தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் சித்தப்பிரமை நோய் நீங்கும் என்று சித்தமருத்துவம் கூறுகிறது.

856 ஆஞ்சநேயரை வழிபடுவதால்-நினைத்துத் தியானிப்பதால்-அறிவு, பலம், புகழ், தைரியம், பயமில்லாமை, ஆரோக்கியம், சுறுசுறுப்பு, நாவன்மை, தெளிந்த ஞானம் முதலிய நல்லியல்புகள் உண்டாகும்.

857 காலையில் நீராடுவதால் உடல் அழகும் வலிமையும் பெறுகிறது.

858 ஆலயத்தை வலம் வரும்போது வேகமாக ஓடுவதும் கைகளைவீசியும் விரைவாகவும் நடப்பதும் கூடாது. நிதானமாக, தெய்வசிந்தனையுடன் வலம் வர வேண்டும்.

859 பசுவின் உடல் முழுவதிலும் பரவியிருந்தாலும், மடியின் வழியாகவே பாலைப் பெறமுடியும். அதுபோல எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் அருட்சக்தியை ஆலயங்களிலுள்ள விக்ரகங்களின் மூலமாகவே நம்மால் பெறமுடியும்

860 நம் உள்ளங்கைகளின் கீழ், நடு, மேற்பகுதிகளில் முறையே உமை, சரஸ்வதி, லட்சுமி ஆகியோரும் பொருந்தியிருப்பதால், காலையில் விழித்ததும் இரு உள்ளங்கைகளையும் தேய்த்து, கண்களில் ஒற்றிக், கொண்டு, உள்ளங்கைகளைப் பார்க்கவேண்டும். அவ்வாறே கண்ணாடி, பசு, கோபுரம், பெற்றோர் தெய்வத்தின் படம், துளசிமாடம் இவைகளைப் பார்ப்பதுவும் நல்லது.

861 நெய், நல்லெண்ணெய் விட்டுத்தீபம் ஏற்றலாம். கடலெண்ணெய் கூடாது பஞ்சுத்திரி, தாமரைத் தண்டு, புதியமஞ்சள் சிகப்புத் துணிகள், வெள்ளைத் துணி, இவற்றால் திரிகளை உண்டாக்கி இட்டு விளக்கேற்றுவது நல்லது. தெற்குத் திசை நீங்கலாகப் பிற திசைகளில் தீபம் ஏற்றலாம். மண் அகல் விளக்கு, வெள்ளிபஞ்சலோக விளக்குகளில் ஏற்றலாம்.

862 மலர்ப்படுக்கையில் படுப்பது உடலைச்செழிப்பாக்கும் பசியைத்தரும்; கோரைப்பாயில் படுத்தால் சூடு தணிந்துஉடல் குளிர்ச்சி உண்டாகும். இலவம்பஞ்சு படுக்கையில் படுத்தால் ஆரோக்கியமும் கிடைக்கும். இவ்வாறு சித்த மருத்துவம் கூறுகிறது.

863 பெண்கள் கண்ணீர்விடும் வீட்டில் செல்வம் தங்காது. அவர்கள்தலையை விரித்துப்போட்டிருப்பதும், இரு கைகளாலும் தலையைச்சொறிவதும் வறுமைக்கு வழியாகும்.

864 இரவில் வீட்டைப் பெருக்குதலும், குப்பையைத் தெருவில் கொட்டுவதும் கூடாது. பகலில் பெருக்கி குப்பையை உடனே வெளியில்கொட்டிவிட வேண்டும்; சேர்த்து வைக்கக் கூடாது.

865 சகுனங்கள் மிகவும் முக்கியமானவை. வெளியில் புறப்படும் பொழுது நல்ல சகுனம் அமையவில்லையென்றால் திரும்பவும் வீட்டிற்குள் வந்துதண்ணீர் குடித்துச் சிறிது நேரம் உட்கார்ந்து பிறகு செல்ல வேண்டும். சகுனங்கள் இயற்கையாக அமைய வேண்டும். நாமாக உண்டாக்கிக் கொள்ளுவது நலமே யெனினும் இயற்கையாக அமைவதைப் போல அவ்வளவு சிறந்ததன்று.

866 ஒருவர் வெளியே புறப்படும்போது எங்கே போகிறீர்கள் என்று கேட்பதும், அவரைக் கூவியழைப்பதும் கூடாது. புறப்படும்போது கால்

இடறினாலும் தலை முட்டினாலும் உள்ளேவந்து சிறிது நேரம் அமர்ந்து தண்ணீர் பருகிச் செல்லவேண்டும்.

867 பிரதோஷ காலத்தில் சிவபெருமானைத் தரிசிப்பது அளவற்ற சிவபுண்ணியத்தைத் தரும்.

868 வெளியூருக்குப் புறப்படும்பொழுது மழை தூறல் வருமாயின் பொறுத்துப்பார்த்துச் செல்வது நல்லது "தும்பலில் போனாலும் தூறலில் போகாதே" என்பது பழமொழி

869 உண்ணும் பொழுது முதலில் இனிப்பையும் முடிவில் கசப்பையும் உண்ணவேண்டும்.

870 நம்மால் மதிக்கத்தக்க பெரியவர்கள், பெண்டிர், அரசன், கண்ணில்லாதவர், வயதானவர், பளுவைத் தூக்கி வருவோர், நோயாளர், பலமில்லாது மெலிந்துள்ளவர் முதலியோர் எதிரில் வருவாராயின் நாம் ஒதுங்கி அவர்களுக்கு வழிவிட்டு உதவ வேண்டும்,

871 தனி ருத்ராட்சத்தை அணிவோர், அது தொண்டைக் குழியில் படிந்திருக்கத்தக்க அளவில் கட்டிஅணிய வேண்டும். இதனால் தொண்டையில் சளி கட்டாது; குரல் கரகரப்பாகாது; குரல் இனிமையாக மாறும்.

872 அதர்வண வேதத்தில் சொல்லப்படும் முண்டினி சாஸ்திரம் உடலுக்குச்சிகிச்சையளிக்கும் பல்வேறு முறைகளைப்பற்றியும், ஒலிசிகிச்சை (Sound Theraphy) பற்றியும் கூறுகின்றது.

873 கோயில்களில் சுவாமி வீதியுலா புறப்படும்போது நாதஸ்வர இசையில் நாட்டைராகம் பாடுவது மரபு.

874 வீணை வாசிப்பவர்களுக்குக் குண்டலினி சக்தி மிக விரைவில் தூண்டப்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

875 நம் வழிபாட்டுக்குரியவர்களில் மிகமேலானவள் நம்மைப்பெற்றெடுத்த தாயே ஆவாள். அவளுக்கு நம் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் ஈடாகாது. தாய்க்குச் சமமான தெய்வம் வேறில்லை. இதனுல்தான் நித்திய நைமித்திக கர்மாக்களை விட்டுக்கூட தாய்க்குப்பணிவிடை செய்யவேண்டுமென்று தர்ம சாஸ்திரம் சொல்கிறது.

876 குழந்தை, தாயின்வயிற்றில் இருக்கும்போது முதலில் உணரும் உணர்ச்சி ஒலி உணர்ச்சிதான். தாயின் இதய ஒலியான லப்-டப் என்ற சத்தமே குழந்தைக்குப் பெரும் பாதுகாப்பாக இருக்கிறது. ஆகவேதான் பிறந்தகுழந்தை தாய்ப்பாலைப் பருக தாயால் அணைக்கப்பட்டவுடன் தாயின் இதய ஒலியை மீண்டும் கேட்டு ஆனந்தம் கொள்கிறது. அழுகையை நிறுத்திவிடுகிறது.

877 தாயின்வயிற்றில் இருக்கும் குழந்தை எட்டாவது மாதத்தில் தனது தாயின் இதய ஒலியை மட்டுமல்லாது வெளியிலிருந்தும் ஒலியைகிரகிக்க வாய்ப்புண்டு என்று தற்கால விஞ்ஞானகண்டு பிடிப்பு கூறுகிறது. இதை முன் காலத்திலேயே நமது மூதாதையர்கள் எடுத்துச் சொல்லி சீமந்தத்தின் போது வீணகானம் இசைப்பதையும், சூல் கொண்ட பெண்ணின் கைகளில் கலகலவென சப்திக்கும் கண்ணுடி வளையல்களை அணிவிப்பதையும் மரபாகக் கொண்டிருந்தனர். அபிமன்யுவும், அஷ்டாவக்ரனும் தாயின்வயிற்றில் இருக்கும் போதே வெளிச் சப்தத்தைக் கேட்டதாகப் பாரதம் கூறுகிறது.

878 ருத்ரம், சமகம் போன்றவற்றை வீட்டில் கேட்பதால் வீட்டில் சாந்தி நிலவும். ஸ்ரீ ருத்ரம் உச்சரிக்கும் இடத்தில் அமைதி உண்டாகும். கணவன்-மனைவியர் இடையே பிணக்கு, பெற்றோர்

-குழந்தைகள் இடையேமன வருத்தம்-அனைத்திற்கும் ருத்ரம் சமகம் ஏற்றமருந்து. இந்நவீன காலத்தில் வீட்டிற்கு வீடு 'டேப்ரிகார்டர்' இருக்கிறது. ருத்ரம் ஜபிக்க முடியாதவர்கள் நல்ல ஸ்பஷ்டமாகச் சொல்பவர்களைக்கொண்டு ஜபிக்கச்சொல்லி டேப்பில் பதிவுசெய்து தினமும் ஒலிக்கச்செய்து அமைதியைப் பெறலாம்-ஸ்ரீருத்ரத்தை மட்டும் தனியாகப் பாராயணம் செய்வோர் பகலில்செய்வதே நல்லது. இரவில்கூடாது. ஆனால் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதுபோன்ற காலங்களில் மட்டும் இரவில் பாராயணம் செய்வதால் குற்றமில்லை.

879 வேதம் ஓதுவோருக்குப் பொதுவாக மூச்சு, நுரையீரல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வராது. முன்பெல்லாம் வீட்டிலுள்ள குழந்தைகள் நோய்ப்பட்டால் சிவன் கோயில்களுக்குச் சாயங்கால வேளையில் எடுத்துச் செல்வார்கள். அந்திக்கால பூஜை முடிந்ததும் ஒதுவார் மூர்த்திகள் தேவாரம் பாடுவார்கள், அவர்கள் பாடி, சந்நிதியை விட்டு வெளி வந்ததும்' நோய்ப்பட்ட குழந்தைகளின் நெறியில் விபூதி இட்டு முகத்தில் வாயினால் ஊதுவார்கள். இதனால் குழந்தைகளுக்கேற்பட்ட காற்று தோஷமோ, பயத் தோஷமோ ்பாய்விடும் என்ற நம்பிக்கை உண்டு. தேவாரம் பாடுவதால் அவர்களுடைய நுரையீரல்களில் சுத்தக்காற்று நிரம்பி அவர்கள் இறைவனது நாம ஜபத்துடன் குழந்தைகளின் முகத்தில் ஊதுவதால் குழந்தைகளின் உடலின் ஏற்பட்ட தடைகள் நீங்குமென்பதும் மக்களின் நம்பிக்கை. ஊதும் இப்பழக்கம் இன்று இடம்மாறிப் பள்ளிவாசலின் வாயிலில் இடம்பெறுவதைக் காணலாம்.

880 வைணவத்திருக்கோயிலில் சடாரியைப் பெறும் போது (தலையில் வைத்து ஆசீர்வதிக்கும் போது) குனிந்து வணங்கி" தன்யோஸ்மி, தாஸோஸ்மி,

ப்ருத்யோஸ்மி'' என்று சொல்லியவாறே கைகூப்பித் தலையில் ஏற்கவேண்டும் என்பது மரபு.

881 கோயிலைச் சுற்றிவரும் போது கோபுரவிமான நிழலை மிதிக்காமல் வலம் வருதல் வேண்டும்.

882 திருமஞ்சனத்திற்குக் கொண்டுவரும் நீர் தூய்மை யானதாகவும், வெளியிலிருந்து கொண்டு வரப்படு மாயின் மூடியகுடத்துள் இருப்பதாகவும் கொண்டு வரவேண்டும்.

883 துளசியை நீரில் அலம்பி எடுத்துச் செல்லக்கூடாது.

884 விளக்கிற்குத் துணித்திரியை இடாமல் பருத்தித்திரி, வாழைத்தண்டின் நாற்றுத்திரி, தாமரைத்தண்டின் நாற்றுத்திரி முதலியவைகளையும் பயன்படுத்துவதே சிறந்தது.

885 விளக்கேற்ற இலுப்பை எண்ணெய் மிகவும் சிறந்தது

886 சுவாமிக்கு அர்ப்பணிக்கும் பொருள்களை உடுத்திய துணிகளிலும், எருக்க இலையிலும் ஆமணக்கு இலையிலும் கட்டிவைக்கலாகாது,

887 பசுமாடுகளை இடி நேராகத்தாக்காது என்ற நம்பிக்கையுண்டு. இன்றும் மழைக்காலங்களில் பசுமாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்பவர்கள் வானத்தில் இடி இடிக்குமாயின், ஓடிவந்து பசுமாடுகளின் அடியில் உட்கார்ந்து கொள்வார்கள்.

888 பசுமாட்டின் உடலில் ஏதேனும் ஒரு பகுதியைத் தொட்டால். அப்பகுதியை மட்டும் பசு சிலிர்த்துக் கொள்ளும். இது பசுவுக்கே உரிய சிறப்பு.

அவ்வாறே காதுகளைப் பக்கவாட்டில் முன்னும் பின்னுமாக அசைக்கும் குணமும் பசுக்களுக்கும் யானைகளுக்கும் மட்டுமே உரியன.

889 யானைகளின் நான்கு கால்களிலும் சேர்ந்து மொத்த மாக 24 நகங்களிருந்தால் அது உயர்ந்த இனத்த தாகும். இதுவே ராஜயானை எனப்படும். இது சும்மார் 10 அடி உயரமிருக்கும். துதிக்கை வலப்புறம் திரும்பியிருக்கும். கழுத்தில் 3 மடிப்புகள் இருக்கும். வால் தரையைத் தொட்டுக் கொண்டிருக்கும், இதுவே ராஜயானையின் லட்சணங்களாம்.

890 மேற்சொல்லியதுபோல 20 முதல் 23 வரையிலான நகங்கள் இருப்பின் அவ்யானையை விரமுடைய தாகக் கருதி அரசர்கள் தங்கள் பவனிக்குப் பயன் படுத்துவார்கள்

891 கண் திருஷ்டி படாமல் தடுப்பது, பகைவர்கள் வைக்கும் சூன்யங்களைப் பங்கப்படுத்துவது போன்ற சக்திகள் யானைகளுக்குண்டு, அதனால்தான் பண்டைக்காலங்களில் அரசர்கள் உலாவரும்போது முன்னால் யானைகளை அழைத்துச் செல்லும் வழக்க மிருந்தது.

892 பண்டைநாளில் மன்னர்கள் போரை முடித்து வெற்றி பெற்று நாடு திரும்பியவுடன் தாங்கள் போர்க்களத்திலும் பகைவர் நாட்டிலும் தெரிந்தோ தெரியாமலோ–பெண்களைக் கற்பழித்தல், கொன்று விடுதல்– கர்ப்பிணிகளைக் கொன்றுவிடுதல்– அந்தணர்களைக் கொன்றுவிடுதல்– முதலிய தவறுகளைக் செய்துவிட்டிருந்தால் அதற்குரிய பரிகாரங்களாக ஹேமகர்ப்பம். கோகர்ப்பம், ஹிரண் யகர்ப்பம்' துலாபாரம் முதலியவைகளைச் செய்வது தானம் வழங்குவது முதலியவற்றைச் செய்து வந்தனர்.

தங்கத்தால் பசுவைப்போல் செய்து அதனுள் அரசன் ஒரு முகூர்த்தகாலம் அமர்ந்திருந்து பின்பு அதைத் தானம் செய்வது **ஹேமகர்ப்பம்** எனப்பட்டது.

893 சாப்பிடும்போது வலப்புறமிருந்து தண்ணீர் எடுத்துக் குடிக்க வேண்டும். இடக்கையால் குடிக்கக்கூடாது. எனவே வலக்கையால் இலையைத் தொட்டுக் கொண்டு இடக்கையால் நீரை எடுத்துப் பருக வேண்டும். இலையைத் தொடாமல் பருகக்கூடாது. மேலும் இடக்கையால் எடுத்துப்பருகும் போது வலக்கையின் மணிக்கட்டுமேட்டினுல் இடக் கையைத் தொட்டுக்கொண்டே பருகுவதும் உண்டு.

894 ஒரு நல்ல மனைவி;

கணவனுடைய செயலைச் செய்யும்போது
வேலைக்காரியாகவும்
கணவனுக்கு யோசனை சொல்லும்போது
மந்திரியாகவும்
வடிவத்தில் லட்சுமியாகவும்
பொறுமையில் பூமி போலவும்
கணவனைக் காத்தலில் தாயாகவும்
கணவனுக்குச் சுகம் தருவதில் வேசி போலவும்
இருத்தல் வேண்டும்.

895 ஏழுபேர்கள் (அ) எண்மர் (அ) ஒன்பதின்மர் வட்டமாக நின்று கை கோர்த்துப்பாடியவாறே ஆடும் கூத்து குரவைக்கூத்து எனப்படும்.

896 பொருள், பெயர், தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகளாக்கி; பிங்கலம், திவாகரம், நிகண்டுகளி லுள்ள சொற்களையெல்லாம் எடுத்து அகரவரிசையில் விரமாமுனிவரால் தொகுக்கப்பட்ட அகராதியே சதுர் அகராதி எனப்படும்.

897 ஆந்திரத்தில் மிகவும் புகழுடன் விளங்கிய கவிஞர் வேமன்ன ஆவார். இவருடைய பாடல்களை அறியாத தெலுங்கர்கள் எவருமிரார்.

898 வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள இறைவன்,

தீராதவியாதிகளையும் தீர்க்கவல்ல வைத்யநாதர். இங்கு உமாதேவியார், தையல்நாயகி என்னும் பெயர் கொண்டு தன்கரங்களில் தைலக்கிண்ணமும்' அமிர்தசஞ்சிவியும், வில்வமரத்தடிமண்ணும் ஏந்தி, பெருமானுக்கு உதவி செய்யும் அமைப்பில் எழுந்தருளியுள்ளார்.

899 வைத்தீசுவரன் கோயில் சம்பாதிவனம் என்று மணி மேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

900 வைத்தீசுவரன் கோயிலுக்குக்கிழக்கில் பைரவரும், மேற்கில் வீரபத்ரரும் தெற்கில் கற்பகவிநாயகரும், வடக்கில் காளிதேவியும் வாயில்களில் அமர்ந்து காவல்புரிந்து வருகின்றனர்.

901. துலாபாரம் என்றால் என்ன?

கடவுளுக்குச் செய்து கொள்ளப்படும் பிரார்த்தனை களுள் இதுவும் ஒன்று. துலா-தராசு பாரம்- எடை பிரார்த்தனை செய்து கொண்டவர்' தராசில் ஒரு தட்டில் அமர்ந்து கொண்டு தன்எடைக்குச் சமமாக மற்றொருதட்டில் தான்பிரார்த்தனை செய்து கொண்ட பொருளை வைத்துச் சமமாக்கி அவற்றை அப்படியே கோயிலுக்கு ஒப்படைததுவிடுவது துலாபாரம் எனப்படும். இன்றும் பலதிருக்கோயில்களில்-ஸ்ரீரங்கம் திருச்சூர், குருவாயூர் போன்ற கோயில்களில் இப் பிரார்த்தனைமுறை நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

902. 'அகண்ட காவிரி' என்று சொல்வதன் பொருள் யாது?

காவிரியாறு திருச்சியருகில் ஸ்ரீரங்கத்தில் காவிரி, கொள்ளிடம் என்று இரண்டாகப் பிரிவதற்கு முன்பு வரை ஒன்றாகவே பாய்ந்து வருகின்றது. அதையே அகண்ட காவிரி என்று கூறுகிறார்கள்.

''அகண்டம்''—என்பதற்கு இரண்டாகப் பிளவு படாமல் ஒன்றாகயிருப்பது என்பது பொருள்.

903. 'அஹோபிலம்' எங்குள்ளது?

கர்நூல் மாவட்டத்தில் சிரவேல் வட்டத்தில் உள்ளது. இவ்வூரில் பெரிய வைஷ்ணவத்திருக் கோயில் உள்ளது. ஆதி சடகோபசுவாமிகளால் நிறுவப்பட்ட அஹோபில மடம் இங்குள்ளது. இது 'அழகிய சிங்கர்'மடம் என்றும் வழங்கப்படும். இதன் கிளைகள் ஸ்ரீரங்கம், திருவள்ளூர், காஞ்சிபுரம் முதலிய நகரங்களில் உள்ளன.

904. அங்கமாலை—என்பதன் இலக்கணம் யாது?

தமிழிலுள்ள பிரபந்த வகைகளுள் ஒன்று. ஒருவரை பாதம் முதல் முடிவரையிலாவது, முடிமுதல் பாதம் வரையிலாவது வருணித்து, வெளிவிருத்தம் என்னும் யாப்பு வகையில் பாடப்படுவது.

தேவர்களைப் பாதாதி கேசமாகவும், மனிதரைக் கேசாதிபாதமாகவும் பாடுவது மரபு என்பர். இவ்வாறு சொல்லப்பட்டிருந்தாலும் திருநாவுக்கரசு நாயனார் பாடியுள்ள திரு அங்கமாலையில் நம்முடைய தலைமுதல் கால்வரையுள்ள அங்கங்களை சிவ வழிபாட்டிற்குப் உரியதாக்க வேண்டும் என்ற முறையில் பாடியுள்ளதால் அதையும் அங்கமாலையின் இலக்கணமாகக் கொள்ளுதல் வேண்டும்

905 சுக்கிர நீதி—என்பது யாது?

அறத்தையும் பொருளையும் பற்றிய அரிய செய்திகள் பலவற்றைச் சொல்லும்நூல். இந்நூல் சுக்கிராச் சாரியார் இயற்றிய புராதனமான நூலின் சுருக்கம் என்று கூறுவர். பிற்காலத்தில் பலவேறுபாடுகள் இதில் ஏற்பட்டன என்பர். 5 அத்தியாயங்களும் 2500 சுலோகங்களும் கொண்டது இந்நூல்.

906. அரக்கர்கள் என்போர் யார்?

18 கணங்களில் ஒருவகையினர். அசுரர்கள் வேறு. அரக்கர்கள் வேறு. இவர்களை ராட்சசர்கள் என்றும் கூறுவர். புலஸ்தியமரபினர் இவர்கள் என்பர் ஒருசாரார். மற்றொரு சாரார் காசிபரின் மகனான 'ரக்ஷஸ்' என்பவருடைய மரபினர் என்று கூறுவர்

907. அரதத்த சிவாசாரியார்- என்பவர் யார்?

சோழநாட்டில் (தஞ்சைமாவட்டம்) கஞ்சனூரில் உதித்தவர். இவர் தந்தை மதுசூதனாசாரியார் சிறந்த வைஷ்ணவர். ஆனால் இவரோ சிவபக்தியில் சிறந்து விளங்கினார். சதுர்வேதசாரம்' தத்துவ நிருபணம் முதலிய பலநூல்களை இவர் இயற்றியுள்ளார்

908 அருந்ததியின் சிறப்பு யாது?

வசிஷ்ட மகரிஷியின் மனைவி அருந்ததி. சிறந்த பதிவிரதை. பஞ்ச கன்னியருள் ஒருவராகப் போற்றப் படுபவர். வானத்தில் துருவமண்டலத்திற்கு அருகில் 7 நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்டர் என்ற நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததி நட்சத்திரமும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. திருமணத்தின்போது மண மகளுக்கு மணமகன் அருந்ததியைக் காட்டுகின்ற சடங்கு இடம்பெறுவதை நாம் அறிவோம்.

909. பண்டையநாளில் வழங்கிய அருவா நாடு இன்று எப்பகுதியைக் குறிக்கும்?

தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணையாற்றுக்குத் தென்பால் உள்ள பகுதியே பண்டைநாளில் அருவா நாடு என்று வழங்கப்பட்டது.

910 அருவாவடதலை நாடு-என்றபெயர் இன்று எப்பகுதியைக் குறிக்கும்?

அருவாவடதலைநாடு என்பது இன்றுள்ள செங்கற்பட்டுமாவட்டப் பகுதியாகும்

911. அழகர்மலை—எங்குள்ளது?

மதுரைக்குப்பக்கத்திலுள்ள கள்ளழகர் கோயிலே அழகர்மலை ஆகும், இதைத் திருமாலிருஞ்சோலை என்பர். இங்குள்ள திருமால் கோயில் சிறப்புமிக்கது.

அருகில் சிலம்பாறு (அ) நூபுரகங்கை ஓடுகிறது. சிலப்பதிகாரத்தில் இது திருமால்குன்றம் என்று குறிக்கப் படுகிறது.

912. 'அக்கமாதேவி' என்பவர் யார்? அவரைப் பற்றி எழுதுக.

வீரசைவப்பற்றில் தோய்ந்து விளங்கிய பெண்மணி. கன்னடநாட்டைச் சேர்ந்தவர். பசவண்ணருடன் இருந்து அவர் 'கல்யாண்' நகரில் நிறுவிய வீரசைவ நிலையத்தில் தொண்டு செய்து வந்தவர். இவருடைய அறிவுரைகள் கன்னடத்தில் சிறப்பாகப் போற்றிப்படிக்கப் படுகின்றன. இவ்வம்மையார் ஸ்ரீசைலத்தில் உள்ள ஸ்ரீமல்லிகார்ச்சுனரை வழிபட்டு அப்பெருமானின் பெயரில்பல வசனங்களைப் பாடியுள்ளார்.

913 ஆஞ்சநேயன், அநுமன்- பெயர்க்காரணம் கூறுக.

அஞ்சனை என்பவளுக்கு மகனாக வாயுவினிடத்தில் பிறந்தார் ஆதலின் ஆஞ்சநேயன் என்ற பெயர் வந்தது. ராகு பற்றியிருந்த சூரியனைப் பழம் என்று எண்ணிக் கவரச் சென்றபோது இந்திரன் எதிர்த்து அடிக்க இவருடையகன்னம் (ஹனு) முறியப் பெற்றதால் ஹனுமன் என்ற பெயருண்டாயிற்று. சிரஞ்சீவி பட்டம் பெற்றவர் நவவியாகரணங்களையும் நன்குணர்ந்த பண்டிதன் பிரமசாரி. ஞானி- பக்திமான். அறிவும் துணிவும் பலமும் வேண்டுவோர் ஆஞ்சநேயரை வணங்குவர்.

914. அஸ்திஞபுரி எங்குள்ளது? பெயர்க்காரணம் யாது?

வட இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் மீரட்டிற்கு சுமார் 150 கி. மீ. தொலைவில் உள்ள ஊர் அஸ்திஞபுரம் ஆகும்.

கௌரவர்களுடைய தலைநகராக இருந்த ஊர்— 'அஸ்தின்' என்னும் அரசன் நிர்மாணித்ததால் அஸ்திஞபுரி என்று பெயர் பெற்றது.

யானைகள் (அஸ்திகள்) மிகுதியாக அங்கு இருந்ததாலும் இப் பெயர் வந்தது என்றும் சொல்வர்.

915 ஆறுமுகநாவலரின் சிறப்புக்கள் யாவை?

இவர் யாழ்ப்பாணத்தில் சைவவேளாளர் குலத்தில் பிறந்தார் பெற்ரோர் கந்தப்பிள்ளை. சிவகாமியம்மை. நாவலர் என்ற பட்டம். இவருக்கு திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவர் எழுதியுள்ள நூல்களுள் பாடபாடங்கள், பெரியபுராண வசனம். திருவிளையாடற்புராண வசனம்; சிவாலய தரிசன விதி. சைவ விஞவிடை. நித்திய கருமவிதி முதலியவை சிறந்தவை.

இவருடைய உரை நடை மிக்க சிறப்புவாய்ந்ததாகப் போற்றப்படுகிறது

916. இந்திர ஜால வித்தை என்பது யாது?

இந்திரன் என்னும் சொல் திறமையைக் குறிப்பது. ஒருவன் தன் திறமையால் காண்போரின் கண்ணை மறைத்தல் இந்திரஜாலம் எனப்படும். உள்ளதை உள்ளபடிபார்க்கும் சக்தியை மறைத்து வேறுவிதமாகப் பார்க்குமாறு பிறரைச்செய்தல் இவ்வித்தையின் நோக்கம். இதற்குப் பச்சிலை மூலிகை, மந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிருர்கள்.

நீர்மேல் நடத்தல், நெருப்பின் மேல் நிற்றல் முதலிய வித்தைகளை இவர்கள் செய்வார்கள்.

917. உபேந்திரன்-பற்றிச் சொல்லப்படும் கருத்து யாது?

உபேந்திரன்—திருமாலின் அம்சமாகச் சொல்லப் படுபவர். காசிபருக்கும் அதிதிக்கும் பிறந்தவர் என்று புராணம் கூறும். இவர் இந்திரனுக்குத்துணைவராக இருப்பதால் உபேந்திரன் (உப-இந்திரன்) எனப்பட்டார். இவரே வாமனராகச் சென்று மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டுப் பெற்றார் என்பது வரலாறு.

918. 'வள்ளைப்பாட்டு'—என்று எதற்குப் பெயர்?

பண்டை நாளில்

பெண்கள் நெல்குற்றும் போது தலைவனைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்த பாட்டு வள்ளைப்பாட்டு எனப்படுகிறது.

சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் வள்ளைப்பாட்டு இடம் பெற்றுள்ளது.

919. உள்ளி விழா—எனப்படுவது யாது?

தமிழ் நாட்டில் முன்காலத்தில் கொண்டாடப்பட்ட விழா. கொங்கு நாட்டுமக்கள் மணிகளை இடையில் கட்டிக்கொண்டு தெருவில் ஆரவாரம் செய்து ஆடுகின்ற விழாவையே உள்ளி விழா என்று வழங்கினர். கருவூரில் இவ் உள்ளி விழா சிறப்பாக நடைபெற்றது என்பதை இறையனார் அகப்பொருள் 16 ஆம் சூத்திர உரைமூலம் அறிகின்றோம். "மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குனி யுத்தரமே கருவூர் உள்ளி விழாவே" என்றிவை போல்வன என்பது அவ்வுரைத் தொடர்.

920. ஒட்டன் துள்ளல்—என்ருல் என்ன?

இது ஒருவகை நடனம்: கேரளாவில் இந்நடனம் மிகவும் புகழ் பெற்றது. இந் நடனத்தை கிபி. 18 ஆம் நூற்ருண்டிலிருந்த குஞ்சன் நம்பியார் என்பவர் தோற்று வித்தார் என்பர் பண்டைய சாக்கைக் கூத்து என்பதனை குஞ்சன் நம்பியார் ஒழுங்கு செய்து துள்ளல் பாடல்களை எளிமையாக இயற்றி எல்லோரும் பாடும் படியாகச் செய்து இந்நடனத்தைச் செப்பம் செய்து வளர்த்தார் என்பர்.

இது' ஒருவரே ஆடும் நடனமாகும். நடனமாடுபவர் ஈரடிப்பாடல் ஒன்றைப்பாடி அபிநயம் செய்வார். அவருக்குப் பின்புறம் உள்ள மத்தளக்காரர் அப்பாட்டை மறுபடியும் பாடி மத்தளம் வாசிப்பார். பிறகு நடனக்காரர் அடுத்த ஈரடியையப் பாடுவார். இம் முறையில் மத்தளம் முழங்க. கைமணி இசைத்து இந்நடனம் ஆடப்பெறும்.

921. நாதஸ்வரம் எம்மரத்திலிருந்து செய்யப் படுகிறது?

ஆச்சா மரத்தைக் கடைந்து நாதஸ்வரம் செய்யப் படுகிறது.

922. ராகங்களை வாசிக்க வேண்டிய காலங்களைப் பற்றி எழுது?

வசந்தா, பூபாளம், பிலஹரி, கேதாரம், தன்யாசி, சுத்தசாவேரி, ஆரபி. சுருட்டி. முகாரி, மந்தாரி, பூர்வகல்யாணி. கல்யாணி முதலியவைகள் காலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், மற்ற ராகங்கள் மாலை 6 மணிக்குமேல் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் வாசிக்கப் பட்டு வந்ததாக பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன.

923. கோயிலில் சுவாமி புறப்பாட்டின் போது எந்த ராகம் வாசிக்கப்படவேண்டும்

திரு விழாக்களில் கோயிலிலிருந்து சுவாமி புறப்படும் போது மல்லாரி (நாட்டை ராகத்தில் பல தாளங்களில் அமைந்த ஒருவகைப் பாடல்) வாசிக்கப்பட வேண்டும் என்பது மரபு.

924 நொண்டி நாடகம் என்பது யாது?

பண்டை நாளில் நடிக்கப்பட்டுவந்த நாடகவகை களுள் இதுவும் ஒன்று. ஒரு ஆள் கூத்து என்ற பிரிவைச் சேர்ந்தது.

குதிரைச் சாலையில் சென்று குதிரைதிருடிய ஒருவன் கையுங்களவுமாகப் பிடிக்கப்பட்டு மாறுகால் மாறுகை வெட்டப்படுகிறான். அளவிலாத துன்பம் அடைந்து அழுது கதறுகிறான். அப்போது சான்றோர் ஒருவர் அவன் முன்தோன்றி மருந்தளிக்கிறார். அவரிடம் தன் நிலையையும் தான்பட்ட துன்பங்களையும் எடுத்துக் கூறுகிறான். கேட்ட அச்சான்றோர் அவனுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறு கின்றார். அவனும் கேட்டு அதன்படி ஒழுகி நல்லவனாகி மாறி அச்சான்றோர் சொல்லிய ஒரு கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டுத் தன்பிழை பொறுக்கக் கதறுகிறான் இறையருளால் அவனுடைய கை,கால்கள் வளர்கின்றன. அவனும் சிறந்த அன்பனாகி நல்லவனாகின்றான். இந்த அமைப்புடையதே நொண்டி நாடகம். திருக்கச்சூர் நொண்டி நாடகம், பழனிநொண்டிநாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம் முதலிய நொண்டி நாடகங்கள் பண்டை நாளில் சிறப்பாக நடிக்கப்பட்டு வந்தன.

925. பஞ்சசீலம் என்பன யாவை?

பஞ்சசீலம் என்றால் ஐவகை ஒழுக்கம் என்பது பொருள். அவை 1. கொல்லாமை 2. திருடாமை

3. காமவெறியின்மை 4. பொய்யாமை 5. குடியாமை என்பன.

926. பஞ்சமுக வாத்தியம் எங்குள்ளது?

திருவாரூர்த்தியாகராசப் பெருமான் கோவிலில் பஞ்சமுக வாத்யம் உள்ளது.

5 முகங்களையுடைய ஒரு பெரிய கருவி இதன் 5 மேற்புறங்களும் தோலால் மூடப்பட்டிருக்கும். நடுப்புறம் சற்று பெரியதாகவும் சுற்றிலுமுள்ள நாற்புறங்களும் சற்று சிறியதாகவும் இருக்கும், உடற்பகுதி வெண்கலத்தால் ஆனது. சிறியவண்டியில் இதைப்பொருத்தியிருப்பார்கள். இறைவனின் 5 முகங்களாக இம்முகங்கள் சொல்லப்படுகின்றன. இதை வாசிக்கும் முறையே தனி. இருகைகளாலுமே தட்டி வாசிப்பார்கள், குச்சிகள் பயன்படுத்தப்படுவதில்லை.

927. பட்டா—என்னும் சொல்லின் பொருள் யாது?

ஒரு குறிப்பிட்ட நிலத்தை, பயிரிடுபவர்க்கு உரிமையாக்கி அளிக்கும் பத்றுச்சீட்டே பட்டா என்பதாகும். பட்டா—இது உருதுச்சொல். பட்டா வழங்கப்படும் வழக்கம் முகலாயர் ஆட்சிக்காலத்திலிருந்து இருந்து வருகிறது.

928. பட்டினத்தார்—என்று பெயர்வரக்காரணம் யாது?

இம்மகானுடைய இயற்பெயர் திருவெண்காடர் என்பது.

பண்டைநாளில் பட்டினம் என்னும் சொல் காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்து வந்தது. திருவெண்காடர் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தமையால் அவர்

பட்டினத்தார் என்றே அழைக்கப்பட்டார். இப்பெயரே அவருக்கு உலகறிந்த பெயராக ஆயிற்று. இவரைப் பட்டினத்துப் பிள்ளையார் என்றும் அழைப்பர்.

இவருடைய கோயில் நான்மணிமலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர், மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பவை பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

929. ஞானவாசிட்டம் நூல் பற்றி எழுது.

சிறந்த அத்வைத வேதாந்தநூல். இராமபிரானுக்கு வசிட்ட முனிவர் உபதேசித்த ஆன்ம ஞானத்தைக் கூறும் நூல். சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 2055 பாடல்களையுடையது. அத்வைத வேதாந்த மடங்களில் இந்நூலை முறையாகப் பாடம் கேட்கும்மரபு உள்ளது.

930. தகடூர் யாத்திரை — என்பது யாது?

அதியமான் அரசனுடைய தகடூர்மீது சேரமன்னன் படையெடுத்துக் சென்ற வரலாற்றைக் கூறுவது தகடூர் யாத்திரை என்னும் நூலாகும். இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. தொல்காப்பியத்தில் உரையில் ஆங்காங்கு இந்நூற் செய்யுள் எடுத்துக்காட்டப் பெறு கின்றன. இதை எழுதிய ஆசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை.

931. சனி பகவானுக்கு வீட்டில் எள் விளக்கு ஏற்றலாமா?

விட்டில் ஏற்றக் கூடாது. கோயிலில் சனிபகவான் சந்நிதியில்தான் எள் விளக்கை ஏற்றவேண்டும்

932. உபவாச காலங்களில் — எவ்வகை உணவுகளைக் கொள்ளலாம்?

உபவாசம் என்றால் எதுவும் சாப்பிடாமல் இருப்பது என்பதே பொருள். உபவாசம் இருக்கும்போது உடல்

நிலைமையால் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் தேவைப் பட்டால் நீர், பால் பழம் முதலியவைகளில் தேவையானவற்றைச் சிறிதே கொள்ளலாம். இதனால் விரதபங்கம் நேராது.

933. தக்ஷிணா மூர்த்திக்குரிய சுலோகம் யாது?

"குரவே சர்வலோகானாம் பிஷதே பவரோகிணும் நிதயே சர்வ வித்யானும் தக்ஷிணாமூர்த்தயே நம:"

934. சண்டேசுவரருக்குரிய சுலோகம் யாது?

"நீலகண்ட பதாம் போஜ பரிஸ்புரித மாநஸ சம்போ: சேவாபலம் தேஹி சண்டேஸ்வர நமோஸ்துதே"

935. அநுமானுக்குரிய சுலோகத்தை எழுதுக?

"புத்திர் பலம் யசோதைர்யம் நிர்ப்பயத்வம் அரோகதா அஜாட்யம் வாக்படுத்வம் ச அநுமத் ஸ்மரணாத் பவேத்"

936. மகாவிஷ்ணுவுக்குரிய சுலோகத்தைக் கூறுக.

"சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் சுரேஷம் விஸ்வாதாரம் ககனசத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம் லட்சுமீகாந்தம் கமலநயனம் யோகி ஹ்ருதயாநகம்யம் வந்தே விஷ்ணும் பவபயஹரம் சர்வலோகைக நாதம்."

937. நவக்கிரக தோத்திரம்

சூரியன்

காசினி இருளை நீக்கும் கதிரொளியாகி எங்கும் பூசுரர் உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும் வாசி ஏழுடைய தேர் மேல் மகாகிரி வலமாய் வந்த தேசிகா எனைரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி

938. சந்திரன் :

அலைகடல் அமுதந்தன்னில் அன்று வந்து உதித்து மிக்க
கலைவளர் திங்களாகிக் கடவுளோர்க்கு அமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறை
யாய் மேரு
மலைவலமாக வந்த மதியமே போற்றி போற்றி.

939. செவ்வாய் (அங்காரகன்)

வசன நல் தைரியந்தான் மன்னவர்சபையில் வார்த்தை
புஜபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிஜமுடன் அவரவர்க்கு நீணிலம் தன்னில் நல்கும்
குசநில மகனும் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி.

940. புதன்

மதனநூல் முதலாவுள்ள மறைகளும் கல்வி ஞானம்
விதமுடன் அவரவர்க்கு விஞ்ஞைகள் அருள்வோன்
திங்கள்
சுதன் பவிசுபாக்கியங்கள் சுகம் பல கொடுக்க வல்லன்
புதன் கவிப்புலவன் சீர்மால் பூங்கழல் போற்றி போற்றி

941. வியாழபகவான் (குரு).

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கு அரசன் மந்திரி
நறை சொரிகற்பகப் பொன் நாட்டினுக்கு அதிபனாகி
நிறை தனம் சிவிகை மன்றல் நீடுபோகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன் இணையடி போற்றி போற்றி

942. சுக்கிரன் (வெள்ளி)

மூர்க்க வான்சூரன் வாணன் முதலியோர் குருவாய்வையம்
காக்க வான் மழை பெய்விக்கும் கவிமகன் கனகம்
ஈவோன்
தீர்க்க வானவர்கள் போற்ற செத்தவர் தமைஎழுப்பும்
பார்க்கவன் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி.

943. சனீஸ்வரன்

முனிவர்கள் தேவர் ஏனை மூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுஉன் மகிமை அல்லால்
வேறுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகம் ஏறும்
சனியனே உனைத்துதித்தேன் தமியனேற்கு அருள்
செய்வாயே.

944. இராகு

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈய
ஏகிநீ நடுவிருக்க இருசிரம் அற்று வெய்யப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கையில் சிரமே பெற்ற
ராகுவே உனைத்துதித்தேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

945. கேது

மாதுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈயும்
போது நீ நடுவிருக்க புன்சிரம் அற்று வெய்யத்
தீதில் சேர் கதிர் விளங்க சிவன் கையில் சிரமே பெற்ற
கேதுவே உனைத்துதித்தேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே.

946. ஏகாதசி புராண படனம் என்றால் என்ன?

கிராமங்களில் ஏகாதசி நாளில் புராணம் படித்தல் என்ற மரபுண்டு. விரதங்களுள் சிறந்ததாகிய ஏகாதசி விரதநாளில் மாலையில் ஊர் மக்கள் கோயிலில் ஒன்று கூடுவார்கள். அவ்வூரில் உள்ள பெரியவர் ஒருவர் நடுவில் அமர்ந்து பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், பாகவதம் போன்ற புராணங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பார். மற்றவர்கள் தெய்வச்சிந்தனையோடு கேட்பார்கள். இப்பழக்கத்தால் தெய்வநினைப்பும் மக்களுக்கிடையே ஒற்றுமையும் வளர்ந்தது.

947. பஞ்சேந்திரியங்களாலும் உண்டாகும் பாவங்களைப் போக்கக்கூடிய வழிகள் எவை?

1) *சிவத்தியானம்* 2) *பஞ்சாட்சரஜபம்*
3) *உருத்திராக்கம் அணிதல்* 4) *திருநீறு அணிதல்*
5) *சிவார்ச்சனை*

948. கைவிரல்களுக்கு சம்ஸ்கிருதத்தில் வழங்கும் பெயர்கள் யாவை?

1. கட்டை விரல் — அங்குஷ்டம்
2. சுட்டு விரல் — தர்ஜனி
3. நடு விரல் — மத்திமம்
4. மோதிர விரல் — அநாமிகை (அநாமிகா)
5. சுண்டு விரல் — கனிஷ்டிகா

949. கோயிலில் ஏற்றப்படும் விளக்குகளின் வகைகள் யாவை?

1) பூசை நேரங்களில் மட்டும் எரிவது —சாதாரண விளக்கு
2) எப்போதும் எரிந்து கொண்டிருப்பது —நந்தா விளக்கு
3) காலை, மாலை, அந்திவேளைகளில் மட்டும் எரிவது —சந்தி விளக்கு என்பன.

950. 'அதிதி'—என்று யாருக்குப் பெயர்?

நம் வீட்டுக்கு விருந்துக்கு வருவதாக நாள்குறித்து முன்னமே சொல்லிவிட்டு வருபவருக்கு திதி என்று பெயர். அவ்வாறன்றி நாள் எதுவும் முன்கூட்டியே சொல்லாமல் எதிர்பாராத விதமாக ஒருவர் நம் வீட்டிற்கு உணவுகொள்ள வருவாராயின் அவருக்கு அதிதி என்று பெயர்.

951. சந்நியாசம்-என்பதன் பொருள் யாது?

சந் நியாசம் என்பதற்கு இறைவனருகில் கொண்டு போய் வைப்பது என்பது பொருள்.

952. **N. B.** என்று எழுதுவதன் பொருள் யாது?

Note Bene என்ற லத்தின் தொடரின் சுருக்கமே N. B. என்பதாகும் ஆங்கிலத்தில் Note Well என்றும் தமிழில் நன்கு கவனி என்பதும் பொருள்.

953. பிரபஞ்சம் - என்பதன் பொருள் யாது?

பஞ்சா- விரிந்து இருப்பது
பிரபஞ்சம் —மிகவும் விரிந்திருப்பது என்பது பொருள்

954. அபர்ணா—என்பதன் பொருள் யாது?

பர்ணம் = இலை. இலைகளையும் உண்ணாமல் உமையம்மை இறைவனை நோக்கித்தவமிருந்தமையால் உமையம்மைக்கு ''அபர்ணா' என்ற பெயர் வந்தது

இன்றும் பெண்குழந்தைக்கு அபர்ணா' என்று பெயரிடும் வழக்கம் உள்ளது,

955. சாது—என்பதன் பொருள் யாது?

எதையும் சாதிக்கும் திறமையைப் பெற்றிருந்தும், அதை வெளிப்படுத்தாமல் தன்னுள்ளே அடக்கி வைத்துக்கொண்டிருப்பவருக்குச் ''சாது'' என்று பெயர்.

956 வைகறை— பொருள் யாது?

வைகு + அறுவது = வைகறை.

வைகு- இரவு. இரவு அற்ற நேரம்/காலம் = வைகறை என்று வழங்கப்பட்டது.

957. "காழி பாதி வீழி பாதி—என்ற தொடரின் பொருள் யாது?

திருஞானசம்பந்தர் தம்பாடல்களுள் மிகுதியாகப் பாடியிருப்பவை சீகாழியையும் திருவீழிமிழலையையும் பற்றியேயாகும். இதனால்தான் (பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு) இத்தொடர் வழங்கலாயிற்று.

958. தாலாட்டு— பெயர்க் காரணம் கூறு ?

தால்=நாக்கு. நாவை ஆட்டி எழுப்பும் பாட்டு (லொள லொள லாயி என்று எழுப்பும் ஓசைபற்றி) தாலாட்டு என்று சொல்லப்பட்டது.

959. மடாலயம்—என்று எதற்குப் பெயர்?

மடத்துக்குள் திருக்கோயில்—ஆலயம் இருப்பின் அது மடாலயம் என்று வழங்கப்பெற வேண்டும்—இல்லையெனில் மடம் என்றேகூற வேண்டும். திருமடங்கள் மக்களின் பசியைப் போக்கி அறிவைத்தந்து உதவுகின்றன.

960. தூக்கம்—உறக்கம் —வேறுபாடுயாது?

உடம்பு அசையும் நிலையில் தூங்கிக் கொண்டிருப்பது—தூக்கம்,

உடம்பு அசையாமால் கிடந்தபடியே தூங்குவது- உறக்கம் எனப்படும்.

961. உருத்திராக்கம் அணிவதால் உண்டாகும் மருத்துவப் பயன் யாது?

உருத்திராக்கம் அணிவதால் இரத்த அழுத்தம் சம நிலைபெறும். அதிக ரத்தஅழுத்தம் உள்ளவர்கள் உருத்திராக்கமாலையைத் தலைமேல் வைத்துக் கொண்டு குளிர்ந்த

நீரைக்கொட்டி ! நீராடி வந்தால் சமநிலையடையும். இதய வலி உண்டாயின் முதிர்ந்த பெரிய ருத்ராக்ஷத்தை சந்தனம் போல் தண்ணீர் விட்டு நன்கு அரைத்து உள்ளுக்கும் கொடுத்தும் மேலேயும் பூசிவந்தால் குணம் அடையும். அன்றுடம்நீரில் ருத்ராட்சத்தை ஊறவைத்து அந்நீரைப் பருகிவந்தால் உடற் சூடு தணியும்; சளித் தொல்லைகள் நீங்கும்.

962. இலக்குமணன் யாருடைய அம்சமாகப் பிறந்தார்?

இலக்குமணன் ஆதிசேஷனுடைய அம்சமாகும்.

963. இந்திரனின் சாரதியின் பெயர் யாது?

மாதலி

964. தசரதனின் தேர்ச் சராதியின் பெயர் யாது?

சுமந்திரன்.

965. கரடி வேந்தன் என்று யாரைச் சொல்கிறோம்?

ஜாம்பவான்

966. வாலிக்குச்சாபம் தந்தவர் யார்?

மதங்க முனிவர்

967. வாலி கொன்ற அரக்கனின் பெயர் யாது?

மாயாவி.

968. இராமனுக்குப் பழம் தந்து உபசரித்த அம்மையார் யார்?

சபரி.

969. திரௌபதியின் இயற் பெயர் யாது?

கிருஷ்ணை

970. திருப்பாற் கடலில் அமுதம் கடைந்த காலத்துத் தோன்றியவர்கள் யாவர்?

1. சந்திரன் 2. தன்வந்தரி மருந்து கலசத்துடன்
3. ஜ்யேஷ்டாதேவி 4. உச்சைசிரவஸ் என்ற குதிரை.
5. லட்சுமி 6. அப்சரஸ் பெண்கள்
7. ஐராவதம் 8. நல்முத்துக்கள் 9. சிந்தாமணி

முதலான பல பொருள்கள் தோன்றின.

971. "யோகக்ஷேமம் வஹாம்யம்"—பொருள் யாது.

இவ்வாக்கியம் பகவத்கீதையில் கண்ணபிரானின் உபதேசமாக வருவதாகும். கிடைக்கவேண்டிய பேரானந்தத்தை அடையத்தக்க வழிகளை மேற்கொள்வது யோகம். கிடைத்த பேரானந்தத்தைத் தக்கவைத்துக் கொள்வதே க்ஷேமம். இவ்விரண்டையும் உயிர்களுக்கு அருளவல்ல கடப்பாட்டினைப் பகவான் தாமே ஏற்றுக் கொள்வதாக உபதேசிக்கிறார்.

எனவேதான் மக்களுக்கு நலம் தரும் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்வதாக இந்திய ஆயுள்காப்பீட்டுக் கழகம் (L.I.C. OF INDIA) தன் குறிக்கோட்சின்னமாக இவ்வாக்கியத்தை அமைத்திருக்கிறது.

972. 'சாஸ்தா' வுக்குரிய சுலோகம் யாது?

"லோகவீரம் மஹாபூஜ்யம் சர்வ ரக்ஷாகரம் விபும் பார்வதீ ஹ்ருதயாநந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம் யஹம்."

973. அகப்பேய்ச் சித்தர் — என்பவர் யார்?

இவர் சித்தர்களில் ஒருவர். இவர்தம் மனத்தை; பேயாக அலைவதனால் அதைப் பேயாக உருவகப்படுத்தி;

அலையாது நிற்பதற்கு மனத்திற்கு அறிவுரை கூறிப் பாடியுள்ளார். இதனால், இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவருடையபாடல்கள் இவர் பெயராலேயே அகப்பேய்ச் சித்தர்பாடல்கள் என்று வழங்கப்படுகின்றன.

974. இரணியாட்சன்— பற்றி எழுது.

காசிபருடைய மகன். இரணியகசிபுவின் சகோதரன். வைகுண்டத்திலிருந்து துவார பாலகர் களுடைய சாபத்தால் இவர்கள் இருவரும் உலகில் வந்து பிறந்தனர். இவன் இந்திரன் முதலிய தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி ஒரு முறை பூமியையே பாய்போலச்சுருட்டி எடுத்துக் கொண்டு போய்கடலில் ஒளிக்க, மகாவிஷ்ணு வெள்ளை வராகமாய் (பன்றியாய்) உருவெடுத்துச் சென்று கொம்பினால் இவன் மார்பினைப் பிளந்து பூமியை நிலை நிறுத்தினார்.

975. ஏகதந்தர்— என்ற பெயருடையவர் யார்?

ஏகதந்தர் என்ற பெயர்விநாயகருக்குண்டு. கஜமுகாசுரனைக் கொல்லவும். வியாசர் சொல்ல மகாபாரத்தை எழுதியருளவும் தம்முடைய ஒரு தந்தத்தை ஒடித்துப் பயன்படுத்தினார். இதனால் ஒன்று மட்டும் ஒடிந்து ஒன்று மட்டுமே இருப்பதால் விநாயகருக்கு ஏகதந்தர் என்ற பெயர் ஏற்பட்டது.

976. ஏகாதச ருத்திரர்களின் பெயர்கள் யாவை?

1. அஜைகபாத் 2. அஹிர்புத்நியர் 3. பிநாகி 4. ருதர் 5. பித்ருருபர் 6. திரியம்பகர் 7. மகேச்வரர் 8. விருஷாகபி 9. சம்பு 10. ஹவனர் 11. ஈஸ்வரர்.

977. கடுவெளிச் சித்தர் — பெயருக்குரிய காரணம் யாது?

சித்தர்களில் ஒருவர். இவர் தம் ஆன்ம அநுபவத்தை மற்றவரும் அறிந்து நடப்பதற்கு ஏதுவாக, இப்பிர

பஞ்சத்தை (உலகை) "சுத்தவெளி" யாக அறிந்து பாடியுள்ளதால் இப்பெயர் உண்டாயீற்று.

978. கடோத்கஜன் — யார்?

வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்த மகன். மிகப் பெரிய பலசாலி; மாயங்களில் வல்லவன். பாரதத்தில் பதினான்காம் நாள் போரில் கன்னனால் கொல்லப் பட்டான்.

979. 'கலை' யின் வகைகளை எழுது.

1. தந்திரகலை —கடவுளால் அருளப்பெற்ற ஆகமங்கள்
2. மந்திரகலை —தேவதைகளை மந்திரபூர்வமாக ஆராதிக்க உதவுகின்ற கலை
3. உபதேச கலை —ஆசாரியனிடம் (குருவினிடம்) உபதேசம் பெற்று அறிபவை.

980. கும்பகர்ணனின் பெற்றோர் யாவர்?

விசிரவசுவுக்கு கேகசியிடம் பிறந்த மகனே கும்பகர்ணன்.

981. சகடாசூரன் என்பவன் யார்?

இவன் ஒரு அசுரன். வண்டிச்சக்கரமாய் வடிவங் கொண்டுவந்து தொட்டிலில் படுத்திருந்த கண்ணபிரானிடம் வஞ்சனைகள் செய்தான். கண்ணனாகிய குழந்தை தன் திருவடிகளால் இவனை எட்டி உதைக்க, இவன் அழிந்து போனான்(சகடம்: வண்டிச்சக்கரம்)

982. ஏழு நரகங்களின் பெயர்களை எழுது?

1. அள்ளல் 2. ரௌரவம் 3. கும்பிபாகம்
4. கூடசாலம் 5, செந்துத்தானம்6. பூதி
7. மாபூதி என்பன.

983. சரபம் என்னும் பறவையைப் பற்றிக் கூறு.

பறவைகளுள் மிகவும் வலிமை பெற்றது. சிங்கத்தையும் கொல்லக் கூடிய ஆற்றலுடையது. 2 சிங்க முகங்களும், இருபுறமும் சிறகுகளும், சிங்க உடலுடன் எட்டு கால்களும் கொண்ட அபூர்வமான மிருகப்பறவை இனத்தைச் சேர்ந்தது.

984. சூதசம்ஹிதை என்பது யாது?

இது ஒரு நூல். விபூதி உருத்திராட்சம், பஞ்சாட்சரம், சிவபூஜை, சிவாலயங்களின் மகிமை. முதலியவைகளை விவரமாகக்கூறும் நூல்.

985. பண்டைநாளில் வாழ்ந்த மன்னர்களுள் சிறந்தோர்களாகச் சொல்லப்படும் பதினாறு அரசர்கள் யாவர்?

1. அங்கன் 2 அம்பரீஷன் 3. இரந்திதேவன்
4. சசிபிந்து 5. சிபி 6. சுகோத்ரன் 7 திலீபன்
8. பரதன் 9. பகீரதன் 10. பிருது 11. நிருகன்
12. மாந்தாதா 13. மருத்து 14. யயாதி 15. சயன்
16. இராமன்.

986. இளம் பஞ்சபாண்டவர்களின் பெயர்களை எழுது.

பஞ்சபாண்டவர்களுக்குத் திரௌபதியிடம் பிறந்த புதல்வர்களே இளம் பஞ்சபாண்டவர்கள் எனப் படுகின்றனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

1) தருமனின் புதல்வன் —பிரதிவிந்தன்
2) வீமனின் புதல்வன் —சுருதசோமன்
3) அருச்சுனனின் புதல்வன் —சுருதகீர்த்தி
4) நகுலனின் புதல்வன் —சதாநீகன்
5) சகாதேவனின் புதல்வன் —சுருதசேனன்.

987. தில்லை வாழ்அந்தணர் என்போர் யாவர்?

தில்லையில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானை வழிபடுவதற்கு விருப்பங்கொண்டு கயிலாயத்திலிருந்து எழுந்தருளிய சிவகணத்தார்களின் வம்சத்தினரே இவர்களாவர். இன்றும் சிதம்பரத்தில் நடராசப்பெருமானுக்கு இவர்களே வழிபாடு செய்துவருகின்றனர். இவர்கள் எண்ணிக்கை பண்டைநாளில் மூவாயிரம் என்று சொல்லப் பட்டாலும் இன்று இவ்வெண்ணிக்கை குறைந்தேயுள்ளது. சுந்தரர், தம்திருத்தொண்டத் தொகையுள் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலில் இவர்களையே வைத்துப் பாடியுள்ளார்.

988. தும்புரு — என்பவர் யார்?

இவர் ஒரு கந்தர்வர். யாழை மீட்டிப் பாடுவதில் வல்லவர். இவர் தும்புரியம் என்னும் இசை நூலை இயற்றியதாகச் சொல்லப்படுகிறது.

989. துருவ நட்சத்திரம் — பற்றி எழுது.

வானில் வடக்கில் உள்ள நட்சத்திரம். தன்னைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களுள் இது பெரியதாகக்காணப் படும். பண்டை நாளில் கடலில் திசைதவறியோர் இதன் உதவியால் திசையறிந்து கரை சேர்வர்என்று சொல்வர்.

990. தேவப்பிரயாகை—எங்குள்ளது?

வடக்கில் இமயமலைப்பகுதியில் அலகநந்தாவும் மந்தாகினியும் ஒன்று கூடுமிடத்தில் தேவப்பிரயாகை உள்ளது.

991. தேவாசிரிய மண்டபம் என்று எதற்குப் பெயர்?

திருவாரூர்க் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டப இடமே தேவாசிரிய மண்டபம் எனப்படும். பண்டை

நாளில் இம்மண்டபம் சிவனடியார் வந்து தங்கியிருக்கப்பதற்கு இடமாக விளங்கியது. அவ்வாறு எழுந்தருளியிருந்த அடியார்களைச் சுந்தரர் தொழுது திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தார்.

992. நந்தி தேவரின் தோற்றத்தைக் கூறு.

சிவந்த நிறம், முக்கண், சடை, வலக் கையில் ஜபமாலை, இடக் கையில் சூலம் கொண்டு, வரத அபய கரங்களுடன் காட்சி தரும் கோலமே நந்திதேவரின் தோற்றம் ஆகும்.

993. விக்கிரமாதித்தன் சபையிலிருந்த நவரத்னங்கள்—ஒன்பது பேரறிஞர்கள் யாவர்?

1) தன்வந்திரி 2) க்ஷணபகர் 3) அமரசிம்மர்
4) சங்கு 5) வேதாளபட்டர் 6) கடகர்ப்பரர்
7) காளிதாசர் 8) வராகமிகிரர் 9) வரருசி என்போர்.

994. நாகப்பிரதிஷ்டை பற்றி எழுது.

கருங்கல்லில் ஒன்று அல்லது இருநாகங்களை எழுதி, முதல்நாள் அதை ஜலத்தில் இருத்தி, மறுநாள் அதற்குப் பூஜைசெய்து அரசமரத்தின் கீழ் பிரதிஷ்டைசெய்வர். இதைவழிபடுவதால் தோஷங்கள் நீங்கி, புத்திரபாக்கியமும் பெறுவர்.

995. நாரதர்வாசிக்கும் யாழின் பெயர் யாது?

மகதியாழ்.

996. பஞ்சமுக ஆஞ்சநேயர் உருவம் பற்றி எழுது.

இராவணன் அழிந்ததைக் கேட்டுச் சதகண்டன் என்னும் அரக்கன் இராமனுடன் போரிட வர அதை

யறிந்த இராமன் அநுமனின் தோள்மீதேறிச் சென்றார். அவ்வரக்கன் புரிந்த மாயங்களையறிந்த அநுமன் இராமனிடம் விடைபெற்றுத் தானே சென்று குரங்கு, நரசிங்கம், கருடன், பன்றி (வராகம்) குதிரை, முதலிய ஐந்து முகங்களுடனும் பத்துத் தோள்களுடனும் (பஞ்ச முகங்களுடன் கூடிய ஆஞ்சநேயராய்) எதிர்த்துச் சென்று அவ்வரக்கனையழித்தார். இவ்வடிவே பஞ்சமுக ஆஞ்ச நேய வடிவமாகும்.

997. பன்னகாபரணன் என்றுயாருக்குப்பெயர்?

தாருகாவனத்து முனிவர்கள் தாங்கள் செய்த வேள்வியில் தோன்றிய பாம்புகளை இறைவன் மீது ஏவினர். இறைவனும் அப்பாம்புகள் அனைத்தையும் ஏற்றுத் தம் உடம்பில் ஆபரணங்களாக அணிந்து கொண்டார். பன்னகம் = பாம்பு.

இதனால் சிவபெருமானுக்குப் பன்னகாபரணன் என்ற பெயருண்டாயிற்று.

998. கோரைப் பாயில் படுத்துறங்குவதால் உண்டாகும் பயன் யாது?

பனையோலைப் பாயில் படுத்துறங்கினால் — அதிக உஷ்ணமும் பித்தமும் உண்டாகும். கோரைப் பாயில் படுத்துறங்கினால் உடற்சூடு தணிந்து குளிர்ச்சியும் உண்டாகும், சுகமான நித்திரையும் கிடைக்கும்

999. பிரம்மோத்திரகாண்டம் என்பது யாது?

திருநீறு, ருத்ராக்ஷம், பஞ்சாட்சரம், சோமவாரவிரதம், பிரதோஷ மகிமை முதலியவைகளைப் பற்றியெல்லாம் விளக்கமாகக்கூறும் நூல் பிரம்மோத்திர காண்டமாகும். வரதுங்கராமபாண்டியர் இதைத்தமிழில் மொழி பெயர்த்துள்ளார்,

1000. பெரியாண்டவன்—பெயர்பற்றி எழுது.

தக்கன் அழிவுற்று, பின்னர் சிவபெருமானருளால் உயிர் பெற்றெழுந்த பின்பு தன்யாகத்தை அநுக்ரகித்து பூர்த்தியுறச் செய்யுமாறு இறைவனை வேண்ட அவரும் யாகமுதல்வராகயிருந்து அதை நிறைவுறச்செய்தார். அப்போது கொண்ட கோலமே பெரியாண்டவன் என்பதாகும்.

இன்றும் சில பகுதிகளில் இவ்வடிவத்தை பிரார்த்தனைவடிவமாகக் கொண்டு பூசைசெய்து வழிபட்டு வருவதைக் காணலாம். (பெரியாண்டவன் பூஜை).

1001. நல்வாழ்வுக்குரிய பத்து நெறிகள்.

1. காலை எழுந்தவுடன் கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்க.
2. எல்லோர்க்கும் இனியவனாக, நல்லவனாக இருக்க முயலுக.
3. மனத்தாலும் பிறருக்குத் தீங்கு நினையாதே.
4. பிறர் பசியைப் போக்க முடிந்தளவு உதவுக.
5. உணவு உண்ணுமுன் மற்றவர்க்கோ, பறவைகளுக்கோ பிறவற்றுக்கோ சிறிது உணவளித்து விட்டுச் சாப்பிடுக.
6. இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தவாறே உறங்குக.
7. தீயவைகளை எண்ணாமலும், பேசாமலும், கேட்காமலும், பாராமலும், செய்யாமலும் இருக்கப்பழகிக் கொள்.
8. பெரியோர்களை வணங்கி அவர் கூறும் அறிவுரைகளைக்கேள்.
9. இரவு படுக்கப்போகுமுன் அன்றாட நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, நன்மைகளை அதிகரிக்கவும் தீமைகளைக் குறைக்கவும் முயற்சி மேற்கொள்க.
10. அடுத்துள்ளவர்களை அன்பாக நேசி.

[இப்பத்து நெறிகளும் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அவர்களால் அருளப் பெற்றவை.]